வரு.74 இல. 28 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்
# வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI


තිනකරන් වාරමන්ජරි

2022 ஜுலை 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

July 10 Sunday, 2022

24 பக்கங்கள் 80/-



05
சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் தேர்த் திருவிழா



06
2ஆவது பொருளாதார வல்லரசாக இந்தியா



09
மனைவியை கோடரியால் தாக்கிகொன்ற கணவன் !



முன்னுதாரணங்களைப் பின்பற்றாத இலங்கை
12



## கட்சித் தலைவர்கள் எடுக்கும் எந்த தீர்வுக்கும் நான் மதிப்பளிப்பேன்

### பிரதமர் ரணிலுக்கு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் எத்தகைய தீர்மானத்திற்கும் தாம் இணக்கம் தெரிவிப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று பிற்பகல் இந்தத் தகவலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரிவித்ததாக பிரதமர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. நேற்றைய தினம் கொழும்பில் நடைபெற்ற ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் எதிரான பாரிய ஆர்ப்பாட்டத்திற்குப் பின்னர் பிரதமர் ரணில் விக்ரமசிங்க கட்சித் தலைவர்கள் கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்திருந்தார். 04



## சர்வகட்சி அரசை அமைக்க பதவி விலகி வழிவிட தயார்

### கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பிரதமர் ரணில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பிரதமர் பதவியிலிருந்து விலகி சர்வ கட்சி அரசாங்கமொன்றுக்கு அதிகாரங்களை பெற்றுக் கொடுப்பதற்குத் தயார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட்சித் தலைவர்களிடம் தெரிவித்தார்.சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

பொது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர்களின் பரிந்துரையை தாம் ஏற்றுக் கொள்வதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டம் 04



## ஜனாதிபதி, பிரதமரை பதவி விலக கட்சித் தலைவர்கள் வலியுறுத்து

### சபாநாயகரை ஜனாதிபதியாக பதவியேற்கவும் கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உடனடியாக பதவி விலக வேண்டும் என கட்சித் தலைவர்கள் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

அரசியலமைப்பிற்கிணங்க நாட்டின் ஜனாதிபதியாக தற்பொழுது சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பதவி ஏற்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் நேற்று சபாநாயகரின் இல்லத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போதே பெரும்பாலான கட்சித் 04

### கொழும்பில் அலையென திரண்ட மக்கள்

## ஜனாதிபதி மாளிகையும் செயலகமும் முற்றுகை



### முப்படைகளினதும் தடைகளை உடைத்து உட்புகுவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

**சம்பவங்களில் 55 பேருக்கு காயம்; மூவர் ஆபத்தான நிலையில்**

கொழும்பில் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக நேற்று போராட்டம் நடத்திய ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையையும் ஜனாதிபதி செயலகத்தையும் முற்றுகையிட்டனர். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நேற்று கொழும்பில் அணி திரண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகள் மற்றும் வீதித் தடைகளையும் மீறி காலி முகத்திடலில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகம் மற்றும் ஜனாதிபதி மாளிகையையும் முற்றுகையிட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் செயற்பாடுகளினால் நேற்று கொழும்பு நகரம் 04

## அலரிமாளிகைக்குள் அத்துமீறி புகுந்த ஆர்ப்பாட்டக்காரர்கள்

அலரிமாளிகை வளாகத்திற்குள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அத்துமீறி உள்ளேயும் நுழைந்து எதிர்ப்பு தெரிவித்தனர். நேற்றையதினம் ஜனாதிபதி மற்றும் பிரதமரை பதவி விலகக்கோரி இடம்பெற்ற மக்கள் 04

வாசகர்களுக்கு இனிய ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துகள்




## எங்கள் கருத்து...

### ஊடகத்துறையில் உலகம் போற்றும் லோகேந்திரலிங்கம்

உலகெங்கும் சிதறுண்டு வாழ்கின்ற ஒட்டுமொத்த தமிழினமும் தனித்துவமான மிடுக்குடன் மதிக்கப்படுவதற்கு காரணமாக இருப்பவர்களில் புலம்பெயர் தமிழர்கள் பிரதானமானவர்கள் என்ற கருத்தில் தவறு கிடையாது. இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் ஆகிய பிரதேசங்களிலிருந்து மேற்கு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றுள்ள தமிழர்களில் பெரும்பாலானவர்கள் அந்நாடுகளில் பலவிதத்திலும் செல்வாக்கு மிகுந்தவர்களாகவே வாழ்கின்றார்கள்.

1983 இனவன்செயலாலும், அதனைத் தொடர்ந்து சுமார் முப்பது வருடங்களாக நீடித்த உள்நாட்டுப் போர் காரணமாகவும் உயிர்ப் பாதுகாப்பு கருதி மேற்குலகம் நோக்கிப் புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள் தமது சொந்தபந்தங்களையும், உடைமைகளையும் தாயகத்தில் கைவிட்டுச் சென்ற அதேவேளை, தங்களது தாயகத்தில் நிம்மதியாக வாழ முடியவில்லையே என்ற ஏக்கத்தைச் சுமந்தவர்களாகவே அந்நாடுகளில் அடைக்கலம் பெற்றனர்.

தாயகம் பற்றிய ஏக்கம் அவர்களது உள்ளத்தை விட்டு என்றும் நீங்கப் போவதில்லை. புலம்பெயர் தமிழர்களில் பலர் தங்களது கல்வியறிவினாலும், பணபலத்தினாலும் அந்நாடுகளின் சமூகத்தில் மேன்மையானவர்களாக விளங்குகின்றனர். 04

## பணத்தை அச்சிடும் நிலையில் இலங்கை மத்திய வங்கி



### ஆளுநர் கலாநிதி நந்தலால் தெரிவிப்பு

எரிபொருள் விநியோகம் முற்றிலுமாக சிதைவடைவதைத் தடுப்பதற்காக பணத்தை அச்சிடுவதற்கு மத்திய வங்கி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்திடம் எரிபொருள் கொள்வனவுக்கான டொலர்களை கொள்வனவு செய்வதற்கு போதிய ரூபா இல்லை. எரிபொருள் கொள்வனவுக்காக திறைசேரியில் இருந்து 217 பில்லியன் ரூபா கோரப்பட்ட போதும், திறைசேரியால் இவ்வளவு 04

## ரயில் கட்டணங்கள் நாளை முதல் அதிகரிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ரயில் கட்டணங்களை நாளை திங்கட்கிழமை முதல் அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக ரயில்வே திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. தற்போது நடைமுறையில் உள்ள பஸ் கட்டணத்தோடு ஒப்பிடுகையில் அதன் அரைவாசியை விட குறைந்த அளவிலேயே ரயில் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படுவதாகவும் 04

## பணிப் பகிஷ்கரிப்பை கைவிட்ட CTB ஊழியர்கள்

### நேற்று முதல் சேவைகள் வழமைக்கு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் நேற்று முன்தினம் ஆரம்பித்த வேலை நிறுத்தப் போராட்டம் நேற்றுக்காலை கைவிடப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் சேபால லியனகே தெரிவித்துள்ளார். போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தையில் 04



## இறைதூதர் இப்ராஹிமின் வழியில் வாழ்க்கை சவால்களை வெல்வோம்

ஹஜ்ஜுப் பெருநாள் செய்தியில் அமைச்சர் ஹாபிஸ் 04

## நெருக்கடிகள் நீங்குவதற்கு இறைவனை இறைஞ்சுவோம்

04 மு.கா. தலைவர் ஹக்கீமின் பெருநாள் செய்தி



FUN BLASTER இடமிருந்து

மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்

Facebook WhatsApp மற்றும் YouTube

உடன் மேலதிக டேட்டா*



ரூ.360/- மட்டுமே

மேலதிக வரிகள் இல்லை

செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்

* 1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது

TRC/D/PRO/20/10

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

SD (360p) Video தரத்தினை வழங்குகின்றது

4G SIM அட்டையுடன் 4G Smartphone அவசியமாகும்

Dialog எதிர்காலம் இன்றே.












# கொழும்பில் அலையெனத் திரண்ட மக்கள்








படங்கள்: சுலோச்சன கமகே, ருக்மல் கமகே, சிந்தக குமாரசிங்க, கயான் புஷ்பிக, ஹிரந்த குணதிலக, நிஸ்ஸங்க விஜேரத்ன மற்றும் ரஞ்சித் அசங்க






# கட்டுநாயக்கவில் இராணுவம் குவிப்பு: கடும் பாதுகாப்புடன் நேற்று விமான நிலையம் சென்றது யார்?




அதி முக்கிய அரசியல் பிரமுகர்கள் VIP தொடரணியில் கட்டுநாயக்க அதிவேக வீதியூடாக வானூர்தி நிலையத்தை நோக்கி நேற்று யாரோ சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உட்பட முக்கிய பிரமுகர்கள் VIP க்கள் பயணிக்கும் 20 கார்களில் நாட்டை விட்டு வெளியேறினார்களா என்ற சந்தேகம் எழுந்ததாக செய்திகள் தெரிவித்தன. இதேவேளை கட்டுநாயக்கவில் உள்ள பண்டாரநாயக்க அனைத்துலக வானூர்தி நிலையத்துக்கு பெருமளவிலான இராணுவத்தினர் திடீரென நேற்று வரவழைக்கப்பட்டதாக நேற்று செய்திகள் தெரிவித்தன.

# கொழும்பு துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட இரண்டு கப்பல்களில் இனந்தெரியாத குழுவொன்று பயணம்



கொழும்பு துறைமுகத்தில் இருந்து இலங்கை கடற்படைக்கு சொந்தமான இரு கப்பல்களில், இனந்தெரியாத குழுவொன்று நேற்று பயணமாகியதாக தகவல் வெளியாகியது.

கடற்படைக்குச் சொந்தமான சித்துரலு மற்றும் கஜபாகு என்ற இரு கப்பல்களில், சில குழுவினர், பொருட்களுடன் செல்லும் காணொளியொன்று நேற்று வெளியாகியது. துறைமுகத்தில் பணிபுரியும் ஒருவரால் பதிவுசெய்யப்பட்ட இந்த காணொளி இணையத்தில் வைரலாக பரவியது. ஆனால், பயணப்பொதிகளுடன் பயணம் செய்த இவர்கள் யார் என்பது குறித்த தகவல்கள் தெளிவாக கிடைக்கவில்லை.

# ராஜிதவை தாக்கிய ஆர்ப்பாட்டக்காரர்கள்!



பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன நேற்று ஆர்ப்பாட்டக்காரர்களால் தாக்கப்பட்டார். நேற்று நடைபெற்ற போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் நோக்கில் போராட்டக்காரர்களுடன் இணைந்து கொள்ள வந்த பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவை போராட்டக்காரர்கள் எதிர்பாராத விதமாக தாக்கியதாக தெரிவிக்கப்பட்டது.

# தலைக்கவசத்தை வீசிவிட்டு போராட்டத்தில் இணைந்த பொலிஸ்காரர் ஒருவர்



மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போக்குவரத்து பொலிஸார் ஒருவர், மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு போராட்டத்தில் இணைந்து கொண்ட சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

குறித்த பொலிஸ் அதிகாரி பொலிஸ் மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த போது, குறித்த மோட்டார் சைக்கிளை வீதிக்கு அருகாமையில் நிறுத்திவிட்டு, தலைக்கவசத்தை கழற்றி வீதியில் வீசிவிட்டு, “அரகலயட்ட ஜயவேவா” (போராட்டத்துக்கு வெற்றி) எனக் கோஷமெழுப்பி, ஆர்ப்பாட்டத்துடன் கைக்கோர்த்துக் கொண்டார். மஹரகமவில் வைத்தே, போராட்டக்காரர்களுடன் குறித்த பொலிஸ் அதிகாரி இணைந்து கொண்டுள்ளார்.

# நுவரெலியாவிலும் மக்கள் ஆர்ப்பாட்டம்



தலவாக்கலை குறூப் நிருபர்

நுவரெலியா பிரதேச மக்கள் கோட்டா பதவி விலக வேண்டும் என கோரி நுவரெலியா நகரில் நேற்று (9) ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர். நுவரெலியா பிரதான நகரிலுள்ள அனைத்து கடைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்ட நிலையில் நுவரெலியா பிரதான பேருந்து தரிப்பிடத்திற்கு முன்பாக அணிதிரண்ட மக்கள் பழைய கடை வீதியினூடாக பேரணியாக சென்று மீண்டும் பிரதான பேருந்து தரிபிடத்திற்கு முன்பாக வருகை தந்து அரசாங்கத்திற்கு எதிரான பதாதைகளை ஏந்தியும் கோசங்களை எழுப்பியும் இந்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# ஜனாதிபதி மாளிகையில் நீச்சலடித்த இளைஞர்கள்!



ஜனாதிபதி மாளிகை நீச்சல் தடாகத்தில் போராட்டக்காரர்கள் தங்களை ஆசுவாசப்படுத்தி நீச்சலடிக்கும் புகைப்படங்கள் சமூகவலைத்தளங்களில் வெளியாகின.

நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடியை அடுத்து ஜனாதிபதியை பதவி விலகுமாறு கோரி முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டகாரர்கள் நேற்று ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டனர். இதன்போது ஜனாதிபதி கோட்டபாய அங்கிருந்து வெளியேறியதாக கூறப்படும் நிலையில், ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் என்பன போராட்டகாரர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. இந்த நிலையில் ஜனாதிபதி மாளிகை நீச்சல் தடாகத்தில் இளஞர்கள் சிலர் குளிக்கும் காட்சிகள் வெளியாகின.

# போராட்டத்தில் இணைந்த பொலிஸ் விசேட அதிரடிப்படை வீரர்



ஜனாதிபதிக்கு எதிரான போராட்டத்தில், பொலிஸ் விசேட அதிரடிப்படை வீரர் ஒருவரும் களமிறங்கியதாக தெரிவிக்கப்பட்டது. இவர் ஆயுதங்களை கீழே போட்டு விட்டு ஆர்ப்பாட்டத்தில் இணைந்தார். முன்பு ஆர்ப்பாட்டத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் இணைந்த நிலையில் இராணுவ அதிகாரி ஒருவர் பின்பு இணைந்தார் என தெரிவிக்கப்படுகிறது.

# தற்போது பிரச்சினைக்கு விரைவான தீர்வு அவசியம்

## கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் டக்ளஸ் வலியுறுத்தல்



நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு உடனடி தீர்வு காணப்படுவது அவசியமென கடற்றொழில் அமைச்சரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கட்சித் தலைவர்களுக்கிடையில் சபாநாயகர் தலைமையில் நேற்று(09.07.2022) காணொளி மூலம் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின்போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

"கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் தெரிவித்த கருத்துக்களை விளங்கிக் கொண்டவனாக, நாட்டின் தற்போதைய பிரச்சினைகளுக்கு, எமது அரசியல் யாப்பிற்கு உட்பட்டு நாட்டின் தற்போதைய நிலைமையினையும் கருத்தில் கொண்டு, விரைவானதொரு தீர்வு எட்டப்பட வேண்டும்" எனத் தெரிவித்தார்.

# வடிவேல் MP மீதும் தாக்குதல்; வைத்தியசாலையில் அனுமதி



நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி தலைமையகத்திற்கு முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்ட பேரணியில் அவர் கலந்து கொண்டபோது தாக்குதலுக்குள்ளானதாக கூறப்படுகின்றது. இதனையடுத்து, காயமடைந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளர் இராஜினாமா!



ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளர் நாயகம் பதவியிலிருந்து சுதேவ ஹெட்டியாராச்சி இராஜினாமா செய்துள்ளார்.

ஜூலை 4ஆம் திகதி ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்துக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.




# புயல் வீசி ஓயும் வரை அமைதி காப்பது அவசியம்!

பெற்றோலிய எண்ணெய் வர்த்தகம் மிகவும் சிக்கலான நிலைமைக்கு மாறியுள்ளது. மக்கள் நீண்ட நேரம் எரிபொருளுக்காக வரிசையில் காத்து நிற்பதோடு, ஒரு லீற்றர் எரிபொருளை பெறுவது கூட மிகவும் சிரமமாக உள்ளதாகத் தெரிகின்றது. எரிபொருள் விநியோக நிலையங்களில் இடம்பெறும் மோதல்கள் மக்கள் சமூகத்தின் சோகமான நிலைமையை சுட்டிக் காட்டுகின்றன.

பொலிஸாரால் மோதலைக் கட்டுப்படுத்த முடியாதுள்ளதோடு, இராணுவத்தையும் அரசாங்கம் உதவிக்கு அழைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் மாத்திரமே சிவில் நடவடிக்கைகளுக்காக இராணுவத்தை பயன்படுத்த முடியும். ஆகவே அது ஆபத்தான விடயமாகும். சில முடிவுகள் சாதாரண மக்கள் வாழ்க்கையை மேலும் குழப்பத்துக்குள்ளாக்கும்.

பெற்றோலிய எண்ணெய்ப் பிரச்சினையின் பின்னணியில் இரண்டு தோற்றங்கள் காணப்படுவதாகத் தெரிகிறது. அந்நிய செலாவணித் தட்டுப்பாடு காரணமாக நாட்டுக்கு போதுமான அளவு எரிபொருளை இறக்குமதி செய்ய முடியாதுள்ளது. உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான யுத்தம் பெற்றோலிய எண்ணெய் வர்த்தக சந்தைக்கு ஏற்படுத்தியுள்ள நிலைமை இன்னொரு பக்கமாகும்.

சில மாதங்களுக்கு முன்னர் ஒரு பரல் மசகு எண்ணெயின் விலை 60 அமெரிக்க டொலராக இருந்ததோடு, தற்போது அதன் விலை 110 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. அந்நிய செலாவணி கையிருப்பு பற்றாக்குறையுடன் இலங்கை இந்நிலைமைக்கு முகம் கொடுப்பது எவ்வாறு? முன்னர் இரண்டு எண்ணெய் கப்பல்களுக்கு செலுத்திய பணம் தற்போது ஒரு எண்ணெய்க் கப்பலுக்கே போதுமானதாகவுள்ளது. நியூயோர்க்கின் முதலீட்டு வங்கியான 'ஜே.பி. மோர்கன்' அண்மையில் அவர்களின் புதிய கருத்தை சர்வதேச சமூகத்திற்கு தெரிவித்துள்ளது.

யுத்தம் தொடர்ந்தால் ஒரு பரல் மசகு எண்ணெயின் விலை 350 அமெரிக்க டொலராகும் என குறிப்பிடப்பட்டுள்ளது. 110 அமெரிக்க டொலரையே தாங்க முடியாத சிரமத்தையுடைய நாடுகளில் மூன்று மடங்கு அதிகரிப்பானது மேலும் பிரச்சினைகளை ஏற்படுத்தும். எண்ணெய் விலை குறையலாம் ஆனால் போக்குவரத்து மற்றும் ஏனைய செலவுகள் குறையாது என விமர்சகர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

பெட்ரோலிய எண்ணெய் பிரச்சினையை கருத்தில் கொண்டு ஜெர்மன் எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகத்திற்காக கூப்பன் முறையை அறிமுகம் செய்ய தயாராகி வருகின்றது. இந்தியாவில் எண்ணெய் விலை 2014_22 காலப் பகுதியில் நூற்றுக்கு 33.4 ஆல் அதிகரித்துள்ளதாக அந்நாட்டின் பெட்ரோலிய மற்றும் இயற்கை வாயு அமைச்சர் ஹர்தீப் பூரி அண்மையில் கூறியிருந்தார். முறையாக எரிபொருள் விலையை அதிகரிக்க நேரிட்டதுடன் 2006_2014 காலப்பகுதியில் கூட எரிபொருள் விலையை நூற்றுக்கு 64.45 வீதத்தால் அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரித்தானியாவிலிருந்து கிடைத்துள்ள அறிக்கைகளின்படி அந்நாட்டு மக்கள் பாதைகளை மறித்து கால்பந்து விளையாட்டு மைதானமாக மாற்றி எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். பொதுமக்கள் பாதையில் விளையாடி அதிகளவு வாகன நெரிசலை உருவாக்கியுள்ளார்கள். சூடான் மற்றும் பாகிஸ்தானிலும் மோதல்கள் உருவாகியுள்ளதாக சர்வதேச அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவிலும் எண்ணெய் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு எதிர்ப்பும் கிளம்பியுள்ளது. உலகமே குழப்பத்துக்குள்ளாகியுள்ளது. பொருளாதார வளர்ச்சி குறைவடைவதுடன் வறிய மக்கள் மேலும் வறியவர்களாவர்களென சர்வதேச அமைப்புகள் எச்சரிக்கை விடுத்திருக்கின்றன.

அத்தியாவசிய உணவுக்கு தட்டுப்பாடு, எரிபொருள் விலை அதிகரிப்பு, அதிக அளவிலான பணவீக்கம் நாடுகளை பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ள சந்தர்ப்பத்தில், இந்த நிலைமைக்கான உடனடித் தீர்வுகள் கண்ணுக்குத் தெரியவில்லை என சர்வதேச விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

பாடசாலைகளை நடத்த முடியாத, பரீட்சைகளை ஒத்திவைக்க வேண்டிய, காரியாலயங்களை தற்காலிகமாக மூடும் மற்றும் பொதுப் போக்குவரத்து சேவையை கட்டுப்படுத்த வேண்டிய பின்னணியில் கவனமாக முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது. ஆனால் எரியும் பிரச்சினைகள் காரணமாக மிகவும் கோபத்தில் செயற்படும் மக்களுக்கு விடயங்களை புரிய வைப்பது சிரமமாகும்.

அரசாங்கத்தைக் கவிழ்த்து, புதிய தலைவரை நியமித்து அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பது சிலரின் நம்பிக்கையாகும். தலைமையை மாற்றுவதால் மாத்திரம் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்காது. ஆனால் பிரச்சினையை நோக்கும் விதம் மாறுபடலாம். தீர்மானமிக்க சந்தர்ப்பத்தில் இணக்கப்பாடு முக்கியமாவதோடு சமூக ஒழுக்கமும் மிகவும் அவசியமாகும். கட்டுப்பாடு மற்றும் அர்ப்பணிப்பு நாட்டிற்கு புதிய எதிர்காலத்தை உருவாக்கும். சிக்கனமாக, மாற்றுமுறைகளுக்கு மாற வேண்டியது தேவையாகும். வழமையான பழக்கப்பட்ட நடைமுறைகளை மாற்ற வேண்டியதோடு அரசியல் மற்றும் சமூக தலைவர்கள் எடுத்துக்காட்டாக திகழ வேண்டும். மதத்தலைவர்களும் ஏற்பட்டுள்ள பாதிப்பின் தன்மையை புரிந்து கொள்ள வேண்டியதோடு பற்றியெரிந்த பின் நெருப்பை அணைக்க முடியாது என்பதை புரிந்து கொள்வது முக்கியமாகும். உலகில் காணப்படும் சூழலை புரிந்து கொண்டு புயல் வீசி ஓயும் வரை அமைதியாக காலத்தை கடத்த வேண்டியது அவசியமாகவுள்ளது.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# பாடசாலை இல்லாத நாட்களில் மாணவர்களுக்கு ஆன்மீக போதனை

## கல்வி அமைச்சரிடம் பாபு சர்மா வேண்டுகோள்






பாடசாலை இல்லாத நாட்களில் மாணவர்களுக்கு ஆன்மீக போதனை இடம் பெற வேண்டும் என கல்வி அமைச்சரிடம் பாபு சர்மா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் இந்து சமய பாட ஆலோசனை சபை அங்கத்தவர்களின் கலந்துரையாடல் இணையவழி ஊடாக நேற்று நடைபெற்றது. இதில் கல்வி அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர் மற்றும் பெருந்தோட்ட பாடசாலைகளுக்கான பணிப்பாளர் முரளிதரன், உதவி கல்வி பணிப்பாளர் (தமிழ், சமயம்) எஸ்.சுந்தரலிங்கம் ஆகியோருடன் இந்து கலாச்சார திணைக்களத்தின் பணிப்பாளர் அ. உமா மகேஸ்வரன், யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் ரமணா, கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி கேசவன், இராமகிருஷ்ண சுவாமி, சின்மய மிஷன் சுவாமி ஆகியோரும் கலந்து கருத்துக்களை பரிமாறினர்.

இதன் போது கலாநிதி ராமசந்திர குருக்கள் பாபு சர்மா, அமைச்சரிடம் தற்போதைய சூழ்நிலையில் பாடசாலைகள் நடைபெறாத காலங்களில் மாணவர்களின் சீர்நடத்தையை மேம்படுத்துவதற்கான அம்சமாக குறிப்பிட்ட கால நேரம் இந்து சமய பாட ஆசிரியர்கள் மூலம் அவர்களுக்கு தர்ம சிந்தனைகளை ஆன்மீக ஈடுபாடுகளை ஏற்படுத்தும் வண்ணம் கருத்துக்களை வழங்கும் கலந்துரையாடலை நடாத்த வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தார். அதற்கு அமைச்சர் அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு தொடர்ந்து இந்த கல்வி சேவையை முன்னெடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்திருந்தார்.

# இறைதூதர் இப்றாஹிமின் வழியில் வாழ்க்கை சவால்களை வெல்வோம்

## ஹஜ்ஜுப் பெருநாள் செய்தியில் அமைச்சர் ஹாபிஸ் நஸீர்



வாழ்க்கைச் சவால்களை வெற்றிகொள்ள முடியாமல் திணறும், மிகப்பெரிய நெருக்கடிகளுக்குள்ளும் இலங்கையருக்கு புனித ஹஜ் கடமையை நிறைவேற்றக் கிடைத்திருப்பது, அல்லாஹ்வின் அருளிலுள்ளதென சுற்றாடல் துறை அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

புனித ஹஜ்ஜு ப்பெருநாள் வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

இறைதூதர் இப்றாஹிமின் தியாகத்தை உயிரூட்டுவதுடன், வாழ்வின் இலட்சியங்களை தியாகத்தினடிப்படையில் வெல்வதற்கான படிப்பினை ஹஜ்ஜுக் கடமையில் பொதிந்துள்ளது. சவால்களை வெல்வதற்கு, துணிச்சல் மற்றும் தியாகம் அவசியம்.


இறை தூதர் இப்றாஹிம் எதிர்கொண்ட அனைத்து இன்னல்களும் இவைகளால்தான் வெற்றி கொள்ளப்பட்டன. மட்டுமல்ல அவரது தியாகமே, நமக்கு மார்க்கமாக்கப்பட்டிருக்கிறது.

எனவே, நமது நாட்டு நெருக்கடிகள் நீங்கும் வரை, சில துணிச்சல்களுக்கு தயாராகவே வேண்டும். யதார்த்தத்துக்கு முரணாகச் சிந்திக்கவோ அல்லது செயற்படவோ முனைவது கள நிலவரங்களை வெல்வதற்கு உதவப் போவதில்லை.

புனித ஹஜ் கடமையை நிறைவேற்றக் கிடைத்த சகல இலங்கையரும் புனித மண்ணில் நமது நாட்டுக்காக பிரார்த்திப்பதுதான், நாட்டுப்பற்றுக்கான அடையாளம். இறைதூதர் இப்றாஹிமின் துணிச்சல் மற்றும் தியாகத்தை நினைவுகூரும் சகலரும், எல்லோரும் எதிர்கொள்ள நேர்ந்துள்ள இந்நெருக்கடியைப் போக்க இந்த நன்னாளில் ஒன்றுபட வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# நெருக்கடிகள் நீங்குவதற்கு இறைவனை இறைஞ்சுவோம்

## மு. கா. தலைவர் ஹக்கீம் ஈதுல் அழ்ஹா பெருநாள் செய்தி



நாட்டில் அராஜகம் அகன்று,மக்கள் எல்லாவிதமான நெருக்கடிகளிலிருந்தும் மீண்டெழுவதற்கு இந்த நன்னாளில் இறைவனை இறைஞ்சுவோம் என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் விடுத்துள்ள ஈதுல் அழ்ஹா பெருநாள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையிலும், ஏனைய உலக நாடுகளிலும் பல்வேறு சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும் மத்தியில் ஈதுல் அழ்ஹா எனப்படும் ஹஜ்பெருநாளைகொண்டாடும் இவ்வேளையில், அனைவருக்கும் பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இறை தூதர்களான. இப்றாஹீம்(அலை), இஸ்மாயில் (அலை) ஆகியோரின் தியாகத்தின் வலிமையை வலியுறுத்தும் இந்தப் பெருநாள், எல்லாம் வல்ல அல்லாஹ்வின் நியதிப்படி பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் எங்களை வந்தடைந்திருக்கின்றது.

நாட்டின் தற்போதைய அரசியல் தலைமைத்துவம் மேற்கொண்ட தவறான நடவடிக்கைகளின் விளைவாக, இலங்கையின் அரசியல் கட்டமைப்பு முற்றாகச் செயலிழந்து, நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்தில் வீழ்ந்துள்ள மிகவும் நெருக்கடியான நிலைமையிலும் கூட,ஆட்சிபீடத்திலிருந்து அகன்று நாட்டில் சுமூக நிலை தோன்ற வழிவிடுமாறு சகல இன மக்களும் ஒருமித்து எழுப்பிவரும் குரல் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. மக்களின் அத்தியாவசியத் தேவைகள் அனைத்துக்கும் பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டு, வெளிநாட்டுச் செலாவணியின்மையாலும், நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சியாலும் பெற்றோல், டீசல், எரிவாயு, மருந்து மற்றும் தேவையான உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு சிரமங்களுக்கு மத்தியில் அப்பாவிப் பொதுமக்கள் நீண்ட வரிசைகளில் காத்து நிற்பதற்கு நேர்ந்திருக்கிறது. விவசாய உற்பத்திகள் வீழ்ச்சியடைந்திருப்பதால் மக்களின் வாழ்வாதாரம், இயல்பு வாழ்க்கை என்பன சீரழிந்திருக்கின்றன. பொதுவாக நாட்டின் எல்லா சமுகத்தினரும் இதனால் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இவ்வாறான பிரச்சினைகளுக்கு மத்தியிலும் நாம் இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் நின்று, நாட்டில் அராஜகம் அகன்று, அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டு, பொருளாதாரம் சீரடைந்து, சுமூக நிலை தோன்றுவதற்கு ஈதுல் அழ்ஹாபெருநாள் தினத்தில் இறைவனைப் பிரார்த்திப்போம். அத்துடன், உலகின் பல்வேறு நாடுகளிலும் இன்னல்களை அனுபவிக்கும் முஸ்லிம்களுக்காகவும் , ஏனையோருக்காகவும் அல்லாஹ்விடம் இருகரம் ஏந்தி இறைஞ்சுவோம் எனத் தெரிவித்துள்ளார்.

# பாராளுமன்றத்தின் ஊடாக பதில் ஜனாதிபதியை தெரிவு செய்யுங்கள்

## சுயாதீன அரசியல் கட்சித் தலைவர்கள் சபாநாயகரிடம் வலியுறுத்தல்

நாடு எதிர்கொண்டுள்ள பாரதூர தன்மையினை உணர்ந்து பாராளுமன்றத்தின் ஊடாக பதில் ஜனாதிபதியை தெரிவு செய்ய உடன் அவதானம் செலுத்த வேண்டும். மக்களின் எதிர்பார்ப்பிற்கமைய பாராளுமன்றம் செயற்படாவிடின் மக்கள் பாராளுமன்றத்தையும் முற்றுகையிடுவார்கள் என பாராளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் அரசியல் கட்சி தலைவர்கள் சபாநாயகரிடம் கூட்டாக வலியுறுத்தியுள்ளதாக லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரன தெரிவித்தார். அரசாங்கத்திற்கு எதிரான மக்களின் அமைதி போராட்டம் நூற்றுக்கு நூறு வீதம் வெற்றிப் பெற்றுள்ளது.தனக்கு மக்களாணை இல்லை என்பதை ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ விளங்கிக் கொண்டு இனியாவது நாகரீகமான முறையில் பதவி விலக வேண்டும்.

பொது மக்கள் தங்களின் பொறுப்பை நிறைவேற்றியுள்ளார்கள். பாராளுமன்ற மட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள் தங்களின் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும்.பாராளுமன்றத்தின் ஊடாக பதில் ஜனாதிபதியை தெரிவு செய்து மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும்.

பாராளுமன்றத்தின் ஊடாக தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காணாவிடின் மக்கள் பாராளுமன்றத்தையும் முற்றுகையிடுவார்கள் என்பதை 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் விளங்கிக்கொள்ள வேண்டும்,ஆகவே தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காண ஜனாதிபதி தவிர்த்து சகல தரப்பினரும் ஒன்றினைய வேண்டும்.

மக்கள் போராட்டம் வெற்றிப்பெற்றுள்ளமை மகிழ்விற்குரியது.நாட்டு மக்கள் வன்முறையற்ற வகையில் ஜனநாயக ரீதியில் தங்களின் அடிப்படை உரிமைகளை வெளிப்படுத்தியமைக்கு மதிப்பளிக்கிறோம் என்றார்.

# எரிவாயு இனி அத்தியாவசிய பொருளானது அரசு விசேட வர்த்தமானியில் பிரகடனம்

சமையல் எரிவாயுவை அத்தியாவசியப் பொருளாக பிரகடனப்படுத்தி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அமைச்சர் நளின் பெர்னாண்டோவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.சமையல் எரிவாயு மக்களின் வாழ்வுக்கு இன்றியமையாதது என தாம் கருதுவதாகவும், நுகர்வோர் விவகார அதிகார சபையின் ஆலோசனையின் பின்னர் நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# எங்கள் கருத்து...

## ஊடகத்துறையில் உலகம் போற்றும் லோகேந்திரலிங்கம்

அந்நாடுகளின் அரசியலைத் தீர்மானிக்கின்ற சக்தியாகவும் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றனர். அதேசமயம் ஊடகத்துறையிலும் அவர்கள் சாதனைகள் புரிகின்றனர். அந்த வகையில் புலம்பெயர் தமிழர்களின் ஊடகத்துறை சாதனையாளராக

ஏற்றுக் கொள்ளத்தக்கவர் கனேடிய மண்ணில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கின்ற 'உதயன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியரான ஆர். என்.லோகேந்திரலிங்கம் ஆவார். இலங்கைத் தாயக மண்ணில் இருந்து புலம் பெயர்ந்து சென்ற ஒருவர், உலகத் தமிழினமே கூர்ந்து நோக்குமளவுக்கு கனடாவில் பத்திரிகையொன்றை வெற்றிகரமாக கடந்த சுமார் கால்நூற்றாண்டு காலத்துக்கு மேலாக நடத்திக் கொண்டிருக்கிறாரென்றால் அவரது திறமையினால் ஈட்டிய சாதனையே அதுவாகும்.

கனடா மண்ணில் கடந்த முப்பது வருட காலத்துக்கு மேலாக ஊடகத்துறையில் பிரகாசித்து வருகின்றார் லோகேந்திரலிங்கம். 'சூரியன்' பத்திரிகையில் சில வருடங்கள் தொடர்ந்த அவரது ஊடகப் பயணம், அதன் பின்னர் 'உதயன்' பத்திரிகையில் வெற்றிகரமாக சென்று கொண்டிருக்கின்றது.

லோகேந்திரலிங்கத்தின் உயிர்மூச்சு ஊடகத்துறைதான் என்றால் அது மிகையாகாது. பல்வேறு சவால்களையும் வெற்றி கொண்டு புலம்பெயர் தேசத்தில் மாத்திரமன்றி முழுஉலகிலும் 'உதயன்' பத்திரிகைக்கு மதிப்புமிக்க முகவரியைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றார் அவர். ஊடகத்துறையின் வாயிலாக உலகெங்கும் தமிழ் அன்பர்கள் குழாமொன்றை ஏற்படுத்திக் கொண்டுள்ளதுடன், அவலத்தில் வாழ்கின்ற மக்களுக்கான துயர்துடைக்கும் பணிகளிலும் ஈடுபாடு கொண்டு செயற்பட்டு வருகின்றார் லோகேந்திரலிங்கம்.

கவிப்பேரரசு வைரமுத்து 'நட்பின் நாயகன்' என்ற பட்டத்தை லோகேந்திரலிங்கத்துக்கு சூட்டி மகிழ்ந்ததை இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமாகும். தமிழர்களால் மாத்திரன்றி கனேடிய அரசியல் பிரமுகர்களினாலும் பெரிதும் மதிக்கப்படுபவர் அவர். கனேடிய பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அந்நாட்டு அரசியல்வாதிகளின் நெருக்கமான நட்புக்கு உரியவர் அவர்.

ஊடகவியலாளருக்குரிய அதிமுக்கிய தகைமை மொழியாளுமை ஆகும். இலக்கண சுத்தமும், சொல்வளமும், படைப்பாற்றலும் அடங்கிய மொழியாளுமை இல்லாத ஒருவரால் ஊடகத்துறையில் பிரகாசிக்க இயலாது. இவ்வாறான ஒட்டுமொத்த மொழியாளுமையும் கொண்டவர் லோகேந்திரலிங்கம். தமிழில் மாத்திரமன்றி ஆங்கிலத்திலும் அதேவித புலமை கொண்டவர். அதனால்தான் கனேடிய மண்ணில் பல்வேறு மொழிபேசும் சமூகங்களுடனும் நட்புறவைப் பேணியவாறு பத்திரிகையொன்றைக் கட்டியெழுப்ப அவரால் முடிந்தது.

இந்த இருபத்தாறு ஆண்டுகளில் உதயன் விழாவை மிகச் சிறப்பாக நடத்தி வந்திருக்கிறார் அவர்; இந்த விழாவின் ஊடாக இலங்கை, இந்தியா மற்றும் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் இருந்தெல்லாம் கலைஞர்களையும் கல்விமான்களையும் அழைத்து வந்து நிகழ்வை பெருமைப்படுத்தியிருக்கிறார். இத்தகைய செயல்களின் மூலம் தமிழினத்தின் கலைப்பாலமாகவே அவர் திகழ்ந்து வருகின்றார்.

அதேசமயம் இந்தியாவில் இருந்து வெளிவரும் 'நந்தவனம்' சஞ்சிகையை கனடாவில் வெளியிடும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு இலைமறைகாயாக இருக்கும் பலரை வெளியுலகத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார். பல்வேறு நாடுகளில் இருக்கும் பலருக்கு விருதுகள் கிடைப்பதற்கும் லோகேந்திரலிங்கம் காரணமாக இருந்திருக்கிறார்.

கலைஇலக்கிய, ஊடகத்துறையில் 50 வருட காலத்தைக் கடந்துள்ள ஊடக அன்பர் லோகேந்திரலிங்கம் தமிழுலகுக்கு கிடைத்துள்ள அரும்பெரும் பொக்கிஷம் ஆவார். அவரது பணி மேலும் தொடர வேண்டுமென பொன்விழா ஆண்டில் வாழ்த்துவோம்!

### பணத்தை அச்சிடும் நிலையில்...

பெரிய தொகையை உடனடியாக வழங்க முடியவில்லை. எனவே கோரிக்கையை நிறைவேற்ற மத்திய வங்கியின் ஒரே வழி பணத்தை அச்சிடுவதே என்றும் அவர் கூறினார்.

மத்திய வங்கியின் நாணயச் சபை கடந்த வாரம் பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் மற்றொரு கோரிக்கைக்கு சாதகமாக பதிலளித்தது. இதன்படி, எரிபொருள் கொள்வனவுக்காக 185 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தால், நாட்டில் பாரதூரமான நிலைமை ஏற்பட்டிருக்கும்" என ஆளுநர் தெரிவித்துள்ளார்.

### பணிப் பகிஷ்கரிப்பை...

காணப்பட்டுள்ள இணக்கத்தையடுத்து வேலை நிறுத்தப் போராட்டத்தை கைவிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் கடமைக்கு சமூகமளிப்பதற்காக எரிபொருளை பெற்றுத் தருமாறு கோரியே வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். எரிபொருளை வழங்குவதற்கான உறுதி மொழியை அமைச்சர் வழங்கியதையடுத்து நேற்றுக் காலை வேலை நிறுத்தப் போராட்டத்தை கைவிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதே வேளை, நேற்று முன்தினம் இரவு 8 மணி முதல் மேல் மாகாணத்தின் ஏழு பொலிஸ் பிரிவுகளுக்கு நடைமுறைப் படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் காரணமாக கொழும்புக்கு ரயில்கள் வராது என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில்

நேற்றுக் காலை 8 மணி முதல் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட நிலையில் ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்பியதாக ரயில்வே பிரதி பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

### ஜனாதிபதி, பிரதமரை பதவி விலக...

தலைவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்று பிற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் நடைபெற்றுள்ளது.

அந்த கூட்டத்தின் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உடனடியாக பதவி விலக வேண்டும் என பெரும்பாலான கட்சித் தலைவர்கள் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அது தொடர்பில் தெரிவிக்கையில், அரசியலமைப்புக்கு இணங்க ஜனாதிபதியும் பிரதமரும் பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்றும் சபாநாயகர் தற்காலிகமாக ஜனாதிபதி பதவியை ஏற்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதே வேளை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக மேற்படி கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளதுடன் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சார்பில் கருத்து தெரிவித்துள்ள அவர்;

ஜனாதிபதியும் பிரதமரும் தமது பதவிகளை ராஜினாமா செய்ய வேண்டும் என்பதே கட்சியின் நிலைப்பாடு என்றும் தெரிவித்துள்ளார்.

நேற்றைய இந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான அனுரகுமார திசாநாயக்க, எம் ஏ சுமந்திரன் ஆகியோரும் சூம் தொழில்நுட்பத்தின் ஊடாக கலந்து கொண்டுள்ளனர்.

ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் எதிராக நேற்று கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றதுடன் கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகத்தையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டனர்.

அதனையடுத்து நேற்று பிற்பகல் கட்சித் தலைவர்கள் கூட்டமொன்றுக்காக அனைத்து கட்சித் தலைவர்களுக்கும் சபாநாயகர் அழைப்பு விடுத்திருந்தார்.

பிற்பகல் 4:30 மணியளவில் அந்தக் கூட்டம் ஆரம்பமாகியதுடன் பெரும்பாலான கட்சித் தலைவர்கள் ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலக வேண்டும் என கேட்டுக் கொண்டனர்.

அதேவேளை நேற்று பிற்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கட்சித் தலைவர்களின் தீர்மானத்திற்கு மதிப்பளிப்பதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம் தெரிவித்ததாகவும் பிரதமர் அலுவலகம் நேற்று தெரிவித்தது.

### கட்சித் தலைவர்கள் எடுக்கும்...

அந்தக் கூட்டம் நேற்று பிற்பகல் 4 மணிக்கு இடம் பெற்றதுடன் அதன் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்படி தகவலை பிரதமருக்கு தெரிவித்திருந்ததாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

### அலரிமாளிகைக்குள் அத்துமீறி புகுந்த...

எழுச்சிப் போராட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்று பகல் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், ஜனாதிபதி மாளிகைக்குள் நுழைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகை வளாகத்திற்குள்ளும் நுழைந்த குறித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கும் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

### ரயில் கட்டணங்கள் நாளை முதல்...

அந்த வகையில் ஆகக் குறைந்த கட்டணம் 20 ரூபாவாக அதிகரிக்கப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ரயில் கட்டண அதிகரிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அச்சிடப்பட்டு வருவதாகவும் அரசாங்க அச்சக அதிபர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

பஸ் கட்டணங்கள் பல தடவைகள் அதிகரிக்கப்பட்டுள்ள போதும் ரயில் கட்டணங்களில் அதிகரிப்பு மேற்கொள்ளப்படவில்லை என்றும் தற்போதைய எரிபொருள் நெருக்கடி உட்பட ஏனைய விடயங்களைக் கவனத்திற் கொண்டு இந்த கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

எவ்வாறாயினும் ஆகக் குறைந்த பத்து ரூபா ரயில் கட்டணம் 20 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

### சர்வகட்சி அரசை அமைக்க...

நேற்று பிற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் நடைபெற்றது.

அந்த கூட்டத்தின் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் உடனடியாக பதவி விலக வேண்டும் என பெரும்பாலான கட்சித் தலைவர்கள் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

அதன்போது மேலும் தெரிவித்த பிரதமர்,

நாடளாவிய ரீதியில் எரிபொருள் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் இந்த வாரத்தில் மீண்டும் ஆரம்பமாகும் என்றும் உலக உணவுத் திட்டத்தின் பணிப்பாளர் இந்த வாரத்தில் நாட்டுக்கு வருகை தர உள்ளதாகவும் தெரிவித்த பிரதமர், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தொடர்பான ஸ்தீரமான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றைக் கருத்திற் கொண்டே தாம் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ)

### ஜனாதிபதி மாளிகையும்...

ஸ்தம்பிதமடைந்ததுடன் போக்குவரத்துகளும் முற்றாக தடைப்பட்டன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகத்திற்குள் பிரவேசிப்பதை தடுப்பதற்காக படையினர் நீர்த் தாரை மற்றும் கண்ணீர்ப் புகை பிரயோகங்களையும் மேற்கொண்டதுடன்

அதனையும் மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலத்துக்குள்ளும் பிரவேசித்துள்ளனர்.

இச் சம்பவங்களின் போது பாதிக்கப்பட்ட 55 க்கு மேற்பட்டோர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதுடன் அவர்களின் மூவர் கவலைக்கிடமாக உள்ளதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆர்ப்பாட்டங்களில் சில அரசியல்வாதிகள், மதத் தலைவர்களும் கலந்து கொண்டதுடன் வர்த்தகத் துறை உள்ளிட்ட பல்வேறு சமூகத்தினரும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஒத்துழைப்புக்களை வழங்கினர்.

'முழு நாடும் கொழும்புக்கு' என்ற தொனிப்பொருளில் நேற்றைய தினம் பாரிய ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்திருந்ததுடன்

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உட்பட பல்வேறு கட்சிகளும் ஆர்ப்பாட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியதுடன் மதத் தலைவர்கள் பல்கலைக்கழக பேராசிரியர்கள், நீதித்துறை சார்ந்தவர்கள், கலைஞர்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்தவர்கள்

ஆர்ப்பாட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி யிருந்தனர்.

நாடெங்கிலும் இலட்சக்கணக்கானோர் இந்த ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டதுடன் கொழும்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கம்பஹா, நீர்கொழும்பு, களுத்துறை உட்பட

பல்வேறு பகுதிகளிலிருந்தும் மக்கள் பல்வேறு கோஷங்களை எழுப்பிய வண்ணம் பேரணியாக கொழும்பை வந்தடைந்தனர்.

அதனைத் தவிர கடந்த 7ஆம் திகதி குருணாகலிலிருந்து பேரணியாக வந்தவர்களும் நேற்று கொழும்பில் நடைபெற்ற பாரிய ஆர்ப்பாட்டத்தில் இணைந்து கொண்டனர். கண்டியிலிருந்து ரயில் மூலமும் பெருமளவிலானோர் வருகை தந்து ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

நேற்று மாலை வரை மேற்படி ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்ததுடன் காலிமுகத்திடலில் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகத்தையும் முற்றுகையிட்டு பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பொது சொத்துக்கள் மற்றும் அன்றாட மனித வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்படக்கூடாது என பொலிஸ்மா அதிபரினால் ஏற்கனவே அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது தலைமையிலான அரசாங்கத்தை உடனடியாக பதவி விலகுமாறு கோரி கண்டியில் ஜனாதிபதி மாளிகை பிரதேசம் உட்பட நாட்டின் பல்வேறு நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நேற்று நடைபெற்றன.

பல நகரங்கள் மூடப்பட்டு ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டதுடன் மலையகத் தோட்டத் தொழிலாளர்களும் நேற்று ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவரது தலைமையிலான அரசாங்கம் பதவி விலக வேண்டும் எனக் கோரியே நேற்று நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதேவேளை, கடற்படைக்குச் சொந்தமான இரண்டு கப்பல்களில் பிரபுக்கள் சிலர் துறைமுகத்திலிருந்து வெளியேறியதாக தெரிவித்து சமூக வலைத்தளங்கள் படங்களுடன் நேற்று செய்திகளை வெளியிட்டிருந்தன.

அத்துடன் தொடராக வாகனங்கள் சில கட்டுநாயக்க கொழும்பு அதிவேக நெடுஞ்சாலை ஊடாக பயணித்தமை தொடர்பிலும் சமூக ஊடகங்கள் படங்களுடன் செய்திகளை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

# சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் ஆலய தேர்த் திருவிழா



பல காலத்திற்கு முன்பு நிறுவப்பட்டுள்ள சண்டிலிப்பாய் கல்வளை விநாயக ஆலயக் கொடியேற்ற வைபவம் 3. 7. 2022 இல் ஆரம்பமாகி 12.07.22இல் இரதோற்சவம் நடைபெற உள்ளது.

ஒல்லாந்தர் இந்த நாட்டை ஆண்ட காலத்தில் வாழ்ந்த பெரியார் வில்லவராய முதலியாரின் புத்திரர் சின்னத்தம்பிப் புலவர், இயற்றியருளிய நூல்கள் நான்கு. அவை மறைசையந்தாதி, கல்வளையந்தாதி, கரவை வேலன் கோவை, பறளை விநாயகர் பள்ளு ஆகும்.

இவற்றில் இரண்டாவதாகக் குறிப்பிட்ட கல்வளையந்தாதி இந்த ஆலயத்து விநாயகர் பேரில் பாடப்பட்டிருக்கிறது. இந்நூலில் ஆலயத்தின் மகிமையும் அதன் சுற்றாடலின் பெருமையும் அழகுற எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

இப்புராதன தலமானது முற்காலத்திலே இந்தியாவிலிருந்து வந்த இராஜகுமாரியான மாருதப்புரவீக வள்ளி என்பவரால் யாழ்ப்பாணப் பகுதியில் ஸ்தாபிக்கப்பட்ட ஏழு விநாயகர் ஆலயங்களுள் ஒன்றென கூறுவார்கள்.

பல்லவர் காலத்திற்கு முற்பட்ட சிற்ப முறையில் அமைந்த விநாயகர் சிலை ஒன்று இங்கு உள்ளது. இதன் மூலம் இப் புண்ணிய தலத்தின் தொன்மையை அறியக் கூடியதாக உள்ளது.

இந்த ஆலயத்தின் திருவூஞ்சல் பாடல்களை யாழ்ப்பாணத் தமிழ் அரச பரம்பரையில் உதித்த அழகாண்மை வல்லவ முதலியார் பாடியுள்ளார்.

இவர் அரசன் பர நிருபசிங்கனின் மூத்த புதல்வராவர். இவரது தம்பியாரான வெற்றி வேலாயுத முதலியாரின் ஆளுமையின் கீழிருந்த சண்டிலிப்பாயில் அமைந்த கல்வளை விநாயகர் பேரில் அதிக பக்தியுடையவராகில் கல்வளை விநாயகர் திருவூச்சல் என்னும் திருவூஞ்சற்பாடல்களைப் பாடி நிலை பெறச் செய்துள்ளார்.

பல வருடங்களாக ஆலயத்தின் செயலாளராகக் கடமையாற்றிய காலத்தில் எமது உறவினரான வீரசிங்கம் (நைஜீரியா) கோவில் வாசலில் நின்று தான் என்ன திருப்பணி செய்ய வேண்டும் என்று என்னிடம் வினவினார்.

நான் ஆலயத்திற்கு தேர் இல்லாக் குறையை விளக்கமாகக் கூறினேன். அவர் இன்முகத்துடன் மறுகணமே தான் பொறுப்பேற்று செய்விக்கிறேன் எனக் கூறினார்.

அதன் படி சித்திரத் தேர் செய்வித்து வெள்ளோட்டமும் நடைபெற்றது. அப்பொழுது நான் இவ் அற்புதத்தைப்பற்றி அடியார்களுக்கு சொற்பொழிவாற்றி மகிழ வைக்கக் கூடியதாக இருந்தது.

சுவாமிநாதன் தர்மசீலன் J.P
முன்னாள் செயலாளர்
தர்மகத்தா சபை

## தேரிலங்கி திருவருள் தந்தருள்வாய்!



விஞ்சுபுகழ் அரியாலை வெட்டுக்குளத் திருத்தலத்தே
வீற்றிருந்து காத்தருள் வித்தகிபுவ னேஸ்வரியே!
கொஞ்சுமெழில் தலவிருட்சம் கூடியுறை மரம்பலவும்
கருத்தாய தொன்மையை கச்சிதமே சித்தரிக்க
பஞ்சதள கோபுரத்தே பரவசமாய் பரிணமித்து
பக்தர்தம் நெஞ்சத்தே பதிந்துறை பகவதியே!
தஞ்சமென தொழுமடியார் துயரந் துடைத்திடவே
தேரிலங்கி வலம்வந்து திருவருள் தந்தருள்வாய்!

தேவமதுரம் சுகிர் நாகேந்திரா...







வீரமுனை ஸ்ரீசிந்தா யாத்திரைப் பிள்ளையார் ஆலய பூங்காவன உற்சவத்தில் வீரமுனை திருஞானசம்பந்தர் அறநெறிப் பாடசாலை அதிபர் ரகுபதி ஆசிரியை திருமதி ஜெயா, நடன ஆசிரியை செல்வி அனுஜா பாஸ்கரன் பரதாஞ்சலி நடனப்பள்ளி ஆசிரியை திருமதி கோகுல ரஜினி டிசாந்தன் உட்பட்ட 12 ஆசியர்களுக்கும் 150 மாணவர்களுக்கும் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார் கௌரவ பாராட்டுப் பத்திரமும் ஞாபகார்த்த சின்னமும் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு குருபீடாதிபதி சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்குவதையும், நிர்வாகசபையினரையும் படங்களில் காணலாம்.



# பாராளுமன்றத்தைப் பலப்படுத்துவதே இன்றைய காலத்துக்கான உகந்த தீர்வு!

**இலங்கையில் தற்பொழுது நிலவுகின்ற நெருக்கடிகளுக்குத் தீர்வு காணுமாறு வலியுறுத்தி பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அமைதியான முறையில் மக்கள் போராடுவதற்கு அரசியலமைப்–பின் ஊடாக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள போதும், பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடைமுறைச் சாத்தியமான வழிகள் குறித்தும் சிந்திக்க வேண்டியுள்ளது.**

இலங்கையைப் பொறுத்த வரையில் பாராளுமன்ற ஜனநாயகத்தைக் கொண்ட மக்கள் பிரதிநிதித்துவ முறைமையே கடைப்பிடிக்கப்படுகிறது. எனவே இதன் அடிப்படையிலேயே பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் உடனடியாகத் தேர்தலொன்றுக்குச் செல்ல முடியாது என்பதால், பாராளுமன்றத்தில் தற்பொழுது பிரதிநிதித்துவத்தை வழங்குகின்ற அரசியல் தலைவர்களைக் கொண்டதாகவே தீர்வுகள் தேடப்பட வேண்டும்.

'ஜனநாயகத்தின் தூண்கள்' என வர்ணிக்கப்படும் நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கம் மற்றும் நீதித்துறை ஆகியன ஒன்றுடனொன்று இணைந்தவாறு செயற்பட வேண்டும். இவற்றுக்கிடையில் இணைப்புக்கள் காணப்பட்டாலும், ஒவ்வொன்றும் தமது தனித்துவத்தை இழக்காமல் இயங்குவதே நாட்டுக்கு ஆரோக்கியமானதாக அமையும். நிறைவேற்று அதிகாரம் மேற்கொள்ளும் அனைத்துத் தீர்மானங்களுடனும் சட்டவாக்கம் இணங்கிப் போக வேண்டிய கட்டாய தேவை இல்லை.

இருந்த போதும் சட்டவாக்கம் கூடி எடுக்கின்ற தீர்மானத்துடன் இணங்கிச் செல்ல வேண்டிய கடப்பாடு நிறைவேற்று அதிகாரத்துக்கு உள்ளது. இந்த அடிப்படையில் தற்போதைய நாட்டு நிலைமையை நோக்கினால் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொறுப்பு பாராளுமன்றத்துக்கு உள்ளது.


எனவே, சட்டவாக்கம் எனப்படும் பாராளுமன்றம் தன்னைப் பலப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுப்பது காலத்தின் தேவையாகும். பாராளுமன்றத்தைப் பொறுத்த வரையில் சட்டவாக்கம், நிதி முகாமைத்துவம், மேற்பார்வை போன்றவை பிரதான செயற்பாடுகளாகும். இதில் மேற்பார்வை அல்லது கண்காணிப்புப் பணிகளைப் பாராளுமன்றத்தில் உள்ள பல்வேறு குழுக்கள் மேற்கொண்டு வருகின்றன.

அதிலும் குறிப்பாக கோப் குழு என அறியப்படும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, கோபா குழு என அறியப்படும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு, அரசாங்க நிதி பற்றிய குழு என்பன பிரதானமாக கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்கின்றன.

'கோப்' குழுவானது வருமானம் ஈட்டும் அரசாங்க பொறுப்பு முயற்சி நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகள் மற்றும் அவற்றின் செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்டு அந்நிறுவனங்களை கண்காணிப்பது இதன் பணியாகும். குறிப்பாக அந்நிறுவனத்தில் இடம்பெற்ற மோடிகள் மற்றும் முறைகேடுகள் என்பன விசாரணைகளின் போது வெளிப்படும்.

அண்மைக் காலமாக முக்கிய அரசாங்க நிறுவனங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பல இக்குழுவின் ஊடாக வெளிப்பட்டன. அதேபோலவே 'கோபா' குழுவின் ஊடாகவும் நடத்தப்படும் விசாரணைகளில் பல முறைகேடுகள் வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. அதேபோல அரசாங்க நிதி பற்றிய குழுவானது நிதி சம்பந்தமாக பாராளுமன்றத்தில் அனுமதிக்கப்பட வேண்டிய சட்டமூலங்கள், ஒழுங்குவிதிகள், கட்டளைகள் போன்றவற்றை ஆராய்ந்து அனுமதிக்கிறது. இதன் அனுமதியைப் பெற்ற பின்னரே அவற்றை சபையில் இரண்டாவது மதிப்பீட்டுக்கு எடுத்துக் கொள்ள முடியும்.




**பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகளே நெருக்கடிக்கான தீர்–வுகளை முன்வைக்க வேண்டும். இதற்கான அழுத்தங்களை மக்கள் வெளியிலிருந்து கொடுக்க முடியுமே தவிர, பாராளுமன்றத்துக்கு வெளியே தீர்வுகளைக் காண முடியாது!**



இருந்தபோதும், இந்தக் குழுக்களில் வழங்கப்படும் பரிந்துரைகள் சரியான முறையில் நிறைவேற்றப் படுகின்றனவா என்பதை நேரடியாகக் கண்காணிப்பதற்கோ அல்லது பரிந்துரைகளை நிறைவேற்றாத நிறுவனங்களுக்கு எதிராக மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்கோ எவ்விதமான கட்டமைப்பும் இல்லை.

குறிப்பாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் இந்தக் குழுக்களுக்கு இல்லையென்பதால் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகளை விசாரணைகளின் போது பங்கேற்கச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் நீண்ட காலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றன. எனினும், இதற்கு இதுவரை ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை.

இவ்வாறான பின்னணியிலேயே கோப் குழு, கோபா குழு, அரசாங்க நிதி பற்றிய குழு மற்றும் பொதுமனுக்கள் பற்றிய குழு ஆகியவற்றுக்கு மேலும் அதிகாரங்களை வழங்கும் வகையில் நிலையியற் கட்டளைகளைத் திருத்தும் யோசனை அண்மையில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன அதனை சமர்ப்பித்திருந்தார். இந்த விடயம் நிலையியற் கட்டளைகள் குறித்த குழுவில் கலந்துரையாடப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. இது தொடர்பில் ஏற்கனவே கவனம் செலுத்தப்பட்டிருப்பதுடன். விரைவில் இதற்கான அனுமதி பாராளுமன்றத்தில் வழங்கப்படவுள்ளது.

இது இவ்விதமிருக்க, அரசாங்கத்தின் கொள்கைத் தயாரிப்புக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் பாராளுமன்றத்தில் அமைக்கப்படும் துறைசார் மேற்பார்வைக் குழுக்களின் தேவை பற்றியும் கருத்தாடல்கள் அதிகரித்துள்ளன. குறிப்பாக பாராளுமன்றத்தில் எவ்வித பதவிகளையும் வகிக்காத பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளடங்கலான உறுப்பினர்களைக் கொண்டதாக இந்தக் குழு காணப்படும்.

ஆராயப்படும் விடயம் தொடர்பில் நிபுணத்துவம் பெற்ற தரப்பினரை அழைத்து அவர்களின் கருத்துகளையும் பெற்றுக் கொள்வதற்கான அதிகாரம் இந்தக் குழுக்களுக்கு உள்ளது.



**சட்டவாக்கம் கூடி மேற்கொள்ளும் தீர்மானத்துடன் இணங்கிச் செல்ல வேண்டிய கடப்பாடு நிறைவேற்று அதிகாரத்துக்கு உள்ளது. இந்த அடிப்படையில் தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காணும் பொறுப்பு பாராளுமன்றத்துக்கு உள்ளது**

(15ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...

# ஜப்பானை பின்தள்ளியவாறு ஆசியாவின் 2ஆவது பொருளாதார வல்லரசாக இந்தியா

**எதிர்வரும் 2030ஆம் ஆண்டுக்குள் ஜப்பானை முந்திக் கொண்டு ஆசியாவின் இரண்டாவது பெரிய பொருளாதாரத்தை கொண்ட நாடாக இந்தியா முன்னேறும் என்று அண்மையில் வெளியாகியுள்ள ஆய்வறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது.**

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக 2020 ஆம் ஆண்டு உலகளவில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டன. மக்களுக்கு உடல்ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தி, உயிர்களையும் காவு வாங்கியதோடு மட்டுமல்லாமல் உலகப் பொருாதாரத்தையும் புரட்டிப் போட்டது. உலகின் மிகப் பெரிய பொருளாதாரத்தை கொண்டுள்ள அமெரிக்கா கூட பெரிய அளவில் பொருளாதார பாதிப்புக்கு ஆளானது.

இந்தியாவிலும் அமுல்படுத்தப்பட்ட லொக்டவுன் பல்வேறு துறைகளிலும் பலருக்கும் வேலையிழப்பை ஏற்படுத்தியது. சுற்றுலா, ஹோட்டல் உள்ளிட்ட பல நிறுவனங்கள் முடங்கின. ஒட்டுமொத்த பொருளாதார சுழற்சியும் நின்று போனது. பின்னர் கொரோனா பாதிப்புகள் குறையத் தொடங்கிய பிறகு கட்டுப்பாடுகள் படிப்படியாகத் தளர்த்தப்பட்டதால் இந்திய பொருளாதாரம் மெதுவாக மீளத் தொடங்கியுள்ளது.

இந்த நிலையில் 2030 ஆம் ஆண்டுக்குள் ஜப்பானை முந்திக் கொண்டு ஆசியாவின் இரண்டாவது பாரிய பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக இந்தியா முன்னேறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ஜெர்மனி மற்றும் இங்கிலாந்தைத் தாண்டி உலகின் மூன்றாவதாக இருக்கும் என்று 'ஐ.எச்.எஸ் மார்க்கிட்' என்ற ஆய்வு நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரியவந்துள்ளது.

'தற்போது அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஜெர்மனி மற்றும் இங்கிலாந்துக்கு அடுத்தபடியாக, உலகின் ஆறாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உள்ளது. இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி எனப்படும் ஜி.டி.பி 2021 இல் 2.7 ட்ரில்லியன் டொலராக உள்ளது. 203 இற்குள் இது 8.4 ட்ரில்லியன் டொலராக உயரும்.

இந்த விரைவான பொருளாதார வளர்ச்சி 2030 ஆம் ஆண்டுக்குள் இந்திய மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அளவை ஜப்பானிய ஜி.டி.பியை விட அதிகமாகும். இது ஆசிய_பசிபிக் பிராந்தியத்தில் இந்தியாவை இரண்டாவது பெரிய பொருளாதார நாடாக மாற்றும். 2030 ஆம் ஆண்டளவில், இந்தியப் பொருளாதாரம் மிகப் பெரிய மேற்கு ஐரோப்பியப் பொருளாதாரங்களான ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளை விடவும் பெரிய அளவில் இருக்கும்.

ஒட்டுமொத்தமாக, அடுத்த பத்தாண்டுகளில் உலகின் வேகமாக வளரும் பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியா தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியப் பொருளாதாரத்திற்கான நீண்ட காலக் கண்ணோட்டம் பல முக்கிய வளர்ச்சி காரணிகள் இருப்பதை உறுதி செய்கிறது.

இந்தியாவிற்கு ஒரு முக்கியமான நேர்மறையான காரணி அதன் பெரிய மற்றும் வேகமாக வளர்ந்து வரும் நடுத்தர வர்க்கமாகும், இது நுகர்வோர் செலவினங்களை அதிகரிக்க உதவுகிறது. நாட்டின் நுகர்வு செலவு 2020 இல் 1.5 ட்ரில்லியன் டொலரில் இருந்து 2030 இற்குள் 3 ட்ரில்லியன் டொலராக அதிகரிக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பொருளாதாரம் 2022 23 நிதியாண்டில் 6.7 சதவீத வேகத்தில் தொடர்ந்து வலுவாக வளரும் என்று கணிக்கப்பட்டுள்ளது. வேகமாக வளர்ந்து வரும் உள்நாட்டு நுகர்வோர் சந்தை மற்றும் அதன் பெரிய தொழில்துறை துறையானது, உற்பத்தி, உள்கட்டமைப்பு மற்றும் சேவைகள் உட்பட பல துறைகளில் பன்னாட்டு நிறுவனங்களின் பரவலான முதலீட்டு இடமாக இந்தியாவை உருவாக்கியுள்ளது.

தற்போது நடைபெற்று வரும் இந்தியாவின் டிஜிட்டல் மாற்றம், அடுத்த பத்தாண்டுகளில் சில்லறை நுகர்வோர் சந்தை நிலப்பரப்பை மாற்றும், ஈகொமர்ஸின் வளர்ச்சியை துரிதப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது தொழில்நுட்பம் மற்றும் இகொமர்ஸில் முன்னணி உலகளாவிய பன்னாட்டு நிறுவனங்களை இந்திய சந்தைக்கு ஈர்க்கிறது.

கடந்த ஐந்தாண்டுகளில் இந்தியாவிற்கு அந்நிய நேரடி முதலீடுகள் பெரிய அளவில் அதிகரித்துள்ளன. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வலுவான வேகத்துடன் இது தொடர்ந்துள்ளது. இது, இந்தியாவின் பெரிய உள்நாட்டு நுகர்வோர் சந்தையில் ஈர்க்கப்பட்ட கூகுள் மற்றும் ஃபேஸ்புக் போன்ற உலகளாவிய தொழில்நுட்ப பன்னாட்டு நிறுவனங்களின் பெருமளவிலான முதலீடுகளால் ஊக்கப்படுத்தப்படுகிறது.

உலகின் வேகமாக வளரும் பொருளாதாரங்களில் ஒன்றாக இருப்பதால் ஓட்டோமொபைல், எலக்ட்ரோனிக்ஸ் மற்றும் இரசாயனங்கள் போன்ற உற்பத்தித் தொழில்கள் மற்றும் வங்கி, காப்பீடு, சொத்து மேலாண்மை, சுகாதாரம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற சேவைத் தொழில்கள் உட்பட, பரந்த அளவிலான தொழில்களில் பன்னாட்டு நிறுவனங்களுக்கான மிக முக்கியமான நீண்ட கால வளர்ச்சி சந்தைகளில் ஒன்றாக இந்தியா மாறும்'.



**ஒவ்வொரு துறையிலும் புத்தாக்க சிந்தனைகளுக்கு அரசு முழு ஒத்துழைப்பு அளித்து ஊக்குவிக்கிறது என்கிறார் பிரதமர் மோடி**

இவ்வாறு 'ஐ.எச்.எஸ் மார்க்கிட்' ஆய்வு நிறுவனத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இது இவ்விதமிருக்க நடப்பாண்டில் இந்தியா 7.5 சதவீத பொருளாதார வளர்ச்சியை எட்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பொருளாதாரம் 2025 ஆம் ஆண்டில் 1 இலட்சம் கோடி டொலரை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப இந்தியாவின் பொருளாதார கட்டமைப்புகள் வலுவாக உள்ளன. இந்தியாவின் தேசிய கட்டமைப்பு திட்டங்களில் 1.5 இலட்சம் கோடி டொலர் அளவுக்கு முதலீட்டு வாய்ப்புகள் உள்ளன.






**சீனாவின் பொருளாதார வளர்ச்சியானது 5.6 சதவீதத்தில் இருந்து 4.8 சதவீதமாக வீழ்ச்சி!**

(15ஆம் பக்கம் பார்க்க)

எஸ்.சாரங்கன்...

**இலங்கை பொருளாதார ரீதியாக எதிர்கொண்டுள்ள பல்வேறு சவால்கள் காரணமாக மக்கள் நாளுக்கு நாள் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். குறிப்பாக சமையல் எரிவாயு உட்பட எரிபொருட்களுக்கு நிலவுகின்ற கடுமையான தட்டுப்பாடு காரணமாக மக்களின் அன்றாட செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், எரிபொருளை நாட்டுக்குள் போதுமான அளவு கொண்டு வருவதற்கான பிரயத்தனங்களை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.**



# அரசியல் ஸ்திரத்தன்மை இன்றேல் சர்வதேச உதவிகள் பெறுவது ஐயம்!




## அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் அதிகாரம் மீண்டும் அரசியல் கட்சிகளின் கைகளில்; அரசியல் பதற்றம் தணிந்தாலேயே சர்வதேசம் இலங்கைக்கு கைகொடுக்கும்

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனைப் பெற்று நெருக்கடி நிலைக்குத் தற்காலிக தீர்வொன்றைக் காண்பதற்கான ஆரம்பகட்டப் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன. அப்பேச்சுகள் இலங்கைக்கு சாதகமாக இருப்பதாகக் கூறப்படும் நிலையில், அரசியல் ரீதியான ஸ்திரத்தன்மைக்கான அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்படுவதுடன், மத்திய வங்கியில் காணப்படும் அரசியல் தலையீடுகள் இல்லாமல் செய்யப்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை சர்வதேச நாணய நிதியம் சுட்டிக் காட்டியுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் மாத்திரமன்றி பல்வேறு தரப்பினரும் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட வேண்டியமை தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய அரசாங்கமொன்று உருவாக்கப்பட வேண்டியது தொடர்பில் கடந்த சில மாதங்களாகக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இதற்கான கருத்தாடல்களும், கட்சிகளுக்கிடையில் கலந்துரையாடல்களும் இடம்பெற்று வந்த நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்று தற்போதைய அரசாங்கம் உருவாகியது. இதற்கு முன்னர் பிரதமராகவிருந்த மஹிந்த ராஜபக்ஷவும் அவருடன் அமைச்சரவையில் இருந்தவர்களும் பதவி விலகி புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு இடமளித்திருந்தனர்.

அரசாங்கத்தை அமைக்குமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கும், மற்றுமொரு எதிர்க்கட்சியான தேசிய மக்கள் சக்திக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருந்தார். இந்த அழைப்பினை எவரும் நேரடியாக ஏற்றுக் கொண்டிராத நிலையில், ஜனாதிபதி பதவி விலகினால் மாத்திரமே அரசாங்கத்தைப் பொறுப்பேற்க முடியும் என அவர்களில் சிலர் கூறியிருந்தனர்.

இவ்வாறான பின்னணியில் பிரதமர் பதவியை ஏற்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க முன்வந்தார். இவருக்குப் பதவி வழங்கத் தீர்மானித்திருந்த நிலையில், தானும் பதவியேற்பதற்குத் தயார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அறிவித்திருந்தார். சஜித் பிரேமதாச தாமதமாகவே தனது கருத்தை வெளியிட்டிருந்தார். இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பிரதமர் பதவி வழங்கப்பட்டது.

அவர் பதவியேற்ற ஒரு சில மாதங்களே கடந்துள்ள நிலையில் பொருளாதார சிக்கல்கள் இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

அதேநேரம், நாட்டின் பொருளாதார நிலைமைகள் குறித்து இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை பாராளுமன்றத்தைத் தெளிவுபடுத்தி வரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கத்தைப் பொறுப்பேற்க ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசாநாயக தயார் எனில் தனது பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்யத் தயார் எனவும் கூறியிருந்தார்.

யாராக இருந்தாலும் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டும் என்பதே தற்போதைய தேவையாக உள்ளது என அவர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இதற்குப் பதிலளித்த ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, ஆறு மாதங்களுக்கு அரசாங்கத்தைப் பொறுப்பேற்று நடத்துவதற்குத் தயார் என்றும், அதன் பின்னர் பொதுத் தேர்தலொன்றுக்குச் சென்று மக்கள் ஆணையைப் பெற்றவர்கள் ஸ்திரமான அரசாங்கத்தை ஏற்படுத்த முடியும் என்றும் கூறியிருந்தார்.



இது இவ்விதமிருக்க, மீண்டும் தேசிய அரசாங்கத்தை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்களும், பேச்சுவார்த்தைகளும் ஆரம்பமாகியுள்ளன. குறிப்பாக சுதந்திரக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. இருவருக்கும் இடையில் தேசிய அரசாங்கம் அமைப்பதற்கான இணக்கப்பாடும் எட்டப்பட்டது.



## தேசிய அரசாங்கத்தை அமைப்பது தொடர்பான கலந்துரையாடல்களும், பேச்சுவார்த்தைகளும் மும்முரம்! சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல்கள்; தேசிய அரசாங்கம் அமைப்பதில் இருவருக்குமிடையில் இணக்கப்பாடு!



இதன் தொடர்ச்சியாக அரசாங்கத்திலிருந்து விலகி தற்பொழுது எதிர்க்கட்சியில் சுயாதீனமாகச் செயற்படும் விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உள்ளிட்ட 10 அரசியல் கட்சிகளின் தலைவர்களும் பாராளுமன்றத்தில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர். இது விடயத்தில் இணைக்கப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் வழிநடத்தல் குழுவொன்றும் அமைக்கப்பட்டிருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அனைத்துக் கட்சிகளும் தமது அரசியல் வேறுபாடுகளைக் கைவிட்டு ஓரணியாக இணைந்து செயற்பட வேண்டும் என்பதே நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாக இருந்து வருகிறது. குறிப்பாக பாராளுமன்றத்தின் ஊடாக இதற்கு ஏதாவது தீர்வு எட்டப்படும் என மக்கள் கடந்த மூன்று மாதங்களாக எதிர்பார்த்திருந்தனர். துரதிர்ஷ்டவசமாக இதுவரை எந்த இணக்கப்பாடும் எட்டப்படவில்லை என்பதால் பலரும் அதிருப்தியிலேயே உள்ளனர்.

அதேநேரம், எரிபொருள் பிரச்சினை மோசமானநிலைக்குச் சென்று போக்குவரத்து மட்டுப்படுத்தப்படும் கட்டத்தை அடைந்திருக்கும் சூழ்நிலையில் கூட அரசியல் கட்சிகள் தேசிய அரசாங்கத்தை அமைத்து தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வராவிட்டால் நாடு பாரிய சவாலுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும். எனவே, தேசிய அரசாங்கம் தொடர்பான பேச்சுக்களை ஆரம்பித்துள்ள கட்சிகள் தமது சொந்த அரசியல் நலன்கள் குறித்து அக்கறை செலுத்தாது நாட்டு மக்களின் எதிர்காலம் பற்றி சிந்தித்து தீர்மானங்களை எடுக்க வேண்டும்.





## விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உள்ளிட்ட 10 அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பாராளுமன்றத்தில் சந்தித்துக் கலந்துரையாடல்!

மறுபக்கத்தில், அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் முயற்சிகளைத் தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்துள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை. குறிப்பாக அரசியலமைப்பில் திருத்தங்களைக் கொண்டு வந்து பாராளுமன்றத்தைப் பலப்படுத்தும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்த தனிநபர் சட்டமூலம் 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அது தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானமும் வழங்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்களை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை மாத்திரமன்றி சர்வஜன வாக்கெடுப்பின் அவசியத்தையும் உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேநேரம், அரசாங்கம் தயாரித்துள்ள 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தச்சட்டமூலத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இது மிக விரைவில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அதிலுள்ள விடயங்கள் அரசியலமைப்புக்கு முரணாக அமையாவிட்டால் பாராளுமன்றத்தின் பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்ற முடியும்.

சுயாதீன ஆணைக்குழுக்கள் மற்றும் பாராளுமன்றத்தைப் பலப்படுத்தும் பல்வேறு யோசனைகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றை நிறைவேற்றி அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தும் அதிகாரம் மீண்டும் அரசியல்வாதிகளிடமும் அரசியல் கட்சிகளிடமுமே காணப்படுகின்றது.

அரசியலமைப்புத் திருத்தம் மாத்திரமன்றி பாராளுமன்றத்தைப் பலப்படுத்தும் வகையில் குழு முறைமைகளை வலுப்படுத்தும் யோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு, அரசாங்க நிதி பற்றிய குழு மற்றும் பொதுமனுக்கள் பற்றிய குழு ஆகியவற்றை பலப்படுத்தும் வகையில் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளை திருத்தும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான பின்புலங்களை ஏற்படுத்தி அரசியல் ரீதியான ஸ்திரத்தன்மையை உருவாக்குவது தேவையான விடயம் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறான அடித்தளத்தை ஏற்படுத்துவதன் ஊடாகவே சர்வதேசத்தின் உதவியை இலகுவில் நாட முடியும் என்பதும் நிதர்சனம்.

**அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ள 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தச்சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு. 22 இலுள்ள விடயங்கள் அரசியலமைப்புக்கு முரணாக அமையாவிட்டால் பாராளுமன்றத்தின் பெரும்பான்மையுடன் அது நிறைவேறும்**

# மனைவியை கோடரியால் தாக்கி கொன்ற கணவன் !

சில மனிதர்களது நடத்தைகள் மிருகங்களை விட மோசமானவை என்பதை இந்த சமூகத்தில் அனேக சந்தர்ப்பங்களில் எம்மால் காணக் கூடியதாக உள்ளது. தனது இரத்தத்தில் உருவான பிள்ளைகளை பத்து மாதங்கள் வயிற்றில் சுமந்து உலகுக்குத் தரும் மனைவியை, அல்லது தனது பிள்ளைகளின் தாயை கொடூரமான முறையில் கொலை செய்யுமளவுக்கு மோசமாக செயற்படும் மனிதர்களைப் பற்றி அறியக் கிடைப்பது மிகவும் துயரமானது.

கடந்த 4ம் திகதி திங்கட்கிழமை பொலனறுவை மாவட்டத்தின் புலத்திசிரிபுல பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற கொலைச் சம்பவமொன்று அனைவரையும் உருக்கியுள்ளது.



பொலன்னறுவை மாவட்டத்தில் அமைந்துள்ள ஏழு பிரதேச செயலகப் பிரிவுகளில் 184 சதுர கிலோ மீற்றர் கொண்ட லங்காபுர பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் பிரதான நிருவாக உத்தியோகத்தரான 45 வயதுடைய எம். எம். யமுனா பத்மினி என்பவர் அவரது வீட்டினுள்ளேயே மிகவும் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

யமுனா வசித்து வந்தது புலத்திசிரிபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹிங்குரங்கொடையிலிருந்து சோமாவதி வரை செல்லும் வீதியில் வரும் கால்வாய் சந்திக்கு 500 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள தல்பொத்த, 16/1ம் இலக்க வீட்டிலாகும். அப்பிரதேசத்தில் அபூர்வமாகக் காணப்படும் சொகுசு இரு மாடி வீட்டில் அவள் வசித்து வந்தாள். அந்த வீட்டில் வைத்து அவள் கொலை செய்யப்பட்டது கடந்த 4ம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 2.20 மணியளவில் அவளது கணவனான கபில பண்டார என்பவனாலாகும். யமுனாவின் கொலை தொடர்பில் பொலிஸாரிடம் அவன் ஆரம்பத்தில் கூறியது இதைத்தான்.

"நான் அதிகாலை 2.20 மணியளவில் நித்திரையிலிருந்து எழும்பினேன்... வொஷ்றூம் சென்று திரும்பி மனைவியின் நுளம்பு வலையினுள் இருந்த நுளம்புகளை விரட்டினேன்.... எனது நுளம்பு வலையினுள்ளிருந்த நுளம்புகளையும் விரட்டிவிட்டுத்தான் உறங்கினேன்... சத்தம் கேட்டு திடீரென எழும்பினேன்.... முழுவதும் இருட்டாக இருந்தது.... அதேநேரம் வாசல் வழியாக கரிய நிற உயரமான ஒருவர் என்னை நோக்கி வந்தார். நான் அந்நபரைத் தாக்குவதற்காக இறங்கினேன்.... அந்நேரம் அந்நபர் அவனது கையிலிருந்த தடியோ அல்லது கத்தியோ ஏதோவொன்றால் என்னைத் தாக்கினான்.... அத்தாக்குதல் என் அருகில் படுத்திருந்த மனைவியின் மீதே பட்டது.... நான் அந்த இருட்டில் அவனை துரத்தினேன்... அவன் வெளியே தப்பி ஓடினான்...."

இச்சம்பவத்தைத் தொடர்ந்து கபில பண்டார புலத்திசிரிபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பீ. பீ. கே. பத்திரணவிடம் இவ்வாறு கூறியிருந்தான்.

"சேர்.... திருடன் ஒருவன் வீட்டுக்குள் புகுந்து என் மனைவியைத் தாக்கிவிட்டான்.... பின்னர் தப்பி ஓடிவிட்டான்.... என்னால் அவனைத் துரத்திப் பிடிக்க முடியாமல் போய்விட்டது.... நாம் இப்போது மனைவியை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்கிறோம்....."

அந்த தொலைபேசி அழைப்பு அதிகாலை 4 மணியளவில் கிடைத்திருந்தது. எனினும் சம்பவம் இடம்பெற்றிருப்பது அதிகாலை 2.20 மணியளவிலாகும்.



யமுனாவின் தலையின் நடுவில் மேற்கொள்ளப்பட்டிருந்த இந்த தாக்குதலால் தலையில் கடுமையான காயம் ஏற்பட்டிருந்தது. பொலனறுவை வைத்தியசாலையில் அவள் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவுக்கு கொண்டு செல்லப்பட்ட சிறிது நேரத்தில் யமுனா இவ்வுலக வாழ்வுக்கு விடை கொடுத்தார், அவரது இரண்டு சின்னஞ்சிறு குழந்தைகளும் நிர்க்கதியாக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தகவல் கிடைத்த உடன் செயற்பட்ட புலத்திசிரிபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் யமுனா கொலை செய்யப்பட்ட அவள் வசித்த வீட்டை நோக்கி விரைந்தனர். யமுனா கொலை செய்யப்பட்டிருந்தது அவளது வீட்டின் மேல் மாடியில் தனது மகள்களுடன் ஒரே கட்டிலில் படுத்திருந்த நிலையிலாகும். பொலிஸ் விசாரணைகளின் ஆரம்பத்துடன், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட புலனாய்வாளர்களுக்கு, யமுனாவின் கொலை பற்றி அவரது கணவர் கூறிய விடயங்களில் சில சந்தேகங்கள் எழுந்தன, காரணம் இது போன்ற விசாரணைகளில் அவர்களுக்கு சிறந்த பயிற்சி மற்றும் அனுபவத்தின் இருப்பதனாலாகும்.

தமது வீட்டுக்கு திருடன் ஒருவன் வந்துள்ளதாகக் கூறினாலும், அத்திருடன் வீட்டினுள் நுழைந்த முறை பற்றி யமுனாவின் கணவர் எதுவும் தெரிவிக்கவில்லை. அது தொடர்பில் பொலிஸார் தொடர்ச்சியாக யமுனாவின் கணவரிடம் விசாரணைகளை மேற்கொண்டு, வீட்டையும் சோதனை செய்த போதும் திருடன் வீட்டுக்குள் நுழைந்ததற்கான எந்த தடயங்களையும் கண்டு கொள்ள முடியாமல் போயுள்ளது. அவன் பொலிஸாரிடம் வழங்கிய வாக்கு மூலத்தில் வீட்டின் பிரதான வாயிற் கதவு திறந்திருந்ததாகத் தெரிவித்திருந்தான். அது பொலிஸாரின் சந்தேகத்திற்கு மற்றுமோர் சான்றாக அமைந்திருந்தது.



காரணம் அக்கதவு சாதாரண கதவுகளைப் போன்று திறக்க முடியாதது. தற்காலிகமா அமைக்கப்பட்டிருந்த அக்கதவு மூடப்பட்டிருந்தது மோட்டார் சைக்கிள்களுக்குப் பயன்படுத்தப்படும் செயின் ஒன்றின் மூலமே. அதன் சாவியை வீட்டினுள் உள்ள மலர்ச்சாடியினுள்ளேயே வைத்திருப்பதாகவும் யமுனாவின் கணவன் கூறியிருந்தான். எனினும் திருடனைப் பின்தொடர்ந்து துரத்திக் கொண்டு கீழே வரும் போது முன் கதவு திறக்கப்பட்டிருந்ததைக் கண்டதாகவும் அவன் பொலிஸாரிடம் கூறியிருந்தான்.

பொலிஸாரின் கடுமையான சந்தேகத்திற்கு காரணமாக அமைந்திருந்தது அந்தக் கதவு பூட்டப்பட்டிருந்த முறைக்கமைய அதன் சாவியைத் தேடி எடுத்து பூட்டைத் திறப்பதைத் தவிர அக்கதவினைத் திறந்து கொண்டு சாதாரண திருடர்களால் உள்ளே நுழைவது முடியாத காரியம் என்பதனாலாகும். அக்கதவினை திடீரென திறந்து விட முடியாது என்பது விசாரணையினை மேற்கொள்ளும் பொலிஸாருக்கு தெரிய வந்தது.

இதேநேரம் யமுனாவின் கணவர் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து தெரிவித்திருந்தார்,

" 3 வருடங்களுக்கு முன்னர் இதே நபர் வீட்டுக்குள் நுழைய முற்பட்ட நேரத்தில் நான் வீட்டு விளக்குகளைப் போட்டேன்.... அதனைத் தொடர்ந்து அவன் பின்புறத்தால் தப்பி ஓடிவிட்டான்.... அப்போது நானும் மனைவியும் கீழ் அறையிலேயே உறங்கிக் கொண்டிருந்தோம்... என்னோடு ஊரில் எவருக்கும் குரோதம் இல்லை... நான் ஊரில் எல்லோருக்கும் உதவியிருக்கின்றேன்... மனைவின் தலையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது... இரத்த வெள்ளம்.... நான் காபட் ஒன்றைப் போட்டு இரத்தத்தை மூடினேன்... எனினும் எமது பிள்ளைகள் இருவரும் இரத்தத்தைக் கண்டுவிட்டார்கள்... அவன் தான் கொண்டு வந்த கூரிய ஆயுதத்தினாலேயே தாக்கியிருக்கின்றான்... கோடரி, கத்தி, அரிவாள் எல்லாமே சமையல் அறையிலேயே இருக்கின்றது... அந்த ஆயுதத்தினால்தான் தாக்கி இருக்கிறான் போல.... எனது மனைவிக்கு கொரோனா தாக்கம் ஏற்பட்டும் கூட நான் அவளை மரணத்திலிருந்து காப்பாற்றியிருக்கின்றேன்... நான் என் மனைவியை வீட்டில் வைத்தே சிகிச்சை வழங்கினேன்... கடைசியில் ஒரு கொடுரனின் கைகளில் என் மனைவியை இழந்திருக்கின்றேன்... அதுதான் எனக்கு வேதனையாக உள்ளது..." இவ்வாறு அவன் மிகுந்த சோகத்துடன் கூறியிருந்தான்.

அவனது இந்தக் கூற்று தொடர்பில் பொலிஸாரின் கவனம் திரும்பியது. இதனிடையே பொலிஸார் யமுனாவின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவளது பிள்ளைகளிடமும் வாக்குமூலத்தைப் பதிவு செய்திருந்தனர். யமுனாவின் 11 வயது மூத்த மகள் இவ்வாறு கூறியிருந்தார். "நான் நித்திரையிலிருந்து எழுந்து பார்த்த போது எனது தாய் வேகமாக மூச்செடுத்துக் கொண்டிருந்ததைக் கண்டேன்... அப்போது திருடன் வந்துள்ளதாகக் கூறி தந்தை கீழே ஓடினார்..." அச்சிறுமி அவ்வளவுதான் கூறியிருந்தார். விசாரணை மேற்கொண்ட பொலிஸாரின் சந்தேகம் வலுவடைந்தது. யமுனாவைக் கொலை செய்த நபர் யமுனாவின் வீட்டில் உள்ள ஒருவராகவே இருக்க வேண்டும் என்பது கணவனது நடத்தைகள் மூலம் வெளிப்பட்டது.

இதனிடையே பொலனறுவையின் உத்தியோகபூர்வ மோப்ப நாயான "லியோன்" விசாரணைகளுக்காக அழைத்து வரப்பட்டதைத் தொடர்ந்து அந்த மோப்ப நாய் யமுனாவின் வீடு அமைந்துள்ள தோட்டத்தைச் சுற்றி எல்லா இடங்களுக்கும் சென்று இறுதியில் சமையல் அறையில் நின்றது.. இதுவும் கொலையாளி வீட்டினுள்ளேயே இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்தியது.

இதனடிப்படையில் யமுனாவின் கொலை நடந்து இரண்டு தினங்கள் கடக்கும் முன்னர் அதாவது 5ம் திகதி மாலை 3.00 மணியளவில் புலத்திசிரிபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் அவர்களது வீட்டுக்குச் சென்றனர். பின்னர் விசாரணைகளிலிருந்து வெளிப்பட்ட சந்தேகநத்தின் பிரகாரம் யமுனாவின் கணவன் கபில பண்டாரவை பொலிஸார் 500 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள புலத்திசிரிபுர பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்வதற்கு ஆயத்தமானார்கள். எனினும் கபில பண்டார பொலிஸாரிடம் இவ்வாறு கூறினார்.

"சேர்.... இக்கொலைக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை... ஏன் நீங்கள் இதில் என்னை சிக்க வைக்கப் பார்க்கின்றீர்கள்...? என்னை பொலிஸ் நிலையத்திற்கு இந்நேரத்தில் அழைத்துச் செல்ல வேண்டாம்.... தாயும் இல்லாத எனது பிள்ளைகளுக்கு இந்நேரத்தில் நான் இங்கு இருந்தே ஆக வேண்டும்...."

எனினும் சந்தேகத்திற்கு வழிவகுத்த பல விடயங்களின் காரணமாக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்ட கபில பண்டார பின்னர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டான். அவனிடம் தொடர்ச்சியாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். அவ்வாறு அதிக நேரம் விசாரணைகளை மேற்கொள்வதற்கு பொலிசாருக்கு தேவை ஏற்படவில்லை. குற்றச் செயலைச் செய்த குற்றவாளியின் வாய் பொய்யைக் கூறினாலும் செய்கைகளால் அதனைப் பொய்யாக்க முடியாது என்பதை நிரூபித்து கபில பண்டார தனது மனைவியைக் கொலை செய்ததை ஒப்புக் கொண்டு அனைத்து விடயங்களையும் வெளிப்படுத்தினான்.

"ஆமாம்.... சேர் நான்தான் எனது மனைவியின் தலையில் அடித்தேன்.... கோடாரியால் தான் தாக்கினேன்... பின்னர் கோடரியை வீசி விட்டேன்...."

கபில பண்டார பொலிஸாரிடம் நிறைய விடயங்களை வெளிப்படுத்தினான்.



"அன்று நான் வேலைக்குச் செல்லவில்லை.... காலை வேளையில் வீட்டிலேயே இருந்தேன்... மாலையில் நண்பன் ஒருவனைச் சந்திக்கச் சென்றேன்... இருவரும் இணைந்து பியர் அருந்தினோம்... வீட்டுக்கு வந்த போது மனைவி என்னுடன் சண்டை போட்டாள்.... நான் மது அருந்துகிறேன் என்றும், அதிகமாக கடன் பட்டுள்ளேன் எனக் கூறியும் அவள் என்னோடு சண்டையிட்டாள்...." அது நடந்தது கடந்த 04ம் திகதியாகும். யமுனா 45 என்ற குறுகிய வயதில் இவ்வாறு அவசரமாகவே தனது வாழ்க்கையை முடித்துக் கொண்ட ஒரு இருண்ட தினமாக அன்றைய தினம் அமையப் போகின்றது என்பதை அவள் அறிந்திருக்கவில்லை.

"சேர்.... நாம் இருவரும் சண்டை பிடித்துக் கொண்ட பின்னர் யமுனாவும், பிள்ளைகள் இருவரும் உறங்குவதற்காக மேல் மாடிக்குச் சென்றார்கள்.... பின்னர் நான் சமையல் அறையில் இருந்த கோடரியை எடுத்துக் கொண்டு மேலே சென்றேன்.... கோடாரியின் வெட்டாத பக்கத்தினால் யமுனாவின் தலையில் அடித்தேன்.... அதன் பின்னர் நான் வெளியே சென்று விட்டேன்.... பக்கத்து காணியின் புற்களுக்குள் கோடரியை வீசினேன்.... அதன் பின்னர் நான் வீட்டுக்கு வந்து கூக்குரலிட்டேன்..... வீட்டுக்குள் திருடர்கள் புகுந்து யமுனாவைத் தாக்கிவிட்டார்கள் என கத்தினேன்...."

கடந்த 05ம் திகதி பொலனறுவை வைத்தியசாலையில் இடம்பெற்ற யமுனாவின் சடலம் மீதான பிரேதப் பரிசோதனையின் போது, மழுங்கிய ஆயுதத்தினால் தலையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் காரணமாகவே உயிரிழப்பு ஏற்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது. மரண விசாரணைகளின் பின்னர் யமுனாவின் சடலத்தை அவளது தந்தையிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதோடு, இறுதிச் சடங்கு கடந்த 06ம் திகதி லங்காபுர பிரதேசத்தில் இடம்பெற்றது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான கபில கடந்த 06ம் திகதி பொலனறுவை நீதவான் சகித கிரசான் விக்ரமரத்ன முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் சந்தேக நபர் விசேட வாக்குமூலம் ஒன்றை வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார். பின்னர் சந்தேக நபரை 08ம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டதோடு, அவரது வாக்குமூலத்தை அன்றைய தினத்தில் நீதிமன்றத்தில் தெரிவிக்குமாறும் நீதவான் உத்தரவிட்டார்.

1977 மார்ச் 12ம் திகதி பிறந்த யமுனா பத்மினி, கண்டி கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்தவராகும். ஐந்து சகோதரிகளும், ஒரு சகோதரரும் அவருக்கு உள்ளனர். கட்டுகஸ்தோட்டை ஶ்ரீராகுல வித்தியாலத்தின் சிறப்புமிக்க பழைய மாணவியான யமுனா, பாடசாலையின் உதவி மாணவத் தலைவியுமாகும். அதற்கு மேலாக கட்டுகஸ்தோட்டைத்ரி சிங்கள சிமாராம விகாரையின் அறநெறி பாடசாலையின் முன்னாள் போதனாசிரியருமாவார். மிகுந்த கஷ்டங்கள், அர்ப்பணிப்புக்களுக்கு மத்தியில் கல்வி கற்று முன்னுக்கு வந்த யமுனா, வணிக முகாமைத்துவ பட்டம், இலங்கை கணக்காளர் நிறுவன உறுப்பினர், கணக்காளர் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா போன்ற உயர் கல்வி தரங்களைப் பெற்றிருந்தார். யமுனா 2004/05 காலப் பகுதியில் அரச கைத்தொழில் நிறுவனத்தின் உத்தியோகத்தராகவும், 2005 ஆண்டு முதல் 2011ம் ஆண்டு வரையில் குண்டசாலை பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகவும், 2011 முதல் 2016 வரையில் லங்காபுர பிரதேச செயலகத்தில் அதே பதவியின் பின்னர் 2016 தொடக்கம் 2018ம் வரையில் புலத்திசிரிபுர தேசிய கல்வியியல் கல்விக் கல்லூரியில் பதிவாளராகவும், பின்னர் 2018 செப்டெம்பர் 18ம் திகதியிலிருந்து மரணிக்கும் வரையில் லங்காபுர பிரதேச செயலகத்தில் பிரதான நிருவாக அதிகாரியாகவும் பணியாற்றி வந்துள்ளார்.

யமுனா அனைவரினதும் மனங்களைக் கவர்ந்த ஒரு உத்தியோகத்தராக இருந்து வந்துள்ளமை அவரது கொலையின் பின்னர் பெரும்பாலானோர் சமூக ஊடகங்களில் வெளியிட்ட கருத்துக்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

லங்காபுர பிரதேசத்தினை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட 41 வயதுடைய ஹேரத் முதியான்சேலாகே கபில பண்டார, ஆரம்ப காலத்தில் சாரதியாக இருந்தவர். அவர் தற்போது லங்காபுர கேகலுகம அரச பாடசாலையில் பாதுகாப்பு உத்தியோகத்தராக் கடமையாற்றுகின்றார். இற்றைக்கு 15 வருடங்களுக்கு முன்னர் கபில பண்டார மற்றும் யமுனா ஆகிய இருவரும் கட்டுகஸ்தோட்டையில் இடம்பெற்ற திருமண வைபவம் ஒன்றில் சந்தித்து அறிமுகமாகினர். அன்றைய தினத்தில் ஆரம்பித்த இவர்களது காதல் தொடர்பு திருமணத்தில் முடிவடைந்ததன் பின்னர் யமுனா லங்காபுர பிரதேசத்திற்கு குடிபெயர்ந்துள்ளார்.

அவர்கள் இருவருக்கும் இரண்டு பெண் பிள்ளைகள் பிறந்துள்ளனர். அண்மையில் அவர்கள் இருவரும் இணைந்து அப்பிரதேசத்திலேயே சொகுசு மாடி வீடு ஒன்றையும் நிர்மாணித்தனர். அந்த நிர்மாணப் பணிகள் இதுவரை நிறைவடையவுமில்லை.

புலத்திசிரிபுர பொலிஸார் தற்போது சந்தேக நபரான கபில பண்டாரவின் கடந்த கால செயற்பாடுகள் தொடர்பிலும் அவரது சமூகத் தொடர்புகள் தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் அவர்கள் இருவரும் சமூகத்தின் முன் சிறந்த தம்பதியினராக வாழ்வதாகக் காட்டிக் கொண்டாலும் உள்ளே ஏராளமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வந்துள்ளமை தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அதற்கு அவர்கள் இருவரின் சமூக அந்தஸ்து, வயது வித்தியாசம், தொழில் முரண்பாடுகள் போன்றன காரணமாக அமைந்திருந்துள்ளன.

அத்துடன் கபில பண்டார எவ்வித திட்டமிடலும் இன்றி வாழ்ந்து கொண்டிருந்த ஒருவராகும். தனது மனைவி யமுனா அதற்கு முற்றிலும் மாற்றமான பெண்ணாகும். கபிலவின் அவ்வாறான வாழ்க்கையினால் கபில தனது மனைவி மற்றும் மனைவியின் சகோதரிகள் உள்ளிட்ட பலரிடம் இலட்சக் கணக்கில் கடன் பெற்றுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இரு பிள்ளைகள் தொடர்பில் சிறுவர் நன்னடத்தை அறிக்கையினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அதன் பிரகாரம் பிள்ளைகளை கம்பளை, கெலிஓயாவில் வசிக்கும் சந்தேக நபரின் மூத்த சகோதரியிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டதாக புலத்திரசிரிபுல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். அந்தப் பிள்ளைகள் சந்தேக நபரின் சகோதரியுடன் நெருக்கமாக இருந்ததன் காரணமாகவே அவர்கள் அவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் சந்தேக நபரான் கபில மற்றும் கொலை செய்யப்பட்ட யமுனா ஆகியோருக்கிடையில் முறுகல் ஏற்பட்டதாகவும், அதனை சமாதானப்படுத்தி வைத்த பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, இரண்டு பிள்ளைகளின் எதிர்காலம் மற்றும் மன நிலை என்பன பற்றி சிந்தித்து தீர்மானிக்க வேண்டும் என அவர்களுக்கு புத்திமதி கூறி அனுப்பியுள்ளார்.

கணவனின் கொடூர செயலால் ஒட்டு மொத்த அரச துறையானது ஒரு சிறந்த அதிகாரியை இழந்துள்ளதுடன், அவரது மரணத்தால் இவ்வுலகில் தனித்து விடப்பட்ட இரண்டு அப்பாவி குழந்தைகளின் வாழ்க்கை தற்போது கருமேகமாகிப் போயுள்ளது.

வடமத்திய மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் லக்ஶ்ரீ விஜேசேன, பொலனறுவை பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஓஷான் ஹேவாவிதாரன ஆகியோரின் ஆலோசனையின் பேரில், உதவி பொலிஸ் அத்தியட்சகர் நிசாந்த ரத்னபாலவின் கண்காணிப்பில் புலத்திசிரிபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் பீ. பீ. கே. பத்திரனவின் நடவடிக்கையில் பொலிஸ் நிலைய குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் தமித் குணசிங்க, பொலிஸ் சார்ஜன்களான பத்திரன, ஹேரத், பொலிஸ் கான்ஸ்டபிள்களான ஹதுருசிங்க, மதுசங்க, பெண் பொலிஸ் கான்ஸ்டபில்களான கயானி மற்றும் சஷிகா ஆகியோர் இந்நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.



அமில மலவிசூரிய
தமிழில்: எம்.எஸ்.முஸப்பிர்
(புத்தளம் விசேட நிருபர்)

34 கொழும்பின் கதை



என். சரவணன்

# பதிப்புப் பண்பாட்டின் நினைவுச் சின்னமாகத் திகழும் வெஸ்லியன் சிட்டி மிஷன்

‘அலெக்சாண்டர் ஜோன்ஸ்டன் என்ற நீதியரசரின் மனைவி கொள்ளுபிட்டியில் தான் நடத்திவந்த பாடசாலையை வெஸ்லியின் மெதடிஸ்ட் அமைப்பிடம் ஒப்படைத்துச் சென்றார். அதுவே இன்று கொள்ளுபிட்டியில் பிரபல மெதடிஸ்ட் மகளிர் கல்லூரியாக விளங்குகிறது.’

ஆசியாவின் முதலாவது மெதடிஸ்ட் தேவாலயம் இலங்கையில் தான் நிறுவப்பட்டது. கொழும்பு புறக்கோட்டை டாம் வீதியில் உள்ள கச்சேரிக்கு எதிரில் இது அமைந்திருக்கிறது. 1816 ஆம் ஆண்டு கொழும்பு சிட்டி மிஷன் (Colombo City Mission) என்கிற பேரில் அமைக்கப்பட்ட இது இன்றும் அதே பேரில் தான் அழைக்கப்படுகிறது. அதேவேளை இந்த தேவாலயம் பல முக்கிய வரலாற்றுக் கதைகளை தன்னகத்தே கொண்டிருக்கிறது.

இலங்கையை ஆங்கிலேயர்கள் கைப்பற்றியதோடு பல கிறிஸ்தவ மிஷன்கள் இலங்கையை இலக்கு வைத்து இங்கே வந்தன. அதற்கு முன்னர் ஒல்லாந்தர்கள் கத்தோலிக்க மதத்தை தடை செய்து வைத்திருந்ததால் இத்தகைய மிஷன்கள் தமது மதப் பிரசார, மதமாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வாய்ப்புகள் இல்லாது இருந்தன. ஆனால் ஆங்கிலேயர்கள் வந்ததோடு அந்த நிலை மாறியது. அவ்வாறு வந்திறங்கிய மிஷன்களுக்கு ஆங்கிலேய அரசே போதிய ஆதரவை வழங்கியது.

லண்டன் திருச்சபைக் கழகம் London Missionary Society (LMS) 1805,

பப்டிஸ்ட் திருச்சபைக் கழகம் Baptist Missionary Society (BMS) 1812,

வெஸ்லியன் மெதடிஸ்ட் திருச்சபை Wesleyan Methodist Mission – (WMM) 1814,

அமெரிக்கன் மிஷன் The American Mission, (ABCFM American Board of Commissioners for Foreign Missions) 1816

சேர்ச் மிஷன் கழகம் Church (of England) Missionary Society (CMS) – 1817



அன்றைய சிட்டி மிஷன் மற்றும் பாடசாலைக் கட்டடம்

இவற்றில் யாழ்ப்பாணத்தில் தீவிரமாக இயங்கிய மிஷன்கள் வெஸ்லியன் மெதடிஸ்ட் மிஷனும், அமெரிக்க மிஷனும் தான்.

தெற்காசியாவை ஐரோப்பியர்கள் கைப்பற்றி ஆக்கிரமித்தபோது, ஆங்கிலேய மிஷனரிகள் பிரிட்டிஷ் மற்றும் கிழக்கிந்திய கம்பெனி துருப்புக்களோடு சேர்ந்து நெருக்கமாக அவர்களைப் பின்தொடர்ந்தனர், 1802 ஆம் ஆண்டு பிரி ட்டிஷ் சிலோன் முடிக்குரிய காலனியாக அறி விக்கப்பட்டபோது, ஆறுபேர் கொண்ட மெதடிஸ்ட் பணியாளர்கள் டிசம்பர்1813 இல் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டனர். ஆறு மாத பயணத்தின் பின்னர் ஜுன் 1814 இல் அவர்களில் நான் கு பேர் தென்னிலங்கையின் வெலிகம கடற்கரையில் வந்திறங்கினர். இந்த இலங்கைப் பயணக் குழுவுக்கு தலைமை தாங்கியவர் டொக்டர் தோமஸ் குக் (Dr Thomas Coke). அவர் அந்தக் கடற்பயணத்தின் போது இறந்துவிட்டார். மற்றொருவர் இந்தியாவில் நிலைநிறுத்தப்பட்டார்.

அவர்களில் ஒருவர் வில்லியம் மார்ட்டின் ஹார்வர்ட் (William Martin Harvard) இன்னொருவர் ஆண்ட்ரூ ஆர்மர் (Andrew Armour)அவர் ஒரு முன்னாள் இராணுவ அதிகாரி. ஹார்வர்ட் இந்தியா, பம்பாயில் மிஷனரிப் பணிகளுக்காக அமர்த்தப்பட்ட போதும் அவர் இடைநடுவில் 1815ஆம் ஆண்டு பெப்ரவரியில் இலங்கை வந்து தனது குழுவோடு இணைந்து கொண்டார். அவர் ஒரு கைதேர்ந்த அச்சகர். மிஷனரிப் பணிகளை முன்னெடுக்க பிரசுரங்களே சிறந்த வழி என்று அவர்கள் தீர்மானித்துக் கொண்டார்கள். மார்ட்டின் ஹார்வர்ட் பம்பாயிலிருந்து அச்சு இயந்திரங்களை கொண்டு வந்து சேர்க்கும் பொறுப்பை ஏற்றார். அதன்படி அச்சு இயந்திரம், அதற்கான மை, நான்கு பெட்டிகளுக்கு எழுத்து வார்ப்புக்கள், கடதாசிகள் அனைத்தையும் அங்கிருந்து கொண்டு வந்து சேர்த்தார் அவர்.

கொழும்பு புறக்கோட்டை பகுதியில் உள்ள டாம் வீதியில் ஹார்வார்ட் வெஸ்லியன் சபைக்காக ஒரு நிலத்தை வாங்கினார். அங்கு தான் இந்த தேவாலயம் கட்டப்பட்டது. ஆசியாவின் மிகப் பழமையான மெதடிஸ்ட் தேவாலயம் இது தான். வெஸ்லியன் மிஷன் ஹவுஸ் (Weslyan Mission House) 1816 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நத்தாருக்கு சற்று முந்திய தினத்தன்று தனது முதல் ஆராதனையை நடத்தியது. தேவாலயத்தின் உட்புறப் பகுதிகள் பல ஆண்டுகளாக புதுப்பிக்கப்பட்டு வந்தன. மேலும் வெளிப்புறமானது 1966 இல் மாற்றியமைக்கப்பட்டது. இங்கிலாந்தின் லிவர்பூலில் உள்ள புகழ்பெற்ற டோரிக் வடிவத்திலான பிரன்சுவிக் வெஸ்லியன் சேப்பலின் (Liverpudlian Brunswick Wesleyan Chapel) தோற்றத்துக்கு நிகராக இன்றும் தோற்றமளிக்கிறது. அந்த தேவாலயத்தின் தோற்றத்தில் தான் இது அமைக்கப்பட்டது.

இந்த தேவாலயம் ஆரம்பிக்கப்பட்டு சில காலத்தில் சிறுவர்களுக்கான ஞாயிறு பாடசாலை அங்கே ஆரம்பிக்கப்பட்டது. அங்கே தான் வெஸ்லியன் அச்சகமும் உருவாக்கப்பட்டது.1874ஆம் ஆண்டு 2ஆம் திகதி டேனியல் ஹென்றி பெரேரா பாதிரியாரால் வெஸ்லி கல்லூரி இங்கே உருவாக்கப்பட்டது. அக்கல்லூரியின் முதலாவது அதிபரும் அவர் தான். புறக்கோட்டைப் பகுதியின் சத்தங்களும், தூசுகளும், வெக்கையும் பாடசாலையை தொடர்ந்து அங்கே நடத்த இடையூறாக இருந்தன. இடவசதியும் போதவில்லை. 1895இல் இக்கல்லூரிக்கு பொறுப்பாக வந்து சேர்ந்த ஹைபீல்ட் (Highfield) 1905ஆம் ஆண்டு இக்கல்லூரியை இடமாற்றம் செய்தார். அந்தக் கல்லூரி தான் இன்று இலங்கையின் பிரபல பாடசாலைகளில் ஒன்றாக திகழ்கிற பொரளையிலுள்ள வெஸ்லி கல்லூரி.

இலங்கையின் அச்சு ஊடக வரலாற்றின் முக்கிய திருப்பு முனையாக அமைந்த அந்த அச்சகம் கைமன் வீதியில் (Cayman’s Street) நிறுவப்பட்டது. அது என்ன கைமன் வீதி என்கிறீர்களா? அது தான் பிற்காலத்தில் டாம் வீதி (Dam Street) என்று பெயர் மாற்றப்பட்டு இன்றும் நிலைத்து நிற்கிறது. டச்சு காலத்தில் கைமன் வீதி என்று அழைக்கப்பட்டாலும், ஆங்கிலேயர் காலத்தில் அது தம்ப வீதி (Damba Street) என்று அழைக்கப்பட்டது. தம்ப என்கிற பழ மரம் வழிநெடுக இரு மருங்கிலும் அப்போது இருந்திருக்கிறது. அதுவே பின்னர் டாம் வீதி என்று ஆகியிருக்கிறது.

மிஷனரி பாடசாலைகளுக்கான நூல்கள் தான் இந்த வெஸ்லியன் அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டன. குறிப்பாக ஞாயிறு பாடசாலைக்கான நூல்கள் அங்கே பிரசுரிக்கப்பட்டன. இந்த அச்சகம் வெற்றிகரமாக இயங்கிகொண்டிருந்த வேளை அன்றைய தேசாதிபதி சேர் றொபர்ட் பிர்வுன்றிக் அச்சகத்தை அரசாங்கத்துக்காக வாங்குவதற்காக தனது தனிப்பட்ட செயலாளர் பிஸ்ஸத்தை (Bisset) பல தடவைகள் அனுப்பிப் பார்த்தார்.

இதற்கு ஒரு காரணம் இருந்தது. பிரவுன்றிக் தலைமையிலான அரசாங்கம் தான் கண்டி ஒப்பந்தத்தை 1815இல் செய்திருந்தது. அந்த ஒப்பந்தத்தின்படி பௌத்த மதத்தைப் பாதுகாக்கும் ஒரு உடன்பாட்டையும் (5வது ஏற்பாடு) எட்டியிருந்தது. ஆனால் இந்த மிஷனரிகள் மெதடிஸ்ட் இலக்கியங்களான கிறிஸ்தவ மதப் பிரச்சாரங்களின் மூலம் சுதேசிகளிடம் சிக்கல்களை உருவாக்கி விடக்கூடும் என்று நம்பினார் அவர்.

ஆனால் ஹார்வார்ட் இந்த அச்சகத்தை விற்பதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. தேசாதிபதியின் கோரிக்கையை மறுத்துவிட்டார். ஆனால் தேசாதிபதி வேறு விதமாக அணுகினார். அதாவது அரசாங்கத்தின் அச்சகத்துக்கு பொறுப்பாக வந்து பணியாற்றும் படியும் அதற்கு தகுந்த சம்பளத்தையும் வழங்குவதாக கேட்டுப் பார்த்தார். தமக்கு வெஸ்லியன் மிஷனை நடத்துவதற்கு அனுமதி கொடுத்த தேசாதிபதியை பகைத்துக்கொள்ள முடியாமல் இறுதியில் அவர் அரசாங்க அச்சகத்தை பலப்படுத்தும் பணியில் ஈடுபட்டார். ஆனால் டாம் வீதி வெஸ்லியன் அச்சகத்தை மிகுந்த வினைத்திறனுடன் அவர் நடத்தவும் செய்தார். அந்த அச்சகத்துக்கு சிலவேளை தொழிநுட்ப உதவிகளோ, உபகரணங்களோ தேவைப்பட்ட வேளைகளில் அரசாங்க அச்சகத்தில் இருந்த வளங்களைப் பயன்படுத்த அரசாங்கம் அனுமதித்தது. குறிப்பாக இந்த அச்சகத்துக்கு தேவையான தமிழ் எழுத்துக்கள் அரசாங்க அச்சகத்திடம் இருந்து தான் பெறப்பட்டது.




கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த பெண்கள் பாடசாலை

இந்த அச்சகத்தில் ஆங்கிலத்தை விட சிங்கள மொழி பிரசுரங்கள் பல அன்று அச்சடிக்கப்பட்டன. இலங்கையில் வெஸ்லியன் மிஷன் வருவதற்கு ஈராண்டுகளுக்கு முன்னரே Auxiliary Bible Society தொடங்கப்பட்டுவிட்டாலும் அச்சகத்தை வெஸ்லியன் மிஷன் தான் தொடங்கியது. மேலும் ஏனைய மிஷனரி அமைப்புகளின் நூல்களையும் கூட வெஸ்லியன் அச்சகம் தான் அச்சிட்டு கொடுத்தது. இங்கு தான் ஆரம்பகால சிங்கள பைபிள் மொழிபெயர்ப்பு எல்லாம் அச்சடிக்கப்பட்டது. வடக்கு பகுதிக்கான தமிழ் மொழி பாடசாலை நூல்களும் இங்கிருந்தே அச்சிட்டு அனுப்பப்பட்டன. அன்றைய மெட்ராசில் இருந்து தமிழ் மொழியிலான பழைய ஏற்பாடு பைபிள்கள் அச்சடித்து அனுப்பும்படி ஹார்வார்டிடம் கோரப்பட்டபோது தன் அச்சகத்தில் அதனை பிரசுரித்து அனுப்பியிருக்கிறார்.

ஹார்வார்ட் காலத்திலேயே இந்த அச்சகத்துக்குப் பொறுப்பாக மேலும் சிலர் இயங்கினார்கள். (Squance, Callaway, Spence, Hardy,Gogerly). இவர்களில் கோகர்லி முக்கிமானவர். அவர் இங்கிலாந்தில் வாழ்ந்த ஒரு ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த வெஸ்லியன் பாதிரியார். இவர் வெஸ்லியன் மிஷன் தொடங்கப்பட்டு இரண்டு ஆண்டுகளில் அதாவது 1818 ஆம் ஆண்டு வந்து சேர்ந்து விட்டார்.

அவர் தெவுந்தர (தேவேந்திர முனை) என்கிற சிங்கள பிரதேசத்தில் தங்கிவாழ்ந்து அங்கேயே சிங்களம், பாலி மற்றும் பௌத்தம் ஆகியவற்றைக் கற்றுத்தேறினார். அவர்’ கிறிஸ்தவ சாசனம்’ (The Kristiyani Prajnapti “கிறிஸ்தியானி பிரக்ஞப்திய”) என்கிற நூலை 1848 இல் வெளியிட்டார். இந்தநூல் 1848இல் முதலில் வெளியிடப்பட்டு பின்னர் 1853, 1857 காலங்களில் மீண்டும் மீண்டும் பதிப்பிக்கப்பட்டதுடன் 1862 இல்கொகெர்லி பாதிரியார் அதனைத் தானே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டார். பௌத்தத்துக்கு ஈடுகொடுப்பதற்காகவே தன்னை தயார்செய்து தருணம் வந்ததும் பௌத்தத்தை அவர்களின் களத்திலேயே சவாலுக்கு இழுத்தது அவர் அந்தத் துறையில் பெற்றிருந்த பாண்டித்தியத்தின் காரணமாகத்தான். வரலாற்றில் அதுவரை பௌத்தம் சந்திக்காத தத்துவார்த்த சவால் அது.



புறக்கோட்டை மெதடிஸ்ட் ஆலயம்

இந்த நூலை எதிர்த்து போர்க்கொடி உயர்த்தியவர் தான் பெந்தொட்ட அட்டதஸ்ஸி தேரர். அவர் கரதொட்ட தம்மாராம தேரரின் கடைசி சிஷ்யர். அட்டதஸ்ஸி தேரர் 1849 ஆம் ஆண்டு “கிறிஸ்தவ சாசனத்துக்கு பதில்” என்ற நூலை வெளியிட்டு கோகர்லியை சவாலுக்கு அழைத்தார். இது தான் பௌத்த தரப்பின் கண்டன இலக்கியத்தின் தொடக்கமாக கொள்ளப்படுகிறது. அது மட்டுமல்ல; இலங்கையின் சமய கண்டன இலக்கியத் தொடரின் முதல் நூலாகவும் இதனைக் கொள்ளலாம். இலங்கையில் பௌத்த சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பிரதான கண்டன இலக்கியமாக கொள்ளப்படுவது இது தான். சிங்கள பௌத்த அச்சகங்களின் உருவாக்கத்துக்கு இதுவே காரணமானது. இந்த விவாதங்கள் தான் பஞ்சமகா விவாதங்களாக தொடர்ந்து இறுதியில் பாணந்துறை விவாதத்தில் வந்து முடிந்தது. தமிழில் கண்டன இலக்கியம் தொடங்குவதற்கு முன்னரே சிங்களத்தில் தொடங்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

ஆக இந்த டாம் வீதி வெஸ்லியன் அச்சகத்தில் இருந்து தான் சுதேசிய பௌத்த தரப்புக்கு எதிரான நிந்தனைப் பிரசுரங்கள் பல வெளியிடப்பட்டன.

அதேவேளை கோகர்லி பல பௌத்த இலக்கியங்களையும் ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்து பிரசுரித்ததும் இங்கிருந்து தான். குறிப்பாக முதன் முதலில் அவர் தான் தம்மபதத்தை ஆங்கில உலகுக்கு மொழிபெயர்த்து அறிமுகப்படுத்தினார். அது இங்கிருந்து வெளிக்கொணரப்பட்ட “The Friends” என்கிற சஞ்சிகையில் தான் தொடராகப் பிரசுரமானது. அதுபோல வடக்கில் பேர்சிவல் பாதிரியாரின் பல பிரசுரங்களும் இங்கு பதிப்பிக்கப்பட்டன.

இந்த வெஸ்லியன் சபையோடு மிகவும் நெருக்கமாக இருந்தவர்களில் ஒருவர். இலங்கையின் அன்றைய நீதியரசர் அலெக்சாண்டர் ஜோன்ஸ்டன். இலங்கையில் அன்று நிலவிய அடிமை முறையை 1833இல் ஒழித்தவர். அவரின் துணைவி கொள்ளுப்பிட்டியில் இயக்கி வந்த பாடசாலையை ஹார்வர்டிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றார். வெஸ்லியன் மெதடிஸ்ட் சபை அதைப் பொறுப்பேற்று நடத்தியது. அந்த பாடசாலை தான் கொள்ளுப்பிட்டி சந்தியில் பிரதமரின் அலரி மாளிகைக்கு அருகில் இன்றும் இயங்கிவரும் பிரபல மெதடிஸ்ட் மகளிர் கல்லூரி.

வெஸ்லியன் திருச்சபையின் தலைமையகமாக பல வருடங்களாக இயங்கிய இந்த டாம் வீதி கட்டிடத்தை 2013 இல் இலங்கை அரசாங்கம் தொல்லியல் முக்கியத்துவமுள்ள நினைவுச் சின்னமாக அறிவித்தது.

---

# யாழ்ப்பாணத்தில் சைக்கிளுக்கு எகிறும் மவுசு

நாடளாவிய ரீதியில் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் காரணமாக பழைய இரும்பு கடைகளில் உள்ள பழைய துவிச்சக்கர வண்டிகளுக்கான கேள்வி அதிகரித்துள்ளது.

எரிபொருள் விலையேற்றம், தட்டுப்பாடு காரணமாக பலரும் தமது போக்குவரத்துக்காக மீண்டும் துவிச்சக்கர வண்டிகளை பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

இதனால் துவிச்சக்கர வண்டிகளுக்கான கேள்வி அதிகரிக்க புதிய துவிச்சக்கர வண்டிகளின் விலைகள் எகிறியது. புதிய லுமாலா சைக்கிள்களின் விலைகள் யாழ்ப்பாணத்தில் 90 ஆயிரம் ரூபாயை அண்மித்துள்ளது.

அதேவேளை ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு, திருத்தப்பட்டு (ரீக்கொண்டீசன்) விற்கப்படும் சைக்கிள்களும் 70 ஆயிரம் ரூபாயை அண்மித்துள்ளது.






அதனால் பலரும் வீடுகளில் கைவிடப்பட்ட தமது பழைய துவிச்சக்கர வண்டிகளை மீளத் திருத்தி பாவிக்க தொடங்கியுள்ளனர்.

ஒரு துவிச்சக்கர வண்டியை முழுவதுமாக திருத்தம் செய்வதற்கு (கழுவி பூட்ட) யாழ்ப்பாணத்தில் 20 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக செலவாகின்றது.

குறிப்பாக துவிச்சக்கர வண்டிகளை திருத்தம் செய்யப்படும் போது தேவைப்படும் உதிர்ப்பாகங்களான போல்ஸ், கம்பிகள் , கிறீஸ் என்பவற்றின் விலைகளும் எகிறியுள்ளன.

அது மாத்திரமின்றி, கழுவி பூட்டுவதற்கான மண்ணெண்ணெயை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையும் காணப்படுகிறது.





இந்நிலைகளிலையே முன்னர் இரும்பின் எடைக்கு பழைய இரும்பு கடைக்கு விற்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகளுக்கு தற்போது கேள்வி அதிகரித்துள்ளது.

பழைய இரும்பு கடைகளில் பழைய இரும்புகளுடன் காணப்படும் துவிச்சக்கர வண்டிகளை பலரும் தேடிப் போய் வாங்குகின்ற நிலைமை காணப்படுகிறது.

பழைய இரும்பின் எடைக்கு வாங்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகளை கூட தற்போது பழைய இரும்பு விற்பனையாளர்கள் 5 ஆயிரம் தொடக்கம் 10 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமான விலைகளுக்கு விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

அவற்றினை வாங்கி உருட்ட கூட முடியாத நிலையில் அவற்றை கொள்வனவு செய்து கொள்பவர்கள் அதனை மீள திருத்த சுமார் 30 ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக செலவழிக்கின்ற நிலை மை காணப்படுகிறது.

மயூரப்பிரியன் ...✍

# வாழ்வாதாரமா சேதாரமா 230



தமிழ்க் கவி பேசுகின்றார்

# கேள்விக்குள்ளாகிறதா மனித நாகரிகம்?

'ஏரிநீர் இருந்த போது அங்கிருந்தன பட்சியெல்லாம் மாரி நீர் மறுத்தபோது அப்பறவை அங்கிருப்பதுண்டா' என்றொரு பாடல் உண்டு. பழைய பாடல் தான்.

அக்காலத்தில் புலவர் என்போர் அதிகமாக சமூக சீர்திருத்தக் கருத்துகளையே பாடினர். அது இன்றைக்கும் எடுகோள்களாய் நிற்கின்றன. இன்றைய கவிஞர்களுக்கும் மேலாக அவர்கள் காமம் பற்றியும் காதல் பற்றியும் பாடித்தான் இருக்கிறார்கள். எனினும், திருவள்ளுவரைப் போல அறம் பொருள், இன்பம் என்று பகுத்துப் பாடவில்லை.



மு. வரதராசனார் என்றொரு எழுத்தாளர் இருந்தார். தனது காலத்துக்கு முந்திய நூல்களை அவர் ஆய்வு செய்து பல நூல்களை ஆக்கியுள்ளார். அதில் இந்த திருக்குறளைப்பற்றிய அவருடைய ஆய்வில் திருவள்ளுவர் அறம் பொருள் இன்பம் எனக் குறித்துள்ள தலைப்புகளை இடம்மாற்றி ஆய்வு செய்திருந்தார். அதாவது காமம், பொருள் அறம் என்பதாக இருந்தது. அதை இங்கே விளக்கிக் கொண்டிருக்க எனக்கும் நேரமும் இல்லை அந்தளவுக்கு அறிவும் இல்லை.

என்றாலும் உலகைக் கட்டி வைத்திருப்பது காமம் மட்டும்தான். என்பதை ஒப்புக் கொண்டு விட்டேன். காமம் சார்ந்ததுதான் அனைத்து அறங்களும் பொருள்களும் இயங்குகின்றன. இதை எவராலும் மறுக்க முடியாது. ஒரு விலங்கு அதாவது நாற்காலி தனது காதலியுடன் கூடுவதுடன் தன் கடமையை முடித்துக் கொள்வதில்லை. தன் இணை வயிற்றில் கருவைச்சுமந்து கொண்டிருக்கும் போது அதற்கான உணவைத் தேடிக் கொடுப்பதிலும், அதற்கு பிரசவ வலி காணும்போது அதற்கான களம் அமைத்து கொடுப்பதிலும் முன்நிற்கிறது.

மாறாக பறவைகள் தமக்கான கூட்டை அமைத்த பின்னரே கரு உண்டாவதற்கான முயற்சியை செய்கின்றன. இதென்ன பெரிய விடயம் என்று அதிசயிக்க வேண்டாம். மனிதர்களில் எத்தனைபேர் இதைப்பற்றி யோசிக்கிறார்கள். பொதுவாகவே ஒரு பழமொழி உண்டு. 'தான் கொண்ட சூல் அறியாதவன் ஆண்' என்று அதை அவன் மனைவிதான் அவனுக்கு சொல்ல வேண்டும். இந்த உலகில் பாலின உறவுகள் சார்ந்த உணர்வு எப்போது ஏற்படுகிறது என்று சொல்ல முடியவில்லை. பெண்களுக்கு மாதவிடாய் தோன்றும் காலங்களை அண்டியதாக ஏற்படுகிறது என தெரிகிறது. ஆனால் ஆண்களுக்கு.? இது ஒரு பெரிய கேள்வியாக நம்மைப்பிடித்து ஆட்டுகிறது. இப்படியான ஆண்களின் மோகத்துக்கு( ஒட்டுமொத்த ஆண்களும் அல்ல குறிப்பாக தொலைக்காட்சி சீரியலில் வரும் ஆண்களுக்கும் அல்ல காரணம் உலகில் அதி பெரிய உத்தமர்கள் அவர்கள்தான். பாருங்கள் ஒரே அறையில் தங்கி ஒரே கட்டிலில் உறங்கி எத்தனை அத்தியாயங்கள் கடந்தாலும் கணவன் பாத்திரம் ஏற்போர் மனைவியுடன் உறவே வைத்துக் கொள்ளாமல் தமது கற்பைக் காப்பாற்றி வைத்திருப்பார்கள். எனவே அவர்களையும் விட்டுவிடுவோம்.) எந்த கால எல்லையும் கிடையாது. அவர்கள் தம்மை கட்டுப்படுத்தியும் வாழ வேண்டிய தேவை இருந்ததில்லை. கட்டின பெண்டாட்டி என்று ஒரு ஜடம் இருந்தால் போதுமானது.

இன்றைய உலகில் பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அதிலும் குறிப்பாக சிறுவர் சிறுமியர் இதனால் பாதிக்கப்படுவதும் உயிர் விடுவதும் தாராளமாக நடைபெறுகிறது. இதன் அடிப்படை என்ன ஆயிரம் காரணம் சொல்லட்டும். சமூகத்துக்கு வந்து கொண்டிருக்கும் சினிமாப்படங்கள் சிறுகதைகள், கட்டுரைகள் கவிதைகள், இவற்றிலெல்லாம் காமம் பெரிதளவு கலந்தே படைக்கிறோம். இது எம்மை எப்படி மாற்றுகிறது என்பதை வெகு துலக்கமாக விளக்கியிருக்கிறார் சாரு நிவேதிதா தான் எழுதிய தேகம் என்ற புத்தகத்தில். அது கதைதான் என்றாலும் அதற்குள் எத்தனை விடயங்களை இவர் ஒளித்து வைத்திருக்கிறார் என்பது வியப்புக் குரியதுதான். படிக்கும் போது அது தரும் அருவருப்புணர்வு இந்த சமூகத்தின் ஆண்களிலேயே படர்ந்த நிற்பதை காட்டுவதாக அமைகிறது. பெண்கள் பொது இடங்களில் சந்திக்கும் அவலங்களை இக்கட்டான சூழ்நிலைகளை தன்னை மையப்படுத்தி வெளிக் கொணர்ந்திருக்கிறார். ஒவ்வொரு பெண்ணும் சொல்ல முடியாத சோகம் ஆது.

சிறுவர்களின் கைகளில் செல்போன்கள் சரளமாகக்கப்பட்டுள்ளது. என்றாலும் அதிலுள்ள மறைக்கவேண்டிய பக்கங்களை மறைக்காமலே பாவனையில் வைத்திருக்கும் சிறுவர்கள் அதிகம். இவர்களது தளம்பும் மனநிலையை எதிரிகள் நன்கு பயன் படுத்திக் கொள்கின்றனர். எட்டாம் வகுப்பு படிக்கும் ஒரு சிறுவன் தனது தொலைபேசியில் நிர்வாணப்படங்களை பார்த்ததாக தனது வகுப்புத்தோழனுக்கு தொலை பேசுகிறான். ' டேய் நான் சும்மா தட்டிக்கொண்டு போனனா அதில வந்துது' என்றான். அரைகுறையாக எனது காதில் விழ எது வந்துது என்று கேட்க அவர்கள் ஓடிவிட்டனர்.

தனக்கு முன்பின் அறிமுகமல்லாதவர்களுடன் மணிக்கணக்கில் பேசும் இளைஞர்கள் அதிகம்.

அவர்களிடம் என்னதான் பேசுகிறார்கள் என்பதும் வெட்ட வெளிச்சம். இதை அவர்களுடைய தமிழில் செல்வதானால், 'கடலை போடுதல்' என்பார்கள். இந்தப் பெண்களில் பலர் தாமாக தேடிச்சென்று வலையில் விழுகின்றனர். தான் விரும்பும் பெண்ணை அழைத்தவன் அவளை தன் நண்பர்களுடன் பங்கு போட்டுக் கொள்ளும் அவலம் பரவலாக நடக்கிறது. வாழ்க்கையில் இந்த மனிதன் விலங்குகளைப்போல மாறி உறவு கொண்டாலும் பெண் கருவுற்றதும் தனக்கும் அதற்கும் எந்த தொடர்பும் இல்லை என ஓதுங்கிவிடுகிறான். விளைவு தந்தையற்ற குழந்தைகள் பிறக்கின்றன. அல்லது பாதுகாப்பற்ற கருச்சிதைவுகள் நடக்கின்றன. காதல் காமமாகிவிட்டால் அதன்பிறகு கல்யாணம் கேள்விக்குறியாகிவிடும் இளமையும் அழகும் இருந்த போது பெண்ணைச் சுற்றிவருவோர் அவள் கர்ப்பமாகிவிட்டால் 'செத்தமாட்டில் உண்ணிகழருவது போல' விலகிவிடுவர்.

பெண்கள் வீட்டில் பூச்சிகளைப் போல தாமாகவே விளக்கில் விழுந்து அழிகின்றனர் எனலாமா. இதற்கு ஏராளமான உளவியல் காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம் அழகு என்பது மட்டுமல்ல பொருளாதார நிலையில் தம்மை தக்க வைத்துள்ள பெண்களும்கூட தமது பொருளாதாரம் தன்னை காப்பாற்றும் என்றே நம்புகின்றனர். சிலரை அது காப்பாற்றலாம். ஆனால் ஏரிநீர் மாரியில் நிறைவது மாரி வறண்டு போகும் போது காமமும் சுகக்கும் பொருள்நிலை மேம்படுதல் காமத்துக்கு ஆதாரமாக இருக்க வேண்டும். வள்ளுவர் அறத்தை ஏன் முன்னே வைத்தார். அவர் இல்லறத்தையும் சமூக நடைமுறைகளையும் ஏன் முன்வைக்கவில்லை. அன்பே உலகின் ஆதார சக்தி என்று சொல்லாமல் தவர் தனது அந்த அன்பின் பின்னால் கட்டற்ற காலம் வரப்போவதை அறிய வில்லை என்றே சொல்லலாம். திருக்குறளையும் மீளாய்வு செய்ய வேண்டியகாலம் இது. நாலடியார் விவேக சிந்தாமணி சிலேடைக்கவிகள் போன்றோருடைய காலம் இப்போதுள்ளது போல இருந்திருக்கிறது. நெறிபிறழ்ந்த வாழ்க்கை வரையில்லாத மகளிர், கொத்தடிமை முறைகள் என தாங்கொணாத சோகங்களை சுமந்துதான் இந்த உலகம் இன்றைய நிலையை எட்டியுள்ளது. கல்வியில்லாமல் கேள்விகளில் வாழ்ந்த மக்கள் அவர்கள்.

ஒரு வீட்டிலும் ஒரு நாட்டிலும் பெண்கள் கவுரமாக நடாத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்த உலகம் இது. ஆனால் திரௌபதிக்கும், சீதைக்கும் சந்திரமதிக்கும் சகுந்தலைக்கும் கூட நீதி வழங்க மறுத்ததால்தான் அந்த மோசமான உதாரணங்களை இன்றும் தொடர்கிறது உலகம். ஒரு சின்னஞ்சிறு சிறுமி கடத்தப்படுகிறாள். அந்த கடத்தலுக்கு ஒரு பெண்ணம் பெரிய பெண் உதவுகிறாள்.

எல்லாக் கடத்தல்களிலும் இப்படியான குடும்ப விவகாரங்கள் குதியிருக்கின்றன.. மனித நாகரீகம் கேள்விக்குள்ளாகி வருகிறது.

# "கல்விச் செல்வத்தை ஊட்டிய ஆசிரியர்களை மக்கள் மத்தியில் கௌரவிக்க வேண்டும்"

## 'சிவமயச் செல்வி' மீனா தவரட்ணத்தின் பாராட்டு விழாவில் இங்கிலாந்து போல் சத்தியநேசன் புகழாரம்

கனடா வாழ் வர்த்தகப் பிரமுகர், சாந்தா பஞ்சலிங்கம் போன்று கல்விச் செல்வத்தை ஊட்டிய ஆசிரியப் பெருந்தகைகளை மக்கள் மத்தியில் கௌரவிக்கப்பட வேண்டும். அத்துடன் அவர்கள் வாழும் போதே கௌரவிக்கப்பட வேண்டும் என்ற கூற்றை ஒரு வேதவாக்காகக் கொண்டு நாம் காரியங்களை ஆற்ற வேண்டும். அந்த வகையில் உலகெங்கும் பல நாடுகளிலிருந்தும் வருகை தந்திருந்த விருந்தினர்கள் ம த்தியில் எமது ஊரின் நட்சத்திர ஆசிரியையாக விளங்கிய திருமதி மீனா தவரட்ணத்தின் பாராட்டு விழாவில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்' என்று தெரிவித்தார். இங்கிலாந்து வாழ் முன்னாள் நகர பிதா போல் சத்தியநேசன், கனடாவில் வாழும் 'சிவமயச் செல்வி' மீனா தவரட்ணத்தைப் பாராட்டும் வகையில் கனடா வாழ் வர்த்தகப் பிரமுகர், சாந்தா பஞ்சலிங்கம் ஏற்பாடு செய்த விழாவில் இங்கிலாந்து போல் சத்தியநேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஸ்காபுரோவில் அமைந்துள்ள ஜேசிஸ்ஸ் விழா மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி பாராட்டு விழாவில், நிகழ்ச்சிகளை கென் கிருபா தொகுத்து வழங்கினார். அவர் தனது பணியை தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறப்பாகச் செய்தார்.







மேற்படி விழாவில் கலந்து கொள்ளவென பல நாடுகளிலிருந்தும் பழைய மாணவர்கள் தங்கள் குடும்பத்தவர்களோடு வருகை தந்திருந்தார்கள். வர்த்தகப் பிரமுகர சாந்தா பஞ்சலிங்கம் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் எனப் பலரால் சிறப்பாக இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்றைய தினம் பாராட்டுவிழா எடுக்கப்பெற்ற மீனா தவரட்ணத்துக்கு 'சிவமயச் செல்வி' என்னும் பட்டத்தை வழங்கியவர் அமரர் ஈழத்துச் சிவானந்தன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.விழாவில் 'உரும்பிராய் பாடசாலைகளின் பழைய மாணவர்கள் சங்கம் சாந்தா பஞ்சலிங்கத்துக்கு ஒத்தாசையாக இருந்து விழாவை சிறப்பாக நடத்தியது. அதன் உறுப்பினர்களும் விழாவில் கலந்து கொண்டார்கள். முன்னாள் ஆசிரியர் 'சிந்தனைப் பூக்கள்' பத்மநாதன் சிவமயச் செல்வி மீனா தவரட்ணம் பற்றிய விளக்கமான உரையொன்றை வழங்கினார்.

அங்கு உரையாற்றிய கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் நாகமணி லோகேந்திரலிங்கம் அவர்கள் தனது உரையில் ' இந்த விழாவை நான் ஒரு சர்வதேச விழாவாகத் தான் பார்க்கின்றேன். சர்வ லட்சணமும் பொருந்த ஆசிரியப் பெருந்தகை மீனா தவரட்ணம் சிறந்தொரு சமயப் பேச்சாளராகவும் விளங்கினார் என்றும் ஆங்கிலத்தில் சிறப்பாகவும் கருத்தாழ மிக்கதாகவும் உரையாற்றக் கூடியவர்களில் இவருக்கு நிகர் இவரே ஆவார்' என்றும் தெரிவித்தார்.

# அஷ்ஷெய்க் பிஷ்ருல் றிபாத் (நளீமி) M.A கற்கையை முதற்தர சித்தியுடன் நிறைவு

பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் முன்னாள் விரிவுரையாளர் அஷ்ஷெய்க் பிஷ்ருல் றிபாத் (நளீமி) தனது முதுமாணிக் கற்கையை மலேசிய சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தில் அண்மையில் வெற்றிகரமாக முதற்தர சித்தி (First Class) உடன் நிறைவு செய்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை தர்கா நகர் அல் ஹம்ரா மகா வித்தியாலயத்தில் க.பொ.த சா/த வரை கற்று அதன் பின் ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்திற்குத் தெரிவாகி அங்கு 07 வருட கற்கை நெறியை வெற்றிகரமாக முதற்தர சித்தியுடன் பூர்த்தி செய்தார். சமகாலத்தில் மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் இலங்கைக் கிளையில் அரசியல் விஞ்ஞானத் துறையில் இளங்கலைமாணிப் பட்டத்தையும் முதற்தர சித்தியுடன் நிறைவு செய்தார்.



தொடர்ந்து, 2016ஆம் ஆண்டு ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டு வரை அங்கு பணி புரிந்தார். அந்த ஆண்டு இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறுவனத்தின் (IIIT) உயர் கல்விக்கான புலமைப்பரிசில் பெற்று மலேசிய சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தில் தனது முதுமாணிக் கற்கையைத் தொடர சென்ற இவர், இஸ்லாமிய நிதியியல் துறையின் கீழ் இலங்கையின் இஸ்லாமிய வங்கியமைப் பொன்றைப்பற்றி ஆய்வு செய்து அதனைத் தனது முதுமாணி ஆய்வுக்கட்டுரையாக சமர்ப்பித்தார்.

இக்காலப்பகுதியில் பல்வேறு சர்வதேச ஆய்வு மாநாடுகளில் பங்குபற்றியதுடன் இஸ்லாமிய சட்டவியல், இஸ்லாமிய நிதியியல் மற்றும் இஸ்லாமிய வங்கியியல் போன்ற பரப்புகளில் பல ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார். அத்தோடு பல ஆய்வுசார் சர்வதேச நிறுவனங்களில் அங்கத்துவத்தையும் பதவிகளையும் வகித்துள்ளார். குறிப்பாக இஸ்லாமிய நிதியியலில் ஈடுபாடு கொண்ட இவர் இஸ்லாமிய நிதி நிறுவனங்களுக்கான தர நிர்ணயங்களை வகுக்கும் AAOIFI நிறுவனத்தின் Certified Shari'a Adviser and Auditor (CSAA) சான்றளிக்கப்பட்ட மார்க்க ஆலோசகராகவும் தணிக்கையாளராகவும் தகுதி பெற்றுள்ளார்.

பல்வேறு ஆய்வு சஞ்சிகைகளுக்கும் மாநாடுகளுக்கும், வாராந்த வெளியீடுகளுக்கும் ஆய்வுக்கட்டுரைகளையும் ஆக்கங்களையும் எழுதியுள்ள இவர், கொழும்பில் அமைந்துள்ள மிஷ்காத் ஆய்வு நிறுவனத்தின் ஆய்வாளர்களில் ஒருவராகவும் செயற்பட்டு வருகிறார்.

இவ்வருடம் ஐக்கிய இராச்சியத்தின் முன்னணிப் பல்கலைக்கழகங்களில் ஒன்றான டண்டீ பல்கலைக்கழகத்தில் (University of Dundee) இஸ்லாமிய வங்கியியல் துறையில் தனது முதுதத்துவமாணி (M.Phil) கற்கையை மேற்கொள்ளச் சென்றுள்ள இவர், தனது சிறப்புத் துறையாக இஸ்லாமிய நிதியியல் மற்றும் வங்கியியலைத் தெரிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தனது இளம் வயதில் கல்வித் துறையில் உயர் நிலைகளை அடைந்து, புதிய தலைமுறையினருக்கு முன்மாதிரியாகத் திகழும் இவர், தர்கா நகரைச் சேர்ந்த அல்ஹாஜ் அக்பர் கரீம், பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த பாத்திமா முஹாபா தம்பதிகளின் புதல்வராவார்.

# "செம்மொழி கவிமாமணி" விருது பெற்றார் கவிதாயினி டாக்டர் ஜலீலா முஸம்மில்



ஏறாவூரைச் சேர்ந்த பிரபல கவிதாயினி டாக்டர் ஜலீலா முஸம்மில் 'செம்மொழி கவிமாமணி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

திண்டுக்கல் மாவட்ட பசுமை வாசல் பவுண்டேஷன், குமரி மாவட்ட தமிழ் நாடு பனைமரம் காக்கும் பாதுகாப்பு இயக்கம், கன்னியாகுமரி மாவட்ட காமராஜர் இளைஞர் வளர்ச்சி பேரவை, சேலம் மாவட்ட ஆத்தூர் ஸ்ரீ சக்ஸஸ் அகடமி & பவுண்டேஷன் ஆகிய அமைப்புகள் இணைந்து மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் பெருந்தலைவர் காமராசரின் பிறந்த நாளான எதிர்வரும் ஜுலை 15 ஆம் திகதியை முன்னிட்டு நடாத்திய பல்துறை சாதனையாளர்களுக்கான 'பெருந்தலைவர் காமராசரின் மாமணி விருதுகள் 2022' வழங்கும் நிகழ்வில் இலக்கியத்துறையில் ஆற்றிவரும் சிறந்த பங்களிப்புக்காக, இலங்கையிலிருந்து ஏறாவூரைச் சேர்ந்த கவிதாயினி டாக்டர் ஜலீலா முஸம்மில் 'செம்மொழி கவிமாமணி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.




# இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில், ஹஜ்ஜுப் பெருநாள் விசேட கவியரங்கம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம்சேவை வழங்கும் ஹஜ்ஜுப் பெருநாள் விசேட கவியரங்கம், "தியாகத் தென்றல்" இன்று 10ம் திகதி ஞாயிற்றுக் கிழமை, ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தன்று, முற்பகல் 11 மணிக்கு ஒலிபரப்பாக உள்ளது.

கலாபூஷணம் சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ் நடாத்தும் இக்கவியரங்கில், ஆறு மாவட்டங்களைச் சேர்ந்த, கவிஞர்கள் கவிதைகள் வாசிப்பதும், அவர்களில் ஐவர், முஸ்லிம் சேவை கவியரங்கொன்றில் முதன்முதலாக கவிதை வாசிப்பதும் இக்கவியரங்கின் முக்கிய அம்சமாகும்.

கொழும்பு மாவட்டம், மாளிகாவத்தை, கலாபூஷணம் 'கலைக்கமல்' ஜமால்தீன், கம்பஹா மாவட்டம், பலகத்துறை, அபூசுஹத் சைலான், மாத்தறை மாவட்டம், வெலிகம, மதுராப்புரம்,எம். எச். எம். மின்ஹாஜி ஆகிய கவிஞர்களும்,

களுத்துறை மாவட்டம், பேருவளை, சீனன்கோட்டை, பரீஹாபாரூக் இம்தியாஸ், அம்பாறை மாவட்டம், சாய்ந்தமருது, சித்தி ஜெரீனா கரீம், கண்டி மாவட்டம், உடதலவின்ன,இல்ஹாம் ஜுனைதீன் ஆகிய கவிதாயினிகளும் இக்கவியரங்கிலே கவிதைகள் வாசிக்கவுள்ளனர்.

முஸ்லிம்சேவை பணிப்பாளர்,பாத்திமா ரினூசியா ஜவ்பரின் நெறியாள்கையில், முஸ்லிம்சேவை தயாரிப்பாளர், ஏ.எம். முஹம்மது ரஸீம் இந்நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்குகிறார்.

102,1, 102,3 ஆகிய பண்பலை வரிசைகளிலும், slbc யின் இணைய வானொலியிலும், ஹஜ்ஜுப் பெருநாள் விசேட கவியரங்கத்தை செவிமடுக்க முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.



பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# உலக நாடுகளின் முன்னுதாரணங்களைப் பின்பற்றாத இலங்கை கொவிட்டை காரணம் காட்டித் தப்பிப்பது முறையல்ல

**இந்த வார இறுதி இலங்கையின் அரசியல் பொருளாதார வரலாற்றில் மிக முக்கியமான ஒரு காலப்பகுதியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. முழு அளவிலான அரசாங்க எதிர்ப்புப் போராட்டம் மாணவர்கள், சட்டத்தரணிகள், விரிவுரையாளர்கள் தொழில் வாண்மையாளர்கள் மற்றும் இந்த நாட்டின் மிக மேன்மையான இடத்தில் வைத்து நோக்கப்படும் மூன்று பௌத்த மகாபீடங்களின் மகாநாயக்கர்களின் தலைமையிலான சகல மதத் தலைவர்களின் கையெழுத்துடனான செங்கடகல மகாபிரகடனம் என்ற மிக வலுவான மக்களின் பிரதிநிதித்துவத்துடனும் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.**

எதிர்க்கட்சிகளின் சூழ்ச்சியினால் சிறு குழுவினால் முன்னெடுக்கப்படும் ஒரு போராட்டம் என்று இதனை எவராலும் கூறமுடியாது. ஐக்கிய அமெரிக்கா ஐக்கிய நாடுகள் சபை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைக் கவுன்சில் உள்ளிட்ட உலகின் முக்கிய நாடுகளும் நிறுவனங்களும் இலங்கையை மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றன. மக்களின் ஜனநாயக உரிமைகளை மதித்து நடக்கவேண்டும் என இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் ஏற்கெனவே அறிவித்திருந்தது.

போராட்டத்தைக் கட்டுப்படுத்த கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட அதே பழைய பொலிஸ் ஊரடங்கு உத்தரவை வெள்ளி இரவு ஒன்பது மணியிலிருந்து மறு அறிவித்தல் வரை அமுல்படுத்தியிருந்தது. எனினும் இது சட்டவிரோதமானதென்றும் அதனை உடனடியாக நீக்குமாறும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு உரிய தரப்பினரைக் கேட்டிருந்தது.

சனிக்கிழமை காலை எட்டு மணியுடன் ஊரடங்கு உத்தரவு விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஊரடங்கு உத்தரவை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவது சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு பின்னடைவையே ஏற்படுத்தும். அதேவேளை இன்னும் பத்து நாட்களில் இப்போது உள்ள பற்றாக்குறைகள் படிப்படியாக நீங்கி நாடு படிப்படியாக வழமைக்குத் திரும்பும் எனவும் அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவசரப்பட்டு எதிர்க்கட்சிகளின் வலையில் சிக்கிவிடவேண்டாம் என்றும் அமைதியாக இருக்குமாறும் மக்களைக் கேட்டுள்ளது. இதனை எந்தளவுக்கு மக்கள் நம்புவார்கள் என்பது தெரியவில்லை.



எரிபொருள் பற்றாக்குறை காரணமாக நாட்டு மக்களின் பொருளாதார செயற்பாடுகள் ஏறத்தாழ முற்றாக முடங்கிப்போயுள்ள புறச்சூழலில் எரிபொருள் நிலையங்களுக்கு அருகில் உள்ள வீதிகளில் பல கிலோமீற்றர் தூரத்திற்கு வாகனங்கள் வரிசைகளில் காத்து நிற்கின்றன.

கடந்த காலங்களில் லெபனான் மற்றும் லிபியா போன்ற நாடுகளில் இதே போன்ற பொருளாதார நெருக்கடிகளின்போது இவ்வாறான நீண்ட வாகன வரிசைகள் காணப்பட்டமையை சர்வதேச ஊடகங்கள் காட்சிப்படுத்தியிருந்தன. உணவுப்பொருள் பற்றாக்குறையுடன் குறுகிய காலத்தில் ஏற்படும் திடீர் விலையதிகரிப்புகள் மற்றும் மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான தட்டுப்பாடுகள் என்பன மருத்துவ நடவடிக்கைகளை மிக மோசமாகப் பாதித்துள்ளன. இவை அத்தனையும் ஏற்பட மூலாதாரக் காரணமாய் இருந்துள்ளது டொலர் பற்றாக்குறை தான் என்பதை புதிதாகச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஒரு நாட்டின் பொதுமக்கள் தமது நாளாந்தக் கடமைகளை செய்வதற்குத் தேவையான எரிபொருள் கிடைப்பனவு குறைந்தபட்சத் தேவையான உணவைப்பெற்றுக் கொள்வதற்கான இயலுமை இறுதியாக நோய்வாய்ப்பட்டால் மருத்துவ சேவைகளை பெற்றுக் கொள்ளக்கூடிய உறுதிப்பாடு இந்த மூன்று விடயங்களையும் உறுதிப்படுத்த வேண்டியது ஒரு அரசாங்கத்தின் கடமையும் பொறுப்பும் ஆகும்.

இயற்கை அனர்த்தங்கள் அல்லது யுத்தம் போன்ற ஏதோ ஒரு நெருக்கடி காரணமாக நிரம்பல் சங்கிலியில் பாதிப்பு எற்பட்டு ஒருசில நாட்கள் அல்லது வாரங்கள் தட்டுப்பாடுகள் ஏற்படுவது எல்லா நாடுகளிலும் நடைபெறக்கூடிய சம்பவம் தான். ஆனால் அரசாங்கத்தின் கொள்கைப் புறழ்வுகள் அல்லது விவேகபூர்வமற்ற நடவடிக்கைகள் காரணமாக மாதக்கணக்கில் தட்டுப்பாடுகளும் அதன் காரணமான நீண்ட வரிசைகளும் அதைப்பயன்படுத்தி ஒருசில குழுக்கள் பெற்றோலையும் டீசலையும் கள்ளச் சந்தையில் விற்று கொள்ளை இலாபம் உழைக்கும் நடவடிக்கைகளும் தொடருமாயின் மக்கள் அவற்றைச் சகித்துக்கொள்ள வேண்டும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்.

இப்போது ஏற்பட்டுள்ள இந்த எரிபொருள் நெருக்கடி ஏற்படப்போகிறதென்பது அரசாங்கத்திற்குத் தெரியாதா அல்லது அதில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்குத் தெரியாதா? எதிர்பாராத நெருக்கடி ஏற்படுமாயின் அதனை எதிர்கொள்ள மாற்றுத் திட்டம் ஒன்று இருப்பதில்லையா? எதிர்வரும் பத்துநாட்களுக்கு கப்பல் வாராது பதினைந்து நாட்களுக்கு கப்பல் வராது என்று அறிவிப்பதற்கு ஒரு அமைச்சு தேவையா அமைச்சர் தேவையா என்று மக்கள் நாக்கைப் பிடுங்குமாறு கேட்கிறார்கள் முறையான பதிலை எவரும் சொல்வதாக இல்லை.

அண்மையில் கோப் எனப்படும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் கருத்துத் தெரிவித்த மக்கள் பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் பெற்றோலிய விலையிடல் தொடர்பாக தெரிவித்த கருத்துகள் மிகுந்த அவதானத்திற்குரியனவாக மாறியுள்ளன.

இறக்குமதி செய்யப்படும் பெற்றோலிய விலைகளுக்கும் உள்நாட்டு வரி உள்ளடங்களாக எல்லாக் கட்டணங்களையும் செலவுகளையும் முழுமையாக செலுத்திய பின்னர் ஏற்படும் ஒரு லீற்றர் எரிபொருளுக்கான முழுச்செலவுக்கும் மக்களிடமிருந்து ஒவ்வொரு லீற்றர் எரிபொருளுக்கும் அறவிடப்படும் விலைக்கும் இடையில் லீற்றர் ஒன்றுக்கு சுமார் இருநூறு ரூபா வரையிலான இடைவெளி நிலவவதாக குறிப்பிட்டுள்ளார்.

எனவே பெற்றோலியப் பொருள் விலைகள் இந்தளவுக்கு உயர்வாக இருக்க முடியாதெனவும் தனது கருத்தில் உறுதியாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். உரிய அமைச்சு இது பற்றிய தெளிவுபடுத்தலைச் செய்ததாகத் தெரியவில்லை.

இலங்கையில் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடியைப் பயன்படுத்தி தவித்த முயல் அடித்த கூடிய விலைக்கு எரிபொருள் கொள்வனவு செய்யப்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுப்பப்படுகின்றன. கடன் மீளச் செலுத்தமுடியாமல் போன ஒரு நாடு என்ற அந்தஸ்தை அடைந்த பின்னர் சாதாரண வணிகர்கள் அந்நாட்டுடன் கொடுக்கல் வாங்கல்கள் செய்ய மறுப்பதனால் வேறு மூலாதாரங்களில் இருந்து பெற்றோலியத்தைக் கொள்வனவு செய்ய நேர்ந்துள்ளமையால் தாமதங்களும் விலையதிகரிப்புகளும் ஏற்பட்டுள்ளதாக அமைச்சுத் தரப்பில் ஒரு பத்திரிகை மாநாட்டுத் தகவல் காரணங் கூறுகிறது.

இதுகூட முகாமைத்துவ மற்றும் நிருவாகக் குறைபாடுகள் காரணமாக ஏற்பட்டவை என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

உலகளாவிய ரீதியில் எல்லா நாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. இலங்கையும் அதற்கு விதிவிலக்கல்ல என்று காரணங்காட்டுவது புத்திசாலித்தனமான நடவடிக்கையல்ல, தெற்காசிய வட்டகையில் உள்ள ஏனைய நாடுகள் எல்லாமே கொவிட் 19 தாக்கத்திலிருந்து மீட்சி பெற்று தமது வெளிநாட்டுச் சொத்துகளை மீளக் கட்டியமைத்துவரும் நிலையில் இலங்கை மாத்திரம் இவ்வாறு தலைகுப்புற விழுந்து பொருளாதார நோயாளியாக உயிருக்குப் போராடிக்கொண்டு அனுங்கிக்கொண்டிருப்பது உலகப்பொருளாதாரப் பின்னடைவினாலோ கொவிட் பிரச்சினையினாலோ ஏற்பட்டதல்ல. மாறாக பெரும் நிருவாகத் தவறினால் ஏற்பட்ட தேடிப் பெற்ற வினையாகும். அந்த வினையைச் சுட்டிக்காட்டியே இப்போது மக்கள் போராட்டங்கள் வலுப்பெற்றுள்ளன.

முக்கியமாக சிங்கள பௌத்த மக்களின் பேராதரவு பெற்று ஆட்சிபீடம் ஏறிய அரசும் அரச தலைவர்களும் பலதடவைகள் தாம் சிங்கள பௌத்த மக்களின் ஆதரவுடனேயே ஆட்சிக்கு வந்ததாக பெருமையுடன் கூறி மகிழ்ந்தனர். இப்போது அதே சிங்கள பௌத்த மக்களின் மூலாதாரமாகிய முப்பீடாதிபதிகள் செங்கடகல பிரகடனத்தைச் செய்துள்ளனர். அரசு தலைவர்கள் எவரும் இப்போது தலதா மாளிகைக்குள் நுழைய அனுமதியில்லை என்பதும் இதனோடு இணைந்ததே. இப்போது என்ன செய்யப் போகிறார்கள்?



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# போரிஸ் ஜோன்சனின் பதவி விலகல்! ஐரோப்பிய அரசியலில் ஏற்படுத்தவுள்ள தாக்கம்

**பிரித்தானியாவின் அரசியல் இருப்பு தொடர்ச்சியாக நெருக்கடியாக காணப்படுவதோடு ஜனநாயகத்தின் மீது அரசியல் தலைவர் கொண்டிருக்கின்ற இயல்பையும் அவ்வப்போது அடையாளம் காண முடிகிறது. ஒருபக்கம் அரசியல் அதிகாரம் குழப்பம் அடைகின்ற போது மறுபக்கத்தில் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்படுகிறது. மக்களின் விருப்புக்களை அனுசரிக்கும் அரசியல் தலைவர்கள் பிரித்தானியாவின் ஆங்கில மாதிரியை பாதுகாப்பதில் வெற்றி கொள்வதை அவதானிக்க முடியும். கடந்த பல ஆண்டுகளாக பிரதமர்கள் பதவி விலகுவதும் புதிய பிரதமர்கள் நியமிக்கப்படுவதும் பிரித்தானிய அரசின் மரபாக விளங்குகின்றது. டேவிட் கமருன், திரேசா மே அம்மையார் வரிசையில் போரிஸ் ஜோன்சன் உள்ளடக்கப்பட்டுள்ளார். இக்கட்டுரையும் போரிஸ் ஜோன்சனின் பதவி விலகல் அறிவிப்பும் அதன் பின்னாலுள்ள அரசியல் பொருளாதார சமூக காரணங்களையும் தேடுவதாக உள்ளது.**

நீண்ட பாரம்பரியத்தை கொண்ட பழமைபேண் கட்சியின் இருப்பு பிரித்தானிய அரசியலோடும் அதன் வளர்ச்சியோடும் பின்னிப்பிணைந்ததொன்றாகும். கட்சியின் வரலாறு தோன்றிய காலப்பகுதியிலிருந்து பிரித்தானியாவின் வளர்ச்சியை முதன்மைப்படுத்தியதும் பழமைபேண் தாராண்மைவாத கட்சியுமான பழமைபேண் கட்சிக்கு உரியதானது. உலக வரலாற்றில் மார்க்கேட் தட்சர் ஏற்படுத்திய பொருளாதார கொள்கைகள் பிரித்தானியாவை மீளவும் ஐரோப்பாவிற்குள்ளும் உலகளாவிய தளத்திலும் முதன்மைப்படுத்த வழிவகுத்தது. இத்தகைய பாரம்பரியங்களுக்குள்ளால் அரசியல் உறுதிப்பாட்டை நெருக்கடிமிக்க காலங்களில் வென்றெடுத்த தலைவர்களில் ஒருவராக போரிஸ் ஜோன்சனும் கருதப்பட்டார். குறிப்பாக கொவிட் தொற்றின் காலத்தில் இங்கிலாந்து மக்களின் இருப்பை நிலைப்படுத்துவதிலும் மீட்டெடுப்பதிலும் வெற்றிகரமான தலைவராக அடையாளப்படுத்தியது. பழமைபேண் கட்சியின் துணைக்கொறொடாவாக இருந்த கிறிஸ் பின்சர் கேளிக்கை விடுதியொன்றில் இரு ஆண்களுடன் பாலியல் ரீதியில் அநாகரீகமாக நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டு சார்ந்து பிரதமரான போரிஸ் ஜோன்சன் சரியான முறையில் நடந்துகொள்ள தவறினார் என்ற காரணத்தினால் ஆளும் கட்சி அமைச்சர்களுக்குள்ளும் பழமைபேண் கட்சிக்குள்ளும் பிரதமருக்கு எதிராக பலமான எதிர்ப்பு ஏற்பட்டது. ஆரம்பத்தில் அத்தகைய விடயத்துக்கு சரியான நடவடிக்கை பிரதமர் எடுக்க தவறினார் எனக்குறிப்பிட்டு நிதி மற்றும் சுகாதார அமைச்சர்கள் தமது பதவியை இராஜினாமா செய்தார்கள். இதற்கு தீர்வுகாணும் விதத்தில் இரு அமைச்சுக்கும் பிரதமர் புதியவர்களை நியமித்தார். பிரதமர் நியமித்த சிலமணி நேரங்களில் உயர் கல்வி அமைச்சும், கல்வி அமைச்சும் இராஜினாமா செய்ததோடு ஏனைய அமைச்சர்களும் இராஜினாமா செய்ய ஆரம்பித்தார்கள். இதனால் பிரதமர் போரிஸ் ஜோன்சனுக்கு பழமை பேண் கட்சி உறுப்பினர்கள் நெருக்கடி கொடுக்க ஆரம்பித்தனர். இதன் பின்னர் போரிஸ் ஜோன்சன் கட்சி தலைமையிலிருந்து விலகுவதாகவும் புதிய பிரதமரை கட்சி தேர்ந்தெடுக்கும் வரை இடைக்கால பிரதமராக தான் பணி புரிவதாக அறிவித்துள்ளார். இவ்விடயத்தை அவதானிக்கின்ற போது போரிஸ் ஜோன்சனின் பதவி விலகலானது அதிகமான குழப்பங்களையும் சந்தேகங்களையும் ஏற்படுத்த முனைகின்றது. அத்தகைய விடயங்களை முழுமையாக விளங்கி கொள்வது அவசியமாகும்.



முதலாவது, பிரித்தானிய சமூகம் ஒரு திறந்த சமூகமாகவே அடையாளப்படுத்தப்படுகிறது. ஐரோப்பிய சமூகங்களிலும் அதீத சுதந்திரமும் அதற்கான இயல்புகளும் பிரித்தானிய சமூகத்திடம் காணப்பட்டது. அத்தகைய சமூகத்தில் கேளிக்கை விடுதிகளிலும் வாழ்வியல் முறைகளிலும் கீழைத்தேசத்தோடு ஒப்பிடுகின்ற போது சுதந்திரமான தேசமாக தன்னை காட்டிக்கொண்டது. ஆனால் அரசியல் என்பது நெறிமுறைக்கும் ஒழுக்கத்துக்கும் உட்பட்டது என்பதை அத்தேசங்கள் தற்போதும் கொண்டிருக்கின்றன என்பதையே இச்செயல் காட்டுகின்றது. அநேக அமெரிக்க ஜனாதிபதரி வேட்பாளர்களின் தோல்விகளுக்கு பின்னால் ஊழல்களும் பாலியல் குற்றச்சாட்டுகளும் காணப்படுகிறது. எனவே ஐரோப்பியர்கள் திறந்த மற்றும் சுதந்திரமான சமுதாயமாக தம்மை அறிமுகப்படுத்தி கொண்டாலும் அரசியல் நடைமுறையில் நெறிமுறைக்கு உட்பட்டே செயற்படுகின்றனர் என்பதை பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜோன்சனின் பதவி விலகல் வெளிப்படுத்தி நிற்கிறது.

இரண்டாவது, கிறிஸ் பின்சரின் பாலியல் நடத்தையின் விளைவுகள் தான் பிரதமரது பதவி விலகலுக்கு காரணம் என்று கூறிவிட முடியாது. அத்தகைய செயல் பழமைபேண் கட்சியினருக்கும் ஒரு வாய்ப்பான சூழலை ஏற்படுத்தியுள்ளதென்றே கூற வேண்டும். குறிப்பாக ஐரோப்பிய பிரித்தானிய வெளியேற்ற விவகாரத்தில் இரு பிரதமர்கள் பதவி விலகிய போது போரிஸ் ஜோன்சன் அவ்வெளியேற்றத்தை உறுதிப்படுத்திக் கொண்டார். டேவிட் கேமரூனும், திரேசா மேயும் வெளியேறியதன் மூலம் பிரித்தானியாவிற்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை நன்கு உணர்ந்திருந்தார்கள் என்பதை காட்டியது. ஆனால் போரிஸ் ஜோன்சனோ அவை அனைத்தையும் கைவிட்டு வெளியேற்றத்துக்கான உரையாடலை வெற்றிகரமாக முடித்து, நெருக்கடி ஏற்பட்ட போதெல்லாம் உலக தலைவர்களோடும் பிரித்தானிய இராணியோடும் உரையாடி ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியாவை தனிமைப்படுத்தினார். உலகப்பொருளாதாரம் என்பது சந்தையாலும் வர்த்தகத்தாலும் கட்டமைக்கப்படுகின்றது. அத்தகைய சூழலில் அமெரிக்காவின் நலன்களையும் விருப்பங்களையும் நிலைப்படுத்தும் விதத்தில் பிரதமர் போரிஸ் ஜோன்சன் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டு பழமைபேண் கட்சியினரிடம் காணப்பட்டது.

மூன்றாவது, போரிஸ் ஜோன்சனின் பதவி விலகலுக்கு பின்னால் ரஷ்ய உக்ரைன் போர் வலுவான காரணியாக இனங்காணப்படுகிறது. நேட்டோவிலும், ஐரோப்பிய கண்டத்திலும், ஜி07இலும் பிரதான பங்காளரான பிரிட்டன் அமெரிக்காவுடன் இணைந்து அமெரிக்காவின் நலனுக்கு ஏற்ற வகையில் ஐரோப்பாவை வழிநடத்துவதாக அவர்மீதான குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது. குறிப்பாக உக்ரைன் ரஷ்யாவுக்கு எதிரான போரை முனைப்பாக நடத்துவதற்கான இராணுவ, பொருளாதார ரீதியான உதவிகளை வழங்குவதில் மேற்குறித்த அமைப்புக்களை போரிஸ் ஜோன்சன் பயன்படுத்தினார் என்றும், ரஷ்ய அமெரிக்க முரண்பாட்டை தீவிரப்படுத்துகிறார் என்றும் அவர்மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றது. அதற்கு ஆதாரமாக பிரிட்டன் உளவுத்துறையின் போலியான தகவல்களும் உக்ரைன் மீது தடவை நிகழ்ந்த போரிஸ் ஜோன்சனின் விஜயத்தையும் குறிப்பிட முடியும். அதுமட்டுமல்லாது, ரஷ்யாவிற்கு எதிரான ஊடகப்போரின் பிரதான பங்கை பிரிட்டன் முன்னெடுத்து வருகின்றது.

நான்காவது, ரஷ்ய உக்ரைன் போரினால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி பிரித்தானிய மக்களின் வாழ்க்கைச்சுமையை அதிகப்படுத்தி உள்ளது. எரிவாயு மற்றும் பெற்றோலியம் ரஷ்யாவிடமிருந்து பெறுகின்ற ஐரோப்பா ரஷ்யா மீதான பொருளாதார தடையினால் இழந்துள்ளது. ஜேர்மனி மற்றும் பிரான்சும் ரஷ்யாவோடு சுமூகமான நட்புறவை கட்டியமைக்க முயலுகின்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் போரிஸ் ஜோன்சன் தலைமையிலான பிரிட்டன் ரஷ்யாவிற்கு எதிராகவே செயற்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட விளைவுகள் ஐரோப்பிய பொருளாதாரத்தை பாரிய நெருக்கடிக்குள் தள்ள ஆரம்பித்துள்ளது. அதில் பிரிட்னும் அதிக சுமையை மக்கள் மீது ஏற்படுத்தியுள்ளது.

ஐந்தாவது, பிரிட்டனின் பிரதமர் போரிஸ் ஜோன்சன் அமெரிக்காவோடு கொண்டிருக்கின்ற உறவானது ஐரோப்பாவை தவறான திசையில் நகர்த்துவதாகவும், அமெரிக்காவின் விருப்புக்கு மேற்கு ஐரோப்பா செயற்படுவதை உறுதிப்படுத்துவதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகிறன. அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் காலத்திலிருந்தே போரிஸ் ஜோன்சன் மேற்று ஐரோப்பாவை பிழையான திசையில் நகர்த்துகிறார் என்ற எண்ணப்பாங்கு நிலவுகிறது. ஆனால் அமெரிக்காவோ ஐரோப்பாவை தனது நலனுக்கு உட்படுத்திவிட்டு கைவிடும் போக்கினை அவதானிக்க முடிகிறது. அண்மைக்காலத்தில் நிகழ்ந்த நேட்டோ மற்றும் ஜி07 மாநாடுகளில் சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் எதிரான தீர்மானங்களை எடுத்து விட்டு தனது உள்நாட்டு பொருளாதார நெருக்கடியின் நிமித்தம் உள்நாட்டில் சினாவில் பொருட்களுக்கு விதிக்கப்பட்ட வரியை தளர்த்த போவதாக ஜோ பைடன் நிர்வாகம் அறிவித்துள்ளது. அவ்வாறே கிழக்கு ஐரோப்பிய நாட்டின் பெற்றோலிய கம்பெனி மூலம் ரஷ்யாவிடமிருந்து எரிவாயுவையும் பெற்றோலியத்தையும் அமெரிக்கா பெற முயல்வதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. எனவேதான் போரிஸ் ஜோன்சன் மீதான குற்றச்சாட்டும் அவரது அணுகுமுறைகளும் அவரது பதவி விலகலை பழமைபேண் கட்சியினர் முன்னிறுத்துவதற்கு அடிப்படையாக அமைந்தது. இத்தகைய நெருக்கடியிலிருந்து ஐரோப்பாவை குறிப்பாக பிரிட்டனை உள்ளாக்கியதில் போரிஸ் ஜோன்சனுக்கும் பங்கு உண்டு என்பதை மறுக்க முடியாது.

எனவே, டொனால்ட் ட்ரம்பின் பதவி விலகல் எவ்வாறு அமைந்ததோ அவ்வாறே போரிஸ் ஜோன்சனின் பதவி விலகலும் அவதானிக்கப்படுகிறது. ஐரோப்பாவுக்குள் அரசியல், பொருளாதார நெருக்கடிகளை உருவாக்கியதோடு கிழக்கு ஐரோப்பாவை நோக்கிய நேட்டோவின் விஸ்தரிப்பு ஐரோப்பாவிற்குள் போரையும் உலகளாவிய பொருளாதார நெருக்கடியையும் உலகளாவிய போருக்கான சூழலையும் போரிஸ் ஜோன்சனது கொள்கை ஏற்படுத்தியுள்ளது. ஏறக்குறைய உலகத்தை அபாயமான நிலைக்குள் விட்டுச்செல்லும் தலைவராகவே போரிஸ் ஜோன்சனது பதவி விலகல் அமைய உள்ளது.

# ஹஜ்ஜுப் பெருநாள்

## சிறப்பு மலர்



# ஈதுல் அழ்ஹா: பெருநாளை அமல்களால் அலங்கரிப்போம்

இஸ்லாம் இரண்டு பெருநாட்களை எமது மனித வாழ்வுக்கு அவசியமான பெறுமானங்களைக் கொண்டதாக அமைத்து தந்துள்ளது. அவற்றில் ஒன்று ஈதுல் பித்ர் எனும் நோன்புப் பெருநாள், மற்றையது ஈதுல் அழ்ஹா எனும் ஹஜ்ஜுப் பெருநாள் ஆகும். ஹஜ்ஜுப் பெருநாள் என்பது இப்ராஹீம் (அலை) அவர்களும் அன்னாரது குடும்பத்தினரும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அமைய மேற்கொண்ட தியாங்களையும் அர்ப்பணிப்புக்களையும் நினைவூட்டக்கூடியவையாக அமைந்துள்ளன. குறிப்பாக புனித மக்கா நகரில் நிறைவேற்றும் ஹஜ் கிரியைகளின் அனைத்து அம்சங்களும் இப்ராஹீம் (அலை) அவர்களதும் அன்னாரது குடும்பத்தினரதும் தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் நினைவூட்டக்கூடியனவாக உள்ளன.

அந்த வகையில் துல்ஹிஜ்ஜா மாதம் 10ம் பிறையினை புனித ஹஜ்ஜுப் பெருநாளாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் நாம் அத்தினத்தின் மகிமைகளை அறிந்து நபி (ஸல்) அவர்கள் காட்டித்தந்த முறையில் அப்பெருநாளை அமைத்துக் கொள்ளும் போது அல்லாஹ்விடம் அளப்பரிய நன்மைகளை பெற்றுக்கொள்ள முடியும். அத்தோடு அந்நாளே இபாதத் ஆகவும் அமையும் என்பதில் இல்லை.

நோன்புப் பெருநாள் தின இரவின் மஃரிப் முதல் மறுநாள் காலை பெருநாள் தொழுகை ஆரம்பிக்கும் வரைக்கும் தக்பீர் சொல்வது ஸுன்னத்தாகும். ஹஜ்ஜுப் பெருநாள் என்பதால் அய்யாமுத்து தஷ்ரீக் தினங்களான பிறை 10,11,12,13 அஸர் தொழுகை வரையும் ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னரும் தக்பீர் சொல்வது விரும்பத்தக்கதாகும்.

பெருநாள் தினத்தில் பெருநாளுக்காக குளிப்பது மிக முக்கியமான ஒரு சுன்னத் ஆகும். பெருநாள் இரவு நடுநிசியிலிருந்து இக்குளிப்பை நிறைவேற்றலாம். 'ஈதுல் அல்ஹா வுடைய சுன்னத்தான குளிப்பை நிறைவேற்றுகிறேன்' என்ற நிய்யத்துடன் குளிப்பதன் மூலம் நன்மைகளை அடைந்து கொள்ளலாம்.

நறுமணம் பூசிக்கொள்வதும் மற்றுமொரு விசேடமான சுன்னாவாகும். அத்தோடு ஆடைகளில் சிறந்த ஆடையை அணிந்து கொள்வதும் நபிவழியாகும். ஹஜ்ஜுப் பெருநாளைப் பொறுத்தவரையில், சூரியன் உதயமாகி 20 நிமிடங்கள் கழிந்ததுடன் பெருநாள் தொழுகையை நிறைவேற்றுவதும் தொழுகைக்கு புறப்பட முன்னர் எதனையும் சாப்பிடாது தொழுகைக்கு செல்வதும் நபி (ஸல்) அவர்கள் காட்டித்தந்த வழிமுறையாகும்.

இப்பெருநாள் தொழுகையின் முதல் ரக்அத்தில் 7 தக்பீர்கள் சொல்வதும் இரண்டாம் ரக்அத்தில் 5 தக்பீர்கள் சொல்வதும் சுன்னத்தாகும். ஒவ்வொரு தக்பீருக்கு இடையிலும் 'ஸுப்ஹானல்லாஹ் வல்ஹம்துலில்லாஹ்



வலாஇலாஹ இல்லால்லாஹு அல்லாஹு அக்பர்' என்று சொல்லிக்கொள்வது சிறப்பாகும்.

பெருநாள் தினத்தில் கடைபிடிக்க வேண்டிய மற்றுமொரு சுன்னா, ஒரு பாதையால் தொழுகைக்கு சென்று வேறொரு பாதையால் வீட்டுக்குத் திரும்புவதாகும். **(ஆதாரம்: முஸ்லிம்).** அத்தோடு பெருநாள் தொழுகையை முடிந்தளவு நேர்காலத்தோடு தொழவேண்டும் (நூல்: அஹ்மத்). பெருநாள் தொழுகை ஸுன்னா முஅக்கதாவாகும்.

மேலும் பெருநாள் தொழுகை முடிந்ததும் சிலர் குத்பா பிரசங்கத்தை செவிமடுக்காமல் திரும்பி விடுகின்றனர். ஆனால் பெருநாள் தொழுகை எவ்வாறு சுன்னத்தோ அதே போன்று பெருநாள் குத்பா பிரசங்கத்தை கேட்பதும் சுன்னாவாகும்.

பெருநாள் தினத்தில் வாழ்த்துக்கூறல். ஒருவரை ஒருவர் சந்தித்து முஸாபஹா செய்து 'தகப்பாலல்லாஹ் மின்னா வமின்கும்' (அல்லாஹ் எங்களையும் உங்களையும் ஏற்றுக்கொள்வானாக) என்று வாழ்த்துச் சொல்வதும் கூட நபிவழியாகும். இவ்வார்த்தை வெறுமெனே ஒரு வாழ்த்து மட்டுமல்லாது அது உயர்ந்த ஒரு துஆ வும் கூட.

மேலும் ஹஜ்ஜுப்பெருநாள் தினத்தில் மேற்கொள்ளும் அமல்களில் சிறந்த அமலாக அமைவது உழ்ஹிய்யாவாகும். பெருநாள் தினத்தன்று மனிதன் நல் அமல்களில் இரத்தம் ஒட்டி குர்பான் கொடுப்பதை

மௌலவி
**எம்.யூ.எம். வாலிஹ் ...**
(அல் அஸ்ஹரி), வெலிகம

விட அல்லாஹ்வுக்கு விருப்பமான அமல் வேறெதுவும் இல்லை. உழ்ஹிய்யா கொடுக்கப்படும் பிராணி அதன் கொம்புகளுடனும் முடிகளுடனும் குழம்புகளுடனும் நாளை மறுமைநாளில் வரும். அறுக்கப்படும் மிருகத்தின் இரத்தம் பூமியில் விழும் முன்னரே அது அல்லாஹ்விடம் சென்றடைகின்றது. எனவே அதனை மன விருப்பத்துடன் நிறைவேற்றுங்கள்' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். **(ஆதாரம்: இப்னு மாஜா)**

அதேநேரம் பல்லின மக்கள் வாழும் நாடொன்றில் குர்பானியை நிறைவேற்றும் போது ஏனைய மதத்தவர்களின் உணர்வுகளை மதித்து நடந்து கொள்ளவும் தவறக்கூடாது. அதற்கு தேவையான வழிகாட்டல்களையும் இஸ்லாம் வழங்கியே இருக்கின்றது.

இவை இவ்வாறிருக்க, பெருநாள் தினத்தில் அடக்கஸ்தலங்களுக்கு சென்று அடக்கம் செய்யப்பட்டிருக்கும் இனபந்துக்களை தரிசிக்கவும் அவர்களுக்காக பிரார்த்திக்கவும் தவறக்கூடாது.

பெருநாள் தினத்தில் எமது சகோதர சகோதரிகள், இனபந்துக்கள் உறவினர்கள் நண்பர்கள் ஆசிரியர்கள் உஸ்தாத்மார்கள் போன்றோருக்கு நேசக்கரம் நீட்டுவதும் அவர்களுடன் உறவை பலப்படுத்திக்கொள்வதும், பகையை மன்னித்து விடுவதும் அதிகளவிலான நன்மைகளைப் பெற்றுத்தரும் செயற்பாடுகளாகும்.

குறிப்பாக எமது தாய் தந்தையர், உடன் பிறந்த சகோதர சகோதரிகள் உட்பட இரத்த உறவுகளுடன் உறவை பலப்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பமாகப் பெருநாளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இரத்த உறவுகளை பேணுவதன் மூலம் சுகமாக வாழ்வதோடு நீண்ட ஆயுளையும் பெற்றுக் கொள்ள முடியும் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அத்தோடு பல்லின மக்கள் வாழும் இந் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் சீராகவும், சந்தோசம் நிறைந்த நிம்மதியான வாழ்வு கிட்டவும் தியாகத் திருநாளாம் இந்நன்நாளன்று பிரார்த்தனை செய்யவும் நாம் தவறக்கூடாது. இஸ்லாம் காட்டித்தந்துள்ள வழிமுறைகள் படி இப்பெருநாளை அமைத்து ஈதுல் அழ்ஹாவைக் கொண்டாடி மகிழ்வோம்.

## ஹஜ்ஜுத் திருநாள்

கிடைத்த அருமை மிக்க புதல்வன் !
இஸ்மாயில் நபி அவர்களை
அறுத்துப் பலியிடச் சொன்னது
படைத்த முதல்வனின்
ஆணை !

கட்டளைக்குப் பணிந்தார் !
கடமையைச் செய்ய
துணிந்தார் !
நபியவர்கள்
இப்றாஹிம் (அலை)

அந்தத் தந்தையின்
சிந்தையிலே
தியாகத்தின் சிந்தனை
பூத்தது !

எண்ணிய கருமத்தை
புண்ணிய தருமமாய்
அதை நிறைவு செய்ய
நிறைவு கொண்டார்
நபியவர் !

கத்தி இருந்தது
அறுக்க மறுத்தது
விந்தையிலும் விந்தை
இதை சிந்தையிலே
விதைத்துப் பாருங்கள் !


நபியவர்களின்
துணிவைக் காட்டும்
தூய்மையான நாள் !
நம் இதயங்களுக்கு
கனிவை ஊட்டும்
இனிமையான நாள் !
ஹஜ்ஜுப் பண்டிகை நாள் !
நம் வதனங்களில்
புன்னகை தவழும்
புனித நாள் !

இந்நாள் நம் எல்லோருக்கும்
சுமுகமான நாளாக,
சுப நாளாக
புத்தம் புது நாளாக
சித்தம் மகிழும் நாளாக
சிறப்பு மிக்க நாளாக
அமையட்டும் !

அனைவருக்கும்
பொன்மனச் செம்மலின்
பொன்னான
ஈதுல் அழ்ஹா
ஹஜ்ஜுப் பெருநாள்
வாழ்த்துக்கள் ...!!

தாஜ்மஹான்...

மலர் தயாரிப்பு:
**மர்லின் மரிக்கார்**



## நீர் விருட்சத்தின் நிழல்

லப்பைக்
அல்லாஹும்ம லப்பைக்

ஐயாயிரம் வட்சரம் வேர்
துளிர்த்த தொன்மைச்சொல்
என் கல்புக்குள் வளர்கிறது
நீர் விருட்ஷத்தின் அழியா நிழல்
பாலை வனமொன்றில் தாகித்தலையும்
வெம் பொழுது
பிஞ்சுக்கால் விரல் இடுக்குகளில்
ஈமானின் இதயத்தின் ஊற்று
போதும் போதும் எனும் மட்டும்
ஐயாயிரம் வட்சரத்தின் தொன்மை
நீர் விருட்சம் பெரு வனம்
பருகிடப்பருகிட
ஈமானின் தாகம் தீர்க்கும்

கறைபட்ட கல்புகளையும்
கழுவித்துடைக்கும்
தூய வனம்
நம்பிக்கையால் நீண்ட நீர் மரம்
நினைக்கும் போதே நெஞ்சில்
பக்தியை இனிக்கும்
தாயன்பின் ஈரம் வற்றா இறையன்பு
சேயின் பாதத்தடியில் முளை கொண்டதோர்
நீர்த்தரு நிழல் நிஜம்

இன்னும் புவனமிருக்கும் வரை
நீர்ப்பழம்
திக்கெல்லாம் வந்து கூடும்
புனித திசையில் வாசமிருக்கும்

துல்ஹிஜ்ஜா மாதத்தின்
பத்தாம் பிறைச்சந்திரனாய்
என் கல்புக்குள் வளர்கிறது
ஸம்ஸம் நீர் விருட்சம்

லப்பைக்
அல்லாஹும்ம லெப்பைக்

முல்லை முஸ்ரிபா ...

# பொருளாதார நெருக்கடி சூழலில் ஹஜ்ஜுப் பெருநாள்

பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலையில் நாம் இவ்வருட பெருநாளை அடைந்துள்ளோம். இந்த சூழலில் எல்லா மக்களதும் இயல்பு வாழ்வு பாதிப்படைந்துள்ளது. அதனால் சில விடயங்களை கருத்திற்கொள்ள வேண்டிய தேவைக்கு நாம் உள்ளாகியுள்ளோம்.

இறைவனை நெருங்குவதும் மனித நலன் பேணுதலும் பெருநாளின் நோக்கங்களாக விளங்குகின்றன. அந்த வகையில் முஸ்லிம்களாகிய எமக்கு இரண்டு பெருநாட்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அப்பெருநாட்கள் அல்லாஹ்வின் நாட்டப்படி உயர்ந்த இரண்டு வணக்கங்களை தொடர்ந்தே வருகின்றன. ஒரு மாத காலம் நோன்பிருந்து இறை திருப்தியையும் பாவமன்னிப்பையும் இறை வழிகாட்டலையும் பெற்ற சந்தோசத்தில் நோன்புப் பெருநாளைக் கொண்டாடுகின்றோம்.

ஹஜ்ஜுக்குச் சென்றவர்கள் ஹஜ் கடமைகளை நிறைவேற்றியும் ஹஜ்ஜுக்கு செல்லாதவர்கள் துல்ஹஜ் முதல் ஒன்பது நாட்களும் சுன்னத்தான, நபிலான வணக்கங்களில் ஈடுபட்டும் பத்தாம் நாளில் ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடுகின்றோம். எமது பெருநாட்களுக்கு இரண்டு தனித்துவப் பண்புகள் உள்ளன. அவற்றில் ஒன்று எமது பெருநாட்கள் எம்மை அல்லாஹ்வைச் சார்ந்து வாழச் செய்கிறது. (அஃயாத் ரப்பானிய்யா) மற்றையது எமது பெருநாட்கள் முஸ்லிம்களாகிய எம்மை அனைத்து மனிதர்களுடனும் சேர்ந்து வாழச் சொல்கிறது. (அஃயாத் இன்ஸானிய்யா) ஆகும்.

நோன்பு, ஹஜ் என்ற இரு கடமைகளைத் தொடர்ந்து பெருநாட்கள் கொண்டாடப்படுகின்றன. பெருநாட்களை தக்பீரோடும் தொழுகையோடும் ஆரம்பிக்கின்றோம். இது எப்போதும் எம்மை அல்லாஹ்வைச் சார்ந்தவர்களாக வாழத் தூண்டுகின்றது.

அதேநேரம் எமது பெருநாட்களில் சந்தோசங்களை அனைத்து மக்களோடும் பகிர்ந்து கொள்கிறோம். அனைவருக்கும் முகமன் கூறுகின்றோம், நோன்புப் பெருநாளின் நிமித்தம் ஏழை வீடுகளுக்கு சென்று ஸகாத்துல் ஃபித்ர் என்ற தர்மத்தை நிறைவேற்றுகிறோம். ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகையைத் தொடர்ந்து உழ்ஹிய்யாவை நிறைவேற்றுகிறோம். இவை மனிதர்களோடு எம்மை சேர்ந்து வாழத் தூண்டுகிறது. உழ்ஹிய்யாவைப் பற்றி அல்குர்ஆன் கூறும் போது 'இத்தினங்களில் அல்லாஹ்வின் பெயர் கூறி, அல்லாஹ் உங்களுக்கு அருளிய பிராணிகளிலிருந்து அறுத்து அதிலிருந்து நீங்கள் உண்ணுங்கள், தேவையுள்ள ஏழைகளுக்கும் கொடுத்து உதவுங்கள்' (ஸூரதுல் ஹஜ்: 28) என்றுள்ளது. முஸ்லிம் சமூகம் உறுதியான ஈமானோடும் உயர்ந்த வணக்க வழிபாடுகளோடும் பண்பாடுகளோடும் வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் இஸ்லாத்தின் வழிகாட்டல்களை பின்பற்றுகின்ற முன்மாதிரி சமூகமாக வாழும் அதேவேளை, தாம் வாழும் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளையும் இஸ்லாம் எமக்கு சொல்லித்தந்திருக்கின்றது என்பதையும் நாம் மறந்து விடலாகாது.

இப்ராஹீம் (அலை) அவர்களது தியாகங்கள், முன்மாதிரிகள் என்பவற்றை ஞாபகப்படுத்துகின்ற இச்சந்தர்ப்பத்தில் அன்னார் கேட்ட ஒரு துஆவையும் நாம் கற்றுக்கொள்ளத் தவறக்கூடாது.

'நபியே, இப்ராஹீம் 'என் இறைவனே இந்த நாட்டை பாதுகாப்பானதாக ஆக்கி அதன் குடிகளுக்கு பலவகை கனி வர்க்கங்களிலிருந்து உணவளிப்பாயாக'. (பகரா : 126)

இப்ராஹீம் நபியின் இந்த துஆ எதனை எங்களுக்கு சொல்கிறது? நாம் அல்லாஹ்வோடு சார்ந்திருப்பதற்கும் நாம் மனிதர்களோடு சேர்ந்திருப்பதற்கும் எமக்கு துணை நிற்பது, நாம் வாழும் நாடு பாதுகாப்பானதாகவும் நம் நாட்டு மக்கள் பட்டினி,பஞ்சம் இல்லாதவர்களாக இருப்பதுமாகும்.

மனிதர்கள் தன்னை வணங்க வேண்டும் என்று அல்லாஹ்தஆலா கோருவதற்கான நியாயமாக தன்னிறைவும் பாதுகாப்பும் உள்ள நாடாக மக்காவை ஆக்கியமையை அல்குர்ஆனில் குறிப்பிடுகின்றான்.

'கஃபாவின் இறைவனை நீங்கள் வணங்குங்கள். அவன் தான் உங்கள் பசிக்கு உணவூட்டினான். பயத்திலிருந்து உங்களுக்கு பாதுகாப்பளித்தான்.'(பலத்: 03,04)

இப்றாஹீம் (அலை) தனது நாடு பாதுகாப்பானதாகவும் நாட்டு மக்கள் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்ற தனது அவாவை பிரார்த்தனையாக இறைவனிடம் கேட்டதைப் போன்றே அதற்கான முன்னேற்பாடுகளையும் செய்தார்கள். அல்லாஹ்வும் அவரது பிரார்த்தனையை அங்கீகரித்தான். அவரது வழித்தோன்றலில் வந்த நபிமார்கள் ஊடாக அவரது கனவை அல்லாஹ் நனவாக்கினான்.

எகிப்து மக்களை பசியிலிருந்து பாதுகாத்து நாட்டை பாதுகாப்பான நாடாக மாற்றிய நபி யூசுப் (அலை) அவர்களின் வரலாற்றையே அல்குர்ஆன் அழகிய வரலாறாக வர்ணிக்கிறது.

எகிப்து நாட்டுக்கு வர இருந்த பஞ்சத்தில் இருந்து அந்நாட்டை பாதுகாத்த நபி யூசுப் (அலை) அவர்கள் தனது குடும்பத்தை எகிப்துக்கு வந்து குடியமரச் சொன்னபோது 'பாதுகாப்பான எகிப்திலே வந்து வாழுங்கள்' என்றே அழைப்பு விடுத்தார்கள்.

முஹம்மத் (ஸல்) அவர்கள் மதீனாவில் குடியேறியபோது, அவ்வூர் மக்களோடு சேர்ந்து அவ்வூரை பாதுகாப்பதற்கான அரசியல் சாசனத்தை உருவாக்கினார்கள். அந்த ஊரை நேசித்தார்கள். அந்த ஊரில் விவசாயம், வியாபாரம் வளர்ச்சி அடைவதற்கான தூண்டுதல்களை செய்தார்கள்.

அந்த ஊரின் சுற்றுச்சூழல், சுகாதாரம், மனிதர்களின் ஆரோக்கியம், கல்வி போன்ற விடயங்களில் கவனம் செலுத்தினார்கள். 'யா அல்லாஹ் எனது இப்புதிய ஊரை எனக்கு அன்புக்குரியதாக ஆக்குவாயாக, அதனது வியாபாரத்திலும், விவசாயத்திலும் அருள் செய்வாயாக, இங்கிருக்கும் நோய்களை அகற்றுவாயாக' என பிரார்த்தனை செய்தார்கள். இந்த துஆ ஒரு முஸ்லிமுக்கும் அவன் வாழும் நாட்டுக்கும் இருக்கவேண்டிய தொடர்பைத் தெளிவுபடுத்துகின்றது.

அஷ்ஷெய்க்
**எம்.எச்.எம் உஸைர் இஸ்லாஹி ...**

எமது நாடும் மக்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எமக்குத் தெரியும். அரசியல் பிரச்சினை, உணவுப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை, தொழில் பிரச்சினை, சுகாதாரப் பிரச்சினை, கல்விப் பிரச்சினை என பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.அதனால் அச்சம் சூழ்ந்த நிலையில் இருந்து எம் நாட்டையும் எம் நாட்டு மக்களையும் பாதுகாக்க வேண்டியதும் அதற்காக முன்னெடுக்கப்படும் நல்ல முயற்சிகளுக்கு பங்களிப்பு வழங்குவதும் எமது கடமையாகும்.

எனவே, தனி மனிதர்களாக, குடும்பங்களாக, கழகங்களாக,அமைப்புகளாக, சமூகமாக மனிதர்களின் துயர் துடைப்பு பணிகளில் ஈடுபடுவோம். தான தர்மங்களை முடியுமான வரை அதிகரித்துக் கொள்வோம். உற்பத்திப் பணிகளில் முடியுமானவரை ஈடுபடுவோம். விவசாயம், வியாபாரம், கைத்தொழில், பண்ணை வளர்ப்பு, சுகாதாரம், கற்பித்தல் போன்ற பணிகளை மனிதகுல சேவையாகக் கருதி செயற்படுவோம்.

அல்குர்ஆனும் ஸுன்னாவும் இவ்விடயத்தில் அதிக வழிகாட்டல்களை எமக்கு தந்திருக்கின்றது. 'நம்பிக்கையான வியாபாரிகள் மறுமையில் நபிமார்களோடும் ஷுஹதாக்களோடும் உண்மையாளர்களோடும் இருப்பார்கள்' என நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டார்கள்.

விவசாயத்துறையில் மறுமை நாள் வரை ஈடுபடும் அளவுக்கு நபி (ஸல்) அவர்கள் தூண்டுதல் வழங்கினார்கள்.

விவசாயத்தின் பலனை பறவைகள், மிருகங்கள், மனிதர்கள் யார் பெற்றுக்கொண்டாலும் அது விவசாயிக்கு சதகாவாக எழுதப்படும் என அன்னார் கூறினார்கள்.

இதேபோல பண்ணை வளர்ப்பு, கைத்தொழில், மருத்துவப் பணி, கற்பித்தல் பணி போன்ற மனித வாழ்க்கையை அழகுபடுத்தும் மேலும் இலகுபடுத்தும் விடயங்களை செய்யுமாறும் அதற்கு அழகிய கூலி கிடைக்கும் என்றும் அல்குர்ஆனும் ஹதீஸும் குறிப்பிட்டிருக்கின்றன.

அல்லாஹ்வின் அருள்கள் நிறைந்த ஒரு நாட்டில் நாங்கள் வாழ்கின்றோம்.

ஆகவே பெருநாளின் நோக்கத்திற்கு அமைய இஸ்லாம் கூறிய வழிகாட்டல்களோடு இந்நன்நாளைக் கொண்டாடுவோம்.

# ஹஜ்ஜுப் பெருநாள் சிறப்பு மலர்



# இஸ்லாமிய வழிகாட்டலில் உழ்ஹிய்யா

அஷ்ஷேக்
**எ.எச்.எம் முஹம்மது மின்ஹாஜ் முப்தி ...**
(காஷிபி)

ஈதுல் அழ்ஹா ஹஜ் பெருநாள் முதல் முதல் நான்கு நாட்களுக்கு, அதாவது துல் ஹிஜ்ஜா பிறை 10, 11, 12, 13 அஸர் வரை நிறைவேற்ற வேண்டிய வலியுறுத்தப்பட்ட ஒரு ஸுன்னாவே (ஸுன்னா முஅக்கதா) உழ்ஹிய்யாவாகும். இது தொடர்பில் அல்லாஹுதஆலா 'உம் இறைவனுக்காக நீர் தொழுது, குர்பானியும் கொடுப்பீராக.' (108:02) என்று அல்குர் ஆனில் குறிப்பிட்டுள்ளான்

இந்த இபாதத்தைப் பருவ வயதை அடைந்த, புத்தி சுயாதீனமுள்ள, சுதந்திரமானவர்கள் தனக்கும் தனது பராமரிப்பில் இருப்பவர்களுக்கும் தேவையான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவைகளின் செலவுகளை விட மேலதிகமான வசதியுள்ளவர்கள் பெருநாள் தினம் காலை சூரியன் உதித்து, பெருநாள் தொழுகையும், இரு குத்பாக்களும் நிகழ்த்தும் நேரம் சென்று விட்டால் நிறைவேற்ற வேண்டும்.

இது குறித்து நபி (ஸல்) அவர்கள் 'எவர் வசதி இருந்தும் உழ்ஹிய்யா கொடுக்கவில்லையோ அவர் நாம் தொழும் இடத்திற்கு சமூகம் தராமல் இருக்கட்டும்' என்றார்கள். (ஆதாரம்: ஹாகிம்)

உழ்ஹிய்யா கொடுப்பதினூடாக இரண்டு நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அவற்றில் ஒன்று, இப்றாஹீம் (அலை) அவர்களுடைய தியாகங்களும், அர்ப்பணிப்புகளும் நினைகூரப்படுகின்றன. மற்றையது பெருநாள் தினத்தில் ஏழைகள், தேவையுடையவர்களுக்கு மாமிசத்தைக் கொடுத்து அவர்களுடைய தேவையை நிறைவேற்றி அவர்கள் மகிழ்விக்கப்படுகின்றனர்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'பெருநாள் தினத்தன்று மனிதன் செய்யும் நல்லமல்களில் குர்பான் கொடுப்பதை விட அல்லாஹ்வுக்கு விருப்பமான அமல் வேறேதுமில்லை. மேலும் அம்மிருகம் அதன் கொம்புகளுடனும், முடிகளுடனும்,குழம்புகளுடனும் நாளை மறுமை நாளில் வரும். அறுக்கப்படும் மிருகத்தின் இரத்தம் பூமியில் விழுமுன்னரே அது அல்லாஹ்விடம் சென்றடைந்து விடுகின்றது. எனவே மன விருப்பத்தோடு நிறைவேற்றுங்கள்' எனக் கூறினார்கள். (ஆதாரம்: இப்னு மாஜஹ்)

அதேநேரம், 'ஆடு, மாடு, ஒட்டகை ஆகியவைகளே இதற்குத் தகுதியானதும் மார்க்கம் அங்கீகரித்துள்ள மிருகங்களுமாகும். ஓட்டகமாக இருந்தால் ஐந்து வருடம் பூர்த்தியானதாகவும், செம்மறி ஆடாயின் ஒரு வருடம் பூர்த்தியானதாகவும், மாடு, வெள்ளாடாயின் இரண்டு வருடங்கள் பூர்த்தியானதாகவும் இருத்தல் வேண்டும் எனவும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: திர்மிதீ, புகாரி, முஸ்லிம், திர்மிதீ)

அத்தோடு, 'அறுக்கப்படும் பிராணிகள் நொண்டி, குருடு, செவிடு போன்ற குறைபாடுகள் அற்றவையாகவும், இறைச்சியையோ பெறுமதியையோ குறைக்கும் நோய்கள், குறைபாடுகள் அற்றவையாகவும் இருக்கவேண்டும் எனவும் அன்னார் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: திர்மிதி 1497, அபூ தாவூத் 2802)

உழ்ஹிய்யா கொடுக்க நாட்டமுள்ளவர்கள் துல்ஹிஜ்ஜஹ் மாதம் ஆரம்பமானது முதல் உழ்ஹிய்யாவை நிறைவேற்றும் வரை உரோமங்களை நீக்குவதையும் நகங்களை களைவதையும் தவிர்ந்து கொள்வது சுன்னத்தாகும்.

மேலும் தனியாக உழ்ஹிய்யாவை வழங்க முடியாதவர்கள் கூட்டாக சேர்ந்தும் வழங்க முடியும். ஓர் ஒட்டகம் அல்லது ஒரு மாட்டில் ஏழு நபர்கள் மாத்திரமே கூட்டுச்சேரலாம். ஆனாலும் ஏழு நபர்கள் இணைந்து ஒரு மாட்டையோ அல்லது ஓர் ஒட்டகத்தையோ உழ்ஹிய்யாவாக வழங்குவதை விட, தனித்தனியாக ஒவ்வொருவரும், ஓர் ஆட்டை அல்லது ஒரு மாட்டை அவரவர் வசதிக்கேற்ப உழ்ஹிய்யா கொடுப்பது ஏற்றமானதாகும். குடும்பத்திலுள்ள பொறுப்பாளர் ஒரு ஆட்டை அல்லது மாடு, ஒட்டகத்திலிருந்து ஏழிலொரு பங்கை உழ்ஹிய்யாவாக கொடுப்பது தன் குடும்பம் சார்பாக போதுமாகி விடும். என்றாலும் தனித்தனியாக கொடுப்பது சிறந்ததாகும். உழ்ஹிய்யா இறைச்சியில் தனக்கும் தனது குடும்பத்திற்கும் தேவையான அளவு எடுத்துவிட்டு மீதமானவற்றை ஏழை எளியோர்களுக்கு வழங்குவது மிக ஏற்றமானதாகும். (துஹ்பதுல் முஹ்தாஜ்)



முஹிதீன் ஜும்ஆ மஸ்ஜித் (பெரிய பள்ளி) – தர்கா நகர்

இதனை நாட்டின் சட்ட விதிமுறைகளுக்கு அமைய மிருகத்தின் உரிமைக்கான சான்றிதழ், மாட்டு விபரச் சீட்டு, சுகாதார அத்தாட்சிப் பத்திரம், மிருகங்களை எடுத்துச் செல்வதற்கான அனுமதிப் பத்திரம் போன்ற ஆவணங்களை முன்கூட்டியே தயார்படுத்திக் கொள்ளல் உள்ளிட்ட அனைத்து விடயங்களையும் கவனத்தில் எடுத்தபடி நிறைவேற்றத் தவறக்கூடாது.

குறிப்பாக உழ்ஹிய்யாவுக்கென பிராணிகளை அனுமதி பெறாது வண்டிகளில் ஏற்றி வருவதையும், அனுமதி பெற்றதை விட கூடுதலான எண்ணிக்கையில் எடுத்து வருவதையும் முற்றிலும் தவிர்ந்துக் கொள்ள வேண்டும்.

மிருகங்களுக்கு எச்சந்தர்ப்பத்திலும் எவ்வித நோவினையையும் கொடுப்பது கூடாது.

உழ்ஹிய்யாவுக்கான பிராணிகளை அறுக்கும் வரை அவற்றுக்கு உணவு, நீர் முதலியவற்றை வழங்கவும், அறுப்பதற்காகப் பயன்படுத்தும் கத்தியை நன்றாகத் தீட்டி, கூர்மையாக வைத்துக் கொள்ளவும் வேண்டும்.

அத்தோடு உழ்ஹிய்யாவுக்கான பிராணிகளை ஒன்றுக்கு முன் ஒன்றைக் கிடத்தி அறுக்கக் கூடாது.

குர்பானிக்கு பயன்படுத்தப்படும் இடத்தை சுத்தமாக வைத்துக் கொள்வதோடு, அறுவைப் பிராணியின் எலும்பு, இரத்தம் மற்றும் ஏனைய கழிவுப்பொருட்களை அகற்றும் போது சுகாதார விதிமுறைகளைப் பேணிக் கொள்ளவும் அறுவைக்காகப் பயன்படுத்திய இடத்தில் கிருமி நாசினிகளைத் தெளித்து சுத்தமாக வைத்திருக்கவும் தவறக்கூடாது.

பல்லின சமூகத்தவர்கள் வாழும் ஒரு நாட்டில் வாழும் நாம், பிற சமயத்தவர்களுடைய உணர்வுகளை மதிப்பது எமது கடமை. எனவே, குர்பான் கொடுக்கின்றபோது அவர்களுடைய மத உணர்வுகள் புண்படுகின்ற அளவுக்கு நடந்து கொள்ளலாகாது. நாட்டின் சட்டம் ஒழுங்கைப் பேணிக்கொள்வதோடு அரசாங்க விடுமுறை தினத்தில் (போயா தினம்) மிருகங்களை அறுப்பதைத் தவிர்த்து கொள்ளவும் வேண்டும்.

குறிப்பாக உழ்ஹிய்யா நிறைவேற்றப்படும் போது படங்கள் அல்லது வீடியோக்கள் எடுப்பதையும் அவற்றை சமூக வலைத்தளங்களில் பகிர்வதைக் கண்டிப்பாக தவிர்த்துக் கொள்ளத் தவறலாகாது.

பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடியை மக்கள் சந்தித்துள்ள இச்சூழ்நிலையில் உழ்ஹிய்யாவுடைய கடமையை நிறைவேற்றுவதன் மூலம் அல்லாஹு தஆலாவை பெருமைப் படுத்தி ஏழை எளியோரின் பசியைத் தீர்ப்போம்.



## தியாகப் பெருநாள்

*ஹஜ்ஜின் அருளால் உளம் யாவும்*
*ஒன்றாய் சேர்ந்து கலந்திடுவோம்*
*தினமும் செய்யும் பாவத்தையே*
*நெஞ்சமுருகி அழுது போக்கிடுவோம்*
*கருணையும் இரக்கமுள்ள இறைநேசன்*
*வாரி வழங்கிய மன்னிப்பை*
*இரு கரங்கள் ஏந்தி போற்றிடுவோம்.*

*வற்றாத ஸம்ஸம் உற்றுக்களை*
*பருகி சுவைத்து அகமகிழ*
*இன்று உதித்த சூரியன் போல்*
*இஹ்ராம் உடையால் அழகைக்காட்டி*
*ஹரத்தைச் சுற்றி பவணிவரும்*
*இலட்சாதி இலட்சம் மானிடரைப்போல்*
*அராபா மைதானத்தில் ஒன்று கூடும்*
*நாமும் மனிதப்புனிதனாய் மாறுவோமே*

*உளம்நொந்து கசடுகளறுத்து*
*பொய்யான மேனியை புதுமையாக்கி*
*கேடான கண்ணுக்கு சிகிச்சைகள் செய்து*
*அன்பும் கனிவும் பெருப் பெருக*
*நடையும் பாதையும் சீராய் மாறி*
*நரகின் பாலம் மின்னலாய் கடந்திடும்*
*இப்றாஹிம் நபியின் புகழ் ஓங்கிடும்*
*இன்பம் மிகு தியாகப் பெருநாளே*

இக்பால் அலி

# ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துச் செய்திகள்

## நாட்டில் இன்னல்கள் நீங்கி நிம்மதி மலரட்டும்



இப்றாஹீம் (அலை) அவர்களின் தியாகத்தை எடுத்தியம்புகின்ற புனித ஹஜ் தினமாம் இன்றைய தியாகத் திருநாளில் நாட்டிலும் சமூகத்திலும் இன்னல்களும் வேதனைகளும் நீங்கி ஐக்கியமும் சுபீட்சமும் நிறைந்த நிம்மதியான வாழ்வு ஏற்பட வல்ல இறைவனை இருகரமேந்தி பிரார்த்திப்போம்' என பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, இஸ்லாம் சாந்தி சமாதானம் நிறைந்த மார்க்கம். அது இனங்களிடையே பரஸ்பரம் ஒற்றுமையுடனும் நல்லிணக்கத்துடனும் வாழுமாறு எம்மை வலியுறுத்துகின்றது.

ஹஜ் கடமைக்காக உலக நாடுகளிலிருந்து புனித மக்கமா நகரில் ஒன்றுகூடியுள்ள முஸ்லிம் உம்மத், எவ்வித பேதமுமின்றி, ஒரே இறைக்கொள்கையை முழு உலகுக்கும் புனித கஃபா சரீபிலிருந்து பறைசாட்டிக்கொண்டிருக்கின்றது.

இப்றாஹீம் (அலை) அவர்கள் வாழ்வின் ஆரம்பம் முதல் இறுதிவரை எதிர்கொண்ட துன்பங்களிலும் சோதனைகளிலும் நமக்கு மகத்தான படிப்பினைகள் உள்ளன. அவற்றில் பிரதானமானது, எத்தகைய சோதனைகள் வந்தாலும் அல்லாஹ்வை பிரார்த்தித்து பொறுமையுடன் கடமையான ஐவேளைத் தொழுகையையும் நிறைவேற்றினால் நிச்சயம் வெற்றி பெறலாம் என்பதாகும். அந்தவகையில் இன்றைய தியாகத் திருநாள் உள்ளிட்ட அனைத்து தினங்களும் சந்தோசம் நிறைந்த நாட்களாக அமைந்திட இறைவனைப் பிரார்த்திப்போம்.

## இப்றாஹீம் (அலை) அவர்களது சிந்தனையில் ஒன்றுபடுவோம்



தியாகத் திருநாளைக் கொண்டாடும் சகல முஸ்லிம்களும், நம் நாட்டு நெருக்கடிகளுக்கு விடிவு கிடைக்க பிரார்த்திக்குமாறு தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும், மேல்மாகாண முன்னாள் ஆளுநரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, அல்லாஹ்வுக்கு அடிபணிவதை அர்த்தபுஷ்டியாக விளக்குவதுதான் புனித 'ஹஜ்'. இக்கடமையிலுள்ள சகல கிரியைகளும் அடிபணிவதற்கான அடையாளங்களிலே ஆரம்பமாகின்றன. சபா, மர்வா மலைத் தொங்கோட்டம் (ஸயீ), புனித கஃபாவை வலம் வருதல், கல்லெறிதல் மற்றும் மிருகங்களை பலியிடல் அனைத்துமே அடிபணிவதைப் பயிற்றுவிக்கின்றன. ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னர் பாலைவனத்தில் நடந்த சம்பவங்களை அல்லாஹுத்தஆலா மார்க்கமாக்கியிருக்கிறான். மட்டுமல்ல, அதுவே பெரியதொரு கலாசாரத்தையும் (இஸ்லாம்) தோற்றுவித்திருக்கிறது. இதிலிருந்து வெளியான நாகரீகம்தான் முழு மனித குலத்தையும் பண்படுத்துகிறது. எனவே, முஸ்லிம்கள் எந்த விடயமானாலும் பண்பு தவறக்கூடாது.

அடையச் சாத்தியமான சகலதையும் அடைந்துகொள்ளும் வழிகளைத்தான் இறைதூதர் இப்றாஹீம் (அலை) அவர்கள் காட்டித்தந்தார்.

வயிற்றுப் பசியில் வாடும் இரத்த உறவுகளுக்கும், அயலவர்களுக்கும் இல்லாதோருக்கும் வாரி வழங்குவதுடன், இன்றைய நிலைமைகள் நீங்க இயன்றவரை இறைதூதர் இப்றாஹிமின் சிந்தனையில் செயற்பட சகல முஸ்லிம்களும் ஒன்றுபட வேண்டும்" என்றும் தெரிவித்துள்ளார்.

## சாந்தியும் சமாதானமும் உருவாகி நாட்டின் பிணிகள் நீங்கிடட்டும்



புனித ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடுகின்ற அனைவருக்கும் தியாகத் திருநாளாம் புனித ஹஜ்ஜுப் பெருநாளுக்கான எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் புளகாங்கிதம் கொள்கின்றேன் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கே.காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, இறைத்தூதர் இப்ராஹீம் (அலை) அவர்களின் வாழ்வில் நடந்த தியாகத்தினை வரலாறு நெடுகிலும் நினைவு கூறப்படுகின்ற தினமாக ஹஜ் பெருநாளை உலக முஸ்லிம்கள் கொண்டாடுகின்றனர். ஏகத்துவம், கருணை, அன்பு, சமத்துவம், சகோதரத்துவம், விட்டுக்கொடுப்பு போன்ற உயரிய குணவியல்புகளை ஹஜ்ஜுப் பெருநாள் எமக்கும் உலகத்திற்கும் போதித்துச் செல்கின்றது.

கடந்த ஓரிரு மாதங்களிற்கு முன் எம்மைக் கடந்து சென்ற புனித ரமழான் மாத நோன்புப் பெருநாளைக் கொண்டாடியது போன்று இப்புனித ஹஜ்ஜுப் பெருநாளையும் அமைதியாகவும் கண்ணியத்துடனும் ஆரவாரமின்றி அனுஷ்டிக்கும் படி உங்களை பணிவன்போடு கேட்டுக் கொள்கின்றேன்.

தற்போது எமது நாடு வரலாறு காணாத பாரிய பொருளாதாரச் சரிவுக்கும் நெருக்கடிக்கும் உள்ளாகி கடுமையான இன்னல்களுக்கு முகம் கொடுத்துவரும் நிலையில் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றோம்.

இந்நிலை விரைவில் நீங்கி நாட்டில் பொருளாதார மற்றும் அனைத்துப் பிணிகளும் நீங்க ஏக இறைவனை இரு கரம் ஏந்திப் பிரார்த்திப்போம் என்றுள்ளார்.

## ஹஜ்ஜின் கோட்பாடுகளை கடைப்பிடித்து வாழ்வியல் இலட்சியங்களை வெல்வோம்



ஹஜ்ஜின் கோட்பாடுகளைக் கடைப்பிடித்து வாழ்வின் இலட்சியங்களை வெல்வதற்கு, இந்தத் தியாகத்திருநாளில் திடசங்கற்பம் கொள்வோமென இலக்கியப் புரவலர் ஹாஸிம் உமர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது, இறைதூதர் இப்றாஹீம் (அலை) அவர்களின் இலட்சியங்களில், வெற்றிப்படிகள் விரவிக் கிடக்கின்றன. இதைக் கடைப்பிடித்தால் எந்தச் சவால்களையும் வெற்றி கொள்ளலாம். நம் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் நீங்குவதற்கு இயன்றளவில் தியாகங்களைச் செய்வதுதான் சிறந்தது. மனித சஞ்சாரமேயில்லாத மக்கா பாலைவனத்தில், தனது பாலகனையு ம் மனைவியையும் தனியே வைத்து விட்டு வந்த, இறைதூதர் இப்றாஹீம் (அலை) ஒரு நாகரிகத்துக்கே வழிகாட்டிச் சென்றார். அவரது தைரியத்தில் ஒரு நாகரிகமே உருவானது. இதே, தைரிய ம் மற்றும் துணிச்சலூடாகவே, நமது சவால்களையும் நாம் வெல்ல வேண்டும். இந்த நன்னாளில், முஸ்லிம்களின் ஹலாலான இலட்சியங்கள் நிறைவேற இந்நந்நாளில் பிரார்த்திப்பதாகவும் அவர் தெரிவித்து ள்ளார்.

## ஹஜ்ஜின் மகத்துவம் சவால்களை வெல்ல வழிகளைத் திறக்கும்



உலக முஸ்லிம்கள் சகலரும் புனித ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடும் இத்தருணத்தில், இலங்கை முஸ்லிம்கள் பெரும் சவால்களுக்கு மத்தியில் இப்பெருநாளை கொண்டாடுவதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது, இறைதூதர்கள் எல்லோரும் சத்தியத்துக்காகவே தியாகங்கள் புரிந்தனர். ஏகத்துவ சிந்தனையில் ஒன்றுபட மறுத்த கூட்டத்தினர் அல்லது சத்தியத்தைப் புரிந்துகொள்ள தவறிய மக்களிடம் உண்மையை உணரச் செய்ய இறைதூதர்கள் எடுத்துக்கொண்ட பிரயத்தனங்கள் அனைத்தும் மானிடனுக்கான படிப்பினைகள்தான். இப்படிப்பினைகளை உணர மறுக்கின்ற சக்திகள்தான் மானிடத்தின் எதிரி.

சுயநலத்துக்காக அல்லது நிலையான இருப்புக்காக சிலர் மேற்கொண்டவைகளின் விளைவுகளுக்கு முழு இலங்கையரும் முகங்கொடுக்க நேர்ந்துள்ளது. எமது உடன்பிறப்புக்கள் நாளாந்த உணவுக்காக அல்லல்படுகையில், பெருநாளை களியாட்டமாக மாற்ற எவரும் முயற்சிகலாகாது.

உழ்ஹிய்யா கடமைகளை பொறுப்புடனும் முறைமையுடனும் மேற்கொண்டு, அவை இல்லாதோரைச் சென்றடைய வழிகள் செய்யப்படல் அவசியம். இப்றாஹீம் (அலை) அவர்களின் தியாகம் மார்க்கமாக்கப்பட்டிருப்பதும் இதற்காகத்தான்.

விலங்குகளை பலியிடுவதால் மாத்திரம் உள்ளச்சத்தை வளர்க்க முடியாது. இதிலுள்ள உன்னத கோட்பாடுகளை புரிவதுதான் உண்மையான இறையச்சமாகும். இந்த இறையச்சத்துடன் முஸ்லிம்கள் சகலரும், நமது நாட்டு நெருக்கடிகள் நீங்கப் பிரார்த்திப்போம்" என்றுள்ளார்.

## பொருளாதார நெருக்கடி நீங்க பிரார்த்திப்போம்



பொருளாதார நெருக்கடி நீங்கி நாட்டில் சுபீட்சம் மலர இந்நாளில் பிரார்த்திப்போம் என்று குறிப்பிட்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய பிரதி பொருளாளர் எ.சி.எஹியாகான் எமது உழ்ஹிய்யாவின் பெரும் பங்கை வறுமை நிலையில் உள்ள குடும்பங்களை இனங்கண்டு வழங்குவோம் எனவும் கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது ஹஜ் பெருநாளை கொண்டாடும் வாய்ப்பை இவ்வருடம் பெற்றுள்ள உலகவாழ் முஸ்லிம்கள் அனைவருக்கும் எனது நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த வருடம் கொரோனா எனும் கொடிய நோய் தாண்டவமாடிய சூழலில் இப்பெருநாளை கொண்டாடினோம்.

இவ்வருடம் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பெருநாளை அடைந்துள்ளோம்.

இப்பெருநாளை சில விட்டுக்கொடுப்புக்களோடும், அடுத்தவர்களுக்கு முடிந்தளவு உதவிக்கரம் நீட்டியபடியும் சகிப்புத்தன்மை, பொறுமையோடும் கொண்டாடுவோம் என்றுள்ளார்.

## பாராளுமன்றத்தைப் பலப்படுத்துவதே... (06ஆம் பக்கத் தொடர்)

அது மாத்திரமன்றி ஆராயப்படும் விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட இடங்களுக்குச் சென்று நேரில் கண்காணிப்பதற்கான அதிகாரங்களும் இக்குழுக்களுக்கு உள்ளது. எனவே, இவ்வாறான குழுக்களை மீண்டும் செயற்பாட்டுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற கருத்துக்களையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் குறிப்பிட்டிருந்தார். இந்தக் குழுக்களை மீண்டும் செயற்பாட்டுக்குக் கொண்டு வருவது குறித்து ஆராயும் பொறுப்பு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் வழங்கப்பட்டுள்ளது. அவருடைய அறிக்கை மிக விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, பாராளுமன்ற ஜனநாயகத்தைக் கொண்ட நாட்டில் பிரச்சினைகளை இந்தக் கட்டமைப்பின் ஊடாகத் தீர்ப்பதே பொருத்தமானதாக இருக்கும். இதற்குத் தேவையான அடிப்படை மாற்றங்கள் மற்றும் உரிய தேவைகளைப் பாராளுமன்றத்தின் ஊடாகவே ஏற்படுத்த வேண்டும். நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள சூழ்நிலையில் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் மக்கள் பிரதிநிதிகளே இதற்கான தீர்வுகளையும் முன்வைக்க வேண்டும். இதற்கான அழுத்தங்களை மக்கள் வெளியிலிருந்து கொடுக்க முடியுமே தவிர, பாராளுமன்றத்துக்கு வெளியே தீர்வுகளைக் கொண்டு வர முடியாது என்பதே யதார்த்தம்.

## ஜப்பானை பின்தள்ளியவாறு... (06ஆம் பக்கத் தொடர்)

மிக வேகமாக வளரும் பொருளாதார நாடாக இந்தியா விளங்குகிறது. இந்தியாவின் வளர்ச்சி நடப்பாண்டில் 7.5 சதவீதத்தை எட்டும். புதிய இந்தியாவில் அதற்குரிய சீர்திருத்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒவ்வொரு துறைக்கும் பிரத்தியேக முக்கியத்துவம் தரப்படுகிறது. இதனால் தொழில்நுட்ப வளர்ச்சி சார்ந்ததாக இது இருக்கும். ஒவ்வொரு துறையிலும் புத்தாக்க சிந்தனைகளுக்கு அரசு முழு ஒத்துழைப்பு அளித்து ஊக்குவிக்கிறது என்று நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வீதம் 9.5 சதவீதமாக இருக்கும் என பிரபல பொருளாதார ஆய்வு நிறுவனமான 'மூடிஸ்' தெரிவித்துள்ளது. இதுகுறித்து மூடிஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்

"இந்தியாவிற்கான 2022 ஆம் ஆண்டின் வளர்ச்சி வீதம் 7 சதவீதத்தில் இருந்து 9.5 சதவீதமாக உயர்ந்துள்ளது. 2023 ஆம் ஆண்டில் 5.5 சதவீத வளர்ச்சி இருக்கும் என்று நாங்கள் ஏற்கெனவே தெரிவித்ததை மீண்டும் உறுதி செய்கிறோம். மசகு எண்ணெய் விலை உயர்வால் பொருளாதார சுழற்சியில் சிக்கல் இருக்கும். இது 2022_23 நிதியாண்டுகளில் 8.4 சதவீதமாகவும், 2023 24 நிதியாண்டில் 6.5 சதவீதமாகவும் இருக்கும்.

கொரோனா தொற்று பரவலின் போது முதல் அலையின் லொக்டவுனின் போது பொருளாதாரம் சரிவடைந்து மீண்டெழ சற்று காலதாமதமானது. ஆனால் இரண்டாவது அலையின் போது ஏற்பட்ட பொருளாதார பாதிப்பில் இருந்து இந்திய பொருளாதாரம் வேகமாக மீண்டு வருகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு மாநிலங்களில் பாடசாலைகள் மற்றும் கல்லூரிகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளதால் சேவைத்துறை வேகமெடுக்கலாம். இப்போது பெரும்பாலான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்ட நிலையில் இந்தியா இயல்பு நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது. இதன் மூலம் தனியார் முதலீடு அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம்.

இதனால் தொடர்ந்து வேகமான பொருளாதார வளர்ச்சி அடைந்து வரும் நாடு என்ற சிறப்பை இந்தியா தக்க வைத்துக் கொள்ளும் என்பதே பொருளாதார நிபுணர்களின் நம்பிக்கையாக உள்ளது.

இது ஒருபுறமிருக்க சீனாவின் பொருளாதார வளர்ச்சியானது 5.6 சதவீதத்தில் இருந்து 4.8 சதவீதமாக குறைகிறது. அடுத்த ஆண்டு இந்தியாவின் கடன் வளர்ச்சி எதிர்பார்க்கும் அளவிற்கு மேம்படும். மேலும் எதிர்பார்த்ததற்கும் மேலாக நிதித் துறையின் செயல்பாடு சிறப்பாக இருக்கும் என்பதால் முதலீடுகளும், நுகர்வு மற்றும் தேவைப்பாடு அதிகரிக்கும் என்கின்றனர் பொருளாதார நிபுணர்கள்.

### வழங்குநர்கள்



உங்களது பிஞ்சு பலாக்காய்க்கு எம்மால் அதி கூடிய விலை வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக அழையுங்கள்.

தொ.பே. இல.
077 3918576, 077 3295010

### இலங்கை கட்டளைகள் நிறுவனம்
**தொழில்நுட்ப அமைச்சின் கீழ்**

## ஜெனிட்டோரியல்/ தொழிலாளர் சேவைகளை வழங்குவதற்காக விலைமனுக்களை அழைத்தல் – 2022/23

கீழ்க்காணும் வளாகங்களுக்கு ஜெனிட்டோரியல்/ தொழிலாளர் சேவைகளை வழங்குவதற்கு ஓர் ஒப்பந்தக்காரரை தேர்ந்தெடுப்பதற்காக இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) விலைமனுக்களை அழைக்கின்றது.

அ. கொழும்பு-08, எல்விட்டிகல மாவத்த, விக்டோரியா பிளேஸ், இல. 17இல் உள்ள பிரதான கட்டிடம்.

ஆ. கொழும்பு-08, எல்விட்டிகல மாவத்த, விக்டோரியா, பிளேஸ், இல. 17இல் உள்ள ஆய்வுகூட சேவைகள் கட்டிடம்.

இ. கொழும்பு-08, எல்விட்டிகல மாவத்த, விக்டோரியா பிளேஸ், இல. 15/2 (பிரதான கட்டிடத்திற்கு முன்னால்) உள்ள குத்தகை விடப்பட்ட கட்டிடம்.

ஈ. கொழும்பு-08, எல்விட்டிகல மாவத்தை, விக்டோரியா பிளேஸ், இல. 04 (பிரதான கட்டிடத்திற்கு முன்னால்) உள்ள குத்தகைக்கு விடப்பட்ட கட்டிடம்.

உ. கொழும்பு-08, பொரளை, டட்லி சேனாநாயக்க மாவத்த, இல. 02, குத்தகைக்கு விடப்பட்ட கட்டிடம்.

2022.07.11 முதல் 2022.07.25 வரை இ. ரூ. 3500.00 + VAT ஓர் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துவதன் பேரில் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் இலங்கை கட்டளைகள் நிறுவனம், பணிப்பாளர் (நிர்வாகம்) இடமிருந்து விலைமனுப் படிவங்கள் மற்றும் ஏனைய விபரங்களை சேகரித்துக் கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2022.07.26 14.00 மணி வரை ஏற்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,
இலங்கை கட்டளைகள் நிறுவனம்,
இல. 17, விக்டோரியா பிளேஸ்,
எல்விட்டிகல மாவத்த,
கொழும்பு-08.
தொலைபேசி :- 011-2671567-72**

### மஹஜன சம்பத

திகதி 07.07.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

சீட்டிழுப்பு இலக்கம்: 4809
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 7,489,400.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,206,762.40
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 0 2 1 0 3 0

### தன நிதானய

சீட்டிழுப்பு இலக்கம் : 839
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,741,600.00
வெற்றி இலக்கினம் G வெற்றி இலக்கங்கள் 20 51 58 66
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 117,436,158.80

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் : 1287
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,415,840.00
வெற்றி இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 8 2 8 3 0 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,161,799.20

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 3051
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,438,320.00
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 11 36 44 68
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,911,198.40

### ராசி சுப பலன் Handahana

சீட்டிழுப்பு இலக்கம்: 118
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,377,680.00
இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 02 20 34 39
விசேட இலக்கினம் ரிஷபம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,899,590.20

### மெகா பவர்

கோடி 25+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1157
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,316,280.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 260,090,094.00
ஆங்கில எழுத்து K சுப்பர் நம்பர் 10 வெற்றி எண்கள் 12 29 30 46
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

## தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

### வர்த்தகம்

**201 வியாபார வாய்ப்புகள்**

கொழும்பு03, லிபர்ட்டி பிளாஸா கட்டிடத் தொகுதியில் தற்போது நடத்திச் செல்லப்படும் எனது வியாபாரத்திற்கு கடன் வழங்குவதற்கு ஒரு வருட காலத்திற்கு மட்டும் 100, 000/ = தருவதற்கு விரும்பும் யாராவது இருப்பின் மாதாந் தம் வருமானமாக 5000/ = (5%) பெற்றுக் கொள்ள முடியும். இது ஓர் உடன்பாட்டில் ஒப்பமிடப்படுவதன் மூலம் நடைபெறும். 0112575726, 0763235757. 040993

### வேலைவாய்ப்பு

**308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்**

யூடியூப் இற்கு சென்று யூனியன் அஸ்ஷ்ரன்ஸ் ஆட்சேர்ப்பு வீடியோவை பாருங்கள். அது போன்று வாழ்க்கையை வெல்லுவதற்கு தேவையாயின் அழையுங்கள். டேமியன் 0773719580. 041046

**309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி**

கணக்காய்வு/ கணக்காளர் பயிலுநர்கள் விண்ணப்பிக்கவும். முகாமையாளர் 891/2, பேங்ஷால் வீதி, கொழும்பு 11. தொலைபேசி / வட்ஸ்அப் 075 5030954. மின்னஞ்சல் :agapeacservices@gmail.com 038819

**318 வெற்றிடங்கள் டிரைவர்கள்**

30 வருட நம்பிக்கையைவென்றுள்ள எமது நெஸ்கோ நிறுவனத்திற்கு வயது 20 60 இரத்மலானை, களுத்துறை, பாணந்துறை, தெஹிவளை, நீர்கொழும்பு மற்றும் வென்னப்புவ பிரதேசங்களிலிருந்து கனரக மற்றும் இலகுரக வாகன சாரதிகள் தேவை. சம்பளம் ரூபா 40,000/ இற்கு மேல் அழைக்கவும். 0777263954, 0767639155 விண்ணப்பிக்க வேண்டிய முகவரி 29/5, 4ஆம் ஒழுங்கை, இரத்மலானை. 036744

**319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்**

வீட்டுப் பணிப்பெண் மற்றும் சுத்திகரிப்பாளர்கள் தேவை. வயது 30 இற்குக் கீழ் அனுபவம் தேவையில்லை. நல்ல சம்பளம் வேலை நிபந்தனைகளுடன் தொடர்பு 75/1, W.A. சில்வா மாவத்த, கொழும்பு 06 தொலைபேசி 2591116 9, 0777 452447, 075 5091379. 040927

**321 வெற்றிடங்கள் தோட்டத்துறை**

புத்தளம், ஆனமடுவ பயிர் நிலத்தில் வேலை செய்ய தொழிலாளர் குடும்பம்/ தொழிலாளர்கள் தேவை. 0765278154, 0707244218. 040943

**325 தொழில்துறை பொது**

வத்தளையில் அமைந்துள்ள எமது நிறுவனத்துக்கு லொரி (Lorry) பழுதுபார்த்து நிறப்பூச்சி (Painting) பூசுவதற்கு அனுபவமுள்ளவர்கள் உடனடியாக தேவை. மேலதிக விபரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு நேரில் வரவும். இல. 18, வெளியமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொ. பே. 076 6200300. 041082

வத்தளையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு அலுவலக உதவியாளர் (Office Peon) தேவை. (தேனீர் பரிமாறுதல் மற்றும் அலுவலக உதவி வேலைகளுக்கு சம்பளம் 40,000/ வயதெல்லை கிடையாது. நேரில் வரவும். இல. 18, வெளிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொலைபேசி 076 6200300. 041030



### சொந்த விடயம்

**528 தங்குமிட வசதிகள்**

கொழும்பு 6, வெள்ளவத்த, பெண்களுக்கான தளபாடங்களுடனான அறைகள் இணைந்த குளியலறைகள், ஓய்வு அறை, சமையலறை, குக்கர், வொஷர், குளிர்சாதனம். 75/1, W.A. சில்வா மாவத்தை, தொ.பே. 0112591169, 0755091379, 0777452447 037140



### காணி/தோட்டம்

**616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு**

மீகொட பொருளாதார நிலையத்திற்கு அருகில் சகல வசதிகளுடன் 6 பேர்ச் வீடு விற்பனைக்கு. சிங்களத்தில் அழையுங்கள். 55 லட்சம். 075 6497433, 076 5908934. 040612

கொள்ளுப்பிட்டி, முஹந்திரம் வீதி இரு மாடி வீடு விற்பனைக்கு உண்டு. (பிரதமர் இல்லத்திற்கு பின்புறமாக) 03 அறைகள், குளியலறை 02. உடன் தொடர்பு 0775262362. 041078

**617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு**

கந்தான நகர எல்லை. 30 பேர்ச் காணி. 3 படுக்கையறை வீடு மற்றும் அனெக்ஸ் உடன் குழாய் கிணறு/ குழாய் நீர். 0715 701015. 040813

### தினகரன் வாரமஞ்சரி திருமண சேவைகள்

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) - 000000377
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

### தினகரன் வாரமஞ்சரி திருமண சேவைகள்

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

## POSTGRADUATE INSTITUTE OF PALI AND BUDDHIST STUDIES
### University of Kelaniya

## POST OF DIRECTOR

Applications are invited from suitably qualified and experienced persons for the above post. The prospective applicant should possess postgraduate qualifications and administrative experience.

This is the premier Postgraduate Institute in Sri Lanka for Pali and Buddhist Studies. It provides opportunities for students, both local as well as foreign to pursue postgraduate courses ranging from Postgraduate Diploma to Doctor of Philosophy.

The Director is a full-time officer of the institute and he is the principal executive officer and the principal academic officer. He is also the accounting officer of the institute. He shall be responsible for providing academic leadership, formulating, conducting and introducing management policies and implementing the decisions of the Board of Management.

Preference will be given to reputed senior scholars in Buddhist Studies with experience in postgraduate student training and management.

**Tenure** - 03 years from the date of appointment, or the 65th birthday, whichever is earlier.

**Salary** - Those who are presently in the public service and drawing a salary exceeding the initial of the above salary scale will be placed at an equivalent salary point. If the applicant is a teacher defined in the University Act No 16 of 1978, he/she will be paid an academic allowance of 115% – 167% of the salary.

**Other benefits** -
* Assigned vehicle will be provided in terms of the approved University Grants Commission (UGC) regulations (Finance Circular Letter No.: 03/2022)
* Entertainment Allowance
* University Provident Fund (UPF) contribution.
* Employees' Trust Fund (ETF) contribution.
* Other UGC approved benefits

**Age** - Should be below 62 years

The applicant is required to submit, along with his Curriculum Vitae including the date of birth, a statement of vision for the development of the Institute and a brief account of what he proposes to achieve if appointed to the Post of Director. Where the present incumbent is an applicant he should in his report, highlight the contribution made to the development of the Institute concerned during his first term of office and plans for the future.

Prospective applicants presently employed in the University Grants Commission, Higher Educational Institutions and such other Institutes should forward their applications through the respective heads under confidential cover to reach the **Senior Assistant Registrar, Postgraduate Institute of Pali and Buddhist Studies, University of Kelaniya, 113 Dutugemunu Street, Kohuwala on or before** 09th August 2022.

The name of the post should be indicated on the top left-hand corner of the envelope.

**Applications that are incomplete or do not conform to any other requirements or received after the closing date will be rejected.**

**L.A. Sumith Jayasekara
Senior Assistant Registrar
Postgraduate Institute of Pali and Buddhist Studies, University of Kelaniya
113 Dutugemunu Street, Kohuwala
10th July 2022**

**Web - http://pgipbs.kln.ac.lk**

# தரணியின் தாரகை தந்தையே!

பதினெட்டு வயது இளைஞன் போல, அவர் உடற் கட்டமைப்பு தூரப்பார்வைக்குக் காட்சியளித்தாலும் அவரின் சவரம் செய்யாத முகமும் கரடுமுரடான கன்னங்களும் அவரது வயதை உலகத்திற்கு அறிவித்துவிடும். அவரின் புயத்தில் உழைப்பு மின்னுகின்றது. சிரித்த முகம், தும்பு முட்டாசு சாயல் தாடி, அன்றைய உலகத்தை இன்றைய உலகத்திற்கு புடம் போடும் புயங்கள், கறுப்பும் லேசாக வெள்ளையும் சேர்ந்த முடி அவரது சென்னி மீது இடையிடையே படர்ந்ததைப் போல படம் காட்டியது இத்தனையும் ஒன்றுசேர ஒரு சோபையைப் பெரியசாமியார'உலகத்திற்கு கொடுத்தார். இருந்தும் ஏதோவொரு ஏக்கம்? அவரில் பளிச்சிடுகிறது. நவீன வாகனங்கள் சுற்றுவட்ட வீதியைக் கடக்க தன்னியக்க சமிக்ஞைக்காக காத்து நின்றன.

பெரியசாமியார் பல வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாண நகருக்கு வந்துள்ளார். எழுபது வயதைத் தாண்டிவிட்டதால், இருபது கிலோமீற்றருக்குள்ளேயே மிதி வண்டியில் பயணத்தை மேற்கொள்வதற்குச் சரீரம் இடம் கொடுத்தது.

சிறிய வயதில் நூறு, இருநூறு கிலோமீற்றர் தூரம் மிதிவண்டி மிதித்து பயணம் மேற்கொண்ட பாதங்கள் இப்போது தூரப்பயணம் என்றதும் பேருந்தை நாடுகின்றன.

பெரியசாமியார் யாழ் நகரில் வந்து இறங்கியதும் மாடமாளிகைகளைப் பார்த்து அவரின் கண்கள் திகைத்தன. மூன்று மகன்மாரை உலகிற்கு கொடுத்த இவர் அந்திம காலத்தில் ராஜாவாக வாழ வேண்டியவர் இருந்தும் உழைப்பின் மீதும் மிதி வண்டியின் மீதும் கொண்ட வாஞ்சை அவரை ஆரோக்கியமானவராக இந்த பூமியில் உலாவர வைத்துள்ளது.

சுற்று வட்ட வீதியில் சமிக்ஞைக்காக காத்து நின்ற வாகனங்கள் சமிக்ஞை கிடைத்ததும் நீh; குழாய்களிலிருந்து வழியும் நீh; போல இரண்டு பக்க வீதிகளிலும் பறந்தன. இதைப் பாh;த்தஇ பொறயசாமியாருக்கு அந்தக் கால ஞாபகங்கள் வானத்தில் மேக கூட்டத்திடையே ஓடும் மதி போல நிழலாடுகின்றன.

02

ஐம்பது வருடங்களுக்கு முன் திருமண வாழ்வில் இணைந்த பெரியசாமியார் முதல் தடவையாக அவருடைய தந்தையின் சொந்த தோட்ட உழைப்பில் வாங்கிய மிதி வண்டியில் தனது அன்பு மனைவியை அழைத்துக் கொண்டு பொங்கல் விழாவுக்குப் புறப்பட ஆயித்தமானார்.

“தம்பி தங்கராசு இந்த சைக்கிள் உன்ர அப்பா உனக்கு பதினாறு வயசில் வாங்கித் தந்த சொத்து. மருமகள முதல் முதல் ஏத்திக் கொண்டு போகப் போறாய். என்னை ஒரு தடவை ஆஸ்பத்திரிக்கு ஏற்றிக்கொண்டுபோய் விழுத்தி இரண்டு பேரும் பத்து நாள் பத்து போட்டுக் கொண்டு திரிஞ்சது தெரியுந்தானே” என பெரியசாமியாருக்கு அவரின் தாயார் அறிவுரைப் புகட்டினார்.

“சும்மா போ அம்மா என்ர மானத்தை வாங்காத அது அப்ப சின்ன வயசில” என்றவாறு தனது புது மனைவியைப் பார்த்துஇ சிறிது வெட்கம் கலந்த நளினத்துடன் புன்னகைத்து, மிதிவண்டியில் முன்பக்க ‘பாரில்’ முதற் தடவையாக தனது குடும்ப குத்துவிளக்கை சுடர் அணையா வண்ணம் ஏற்றினார்.

“அம்மா அப்படிதான் சும்மா சின்ன வயசில் நடந்ததைப் பற்றியே தான் கதைக்கும்” என்று தனது மிதி வண்டியின் இருக்கையில் அமர்ந்து வலக்கையால் மிதிவண்டியின் வலக்கையைப் பிடித்தவாறு இடக்காலை நிலத்தில் ஊன்றி வலக்காலை மிதிவண்டியின் வலப்பக்க மிதியின் மேல் வைத்து, திலகத்தின் காதுகளுக்கு மட்டும் கூறியது, அருகில் இவர்களின் விளையாட்டுக்களைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்த பெரியசாமியாரின் தாயாரின் காதுகளுக்கு எட்டிவிட்டது.

“ஏய் நீ எனக்கு அப்பவும் சின்னப்பிள்ளைத் தான் இப்பவும் சின்னப்பிள்ளைத் தான் இப்ப கூட நீ ஒன்றை மறந்து போய் வெளிக்கிட்டிட்டாய். காத்து ‘பம்மை’ இந்தா கொண்டு வந்திருக்கன். சீட்டுக்குக் கீழ கட்டிக் கொண்டு போ இஞ்சயிருந்து பத்து கட்ட தூரம் போற, வாற இடத்தில் காத்து கீத்து போச்செண்டா அதோ கெதி தான் என்ன? என்ன புதிய பழக்கம் ஒவ்வொரு நாளும் கொண்டுதானே போவாய் இண்டைக்கு மட்டும் புதுசா” என்று கத்திக் கொண்டு கைகளில் ‘காற்று பம்பி’யூடன் ஓடிவந்தாள்.

“என்ன அம்மா, எங்கள போகவிடமாட்டாயா?. மனிசியையும் ஏத்திக் கொண்டு ‘பம்மை’ கட்டிக்கிட்டுப் போனா பாக்கிற ஆக்கள் என்ன நினைப்பாங்க? இண்டைக்கு வேணாம் கொண்டே வையுங்கோ அம்மா”

“இல்லை காத்து போனா உனக்குப் பரவாயில்லை அந்த பிள்ளை பாவம்”

“இரண்டு ‘டய’ரும் ‘டியூப்பும் புதுசா போட்டதுதானே”

தாயின் முகம், மகனின் பொறுப்பற்ற வார்த்தைகளைக் கேட்டதும் சற்று வாடியது.

“சரி சரி... போயிட்டு வா. மருமகள் ஏதும் நினைக்க போகுது” என்றவாறு திருப்தியற்ற மனத்துடன் மெதுவாக வீட்டின் பக்கம் திரும்பினாள்.

பொங்கல் விழா அதிகாலையில் படையலுடன் சூரியனுக்கு நன்றி தெரிவித்து, வெகு கோலாகலமாக ஆரம்பித்து, விளையாட்டுக்கள், பாட்டு,நடனம், நாடகம், சங்கீத கதிரை, கூத்து, இசைநாடகம் என பல நிகழ்ச்சிகளுடன் இனிதே இரவு ஒன்பது மணிக்கு நிறைவு பெற்றது. சனக் கூட்டத்திற்குள் களைத்துப் போன புதுத் தம்பதிகள் மிதிவண்டியில் வீடு நோக்கிப் பயணமாகினர் கும்மிருட்டு மிதிவண்டி ‘டைனமோ’வின் மங்கிய ஒளியும் முகிற் கூட்டத்தை விட்டு இடையிடையே வெளியே வரும் இலேசான நிலவொளியூம் அவர்களுக்குப் பாதையைக் காட்டின.

வீட்டுக்குச் செல்வதற்கு இன்னும் அரைவாசிக்கு மேற்பட்ட தூரம் இருக்கும்போது மிதிவண்டியின் உயரம் திடீரென்று முன் பக்கம் சற்று குறைந்தது. மிதிவண்டி அந்த இடத்தை விட்டு அசையவில்லை. மிதிவண்டி நின்றது. பத்து நிமிடம் புதுத் தம்பதிகள் நின்றிருப்பார்கள்.

ஆயிரம் மீற்றர் தூரத்தில் தீப்பந்தங்களின் ஒளிக்கு மத்தியில் மரண ஓலங்களும் மக்களின் சப்தங்களும் மாங்குள கிராமத்தின் காதுகளையே கிழிக்கின்றன. சனக்கூட்டத்துக்குள் புகுந்த பெரியசாமியாரின் தாயார் மருமகளையும் மகனையும் அங்குமிங்கும் தேடி அலையவிடுகின்றாள். சனக்கூட்டத்தின் மத்தியில் இலைகுலைகளினாலும் வெள்ளைத் துணியாலும் மூடப்பட்ட இரண்டு பிணங்கள் கிடந்தன. அருகில் புதிய மிதிவண்டியும் பின் சக்கரம் சுற்றியவாறு கிடந்தது. இவற்றைக் கண்ட கெங்கைக்கு வார்த்தைகள் வெளிவரவில்லை. தூரத்தே இருந்தே மிதிவண்டியைக் கண்ட அவள் அது அவர்களுடையது அல்ல என்பதை உறுதி செய்து கொண்டாள். இருந்தும் மூடிக்கிடக்கும் பிணங்களைத் திறந்து பார்க்கும் மட்டும் அவளது இதயம் வேகமாகத் துடித்தது. திறந்து பார்த்தாள் சந்தேககம் நீங்கியது. அவை அவர்களது அல்ல. அந்த பிணங்களின் மேல் பறித்து போடப்பட்ட இலைகுலைகள் மனிதரால் போடப்பட்டவை அல்ல. அந்த வனத்தில் மதம் பிடித்துத் திரியும் யானையால் போடப்பட்டவை.

வலக்கையில் தீப்பந்தத்துடன் வெளியை நோக்கி ஓடுகின்றாள். கூப்பிடு தூரத்தில் இரண்டு ஜீவன்கள் உரையாடிக்கொண்டு நின்றன. அவர்கள்தானோ என்று கெங்கையின் மனம் ஊகித்தது. அருகே சென்று உறுதிப்படுத்திக் கொண்டது. அது அவர்கள் தான் என்று. இரவு நேரத்திலும் வியர்வை சிந்த ஓடிவந்த, கெங்கை அவர்களை உற்று நோக்கி மகன், மருமகள் தான் என்பதை சிந்தையில் ஏற்றிக் கொண்டாள்.

“அம்மா நீ சொன்ன மாதிரி ‘பம்மை’ கொண்டுவந்திருக்கலாம்’ என்று பெரியசாமியாரின் இதழ்கள் அசைந்தன.

“கொண்டு வராதது நல்லது”

“என்ன அம்மா? வெளிக்கிடக்கே அப்படி சொன்னீங்க இப்ப இப்படி சொல்றீங்க.”

“அப்ப அப்படிதான், இப்ப இப்படித்தான் சொல்லுவன்”

தாய், மகனின் அன்புச் சண்டையைப் பார்த்து, திலகத்தின் உதடுகள் மௌன புன்னகை பூத்தது. கெங்கை தனது இடக் கையிலிருந்த காற்று ‘பம்மை’ மகனிடம் கொடுத்து,

“காத்தை கெதியா அடி போவம் யானை இரண்டு பேருக்கு கொன்று போட்டிருச்சி. பாவம் திலகத்தற்கு இது ஒன்றும் தெரியாது.” குசுகுசுவென மகனின் காதுகளில் பொழிந்தாள்.

மகன் விடயத்தை புரிந்து கொண்டு “சரி அம்மா போவம், பாத்தியா அம்மா ‘பம்மை’ கொண்டு வராததினால் தப்பினம்” என்றவாறு பாய்ந்து பாய்ந்து மிதிவண்டியின் முன் சக்கரத்திற்குக் காற்று நிரப்பினார். மூவரையும் சுமந்தவாறு மிதிவண்டி வீடு நோக்கி விரைந்தது.

பெரியசாமியாரின் தாயாரும் தந்தையாரும் இறந்து பத்து வருடங்களாகிவிட்டன. மூன்று பிள்ளைகளும் வளர்ந்து பட்டங்களும் பெற்றனர். மூத்தவன் ஆசிரியராகவும் இடைப்பட்டவன் முகாமைத்துவ உதவியாளராகவும் கடைக்குட்டி தனியார்துறையில் ஆசிரியராகவும் பணியாற்றினர்.

பெரியசாமியார் பிள்ளைகளை ஆளாக்கிய சோகக் கதைகளை இவரின் மிதிவண்டி விடியவிடியக் கூறும். வன்னிப்பிராந்தியம் உள்நாட்டு யுத்தகாலத்தில் எதிர் கொண்ட சவால்கள் ஏராளம். அதற்குள் மிதிவண்டி சோதனைகள் மத்தியில் செய்த சாதனைகள் அதிகம்.

யுத்த காலத்தில்

பொருளாதார தடையின் உச்சக்கட்டமாக மிதிவண்டிகளின் ‘டியூப்பு’கள் தடைசெய்யப்பட்டன. இவ்வேளை தனது அடுத்தடுத்து பிறந்த ஆசைக் குழந்தைகளையும் வெளியுலகம் அறியாத அன்பு மனைவியையும் காப்பாற்ற பெரியசாமியார் மிதிவண்டியுடன் செய்த போராட்டம் ஏராளம். உளுந்து வியாபாரம், துணி வியாபாரம், பெற்றோல் வியாபாரம், ‘ஐஸ்’பழ வியாபாரம், மீன் வியாபாரம், தேங்காய் வியாபாரம், பழ வியாபாரம், மரக்கறி வியாபாரம், எண்ணெய் வியாபாரம் என பல தொழில்களை மிதிவண்டியை மிதித்து செய்து வந்தார். மிதிவண்டியில் ‘டியூப்பு’க்குப் பதிலாக வைக்கோல் அடைந்து, தனது வலு முழுவதையும் கொடுத்து, மிதிப்பார். அப்போது யாழ்ப்பாணத்துப் பிரதான வீதி மூடப்பட்டு, ஊரியான், கொம்படி பாதைகளே வன்னியையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும். பெரியசாமியார் பின் பக்கத்தில் இருநூறு கிலோ உளுந்தையும் முன் ‘பாரில் ஐம்பது கிலோவையும் காவிக் கொண்டு லாவகமாக யாழ்ப்பாணம் சென்று வருவார். ஒரு கிலோவிற்கு இரண்டு ரூபாய் வீதம் ஐந்நூறு ரூபாய் இலாபம் உழைத்து தரும் பெரியசாமியாரின் மிதியும் மிதிவண்டியும். எப்படியும் முதல் நாள் காலை ஐந்து மணிக்கு வியாபார நண்பர்களுடன் புறப்பட்டால், அடுத்த நாள் அதிகாலையே வீடு திரும்புவார்கள். அவர்கள் உழைக்கும் ஐந்நூறு ரூபாய் பணம் ஆறு பேரைக்கொண்ட குடும்பத்திற்கு இரண்டு கிழமைகளுக்குப் போதும்.

ஒரு சமயம் பெரியசாமியார் கடைக்குட்டி மகன் முகுந்தனைப் பார்த்து “தம்பி நீ வளந்திட்டாய் உன்ர அண்ணன்மார்களுடைய மனைவிமார்களும் யாழ்ப்பாணத்தில் அப்படியா போச்சு. உனக்கும் பட்டம் முடிச்சு இன்னும் அரச வேல கிடைக்கவில்லை. எதற்கும் அவசர படாமல் இந்த மிதிவண்டியில் போய் வா. கூட்டாளிமார்களுடன் சேர்ந்து கண்ட கண்ட வாகனங்களில் சுற்றித்திரியாதையப்பா விரலுக்கு ஏற்றதுதான் வீக்கம் ஒரு மனிதனுக்குத் தேவை” என்று தீர்க்கதரிசிபோல அறிவுரை கூறிக் கொண்டிருக்கும் போது,

“இந்த சைக்கிள்ள எத்தனை நாளைக்குத்தான் போய் வாரது. மூத்த அண்ணாவுக்கு பைத்தியம் மோட்டார் சைக்கிள் வச்சிக் கொண்டே வேணுமென்று பத்து பதினைந்து கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பள்ளிக் கூடத்திற்கு வேர்க்க வேர்க்க சைக்கிள்ள போவான். அவனை அந்த ஊரே பார்த்து சிரிக்குது எனக்கு வெட்கமா? இருக்குது.”

“அவனும் இல்லாட்டி இப்ப நீங்க றெண்டு பேரும் பாட்டதாரியா ஆகியிருப்பிங்களா? மற்றவனுக்கு கொஞ்சம் நன்றியாவது இருக்கு. உனக்கு ஒண்ணும் இல்லை. பாவம் அவன் மிதிவண்டியில் மிதித்து கல்வியைக் கொடுத்தான். ஓ.எல். படிக்கேக்க என்னோட மிதிவண்டியில் ஐம்பது கிலோ உளுந்து மூட்டையைக் கட்டிக்கொண்டு வருவான். அவன போய்” என்றவாறு பெரியசாமியார் தனது கைகளில் இருந்த மண்வெட்டியால் நிலத்தைக் கொத்தினார்.

நண்பனின் தொலைபேசி அழைப்பு வந்ததும் முகுந்தன் அவசர அசரமாக கதைத்துவிட்டு

“அப்பா எனக்கு ‘ப்ரெண்ஸ்’ ‘ஆட்டோ’ வாங்க காசு அனுப்புறானாம் ‘வேன்’ல ‘எயாபோட்டு’க்கு ஒருக்க போயிட்டு வாறன். உங்கட சைக்கிளைக் கொண்டு போகட்டா? பக்கத்து வீடு செல்வராசா வீட்டில் போட்டிட்டுப் போறன் எடுங்க. அங்கால ‘வேன்’ வரும் நண்பர்களுடன் போறன்.” என்றான்

“சரி என்னவாது செய் முப்பத்திரெண்டு வயசாச்சி உன்ன அடிச்சா தடுக்க முடியும்? தேவையில்லாமல் ‘வேன்’ இல் திரியிறாய் இது கூடாது என்ன செய்யிறது? பழச மறந்த ஒரு மனிதனும் வாழ்ந்ததா சரித்திரம் இல்லை. என்ர சைக்கிளை மழை, வெயில் படாமல் கொட்டிலுக்குள் விட்டுட்டுப் போ...”

மகனின் பிடிவாதத்தைக் கண்ட தாய், வீட்டுக்குள் இருந்து ஓடி வந்தாள்.

“வேண்டாம் தம்பி போகாத போகாத என்ர மனம் ஏதோ சொல்லுது. அப்பாவோடு சேர்ந்து வேலையைச் செய். அப்பா சொன்ன மாதிரி சைக்கிள்ல போய் அண்ணாண்ட வீட்ட பாத்திட்டுவா நாளைக்கு கூரை போடணும் போகாத தம்பி” என்று காலில் விழா குறையாக கேட்டும் அவன் கேட்கவில்லை.

அன்று சென்றவன் தான், இன்று வரை அவனது பிணத்தைத் தவிர வீடு திரும்பவேயில்லை. அன்று முதல் தாயின் முகத்தில் துயரம் சூல் கொண்டது. தந்தையின் முகத்தில் தாடி நிரந்திரமானது. முத்தவன் மனத்தில் தத்துவங்கள் பிறந்தன@ இடையவன் பிடிப்பற்று வாழ்ந்தான். இறுதியாக அவனது பாதங்கள் பட்ட மிதிவண்டி ‘தன்னை உருட்டி கொண்டு ஏன்? என்னை இந்த கொட்டகைக்குள் தள்ளி விட்டாய்’ என கேட்க ஏங்கி நின்றது. மிதிவண்டி பெரியசாமியாரின் பாதங்கள் மீண்டும் பட்ட போது புத்துயிர் பெற்றாலும் அவரின் முகத்தைப் பார்த்து இரக்கப்பட்டு மௌனம் காத்தது.

03

ஓட்டு வேட்டியின் ‘பொக்கற்றில்’ இருந்த கைத்தொலைப் பேசி “டிரிங்...டிரிங்...டிரிங்...” என்று அலறுகின்றது. அந்த நாள் ஞாபகங்களிலிருந்து விடுபட்டு, மூத்தமகனின் கைத்தொலைப் பேசி அழைப்புக்குப் பதில் அளிக்கின்றார்.

“ஹலோ... ஹலோ... ஒன்றும் கதைக்கிறது விளங்கல்ல நேசா”

“எங்க நிக்கிறீங்க அப்பா ‘கெட்’டுக்கு முன்னாலே வாறேன்”

பொறயசாமியாருக்கு எதிரே நவீன வாகனங்களுக்கு மத்தியில் ஒரு மிதிவண்டியில் தனது மகன் வருவதை அடையாளம் கண்டுகொண்டார். மூத்தவனைக் கண்டதும் அவருடைய உள்ளம் பூரிப்படைந்தது.

சுட்டிக்காரனை, கடைக்குட்டியின் இறப்பு வீட்டில் சந்தித்ததற்கு இப்போதே சந்திக்கிறார். “குட்டி முகுந்தா வா...வா...” என்று தனது பேரனை ஆசையோடு அழைத்தார். அவனும் எந்த மறுப்பும் தெரிவிக்காமல் காயப்பட்ட கையைத் தூக்கிய படி, குரங்குக் குட்டிப் போல பாய்ந்து சென்றான். தாத்தாவின் முதத்தில் அடர்ந்த பருத்திக்காடாக இருந்த மீசையையும் தாடியையும் ஒரு கரத்தினால், இழுக்க இருவரும் கட்டித்தழுவி விளையாடினர். (OO பக்கம் பார்க்க)



புயல் பெ.ஸ்ரீகந்தநேசன், ...
மாங்குளம்.

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 31

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 02 | 03 | | | 04 | |
| | | 05 | | | | 06 | 07 |
| | | | | 08 | 09 | | |
| 10 | 11 | | 12 | | 13 | | |
| | 14 | | | 15 | | | |
| 16 | | | | 17 | | 18 | |
| 19 | | | 20 | | | 21 | 22 |
| | | | 23 | | | 24 | |

திரு/திருமதி.செல்வி ..............................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..............................

..............................

..............................

.............................. ..............................

திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 31
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 31

**இடமிருந்து வலம்**

*(01) நாட்டின் எரிபொருள் தட்டுப்பாடு இதனையும் குறைத்துவிட்டது.*
*(05) ஏணை.*
*(06) சுவை.*
*(08) சூரியன்*
*(10) இந்தியா தமிழகத்திலுள்ள ஒரு மாவட்டம். (குழம்பியுள்ளது)*
*(13) காடு. (குழம்பியுள்ளது)*
*(14) உண்மை. (குழம்பியுள்ளது)*
*(16) இதுவும் ஒரு நிறம்.*
*(17) உதவி அல்லது நன்மையை ஏற்றுக்கொண்டதற்கு செலுத்தும் மரியாதை.*
*(19) மகாபாரதக் கதையில் வரும் ஒரு பாத்திரம்.*
*(21) உயிரிழப்பு. (திரும்பியுள்ளது)*
*(23) ஆண்களின் முகத்தில் காணலாம்.*
*(24) காற்றில் இயக்கத்தால் கரை நோக்கிவரும் கடல் நீர்.*

**மேலிருந்து கீழ்**

*(01) பிறருக்கு தொல்லை தருபவன்.*
*(02) மகிழ்ச்சி வெளிப்பாடு. (குதூகலம்)*
*(03) காற்று.*
*(04) பூமியின் வடக்கு அல்லது தெற்கு முனை.*
*(07) பருவ வயதிற்கு குறைந்த ஆண் பிள்ளை. (குழம்பியுள்ளது)*
*(09) மகன்.*
*(11) மறைந்தவர்.*
*(12) பொறுமையாக இருந்தாலும் தோழியல்லவா?*
*(15) ஆறு மேல் நோக்கிப் பாய்கிறது.*
*(16) உத்தேசக் கணிப்பு.*
*(18) புலமை, விஷயஞானம். (குழம்பியுள்ளது)*
*(20) நீர்வாழ் உயிரினம். (தலைகீழ்)*
*(22) போக்குவரத்துக்குரிய பாதை.*

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 30

### விடைகள்

**இடமிருந்து வலம்**

| | | |
|---|---|---|
| 01. விசித்திரம் | 06. கைதி | 07. வினை |
| 08. தீது | 10. துவரை | 11. திறை |
| 13. வாட்டம் | 14. தூறல் | 15. ரவுடி |
| 16. மான் | 17. கடம் | 19. பாக்கு |
| 20. தோணி | 22. விடுதி | 23. மல்லிகை |

**மேலிருந்து கீழ்**

| | | |
|---|---|---|
| 01. விதிமுறை | 02. சிகை | 03. தினை |
| 04. ரவி | 05. மதுரை | 08. தீவட்டி |
| 10. துவாரம் | 12. திறன் | 13. தூக்கம் |
| 16. மாணவி | 18. குடல் | 20. தோகை |
| 19. பாதி | 21. மணி | |

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 29

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**சி. லவனார்த்தன்,**
*241/15,*
*ரொக்ஹில்,*
*பதுளை.*

**இரண்டாம் பரிசு**
**எஸ்.ஏ.எம். லெப்பை,**
*இல. 11/26A,*
*விதுஹல்பட்டுமக,*
*பதுளை*

**மூன்றாம் பரிசு**
**மல்லிகாதேவி பத்மநாதன்,**
*டெமேரியா குறுப்,*
*முதலாம் பிரிவு,*
*பசறை.*

### பாராட்டு பெறுவோர்

**1. பி. பேரின்பராஜா,**
*இல. 44, முதலியார் வீதி,*
*மட்டக்களப்பு.*

**2. கே. சித்திரவேலாயுதன்,**
*இல. 57, ஹஸ்கிசன் வீதி,*
*திருகோணமலை.*

**3. எஸ். விஸாஷினி,**
*91/1, பிரதான வீதி,*
*கொழும்பு 11.*

**4. இல்றூஸ் தாஸிம்,**
*இல. 23ஏ, இப்றாஹிம் வீதி,*
*தொட்டவத்தை, பாணந்துறை.*

**5. எம்.ஏ. நஜிமுதீன்,**
*155, அம்பாறை வீதி,*
*அக்கரைப்பற்று 19.*

**6. ஏ.ஆர்.எம். அபூபக்கர்,**
*411, அளுத்வீதிய,*
*வெலிகம.*

**7. கே. புண்ணியநேசன்,**
*151, சாரதா வீதி,*
*காரைதீவு 05 (கி.மா)*

**8. ஏ.எல்.ஏ. அஸீஸ்,**
*17/A, சிறிமல் ஒழுங்கை,*
*தெஹிவளை.*

★ ★ ★



## ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 13

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்

# மலையகப் பிரதேசத்தை தமிழ் நாவலுக்குக் களமாக்கிய முதல்வர் நந்தி

நந்தி என்ற புனைபெயர் கொண்ட எழுத்தாளர், பேராசிரியர், மருத்துவர் எஸ். சிஞானசுந்தரம் பற்றி, கலாநிதி நா. சுப்பிரமணியன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

'ஈழத்தின் நவீன தமிழ் இலக்கியத்துறையில் அடியெடுத்து வைத்துக் குறிப்பிடத்தக்க படைப்புகளைத் தந்த முதலாவது மருத்துவ அறிவியலாளர் என்ற வகையிலும் மலையகப் பிரதேசத்தினைத் தமிழ் நாவலுக்குக் களமாக்கிய முதல்வர் என்ற வகையிலும் நந்திக்கு ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் நிரந்தர இடமுண்டு. (நந்தி மணிவிழா மலர் பக்:138)

நந்தி தமிழ்க் கலை இலக்கியத் துறைகளில் நாற்பது ஆண்டுகளுக்குமேல் தொடர்பு கொண்டவர். புனைகதை, நாடகம், மருத்துவ அறிவியல் துறைகளில் எழுத்தாளராகத் திகழ்ந்த இவர், நடிப்பு, நாடகத் தயாரிப்பு ஆகிய துறைகளிலும் அவ்வப்போது கவனஞ்செலுத்தி வந்துள்ளார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளைத் தலைவராகத் திகழ்ந்து எழுத்தாளர், கலைஞர், திறனாய்வாளர் ஆகிய பல நிலையினரையும் செயலூக்கத்திற்குத் தூண்டிநின்றவர்.

நல்லூர் வி. செல்லத்துரைக்கும் செல்லம்மாவுக்கும் 30.03.1928இல் பிறந்த நந்தியினது இயற்பெயர் சிவஞானசுந்தரம். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வைத்தியப் படிப்பை நிறைவு செய்து மேற்படிப்பினை லண்டன் பல்கலைக்கழத்தில் பெற்றவர். இவருக்கு நந்தி என்ற புனைப்பெயரை வழங்கி ஆசீர்வதித்தவர் தமிழக மூதறிஞரான ராஜாஜி.

இவரது முதலாவது சிறுகதை சஞ்சலமும் சந்தோஷமும் 1947இல் வீரகேசரியில் வெளியானது. 1960இல் மலையகத்தில் நந்தி சுகாதார அதிகாரியாக இருந்த காலத்தில் மலையகத்தைப் பின்புலமாகக் கொண்ட மலைக்கொழுந்து என்ற நாவலை எழுதினார். இவரது முதல் நாவலான மலைக்கொழுந்து 1962இல் தினகரன் இதழிலே தொடராக வெளிவந்து பின்னர் 1964இல் நூல்வடிவம் பெற்றது. மலையத் தோட்டத் தொழிலாளர் சமூகத்தின் பிரச்சினைகளை சித்தரித்த முதலாவது நாவல் என்ற பெருமை இதற்குரியது. தொழிற்சங்கங்களுக்கிடையே நிலவிய போட்டியும் தனிமனித முரண்பாடுகளும் தொழிலாளர் வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கின்றன என்பது இந்நாவல் மூலம் எடுத்துக் காட்டப்படுகிறது.

'தொழிலாளியான மலையப்பன் முத்து வீராயியைக் காதலிக்கிறான். தோட்டத்தின் தொழிற்சங்கங்களுக்கு இடையேயிருந்த போட்டி இருவரும் இணைவதற்குத் தடையாகிறது. தோட்டத்து டிஸ்பென்ஸர் பதி தீவினை சூழ்வோனாகி முத்துவீராயியின் தந்தைக்கும் மலையப்பனுக்கு மிடையில் பகை மூட்டுகிறான்.

சின்னத்துரையான மகராஜன் முத்து வீராயியை மணம் புரியத் திட்மிடுகிறான். மலையப்பனை விழ்த்துவதற்காக திட்டமிட்ட கலகம் அவனது தங்கை போன்ற வள்ளியை உயிர்ப்பலி கொள்கிறது. மகராஜனை மணக்க மறுத்து முத்துவீராயி மலையிலிருந்து வீழ்ந்து உயிர் துறக்கிறாள்.

இக்கதையம்சத்திற்குத் துணையாக மலையக மக்களின் வாழ்க்கைமுறை பற்றிய விவரணங்கள் அமைகின்றன. மருத்துவ நிபுணரான ஆசிரியர் தமது தொழின்முறை அனுபவங்களை நாவலில் புகுத்தியுள்ளார். மலையகத் தொழிலாளரது வாழ்க்கையை அனுதாபத்துடன் நோக்கும் யாழ்ப்பாணத்து நடுத்தர வர்க்கத்தர் ஒருவரின் கண்ணோட்டத்தில் எழுதப்பட்டது இந்நாவல்' (ஈழத்து தமிழ்நாவல் இலக்கியம் என்ற நூலில் நா. சுப்பிரமணியன்)

தனது 13 வயதிலே எழுதத் தொடங்கி தமிழிலும் ஆங்கிலத்திலும் மிக ஆர்வமுள்ள எழுத்தாளராக விளங்கியவர் நந்தி.

இவரது நாவல்களான மலைக்கொழுந்து, தங்கச்சியம்மா, நம்பிக்கைகள் என்பனவும் சிறுகதைத் தொகுதிகளான ஊர்நம்புமா?, கண்களுக்கு அப்பால், நந்தியின் கதைகள், தரிசனம், நந்தியின் சிறந்த சிறுகதைகள் ஆகியனவும் குரங்குகள் என்ற நாடகப் பிரதியும் படைப்பிலக்கிய நூல்களாக வெளிவந்துள்ளன.

இவர் ஆங்கிலத்தில் எழுதிய கூடுதலான புத்தகங்கள் மருத்துவத்துடன் தொடர்புடையவை. இவர் எழுதிய 'ஆராய்ச்சிகள்' என்ற நூல் இரு பகுதிகளைக் கொண்டது. இந்நூல் இலங்கையின் எல்லா மருத்துவக் கல்லூரிகளிலும் உபயோகிக்கப்படுவதுடன், ஆராய்ச்சிக்கல்வி பயிலும் மாணவர்களாலும் பாவிக்கப்படுகின்றது. அத்துடன் மட்டுமல்லாது மருத்துவம் சம்பந்தமாகவும் மக்களின் உடல்நலம் சம்பந்தமாகவும் 50இற்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டார். 16 நூல்களை தமிழிலும், 4 நூல்களை பாமர மக்களிற்கான மருத்துவ நூல்களாகவும், 2 நூல்களை சிறுவர்களுக்காகவும், மேலும் 2 நூல்களை ஆன்மீகத்திற்குரிய நூல்களாகவும், ஆசிரியர்களுக்காக மனிதனின் உயர்வு என்ற ஒரு சத்தியசாயி கல்வி நூலையும் வெளியிட்டுள்ளார்.

நந்தி எழுதிய சுகாதார அறிவியல் நூல்கள் பற்றி டாக்டர் எம். கே. முருகானந்தன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

குழந்தை வளர்ப்பு பற்றி அவர் எழுதிய கட்டுரைத் தொடர்கள் மிகவும் பிரபல்யமானவை. இதை அவர் வெறும் கட்டுரைகளாக எழுதவில்லை. ஒரு டொக்டர் அண்ணன் தனது அன்புத் தங்கைக்கு எழுதிய பாசமுள்ள கடித வடிவிலே இதை அமைத்திருந்தார்.

குழந்தை வளர்ப்பு பற்றிய விடயங்களை மக்களிடையே பரப்ப இந்த இலக்கிய வடிவத்தை அவர் எடுத்தாண்ட செயல் மிகவும் மதிநுட்பம் வாய்ந்தது. ஏனெனில் கட்டுரையாக எழுதினால் அது வெறும் விபரக் கொத்தாக கவர்ச்சி அற்றுவிடும்.

ஆனால் கடிதமாக எழுதும்போது அது ஒருவருடன் மற்றவர் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்கின்ற விதத்தில் எழுதப்படுவதால் ஆசிரியருக்கும் வாசகனுக்குமிடையே ஒரு அந்நியோன்னிய உணர்வை ஏற்படுத்தி வாசகனை அதனோடு நெருங்கிவரச் செய்து சொல்லப்படும் விஷயங்களையும இலகுவாகப் பரிந்துகொள்ளச் செய்கிறது. சுகாதாரக்கல்விக்கு இலக்கிய வடிவம் கொடுத்து அதைக் கவர்ச்சிகரமாக்கினர். எனவே அவரை சுகாதார இலக்கியத்தின் முன்னோடி என்று சொல்லாம்'

அன்புள்ள நந்தினி, நந்தினி உன்பிள்ளை, உங்களைப்பற்றி ஆகியன இவ்வகை சார்ந்த நந்தி எழுதிய சுகாதார இலக்கிய நூல்களிற் சிலவாகும்.

நந்தி அரசாங்க சுகாதார சேவையின் பல்வேறு பிரிவுகளில் பல்வேறு மட்டங்களில் 1966ஆம் ஆண்டுவரை கடமையாற்றினார். 1967ஆம் ஆண்டு ஆவணி மாதம் பேராதனை பல்கலைக்கழகத்தின் சமூகநல மருத்துவ பிரிவில் இணைந்து துணைப் பேராசிரியராக உயர்ந்தார்.

அத்துடன் மருத்துவ விஞ்ஞானப்பிரிவின் தலைமை நிர்வாகஸ்தராகவும் மேற்படிப் பிற்கான சமூகநல மருத்துவப் பீடத்தின் தலைமை அதிகாரியாகவும் விளங்கினார். 1978ஆம் ஆண்டு யாழ். மருத்துவப் பீடம் ஆரம்பிக்கப்பட்ட பொழுது சமூகநல மருத்துவ பீடத்தின் முதல் பேராசிரியராக பதவியேற்றது முதல் தனது கடைசி மூச்சுவரை அப்பதவியிலேயே பணியாற்றினார். 1984ஆம் ஆண்டிலிருந்து 1988ஆம் ஆண்டுவரை மருத்துவ பீடத்தின் தலைவராக திகழ்ந்ததுடன் 1979ஆம் ஆண்டிலிருந்து 1993ஆம் ஆண்டுவரை யாழ்ப் பல்கலைக்கழகத்தின் ஆலோசனைச் சபையின் அங்கத்தினராகவும் கடமையாற்றினார்.






உலக சுகாதார நிறுவனத்திற்காக 1985ஆம் ஆண்டிலிருந்து 1999ஆம் ஆண்டுவரை மலேசியா, பங்களாதேஷ், மொங்கோலியா, இந்தியா, மியன்மார், சிம்பாப்வே, வட கொரியா ஆகிய நாடுகளில் சுகாதார ஆராய்ச்சிக்கூடங்களில் சர்வதேச ஆலோசகராகப் பணிபுரிந்தார்.

நாடகத்துறையில் ஈடுபாடு கொண்டவராக விளங்கிய நந்தி மாணவப் பருவத்திலேயே ஷேக்ஸ்பியர் ஆங்கில நாடகங்களில் பல முக்கிய பாத்திரங்களை ஏற்று நடித்துப் பாராட்டுக்களையும் பரிசில்களையும் பெற்றவர். ஐம்பதுக்கும் மேற்பட்ட மேடை நாடகங்களில் நடித்துள்ளார்.

நந்தியால் 1949இல் விசித்திர மூக்குக் கண்ணாடி என்ற தலைப்பில் சிறுகதையாக எழுதப்பட்டு பின்னர் வானொலி நாடகமாக 1957இலும் புதும கண்ணாடிய என சிங்கள வானொலியிலும் வெளிவந்த ஆக்கம், 1975இல் குரங்குகள் என்ற தலைப்பில் மேடை நாடகமாகப் பவனி வரத்தொடங்கியது. பேராதனைப் பலகலைக்கழக அரங்கு உட்பட பத்துக்கும் மேற்பட்ட அரங்குகளில் மேடையிடப்பட்டது.

நந்தியின் சிருஷ்டியாக விளங்கிய இந்த நாடகம் அவரது நடிப்புடனும் நெறியாள்கையுடனும் சேர்ந்த புதிய வார்ப்பு. சமூகத்தின் பொட்டுக்கேடுகளைப் பிட்டுக்காட்டும் வகையில் புதிய உத்திகள் பாய்ச்சப்பட்ட மேடைநாடகம் இது.

நந்தி இருபத்தைந்துக்கும் மேற்பட்ட வானொலி நாடகங்களில் நடித்து வானொலி நேயர்களின் பாராட்டைப் பெற்றவர். அத்தோடு இலக்கியம், மருத்துவம் சம்பந்தமான இவரது வானொலிப் பேச்சுகள் இலங்கை வானொலியில் மட்டுமல்லாது லண்டன் பி. பி. ஸி, சிங்கப்பூர் வானொலி ஆகியவற்றிலும் தொடராக இடம்பெற்றன.

ஈழத்தில் திரைப்படத்துறையில் பரீட் சார்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது நந்தியும் தனது பங்களிப்பைச் செய்யத் தவறவில்லை. பொன்மணி என்ற திரைப்படத்தில், பல பிள்ளைகளின் தந்தையாக மத்தியதர மனிதனாய்த் தோன்றி நடித்தார். ஈழத்தின் நவீன தமிழ் இலக்கியத்துறையில் அடியெடுத்து வைத்த முதலாவது மருத்துவர், மலையகப் பிரதேசத்தினைத் தமிழ் நாவலுக்குக் களமாக்கிய முதல்வர், சுகாதார இலக்கியத்தின் முன்னோடி ஆகிய பெருமைகளைக்கொண்ட நந்தி அவர்கள் 27.05.2005 அன்று அமரரானார்.




# மதுமிதா சொன்ன கதை உண்மையா உண்மையில் அவள்தான் கொலைகாரியா?

35



"ஒருவன் துப்பாக்கியை எடுத்து எனது தலையில் வைத்தான். இங்கே நடந்த விஷயங்களை பொலிஸாரிடமோ அல்லது வேறு யாரிடமோ சொன்னாலும் அவர்கள் இருவருக்கும் நடந்ததுதான் உங்களுக்கும் நடக்கும் என்று என்னை மிரட்டினான்!"

"அப்படி சொல்லிவிட்டு என்ன செய்தார்கள்.?"

"தீபன் தீபிகா இருவரது பேக்குகளையும் எடுத்து பரபரப்புடன் துளாவினார்கள். அப்படி துளாவிக்கொண்டே ஒருவன் சொன்னான். "சரி... சரி... இரண்டு சாமான்களும் கிடைத்து விட்டது. நாம் சீக்கிரமே இங்கிருந்து போய் விடுவோம் என்று.

"அதன் பிறகு என்ன நடந்தது?"

"அதன்பிறகு அவர்கள் இருவரும் மின்னல் வேகத்தில் அங்கிருந்து ஓடி விட்டார்கள். எங்கள் இருவரது மேனிகளும் நடுங்கிக் கொண்டிருந்தன. அதன் பிறகு நானும் ரஞ்சனும் தீபன் தீபாவை தள்ளி விட்ட இடத்திற்குச் சென்றோம். ஆனாலும் அதனால் எந்தவித பலனும் ஏற்படவில்லை. அதன் பிறகு ரஞ்சன் என்னிடம் ஒரு யோசனையைச் சொன்னான்!"

அது என்ன யோசனை?"

"இங்கே நடந்த இந்த விஷயத்தை யாரிடமும் சொல்ல வேண்டாமென்று, சொன்னால். நான் அப்படி யாரிடமாவது சொன்னால் எங்கள் இருவருடைய வாழ்க்கையும் முடிந்துவிடும் என்று சொன்னான்.

"அதற்கு நீங்க என்ன சொன்னீங்க...?"

"சரி என்று சொன்னேன்!"

"ம்... இப்போதுதான் நீங்கள் என்னிடம் சொல்லிட்டீங்களே... நீங்கள் கொடுத்த வாக்கு பொய்யாகிவிட்டதே?"

"இல்லை... பிரசன்னா... நீங்கள் என்னை காட்டிக் கொடுக்க மாட்டீர்கள். மாறாக எனக்கு உதவிதான் செய்வீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். உங்களை நிறையவே நம்புகிறேன் பிரசன்னா...!"

"ம்... என் மீது அவ்வளவு நம்பிக்கை வைத்ததற்கு நன்றி. ஆனாலும். உங்கள் மனதில் இருக்கும் அந்தக் கேள்விக்கு விடை கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் அந்த நன்றியால் பயனில்லாமல் போய்விடுமல்லவா...?"

"ஆமாம்... பிரசன்னா இந்த உதவியை நீங்கள் எனக்காக செய்து தரவேண்டும்!"

கண்டிப்பாக மதுமிதாவுக்கு எப்படியாவது உதவி செய்ய வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது.

அப்படி செய்யவேண்டுமென்றால்,

தீபன், தீபிகா, ஆகியோரது கொலைகாரனை கண்டிப்பாக கண்டு பிடிப்பதற்கு பொலிஸாருக்கு உதவி செய்யவேண்டும்.

அவன் மெல்ல மதுமிதாவின் அருகில் வந்தான்.

"மது...?"

"சொல்லுங்க...!"

"இது சம்பந்தமாக நாம் பொலிசாரிடம் சொல்லுவோம்!"

"ஐயோ... அதுமட்டும் என்னால் முடியாது பிரசன்னா... அப்படி சொன்னால் என்னுடைய வாழ்க்கை ரஞ்சனுடைய வாழ்க்கை எல்லாமே பாதிக்கப்பட்டுவிடும். எங்களுக்கு பாதுகாப்பு தருவது யார்?"

"அதைப்பற்றியெல்லாம் நீங்க கவலைப்படாதீங்க, அதை நான் பார்த்துக் கொள்கிறேன்.

உங்களுக்கு விருப்பம் என்றால் சொல்லுங்க...?"

"எதற்கும் நான் கொஞ்சம் யோசித்து பதில் சொல்றேன். ஆனாலும் அதை செய்ய முடியாது தானே பிரசன்னா?"

"ஏன்?"

"இப்போது பாருங்கள் உங்களுக்கே தெரியும், எங்கப்பாவைப் பற்றி அரசியல் செல்வாக்கை வைத்துக் கொண்டு பல கொலைகளை செய்து விட்டு தப்பி இருக்கும் ஒரு கொலைகாரர் அவர்.

அப்படி நான் பொலிசுக்குப் போனால் அவரை அது தாக்காதா என்ன இருந்தாலும் அவர் என் அப்பா தானே...!"

"அதென்றால் உண்மைதான்... சரி.. நான் இன்னும் மூன்று நாள்ல இந்த பிரச்சினையில் இருந்து விடுபடுவதற்கான ஒரு வழியைச் சொல்லுகிறேன்!"

"ரொம்ப நன்றி பிரசன்னா?"

★★★

பொலிஸ் அதிகாரி,
சரண்யா,
இன்ஸ்பெக்டர்,
ராகவன்,
சார்ஜன்
வஸந்தன் ஆகிய மூவரும் கொடுத்த விசாரணைகளின் தரப்பைப் பத்தி

நன்றாக ஆராய்ந்து பார்த்த துப்பறியும் இன்ஸ்பெக்டர் இன்பராஜ். முக்கியமான ஒரு பொருளின் மீது தனது கவனத்தைத் திருப்பினார்.

அது,

கொலை நடந்த இடத்தில், ஒரு மரத்தின்மீது,

சிக்கி இருந்து கண்டெடுக்கப்பட்ட அந்த

அலைபேசி தான்.

அந்த அலைபேசி,

தீபிகாவிற்கு சொந்தமானது.

அதில் நிறையவே தகவல்கள் பதிவாகி இருந்தன.

ஆனாலும்

ஏதோ சூட்சுமமான வார்த்தைகளில் எழுதப்பட்டிருந்தால் இன்ஸ்பெக்டரால் அதைபுரிந்து கொள்ள முடியாமல் இருந்தது. ஆனாலும்,

இறுதியில்,

MM என்ற இரண்டு ஆங்கில எழுத்துக்கள் மட்டும் பதிவாகி இருந்தது புரிந்தது.

யார் இந்த MM? அதில் பதிவாகி இருந்த எண்ணுக்கு அழைப்பை எடுத்துப் பார்த்தால்.

தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தது. அடுத்து,

அந்த தொலைபேசி நிறுவனத்துடன் தொடர்பு கொண்டார்.

இந்த மாதிரியான பல சந்தர்ப்பங்களில்,

அவர்களின் உதவியை பெற்றிருந்தால்,

அங்குள்ளவர்களை அவருக்குத் தெரியும்.

"ஹலோ சேர் சொல்லுங்கள். யாருடைய நம்பர் வேண்டும்?"

இந்த முறை நம்பருக்கு சொந்தக்காரருடைய பெயரும் முகவரியும் வேண்டும்!"

"கொல்லுங்க சேர்?"

செல்போன் எண்களைச் சொன்னார் இன்ஸ்பெக்டர். MM என்ற அந்த இரண்டு எழுத்துக்களையும் சொன்னார் இன்னும் ஐந்து நிமிடத்தில் எடுக்கவா?"

"ஏன்... ஐந்து நிமிடம் இப்பொழுதே எழுதிக் கொள்ளுங்கள்?" என்று சொல்லிவிட்டு,

பெயர் முகவரியைக் கொடுத்தார் அந்த உத்தியோகத்தர்.

அவர் கொடுத்த அந்த பெயரைப் பார்த்ததும்,

வியப்படைந்த இன்ஸ்பெக்டர் இன்பராஜ்,

இன்ஸ்பெக்டர் ராகவனை போனில் அழைத்தார்.

"ராகவன்"

"சேர்!"

"ம்... ராகவன் தீபிகாவின் போனில் இருந்த அந்த MM எழுத்துக்கு சொந்தக்காரி யார் என்று நான் கண்டு பிடித்து விட்டேன். அவள் பெயர் மதுமிதா மகேந்திரன் தீபிகா நெருங்கிய தோழி. இவளை மது என்று தான் தீபிகா அழைப்பாள். அது மட்டுமல்ல தீபனுக்கும் இவள் நல்ல கூட்டாளி இவளுக்கு 'மது' என்ற பெயரில் பியூட்டி செலூன் ஒன்று பாணந்துறையில் இருக்கிறது.

பெண் பொலிஸ் ஒருவரையும் அழைத்துக் கொண்டு நாளை காலையில் சென்று இவளை கைது செய்து கொண்டு வாருங்கள்!" என்றார்.

"ஆகட்டும் சேர்!"

**(இளமை வளரும்)**

# அதிகம் விரும்பப்படும் வர்த்த நாமமாக நான்காவது தடவையாகவும் பஜாஜ்

'மிகவும் விரும்பப்படும் மோட்டார் சைக்கிள் வர்த்தகநாமாக' பஜாஜ்நான்காவது வருடமாகவும் தொடர்ச்சியாகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பதுடன், எல்எம்டி பிராண்ட் பினான்ஸ் 2022 அதாவது 19வது வருடாந்த மதிப்பாய்வில் இலங்கையிலுள்ள 50 முன்னணி வர்த்தக நாமங்களில் ஒன்றாகவும் இடம்பிடித்துள்ளது.

'கடந்த இரண்டு வருடங்களாக புதிய மோட்டார் சைக்கிள்கள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்திலும் சிறப்புத்தன்மை, விற்பனைக்குப் பின்னரான சேவைக்கான அணுகல் போன்ற பிரதான விடயங்கள் உள்ளடங்கலாக வர்த்தக நாமம் தொடர்பில் எமது 360 பாகை அர்ப்பணிப்புக் காரணமாக 'மிகவும் விரும்பப்படும் மோட்டார் சைக்கிள் வர்த்தகநாமம்' என்ற தலைப்பை பஜாஜ் தக்கவைத்துக்கொண்டுள்ளது' என டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடெட் நிறுவனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் (வாகன விற்பனை) லக்மல் டி சில்வா தெரிவித்தார்.




புத்தம் புதிய மோட்டார் சைக்கிளுக்கான வர்த்தக நாம விசுவாசத்தைக் கொண்ட பஜாஜ் வாடிக்கையாளர்களின் தேவையை நிவர்த்தி செய்யும் நோக்கில், வாகன உற்பத்தி/ ஒருங்கு சேர்த்தல் தொழில்துறை மற்றும் வாகன உதிரிப்பாக உற்பத்தித் தொழில்துறைக்கு கைத்தொழில் அமைச்சினால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையான செயற்பாட்டு நடைமுறையின் கீழ் உள்நாட்டில் பெறுமதி சேர்க்கப்பட்ட CT100மோட்டார் சைக்கிள்களை மீள அறிமுகப்படுத்தியிருந்தது.

பஜாஜ் குடும்பத்தில் அதிகம் விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்களில் ஒன்றான பஜாஜ் CT100, அதன் எரிபொருள் திறன், நீடித்துழைப்பு மற்றும் செயல்திறனுக்காக புகழ்பெற்றிருப்பதுடன், இது தற்போதைய பொருளாதார சூழலில் சிறந்த வாகனமாகவும் உள்ளது.

உலகின் நான்காவது மிகப் பெரிய இரு சக்கர உற்பத்தியாளரான பஜாஜ், லத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு, தெற்கு முற்றும் தென்கிழக்கு ஆசியா போன்ற 75ற்கும் அதிகமான நாடுகளில் தனது CT100, பிளடினா, டிஸ்கவர், அவஞ்சர், பல்சர் உள்ளிட்ட மோட்டார் சைக்கிள் உற்பத்திகளுக்குப் பெயர்பெற்று விளங்குகிறது. கடந்த நான்கு தசாப்தங்களாக பஜாஜ் மற்றும் KTM ஆகியவற்றுக்கான ஏக விநியோகஸ்தர்களாக டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி விளங்குகிறது.

# அ'புரம் மற்றும் கொழும்பில் SLT-MOBITEL முன்னெடுக்கும் மர நடுகைத் திட்டம்



அளவற்ற சூழல் சமூக ஆளுகை (ESG) நிகழ்ச்சித் திட்டங்களின் மற்றுமொரு அங்கமாக, அனுராதபுரம் மற்றும் கொழும்பில் மர நடுகைத் திட்டங்களை SLTMOBITEL முன்னெடுத்திருந்தது.

'தூய வளி மற்றும் உரத்தினூடாக நாட்டுக்கு வளமூட்டுவோம்" எனும் தொனிப் பொருளுக்கமைய, நாடு முழுவதிலும் மர நடுகைத் திட்டத்தை SLTMOBITEL ஆரம்பித்திருந்தது. எமது வளியின் தரத்தை மேம்படுத்துவது மற்றும் பச்சைஇல்ல வாயுக்களின் வெளியேற்றத்தைக் குறைத்து, ஆரோக்கியமான மண் வளத்தையும், இயற்கை ஈரப்பதக் கட்டுப்பாட்டை ஊக்குவிப்பதற்கான உறுதிமொழிக்கமைய இந்தத் திட்டத்தை ஆரம்பித்திருந்தது.

தேசிய நாமல் பூங்கா சர்வதேச பௌதீகவியல் அமைப்பின் 31 ஆவது ஆண்டு பூர்த்தியுடன், கொழும்பில் மர நடுகைத் திட்டம் இடம்பெற்றது. Sat Co Lanka Technology (Pvt) Ltd. நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரான எச்.எம். பைசல் தீன், இந்தத் திட்டத்துக்கு அவசியமான இலுப்பை மரக்கன்றுகளை நன்கொடையாக வழங்கியிருந்தார்.

இந்தத் திட்டத்துக்கு மேலும் வலுச் சேர்க்கும் வகையில், SLTMOBITEL இனால் அனுராதபுரம் ஸ்ரீ மகா போதி வளாகத்தில் இலுப்பை மரக்கன்றுகளை நடும் திட்டத்தை முன்னெடுத்திருந்தது. அனுராதபுரத்தைச் சேர்ந்த மக்களுக்கு SLTMOBITEL அதிகாரிகளிடமிருந்து இலுப்பை மரங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டிருந்தன.

களை கட்டுப்பாட்டில் ஆற்றும் பங்களிப்பு, சேதன உரத் தயாரிப்பில் பயன்படுத்தக்கூடிய திறன், வளியை தூய்மைப்படுத்தும் திறன் மற்றும் இயற்கை மூலிகையாக பயன்படுத்தக் கூடியமை ஆகியவற்றை கவனத்தில் கொண்டு இந்தத் திட்டத்துக்காக இலுப்பை மரம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. '

THURU' மொபைல் அப்ளிகேஷனை பயன்படுத்தி இந்தத் திட்டத்தின் முன்னேற்றத்தை கண்காணிக்கும் நவீன தொழில்நுட்ப வசதி இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளமை முக்கிய அம்சமாக அமைந்துள்ளது.

# ONMO மொபைல் Cloud Gaming Platform: அறிமுகப்படுத்துகிறது Dialog




டயலொக் மொபைல் வாடிக்கையாளர்களுக்கு தனித்துவமான, அதிவேகமான கேமிங் அனுபவத்தை வழங்குவதற்காக ONMO (www.onmo.dgl.lk) ஐ அறிமுகப்படுத்த இலங்கையின் முன்னணி இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி மொபைல் பொழுதுபோக்குகளில் உலகளாவிய முன்னணி நிறுவனமான OnMobile உடன் இணைந்து கொண்டது.

cloud streaming, social Esports மற்றும் Artificial Intelligence (AI) ஆகியவற்றை கொண்ட மொபைல் கேமிங் தளமான ONMO ஆனது, டயலொக் மொபைல் வாடிக்கையாளர்களுக்கு action, arcade, racing, adventure, puzzles மற்றும் பல வகைகளை உள்ளடக்கிய 60க்கும் மேற்பட்ட அற்புதமான மொபைல் கேம்களுக்கான அணுகலை ஒவ்வொரு வாரமும் வழங்குகிறது. வாடிக்கையாளர்கள் ONMO மற்றும் அதன் பரந்த அளவிலான கேம்கள் அனைத்தையும் மாதத்திற்கு ரூ. 399 +வரிகளுக்கு பெற்றுக்கொள்ள முடியும். ONMO இன் Vision AI engine, டவுன்லோட் செய்ய வேண்டிய அவசியமின்றி ஒரு சமூக தளத்தில் அனைவரும் அணுகும் வண்ணம் Esports ஐ வழங்குகிறது. மேலும் பல அற்புதமான அம்சங்களுடன் short, curated game moments மற்றும் virtual rewards உடன், சமூக விளையாட்டு அம்சத்தையும் இந்த தளம் வழங்குகிறது.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி இன் குழும கண்டுபிடிப்பு மற்றும் வடிவமைப்பு அதிகாரி அந்தோனி ரோட்ரிகோ, இந்த சமீபத்திய மொபைல் கேமிங் அனுபவம் குறித்து பேசியபோது“எங்கள் பங்காளரான OnMobile உடன் இணைந்து இலங்கையில் வர்த்தக கிளவுட் கேமிங் தளத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்தியதில் டயலொக் பெருமைக்கொள்கின்றது. இந்த கிளவுட் கேமிங் தளமானது ஸ்மார்ட்போன்களுக்காகவும், டயலொக்கின் 4G மொபைல் மற்றும் ஹோம் புரோட்பாண்ட் வலையமைப்புகளில் தடையின்றி இயங்குவதற்கும் உகந்ததாக காணப்படுகின்றது. எதிர்காலத்தில் அனைத்து இலங்கையர்களுக்கும் கிளவுட் கேமிங்கிற்கு 5G தொழில்நுட்ப திறனை வழங்க கூடியதாக இருக்கும் என்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், என்றார்.

# HDFC வங்கியுடன் JAT Holdings புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து



JAT Holdings PLC நிறுவனமானது நாடு முழுவதும் உள்ள மரவேலை கலைஞர்கள் மற்றும் தொழில்முறை தீந்தை பூசுபவர்களுக்கு பயிற்சி மற்றும் தொழிற்பயிற்சிகளை வழங்கி வரும் திட்டத்தை மேலும் வலுப்படுத்தும் முகமாக, இலங்கை தேசிய வீடமைப்பு மேம்பாட்டு நிதிக் கூட்டுத்தாபன வங்கியுடன் (HDFC) அண்மையில் புரிந்துணர்வு ஒப்பந்மொன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

JAT Holdings PLC, HDFC வங்கி மற்றும் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை (NAITA) ஆகியவற்றின் அதிகாரிகள் முன்னிலையில், அண்மையில் JAT நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு இடம்பெற்றது.

தற்போதைய தொழில்துறை தரத்தை உயர்த்தும் அதேவேளை, மரவேலை கலைஞர்கள் மற்றும் தொழில்முறை தீந்தை பூசுபவர்களின் திறன் மற்றும் தொழில்முறை மட்டத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், NAITA உடன் இணைந்து நடத்தப்படும் 'JAT PintharooShilpeeAbhiman' நிகழ்ச்சித் திட்டமானது, ஆர்வமுள்ள மரவேலை கலைஞர்கள் மற்றும் தொழில்முறை தீந்தை பூசுபவர்கள் பங்கேற்று தேசிய தொழிற் பயிற்சித்தகைமை 3 ஆம் நிலையைப் (NVQ Level 3) பெற இடமளிக்கிறது. HDFC வங்கியுடனான JAT இன் ஒத்துழைப்பானது மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் வழங்கலை மேலும் விரிவுபடுத்தி, அதில் பங்கேற்கின்றவர்கள் தொழில் தொடர்பான விடயங்களுக்கு கடன் வசதிகளைப் பெறவும், வங்கியின் பிரதிநிதிகளிடமிருந்து நிதி தொடர்பான விழிப்புணர்வு கல்விப்பயிற்சியைப் பெறவும் இடமளிக்கிறது. இது அவர்களின் வணிக நுண்ணறிவு மற்றும் திறன்களை மேலும் மேம்படுத்தும்.

# டிஜிட்டல் கொடுப்பனவுகளை விஸ்தரிக்க Visa உடன் இணையும் WEBXPAY




முன்னணி online கொடுப்பனவு தீர்வு வழங்குநரான WEBXPAY, இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தை ஒப்பற்ற, வரையறைகளற்ற மற்றும் சிறிய, நடுத்தரளவு வியாபாரங்களுக்கு நிலைபேறான டிஜிட்டல் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளும் தீர்வுகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் Visa உடன் கைகோர்த்துள்ளது.

இதனூடாக WEBXPAY க்கு, சிறிய நடுத்தரளவு வியாபாரங்களுக்கு உலகளாவிய ரீதியில் காணப்படும் Visa அட்டைதாரர்களை அணுகச்செய்து, டிஜிட்டல் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளும் ஆற்றலை வழங்கி வலுவூட்டும் இலக்கை வேகமாக அணுகக்கூடியதாக இருக்கும். இந்தச் செயற்பாட்டினூடாக சிறு வியாபாரங்களுக்கான அளவீட்டை அதிகரித்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதுடன், அதன் மீட்சிக்கு கைகொடுக்கக்கூடியதாக இருக்கும்.

ஆசிய பசுபிக் Visa Acceptance Fast Track Program இன் அங்கமாக அமைந்திருக்கும் WEBXPAY, 2025 ஆம் ஆண்டளவில் 10,000 புதிய டிஜிட்டல் இலங்கையர்களை டிஜிட்டல் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய கட்டமைப்பை ஏற்படுத்த எதிர்பார்ப்பதுடன், நாட்டின் டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 2025 ஆம் ஆண்டளவில் Gross Merchant Volume (GMV) பெறுமதியாக ரூ. 10 பில்லியனை பதிவு செய்ய எதிர்பார்த்துள்ளது. soft POS ஊடாக தொடுகையற்ற கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளலை இது அதிகரிக்கும் என்பதுடன், soft POS தொழில்நுட்பத்தினூடாக tap to phone கொடுப்பனவுகளை செயற்படுத்தி, குறைந்த செலவிலமைந்த face to face கொடுக்கல் வாங்கல்கள் ஏற்றுக்கொள்ளலை ஏற்படுத்தும்.

Visa இன் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான முகாமையாளர் அவந்தி கொலம்பகே கருத்துத் தெரிவிக்கையில், "சிறு வியாபாரங்கள் தமது வியாபாரச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக தொழில்நுட்பத்தை பின்பற்றுவதில் எப்போதும் ஆர்வமாக உள்ளதுடன், பெருமளவான சந்தர்ப்பங்களில் இதனைத் துரிதப்படுத்துவோர் அவசியமாக உள்ளது." என்றார்.

# கார்பன் நடுநிலை மட்டத்தை அடைய உறுதிபூண்டுள்ள சர்வோதய டெவலெப்மெண்ட் ஃபினான்ஸ்



அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கான கடன் வழங்கலில் இலங்கையின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான சர்வோதய டெவலப்மெண்ட் ஃபினான்ஸ், 2030 ஆம் ஆண்டுக்குள் காபன் நடுநிலை மட்டத்தை அடையும் இலக்குடன், நிறுவனத்தின் காபன் அடிச்சுவட்டைக் குறைப்பதற்கான ஒரு இலட்சியப்பற்றுடனான முயற்சி தொடர்பில் அறிவித்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5 ஆம் திகதி அனுட்டிக்கப்படும் உலக சுற்றுச்சூழல் தினத்தைக் குறிக்கும் வகையில், சர்வோதய டெவலப்மெண்ட் ஃபினான்ஸ் நிறுவனம் இந்த அறிவிப்பை வெளியிட்டது. நிலைபேண்தகைமை மற்றும் சுற்றுச்சூழல் மீதான பொறுப்புணர்வு எப்பொழுதும் சர்வோதய டெவலப்மெண்ட் ஃபினான்ஸ் நிறுவனத்தின் செயற்பாடுகளின் மையத்தில் உள்ளது.

இலங்கையில் பின்தங்கிய கிராமப்புற பொருளாதாரங்கள் மற்றும் அடிமட்ட தொழில் முனைவோரை ஆதரிக்கும் நோக்கத்துடன், இந் நிறுவனம் இலங்கையின் பழமையான, சமூக இயக்கமான சர்வோதய சிரமதான இயக்கத்தால் நிறுவப்பட்டது.

காபன் நடுநிலை மட்டத்தை அடைவதற்கான நிறுவனத்தின் உறுதிப்பாடு தொடர்பில் கருத்து வெளியிட்ட சர்வோதய டெவலப்மெண்ட்ஃபினான்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான நிலந்த ஜெயநெத்தி "எமது நிலைபேண் தகைமை கட்டமைப்பு மற்றும் 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேற்றியலுடனான கடன் வழங்கல் ஆகிய தொலைநோக்கு இலக்கினால் நாங்கள் வழிநடத்தப்படுகிறோம்.

இலங்கை மற்றும் உலகெங்கிலும், சுற்றுச்சூழல் மற்றும் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கத்திற்கு அனைத்து மக்களும் மற்றும் நிறுவனங்களும் பொறுப்பேற்க வேண்டும். இதன் விளைவாக, எங்களின் நிலைபேண் தகைமை கட்டமைப்பால் வழிநடாத்தப்பட்டு, காபன் நடுநிலை மட்டத்தைப் பேணும் நிறுவனமாக உருவெடுக்கும் இறுதிக் குறிக்கோளுடன், பல்வேறு முயற்சிகள் மூலம் எமது காபன் அடிச்சுவட்டைக் குறைக்க எண்ணுகிறோம். இது தவிர, நாம் எமது சமூகத்தைப் பற்றி அக்கறை கொண்டுள்ளோம் என குறிப்பிட்டார்.

# 'Great Place to Work' என்ற கௌரவத்துடன் 60 ஆண்டுகளைக் கொண்டாடும் றைனோ



இவ்வருடம் வணிக உலகத்தில் 60 ஆண்டுகளைக் கொண்டாடும் தேசத்தின் கூரைத் தகடுகள் முன்னோடியாகத் திகழும் றைனோ, தனது ஊழியர்களின் நம்பிக்கையை வென்று 'Great Place to Work' என்ற கூடுதல் ஒப்புதலையும் பெற்றுள்ளது. சிறந்த பெருநிறுவன குடிமகனாக உயர்ந்து திகழும் நிறுவனம், இப்போது சிறந்த பணி கலாச்சாரத்துடன் மதிப்பு சார்ந்த நிறுவனமாக மேலும் அங்கீகரிக்கப்பட்டது.


அண்மையில் இடம்பெற்ற 24ஆவது ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் 2020/21 இல் பெறுமதி சேர்க்கப்பட்ட தாதுப்பொருட்கள் பிரிவில் சிறந்த ஏற்றுமதியாளராக பாராட்டுக்கள் பெற்ற றைனோ, ஆறு தசாப்தங்களில் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பாளராக நாட்டில் தனது நிலையை உறுதிப்படுத்தியுள்ளது. இந்த மே மாதத்தில் 60வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் 100% இலங்கை நிறுவனமானது பல தசாப்தங்களாக சந்தையில் சிறந்த தரமான தயாரிப்புகளை வழங்குவதில் கவனம் செலுத்தியது. மேலும், தரமான கூரை தயாரிப்புகளுக்கான தேவையை உருவாக்குவதன் மூலம் உலகளாவிய நிறுவனங்களுக்கு எதிராக போட்டியிடுவதற்கு மூலோபாய ரீதியாக தன்னை நிலைநிறுத்தியுள்ளது.

ஜூன் 2022 இல், 60வது ஆண்டு கொண்டாட்டங்களுடன் இணைந்து, றைனோவுக்கு Great Place to Work பட்டம் வழங்கப்பட்டது.

## இரத்தம் வழங்கிய 'திண்ணை பணியாளர்கள்



யாழ்ப்பாணத்தில் உள்ள தரமான சிறிய ஹோட்டலான திண்ணை அண்மையில் யாழ்ப்பாணத்தில் உள்ள இரத்த வங்கிக்கு இரத்தம் வழங்கும் நிகழ்ச்சியை நடத்தியது. ஏராளமான பணியாளர்கள் இரத்த தானத்தில் பங்கேற்றனர். ஹோட்டலின் ஆறாவது ஆண்டு நிறைவை ஒட்டி இந்த இரத்த தான நிகழ்வு இடம்பெற்றதாக திண்ணை யாழ்ப்பாண பொது முகாமையாளர் நோர்மன் பி.சி டி ஜொங்க் கூறினார். இந்த ஹோட்டல் செயின்ட் அந்தனீஸ் குழுமத்தைச் சேர்ந்த திண்ணை குழும ஹோட்டல்களுக்குச் சொந்தமானது.

# படித்ததும் பகர்வதும் 102



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### பிறரை புரிந்துகொள்வோம்

நாம் பிறரை எந்த சந்தர்ப்பத்திலும் தப்பான, தவறான கண்ணோட்டத்தில் பார்க்கக் கூடாது. ஒருவரைப் பற்றி நாம், நாமாகவே ஒரு தீர்மானத்தை எடுத்து, அவரை நல்லவராகவோ, கெட்டவராகவோ வகைப்படுத்துவது தவறாகும்.




பெரும்பாலான சந்தர்பங்களில் நாம் எமது விருப்பு வெறுப்புக்கு ஏற்பவே மற்றவர்களை எடை போடுகிறோம். இதனாலேயே அவரைப் பற்றி தவறான முடிவுக்கு வரும் நிலை ஏற்படுகிறது. இவ்வாறு இன்னொருவரைப் பற்றி தவறாக முடிவு செய்து நாம் செயல்படும் போது இருவருக்குமிடையிலான உறவில் விரிசல் ஏற்படுவதும், முரண்பாடுகள் தோன்றுவதும், இடைவெளி அதிகரிப்பதும் தவிர்க்க முடியாதவையாகும்.

சில சந்தர்பங்களில் ஒருவர் நாம் எதிர்ப்பார்ப்பதற்கு மாற்றமாக நடந்து கொள்வது உண்டு. அதற்கு காரணம் அவர் அந்த குறித்த நேரத்தில் என்ன நிலையில் இருந்தார் என்பதாகவே இருக்கும். கவலை, கஷ்டம், துன்பம், துயரம், மகிழ்ச்சி, ஏமாற்றம், ஏக்கம், கோபம், பிரச்சினை போன்ற இன்னோரன்ன விடயங்கள் ஒருவரது செயல்பாட்டிலும், பேச்சிலும், நடத்தையிலும், செயற்பாட்டிலும் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தவே செய்கின்றன.

அவற்றை சரியாகப் புரிந்து கொள்ள முடியாது போகும் சந்தர்பங்களிலேயே தவறான தீர்ப்புகளுக்கு நாம் வருகிறோம். இது கட்டாயமாக தவிர்க்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். நாம் இன்னொருவரைப்பற்றி ஒரு தீர்மானத்துக்கு வருவதற்கு முன்னர் அவரது இடத்தில் அல்லது அவரது நிலையில் எம்மை நிறுத்தி அவரைப் போலவே நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் அப்பொழுதுதான் உண்மை நிலையை சரியாக உணர்ந்தது கொள்ள இயலும். இவ்வாறு செய்வதே முறையான, சரியான மனிதப் பண்பாகும். இதன் மூலமே ஒவ்வோருவருக்குமிடையில் நல்லுறவு வளர்ச்சியடையும்.

இவற்றை நன்கு புரிந்துகொண்டு, பிறர் பற்றி சரியாக தீர விசாரித்து அறியாமல் அவரைப் பற்றி தவறான முடிவுக்கு வருவதை தவிர்ப்பது அவசியம். இந்த விடயத்தில் ஒவ்வொருவரும் நிதானமாகவும், நேர்மையாகவும் நடந்து கொள்ள உறுதி கொள்ள வேண்டும்.

பிறரை சரியாக அறிந்து கொள்வோம். அவர்களை சரியாகப் புரிந்துகொள்வோம். அதன் மூலம் நல்லுறவை வளர்ப்போம்.

## நெஞ்சுக்கு நீதி

துன்பங்கள்துக்கங்கள்துயரங்களால்
தள்ளாடும்வறியோர்க்குஉதவிடுவோம்
இன்பங்கள் இனிமைகள்நன்மைகளால்
இகம் மகிழ இப்போதே இயங்கிடுவோம்!

## நெஞ்சோடு நெஞ்சம்

'ஈதுல் அள்ஹா' தியாகத் திருநாள்!

முஸ்லிம்கள் வருடத்தில் கொண்டாடும் இரண்டாவது பெருநாள் ஹஜ்ஜுப் பெருநாளாகும். 'ஈதுல் பித்ர்' எனும் நோன்புப் பெருநாள் ஈகையை, தருமத்தை, கொடியை வலியுறுத்துகின்ற அதேவேளை, 'ஈதுல் அள்ஹா' எனும் ஹஜ்ஜுப் பெருநாள் தியாகத்தை வலியுறுத்தும் திருநாளாகத் திகழ்கிறது.



ஒவ்வொரு முஸ்லிமும் தமது சொத்தை, செல்வத்தை, காலத்தை, நேரத்தை, அறிவை, ஆற்றலை என இறைவன் தனக்கு வழங்கிய அனைத்து வளங்களையும் இறைவனுக்காகவும், இறைவனின் உன்னத படைப்பான மனிதர்களுக்காகவும் தியாகம் செய்வதே இதன் அடிப்படை நோக்கமாகும்.

இன்றைய காலத்தில் மக்களின் தேவைகளும், எதிர்பார்ப்புகளும், பொருளாதார பிரச்சனைகளும் பலமடங்கு அதிகரித்துக் காணப்படுகின்றன. பிறரது உதவிகளும், ஆதரவுகளும், ஒத்துழைப்பும் பெரும்பாலானோருக்கு பெருமளவில் தேவைப்படுகின்றன. இத்தகைய நிலைமையில்தான் உண்மையான தியாகத்தின் தேவைப்பாடுகள் மிகவும் அதிகமாக உணரப்படுகின்றன. .

இவற்றை சரியாக புரிந்துகொண்டு, தியாகத்தின் உண்மையான நோக்கத்தை தெரிந்துகொண்டு மக்களின் துயரங்களைத் தீர்க்க, துன்பங்களைப் போக்க, தேவைகளை நிறைவேற்ற, மக்களை மகிழ்விக்க பொருத்தமான முறையில் தியாகம் செய்ய இன்றைய தியாகத் திருநாள் ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் திட சங்கற்பம் கொண்டு செயல்படுவோம்.

இன்றைய ஹஜ்ஜுப் பெருநாளை கொண்டாடும் முஸ்லிம்கள் அனைவருக்கும் 'ஈதுல் அள்ஹா' ஹஜ்ஜுப் பெருநாள் நல்வாழ்த்துக்கள்!

## சிந்தனை செய் மனமே

### கருணை காட்டுங்கள்!



ஒரு பழ வியாபாரியிடம் வந்த ஒருவர் "பழங்கள் என்ன விலை?" என்று கேட்டார்.

வியாபாரி, "வாழைப் பழம் கிலோ 200 ரூபாய் ஆப்பிள் 500 ரூபாய் ..." என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது அங்கே ஒரு பெண்மணி வந்தார்.

அவளும், "பழம் என்ன விலை?" என்று கேட்க அந்த வியாபாரி, "வாழைப்பழம் கிலோ 50 ரூபாய் ஆப்பிள் கிலோ 100 ரூபாய்" என்று சொன்னார். அதைக் கேட்டதும் அந்தப் பெண்மணி மகிழ்ச்சியோடு பழங்களை வாங்கத்தொடங்கினாள்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த அந்த மனிதர், 'வியாபாரி தன்னிடம் விலை அதிகமாக சொல்லிவிட்டாரே' என கோபப்பட்டு வியாபாரிடம் பேசத் தொடங்கினார். அதனைக் கண்ட வியாபாரியும், 'எதுவும் பேசவேண்டாம்' என கண்களால் சைகை செய்தார். அந்தப் பெண்மணி தன்னிடமிருந்த தொகையைக் கொடுத்து பழங்களைப் பெற்றுக்கொண்டு, 'இறைவக்கு நன்றி. என்னுடைய பிள்ளைகளுக்கு இது போதுமானதாக இருக்கும்.' என்று சொல்லிய வண்ணம் அவ்விடத்தை விட்டு நகர்ந்தார்.

அப்பெண்மணி சென்ற பின்னர், வியாபாரி அந்த மனிதனைப் பார்த்து, "சகோதரரே கோபித்துக் கொள்ளாதீர்கள். உங்களை ஏமாற்ற வேண்டும் என்பது என் எண்ணம் அல்ல. அந்தப் பெண்மணி தனக்குக் கிடைக்கும் சொற்ப வருமானத்தை வைத்து ஆதரவற்ற நான்கு குழந்தைகளை பராமரித்து வருகிறார். அவர் யாரிடத்திலும் உதவி கேட்க விரும்பவில்லை. நானும் பலமுறை அவருக்கு உதவி செய்ய விரும்பினேன் ஆனாலும் அவர் அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. எனவே நான் யோசனை செய்து அவரின் தன்மானத்திற்கு ஊறுவிளைவிக்காமல் மறைமுகமாக அவருக்கு உதவி செய்ய பல மடங்கு விலையைக் குறைத்து விற்பனை செய்கிறேன்" என்றார்,

தொடர்ந்து, "இறைவன் மீது ஆணையாகச் சொல்கிறேன். இந்த பெண்மணி வாரத்துக்கு ஒருமுறைதான் என்னிடத்தில் வியாபாரம் செய்வார். ஆனால் அவர் என்னிடம்

வியாபாரம் செய்யும் நாட்களில் எனக்கு பல மடங்கு லாபம் கிடைக்கும் எதிர்பாராத உதவிகளும் கிடைக்கும்" என்றார் .

இதைக் கேட்ட அந்த மனிதரின் கண்கள் கலங்கின."பூமியில் உள்ளவர்கள் மீது கருணை காட்டுங்கள். வானத்தில் இருப்பவர்கள் உங்கள்மீது கருணை காட்டுவான்." என்ற பொன்மொழியை அவர் மனதில் நினைத்துக் கொண்டார்.

## வீரம் தரும் விளையாட்டு

சர்வதேச மெய்வல்லுனர் போட்டிகளில் இலங்கை வீரர்கள் மிக அரிதாகவே சாதனைகளை நிகழ்த்துகின்றனர். அவ்வப்போது நிலைநாட்டப்படுகின்ற சில சாதனைகளும் சரியான அங்கீகாரத்தை பெறாதிருப்பது கவலைக்குரியது. குறிப்பாக சிறுபான்மையினரின் சாதனைகள் வெகுசன ஊடகங்களில் உரிய பிரசாரத்தை பெறுவதில்லை என்ற குறை நீண்ட காலமாகவே பேசப்படுகிறது.



இந்த நிலையில் இலங்கையர்கள் மகிழக் கூடிய வகையில் ஒரு சாதனை இம்மாதம் 3ம் திகதி நிகழ்த்தப்பட்டு, வரலாறு படைத்துள்ளது. யுபுன் அபேகோன் என்ற இலங்கையின் குறுந்தூர ஓட்ட வீரர் 100 மீட்டர் ஓட்ட போட்டி ஒன்றில் தெற்காசிய சாதனையையும் இலங்கை சாதனையையும் நிகழ்த்தியுள்ளார்.

உலக மெய்வல்லுனர் சங்கத்தின் கண்டங்களுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டித் தொடரின் ஓர் அங்கமாக சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற 42 வது ரெசிஸ்பிரின்ட் சர்வதேச (Resisprint International) மெய்வல்லுனர் போட்டியில் இலங்கையின் குறுந்தூர ஓட்ட வீரரான யுபுன் அபேகோன் 100 மீட்டர் போட்டி தூரத்தை 9.96 செக்கன்களில் ஓடி தங்கப்பதக்கம் வென்று இச் சாதனையை படைத்துள்ளார். 100 மீட்டர் ஓட்ட போட்டி ஒன்றை 10 செக்கன்களுக்குள் ஓடி முடித்த முதலாவது தெற்காசிய வீரராகவும், முதலாவது இலங்கை வீரராகவும் யுபுன் அபேகோன் இந்த வரலாற்று சாதனையை புரிந்துள்ளார்.100 மீட்டர் ஓட்டப் போட்டியை 10 செக்கன்களுக்குள் ஓடி முடித்த 10 வது ஆசிய நாட்டு வீரராகவும் திகழும் இவர், ஆசியாவில் சிறந்த நேரத்தை பதிவு செய்தவர்களில் 4வது இடத்தையும் பெற்றுள்ளார். 'இலங்கையினதும் தெற்காசியாவினதும் அதிவேக வீரர்'என்ற புகழைப் பெற்றுள்ள யுபுன் அபேகோனுக்கு எமது வாழ்த்துக்கள்.

## நலமே வாழ்வோம்

### உடல் நலத்தில் கவனம்!

நாட்டில் தற்போது நிலவும் மருந்துத் தட்டுப்பாடு, போக்குவரத்து பிரச்சினைகள் காரணமாக மக்கள் இந்த கால கட்டத்தில் மிகவும் அவதானமாகவும், நிதானமாவும், கவனமாகவும் இருக்க வேண்டுமென வைத்தியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.



மக்கள் இந்த நேரத்தில் இயலுமான வரை பாதுகாப்பாக இருப்பது முக்கியம், கவனயீனமாக நடந்து சிறு விபத்துக்களைகூட சந்திக்கக் கூடாது. சிறு காயங்கள் ஏற்படுவதைக்கூட தவிர்த்துக்கொள்ள முற்சிக்க வேண்டும் என வைத்திய அதிகாரிகள் ஆலோசனை கூறியுள்ளனர்.

இப்போதைய பொருளாதார நெருக்கடியில் அவசியமான சில மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது., இருக்கும் மருந்துகளின் கையிருப்பும் வேகமாக குறைந்து வருவதாகக் கூறப்படுகிறது. அலுகவலக கடமைகள், வீட்டு வேலைகள் போன்றவற்றின் போது விபத்துகள் ஏற்பட்டால் பாதிப்புக்கு ஆளானவர்களுக்கு சிகிச்சைப் பெற போக்குவரத்து வசதிகளை பெற்றுக் கொள்வதும், வைத்தியர்களுக்கும், வைத்தியாசாலை ஊழியர்களுக்கும் போக்குவரத்து வசதிகளை பெறுவதிலும் பல்வேறு பிரச்சினைகள் எதிர்நோக்க வேண்டி ஏற்படுகின்றன.

பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் மருந்துகள் குறித்தும் கவனித்துக் கொள்ள வேண்டும். இந்த நேரத்தில் குழந்தைகளையும், வயோதிபர்களையும் நன்றாக கவனித்துக் கொள்வது மிகவும் அவசியம். மருத்துவர்களின் காலத்துக்குப் பொருத்தமான, மிகவும் அவசியமான இவ்வைத்திய ஆலோசனைகளை ஒவ்வொருவரும் தவறாது, கவனத்தில் கொள்ள வேண்டும்.

. பொன் மொழி அது பொய்யா மொழி

பெண்ணைப் பற்றி பெரியோர்

நல்ல மனைவியை விட உயந்த வைரமும் இல்லை. பொல்லாத மனைவியை விட பயங்கர சாபமும் இல்லை. சைமன்டீஸ்

ஆயிரம் படையெடுப்புக்களால் வெற்றி கொள்ள முடியாத காரியத்தை ஒரு பெண் மிக எளிதாக தன் புன்சிரிப்பில் வென்று விடுகிறாள். நெப்போலியன்.

பெண்ணின் அழகும் அறிவும் குத்து விளக்கின் ஒளியைப் போல் முழுமையாக இருந்து குடும்பத்துக்கு பயன்பட வேண்டுமே தவிர காட்டுத்தீயைப் போல் எதையும் அழிக்கப் பயன்படக்கூடாது. பேரறிஞர் அண்ணா

அடக்கம், உண்மை, கற்பு மூன்றும் பெண்களைப் பாதுகாக்கும் வேலிகள். – ஹால்டன்

பெண்ணுக்கு மதிப்பளிக்காத எந்த தேசமும் நாடும் என்றும் பெருமை அடைந்தது இல்லை. எதிர்காலத்தில் அடையப் போவதும் இல்லை. விவேகானந்தர்

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207

# திருவள்ளுவத்தில் சூழல் பகுப்பாய்வு (SWOT Analysis )



## திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர் 14



கே. பத்மானந்தன்

**ஒரு நிறுவனத்தின் நடவடிக்கைகளை அல்லது செயற்பாடுகளைத் திட்டமிடுதலின் அடுத்த மிக முக்கிய செயற்பாடாக SWOT பகுப்பாய்வு அமைகிறது. ஒருநிறுவனத்தில் காணப்படும் வலிமை(பலம்), பலவீனம், வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்களைப் புரிந்து கொண்டு முடிவுகளை எடுக்க SWOT பகுப்பாய்வு முகாமைத்துவத்திற்கு உதவுகிறது. இந்த ஆய்வின் மூலம் நிறுவனத்திற்கு ஏற்படக்கூடிய போட்டிகளினால் வரும் அனுகூலங்களை பிரதிகூலங்களை அறிந்து கொள்வதுடன் எதிர்காலத்தில் நிறுவனத்தின் பலம் பலகீனங்களையும் அறிந்து கொள்ளமுடியும்.**

போட்டி அதிகமாகவுள்ள நடைமுறை உலகில் வெற்றிகரமாக ஒரு நிறுவனத்தை நடத்திச் செல்வதற்கு முகாமைத்துவத்திற்கு மிக முக்கியமான ஒரு செயற்பாடாக SWOT பகுப்பாய்வு அமைகிறது . முகாமைத்துவக் கொள்கைகளின் படி வலிமை, பலவீனம் ஆகிய இரண்டும் நிறுவனத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் அகக்காரணிகளாகவும் அதாவது முகாமைத்துவத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவையாகவும் வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள் நிறுவனத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் புறக் காரணிகளாகவும் அதாவது முகாமைத்துவத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவையாகவும் கொள்ளப்படுகின்றன.

அக்கக்காரணிகளுள் உற்பத்தி செய்யக்கூடிய அளவு, தொழில்நுட்ப அறிவு, சந்தை அறிவு, அதிகாரப்பகிர்வு என்பவற்றைக் குறிப்பிடலாம். புறக்காரணிகளாக அரசியல்,பொருளாதாரம், சமூகம், தொழில்நுட்பம் என்பவற்றைக் குறிப்பிடலாம். பல பலகீனப் பகுப்பாய்வு தொடர்பான கருத்துக்களை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் வலியுறுத்துகின்றார்

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்".
(குறள் 471)

நிறுவனம் ஒன்றின் முகாமையாளர் ஒரு செயலில் ஈடுபடமுன்னர் அச்செயலின் வலிமையையும், தன் வலிமையையும், தனது பகைவனுடைய அல்லது போட்டியாளரின் வலிமையும், இருவருக்கும் துணையாக இருப் போரின் வலிமையும் ஆராய்ந்தறிந்தே அந்தச் செயலைச் செய்யவேண்டும் என்கிறார் திருவள்ளுவர் . இவ் ஈரடி பலபலகீனப் பகுப்பாய்வு தொடர்பான பின்வரும் முகாமைத்துவம் பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்துகிறது.

**தன்வலி (Strength) பலம் :**

உதாரணமாகப் போதுமான நிதி வளம், இடவசதி, ஆள்வளம், உபகரணங்கள், இயந்திரங்கள், மூலப்பொருட்கள், கட்டிடவசதி, தொழில் நுட்பவளம் மற்றும் சந்தை வாய்ப்புகள் என்பன தன்வலியாக கொள்ளப்படும். மேலும் சொல்வதானால் ஒருநிறுவனத்தில் இருக்கும் பொருள், கருவி, அறிவு,ஆற்றல் , அனுபவம் என்பன யாவும் தன்வலி அதாவது பலம் ஆகும். திருவள்ளுவர் இன்னுமொரு பலம் பற்றிப் பேசுகிறார் அதுதான் வினைத்திட்பம் அதாவது எடுத்துக்கொண்ட செயலில் உறுதி. இதனை

"எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு"(குறள் 670).

என்ற ஈரடியில் தெளிவுபடுத்துகிறார். அதாவது நிறுவனத்திற்கு எத்தகைய பலம் இருந்தாலும் முகாமையாளரிடம் எடுத்த காரியத்தை முடிக்கும் உறுதி இல்லாது போகுமாயின் அந்நிறுவனத்தால் வெற்றி பெற முடியாது என்கிறார் திருவள்ளுவர்.திருவள்ளுவர் ஒரு நிறுவனத்திற்கு இருக்கவேண்டிய இன்னுமொரு வலிமை பற்றிப் பேசுகிறார் அதாவது காரியங்களில் அயர்ந்துவிடாமல் விழிப்பாக இருப்பது, அப்போதைக்கப்போது அறிய வேண்டியவற்றைக் கற்றுக் கொள்வது, உடனுக்குடன் ஆலோசனை நடத்திக் காரியங்களை நிச்சயிப்பது ஆகிய மூன்று குணங்களும் ஒரு முகாமையாளிடம் இருக்குமாயின் அது அந்த நிறுவனத்தின் பலமாகும். இதனை

"தூங்காமை கல்வி துணிவுடைமை
இம்மூன்றும்நீங்கா நிலன்ஆள் பவர்க்கு"
(குறள் 383)

என்ற ஈரடியில் திருவள்ளுவர் தெளிவுபடுத்துகிறார்.

**வினைவலி (Threat) அச்சுறுத்தல் :**

உதாரணமாக அரசினால் விதிக்கப்படும் கூடுதல் வரிகள், சாதகமற்றஅரச கொள்கைகள், சட்டதிட்டங்கள், கட்டுப்பாடுகள், கடும்போட்டி, ஏற்றுமதித்தடை, வேலை நிறுத்தம், குறைந்த சந்தைவாய்ப்பு,



இயற்கைஅனர்த்தம், யுத்தம், மூலப் பொருட்களுக்கு ஏற்படும் தட்டுப்பாடு என்பன வினை வலியாக கொள்ளப்படும். வினைவழி அதாவது அச்சுறுத்தல்கள் என்று வரும்போது எத்தகைய அச்சுறுத்தல்கள் எந்த வடிவத்தில் வந்தாலும் அதனைத் தாங்கக்கூடிய மனநிலையும் உறுதியும் உள்ள முகாமையாளர் ( அழிவிலான் ) இருப்பாராயின் அவரால் தன் நிறுவனத்தை வெற்றிகரமாக் கொண்டு செல்ல முடியும் என்பதை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் விளக்குகிறார் "அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கண் படும்" ( குறள் 625)

அதாவது ஒரு நிறுவனத்திற்கு எத்தகைய இடையூறுகள் துன்பங்கள் துயரங்கள் அடுக்கடுக்காக வந்தாலும் அவற்றுக்கெல்லாம் அசையாத ஒரு முகாமையாளர் இருப்பாராயின் வந்த துயரங்கள் தான் துயரப்படும் என்கிறார் திருவள்ளுவர்.

அதேபோன்று அரசினுடைய கொள்கை மாற்றங்களால் சட்டதிட்டங்களால் சந்தைநிலவரங்களால் ஒருநிறுவனத்திற்கு அச்சுறுத்தல்கள் ஏற்படும்போது எல்லாம் அந்த நிறுவனத்தின் முகாமையாளர் அதனை மகிழ்வுடன் எதிர்கொள்ள வேண்டும் என்ற கருத்தினை

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்ப தில்.
(குறள் 621)

என்ற ஈரடியில் திருவள்ளுவர் முன் வைக்கிறார் .அதாவது இக்கட்டான நேரங்களை மகிழ்வுடன் எதிர்கொள் அதற்கு அடுத்து வரும் நேரங்கள் அதைப்போல இக்கட்டாக இருக்காது என்ற உண்மையைச் சொல்கிறார்.

**மாற்றான் வலி (Weakness) பலகீனம் :**

ஒரு நிறுவனத்தின் சொந்த பலவீனங்கள் போட்டியாளர்களின் வலிமை அதாவது மாற்றானின் வலிமையாக அமையும். உதாரணமாக நிறுவனமொன்றில் காணப்படும் தகுதியற்ற வேலையாட்கள், தகுதியற்ற முகாமைத்துவம், பொருந்தாத நிறுவன நடைமுறைகள், தகுதியற்ற இயந்திரங்கள், உபகரணங்கள், உள்முரண்பாடுகள், நிதிப் பற்றாக்குறை, உற்பத்தியில் தாமதம், குறைந்ததரம், தாமத விநியோகம் மற்றும் வளப் பற்றாக்குறை ஆகிய பலவீனங்கள் மாற்றானுக்கு அல்லது போட்டியாளனுக்கு சந்தையில் சந்தர்ப்பங்களை வழங்கும்.

இவ்வாறன தனது நிறுவனத்தில் இருக்கக்கூடிய பலவீனங்களை ஒரு முகாமையாளர் இனம் காணுவாராயின் அவற்றால் நிறுவனத்திற்கு தீங்குகள் ஏற்படுவதற்கு முன்பே அந்தப் பலவீனங்களைக் களைவதற்கு முயலவேண்டும் அப்போதுதான் அவரது நிறுவனத்தைக் காப்பாற்ற முடியும். இதனைத் திருவள்ளுவர்

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்".
(குறள்435)

என்ற ஈரடியில் தெளிவு படுத்துகிறார். அதாவதுகுற்றம் நிகழ்வதற்கு முன்பே அது நிகழாதவாறு தன்னைக் காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை ஒரு சிறிய நெருப்புப் பொறியின் முன்உள்ள பெரிய வைக்கோற்போர் போல அழிந்துவிடும். குற்றமொன்று உண்டானபின் காப்பது என்பது முற்றும் அழியும் பொருளை நெருப்பிலிருந்து மீட்கப் போராடுவதற்கு இணையான வீண் முயற்சியாகும்.

எனவே தனது நிறுவனத்தை பலவீனங்கள் இல்லாது காப்பாற்ற நினைக்கிற முகாமையாளர் அந்தப் பலகீனங்கள் நிறுவனத்தை அணுக முதலே அவற்றை நீக்க முயற்சி செய்ய வேண்டும் இதனையே வரும் முன் காக்கும் செயல் என்கிறார் திருவள்ளுவர்.

அதேபோன்று ஒருநிறுவனம் எத்தகைய வெற்றிகளை அடைந்தாலும் அங்கே இருக்கக்கூடிய பலகீனத்தை அறிந்து கொள்ள வேண்டியது முகாமையாளரின் கடமையாகும்.

அந்தப் பலவீனத்தை அறிந்து அதனை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாதுவிடில் அந்தப்பலகீனத்தோடேயே நிறுவனத்தை நடத்த முயன்றால் அந்த நிறுவனம் தோல்வி அடையக்கூடும் . இதனைத் திருவள்ளுவர்

"நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்குஇறுதி யாகி விடும்"
( குறள் 476)

என்ற ஈரடியில் தெளிவுபடுத்துகிறார் . எவ்வாறு ஒரு மரக்கொம்பின் நுனிக்கு ஏறிச் சென்றவர் ஊக்கமிகுதியால் அதனையும் கடந்து மேற்செல்ல முயன்றால் அவரது உயிருக்கு முடிவாகிவிடுமோ அதுபோல அறிந்துகொண்ட நிறுவனத்தின் பலவீனத்தை (மரநுனி) வைத்துக்கொண்டு நிறுவனத்தை தொடர்ந்தும் நடத்தினால் அந்த நிறுவனம் தோல்வி அடைந்துவிடும் என்கிறார் திருவள்ளுவர்.

துணைவலி (Opportunity) சந்தர்ப்பம் :

வெற்றிகரமான தொழிலுக்கு சாதகமான அனைத்துக் காரணிகளும் இதில் அடங்கும். உதாரணமாக சாதகமான வரிச்சலுகை, சிறந்த பொருளாதாரநிலைமை,குறைந்த போட்டி, பலமான சந்தை வாய்ப்பு ,அதிகரித்த ஏற்றுமதிக்கான வாய்ப்பு மற்றும் சாதகமான அரச சட்டங்கள், அரச கொள்கைகள் ஆகியன துணை வலியில் அடங்கும்.

இத்தகைய சாதகமான நிலைகள் எல்லாவற்றையும் பயன்படுத்தி ஒருமுகாமையாளர் செயல் ஆற்றுவாராயின் அவரினால் நிறுவனத்தினை வெற்றிகரமாக நடாத்தமுடியும். இதனைத் திருவள்ளுவர்

"துணைநலம் ஆக்கம் தரூஉம் வினை நலம்
வேண்டிய எல்லாம் தரும்" (குறள் 651)

என்ற ஈரடியில் விளக்குகிறார் .அதாவது ஒருநிறுவன முகாமையாளருக்கு வாய்க்கின்ற துணையான சந்தர்ப்பங்கள் எல்லாம் அவரது நிறுவனத்திற்கு நன்மையைக் கொடுக்கும் அதேபோல இந்த துணைகளைப் பயன்படுத்தி அந்த முகாமையாளர் செய்யும் காரியங்கள் நிறுவனத்திற்கு வேண்டிய எல்லா வெற்றிகளையும் கொடுக்கும் என்கிறார் திருவள்ளுவர் .

இத்தகைய சந்தர்ப்பங்களைச சாதகமாகப் பயன்படுத்தக்கூடிய முயற்சியும், நிறைந்த அறிவும் கொண்ட முகாமையாளரின் இடைவிடாத செயல்களினால் அந்த நிறுவனத்தை முன்னேற்ற முடியும் என்பதை திருவள்ளுவர் .

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
நீள்வினையால் நீளும் குடி"
(குறள் 1022)

என்ற ஈரடியில் தெளிவாக விளக்குகிறார். ஆகவே திருவள்ளுவர் கூறுவது போல் SWOT பகுப்பாய்வு மூலம் நிறுவனமொன்றின் முகாமைத்துவம் தனது நிறுவனத்தை வெற்றிகரமாக நடாத்துவதற்குப் பொருத்தமான தந்திரோபாய ங்களை உருவாக்க முடியும்.எனவே ஒருமுகாமையாளர் வினைவலி, தன்வலி, துணைவலி என்ற மூவகை வலியும் மாற்றானை விட அதாவது போட்டியாளரை விடத் தனது நிறுவனத்திற்கு அதிகமாக இருந்தால் திட்டமிட்ட செயலைச் செய்யலாம் குறைந்து தோன்றுமாயின் தோல்வியடையும் சந்தர்ப்பம் இருக்குமாயின் அநதச் செயலைக் கைவிடலாம் .இதனைத்தான் இவ்வாறு ஆராய்ந்து செய்வதைத்தான் திருவள்ளுவர் 'தூக்கிச் செயல்' என்கிறார் .



# கவிதை மஞ்சரி

கிருஷா

## கனவாகிவிட கூடாதா

நிஸா இஸ்மாயில்

இவைகள் ஒரு கனவாக இருந்துவிடக்கூடாதா
கனவுகள் ஒருபோதும் நிஜமாவதில்லையே
கனவுகள் அதிகம் நினைவிலும் நிற்பதில்லையே
கனவுகள் தூக்கத்தில் வருவதனால்
எதுவும் ஓரிரு நிமிடங்கள்தானே வாழ்கிறது

சில சோ(வே)தனைகளாலேயே
இவ்வாறான உளறல்கள்
சில வி(ச)திகளை ஏற்க முடிவதில்லைதான்
சில நெருக்கடிகள்
மனநோயைத்தானே தருகின்றன

கனவுபோல எல்லாமே இருந்து விடவும்
தேவையில்லை
நன்மைகள் கனத்த சில
கருமங்களும் உண்டுதான்
நினைத்து சுவைத்து பேசிக்கொள்ளும்
சில மனநிறைவுகளும் தானுண்டு
மனதை குளிர வைத்த சில
குளிர்பான கதைகளுமுண்டு

வெறிச்சோடிக்கிடக்கின்றன
பல வியாக்கியான வேட்டைகள்
தடுமாறிப் போகிறது லட்சிய பாதைகள்
பொழுதுகள் வீதியில்
குடும்பங்கள் பீதியில்
எங்கும் அழுகுரல்
ஒப்பாரியும் ஓலமும் நெடுங்குரலாய்
ஒலித்தவண்ணமே தானிருக்கிறது

## நன்றிக் கடன்..

ஷப்ரா இல்முத்தீன்

என்னைத் தாண்டிச் செல்கையில்
அவர்கள் என்னை
கண்டு கொள்ளாது
சென்றதைக் கூட
ஏற்றுக் கொள்ள முடியும்..

ஆனால் என்றோ ஒரு நாள்
என்னுடன் எதற்காக
அத்தனை சகஜமாக பேசினார்கள்
என்பதில் தான்
என் துக்கமெல்லாம்
உன்னைப் போன்றே...

அணியும் வரை
அலங்காரத்துக்காக
வைக்கப்பட்ட ஆடை என்பதற்காய்
நீங்கள் அணிந்த பின்னர்
அது உங்களுடையதல்லவென்று
ஆகி விடுமா என்ன

பெற்றுக் கொள்ள முன்னர்
விற்பனைக்கிருந்த
குடை என்பதற்காய்
நீங்கள் வெயிலுக்கும் மழைக்குமாய்
உபயோகித்தது
உங்களுடையதல்லவென்று
ஆகி விடுமா என்ன

எத்தனை முறிவுகள் வந்தாலும்
தெரிந்த ஒருவரை
தெரியாதவர் போல்
கடந்து செல்வது எத்தனை வலியானது

பொருட்களுக்கிருக்கும் மதிப்பு கூட
சில நேரங்களில்
மனிதர்களுக்கு இல்லாமல் போனதை
நினைக்கும் போது தான்
கொஞ்சம் மௌனமாய்
அழத் தோன்றுகிறது

கடந்து செல்கையில்
புன்னகைக்க சிரமமெனில்
கொஞ்சம் திரும்பி நின்று கொள்ளலாம்
என்றோ பழகியதற்கான நன்றிக் கடனாக...



## அழகு

சபானா ஆதம்லெப்பை
(ஓட்டமாவடி )

அழகென்றால் நீதானோ பெண்ணே
கலை மானின் கண்ணழகோ
கொள்ளையிடும் என்றானே கவிஞனும்
பெண்ணல்லா ஆண் மயிலும்
அழகாய் ஆனதே அறிவாய் ...

அழகென்றதெல்லாம்
அழகாய் இங்கே
அமைந்து விடுவதில்லை

அன்பால் அணைத்தால்
எதிரி விடும் மூச்சும்
ஓரழகு ...

வெயில் மழை பாராமல்
வயல் உழுத விவசாயி
அறுவடையில் செழிக்க
கண்களில் சொட்டும்
கண்ணீரோ ஓரழகு....

அண்டி வாழ கூடில்லை
என்று கண்கலங்கி நின்றிடாமல்
காகத்தின் கூட்டில் முட்டையிடும்
குயிலின் தைரியமோ ஓரழகு.....

பக்கத்திலொருவன் பசியறிந்து
தன்னுணவில் ஒரு பிடி
கொடுத்துதவும் மனிதமோ
ஓரழகு.......

வறண்டு கிடந்த நிலமும்
செழித்து வளர பருவம் பார்த்து
பெய்த மழையை கண்டு
சிரிக்கும் பயிரின் பசுமையோ
ஓரழகு.......

பல்கதை தாண்டி பல்கலையில்
சாதனை புரியும் பெண்ணின்
சரித்திரம் பேசும்
சாமர்த்தியமோ ஓரழகு.......

தான் கேட்கும் அத்தனையும்
அழகாய் கற்பனை செய்யும்
பார்வையற்றவனின்
மன ஓவியமோ ஓரழகு.........

இத்தனை அழகும் கொட்டிகிடக்க
தன் கண் கண்டதே
அழகு என்று எண்ணும்
மனிதக் கண்களோ பேரழகு.... ...!!!



## தியாகத்தால் உருவான திருநாள்

நுஸ்ரத் மஹ்ரூப்
மாதம்பை

இல்லம் தோறும்
இன்று
ஈகைத் திருநாள்....

ஈகை இதய சுவர்களுக்குள்
நுழைந்து விட்டால்
இரும்புப் பாரமும்
இம்மியளவுதான்....

இறைக் காதலால்
இதயத்தை நிரப்பிக்கொண்டதால்
இப்றாஹீம் நபி
இறை நண்பராகிவிட்டார்...
மனைவி ஹாஜர்
வரலாற்று நாயகியாளர்
மகன் இஸ்மாயீல்
வரலாற்றுப் புருஷராகினார்
ஆம்...
அது ஒரு
தியாகக் குடும்பம்....

அழகிய தியாக வாழ்வு...
அதனை மீள் வாசிக்கத்தானே
மனித வெள்ளம் இறையில்லம்
கஃபாவை சுற்றிச் சுற்றி
வலம் வருது...

இறை புரத்து
கனவை நனவாக்கிட
பாசத் தந்தை இப்றாஹீமும்...
இறை ஆணை எனில்
அறுத்துப் பலி இடுங்கள்
தந்தையே என இஸ்மாயீலும்.....

இறை ஆணையை
இனிதே அரங்கேற்றி..
இறை உவப்பைப் பெற்றிட
இதயக் கொழுந்தான மகன்
இஸ்மாயீலின் கழுத்து வரை கத்தி...
அதனால் தானே
இந்த குர்பானி...

இந்த மார்க்கம்
இன்றுவரை நிலைத்திருக்க...
இப்பேற்பட்ட தியாகங்கள்
அல்லவா சான்று...

அஸ்திவாரத்தை
தியாகம் கொண்டு அமைத்ததால்
ஆட்டம் காணாமல் இன்றுவரை
அசையாமல் இருக்குது
இனிய மார்க்கம்
இஸ்லாம்....

உரத்துச் சொல்வோம்...
அல்லாஹு அக்பர்...
அல்லாஹு அக்பர்...
வலில்லாஹில் ஹம்ந்து..



## எது சரி

குப்பிளான் மோகன்

உக்ரைன் என்றொரு தேசம்
உயிர்கள் அழிகின்ற தேசம்
உடமைகளை இழந்து மக்கள்
உயிர் வாழ ஏங்கும் மக்கள்

வரலாறுகள் முழுவதும் பார்க்கலாம்
வாட்டி வதைத்து அழித்த போர்கள்
வல்லரசுகளை உருவாக்கிய போர்கள்
வளமிக்க தேசங்களை அளித்தன

மனித விழுமியங்கள் மேம்பட்டு
மனித நாகரிகம் வளர்ந்தாலும்
மனிதர்களை வதைக்கும் போர்கள்

மனிதர் வாழ்வை அழிப்பது சரியா?



## அல்லாஹ்வுக்கு அடிபணிவோம்

வரக்காமுறையூர் ராசிக்

இறை நேசச் செல்வர்
ஏந்தல் நபி இப்றாஹீமுக்கு
ஏக புதல்வன் இஸ்மாயிலை
அறுத்து பலி இடுவதாய்
இறை கட்டளை யொன்னு
இராக் கனவாய் தோன்றிற்று

கொஞ்சி மகிழ வொரு குழந்தை
கோமா னிறைவன் அவனிடமே
கெஞ்சி தானும் பெற்றாலும்
அறும் என்று சொன்னதுமே
அடி பணிந்தே எழுந்தார்
அன்பு மகனை அழைத்தார்

இறை வார்த்தை மகனிடத்தில்
இதமாய் எடுத்துச் சொன்னதுமே
இறை யன்பில் திளைத்த
இளைய நபி இஸ்மாயிலும்
இறை கட்டளை தானேற்று
இனிதாய் லப்பைக் சொன்னாரே!

போகும் வழி பாதைதனில்
பொல்லான் இப்லீஸ் தோன்றி
சாகும் நாள் வந்ததென்று
சத்தியம் செய்து காட்டி
இகத்தின் பக்கம் ஈர்த்திடவே
எத்தனித்தான் பல வழிகளிலே!

தீனில் விளைந்த இஸ்மாயில
தீர்ப்பாய் சொன்னார் 'சாத்தானே
என்னை அறுத்து பலியிட
ஏகன் சொன்னான் நபிக்கு
ஏற்றேன் அதை நானென'
கற்கள் எடுத் தடித்தாரே!

அறுக்கும் நேரம் வந்ததும்
அன்பு அப்பா நபியிடத்தில்
அருமை மகனும் நவின்றார்
என் னருமைத் தந்தையே
இறுதியாம் என் ஸலாத்தை
எத்தியே வையுங்கள் தாயிடத்தில்

சித்தம் கொண்ட இப்றாஹீம்
சிறிதும் சோக மில்லாமல்
கத்தி எடுத் தறுத்திடவே
கழுத் தறுபடா நிலை கண்டு
ஆத்திரம் கொண் டறுத்தார்
அதுதா னங்கு பலிக்க வில்லை

தீரம் கண்ட வல்லோன்
தீர்ப்பாய் சொன்னான் முடிவு
தீர்க்கும் சக்தி கத்திக் கில்லை
தீர்க்க தரிசனம் தந்தாலன்றி
தீர்ப்பு கேட்ட மறுகனம்
திகைத்து நின்றார் ஒருகனம்

அதிசயித்து நின்ற வர்க்கு
அன்பாய் வஹியொன்று வந்ததுவே
கதிகலங்கி நின்றவருக்கது
காதில் தேனாய் இனித்திடவே
துதி செய்யவே துணிந்தெழுந்தார்
தூயோ னிறை அவனை யென்றும்

இறை யன்பர் இப்றாஹிமின்
இறையச்சம் மெச்சி யவனும்
அறுத்து பலியிட அருளிய
அந்த சுவனத்து ஆட்டை
அறுத்து அவன் வழி பணிய
அமரர் ஜிப்ரீல் அழைத்தார்

அன்பன் அல்லாஹ் சோதித்தான்
அதனால் நாங்கள் சாதித்தோமென
அல்லாஹ் அளித்த ஆட்டை
அவன் வழியில் அறுத்துவிட்டு
அப்பா மகனாய் தாம் நின்று
அல்ஹம்துலில்லாஹ் கூறி நின்றனர்

அருமை நபியும் அன்று
அழகாய் செய்த தியாகமதை
வீறு கொண்டு புகழ்வதனால்
வல்லவ னருள் கிடைத்திடுமோ?
சிறப்பா யிதை உணர்ந்திங்கு
சீர் வழி அடிபணிவோம்

## காத்திருப்பு

இணுவில் வாகீசன்

பொருட்களின் விலையேற்றமாய்
டொலரின் அதிகரிப்பாய்
உன்மேலான காதல்
தினம் தினம் அதிகரித்து செல்கின்றது

ஒரு பொதுமகனாய்
நீ கிடைத்து விட்டால் போதும்
என்ற மனநிலையில்
உனை தினம் தொடர்கின்றேன்
நீயோ
ரூபாயைப் போல் எனை
ஒதுக்குகின்றாய்

அதிகரித்த விலை வாசியாய்
தொலைக்காட்சித்தொடர்களாய்
எப்போது முடியும் என்ற
விடையின்றி
என் மேலான உன் கோபம்
காத்திருப்பேன்
யாசகனாய் நீ வரும்வரை

## வலிகள் கிறுக்கிய கடிதம்

பொத்துவில் அஜ்மல்கான்

பணமிருந்த போது
உணவில்லா காலத்தில்
வாழ்ந்து பழகிய
நமக்கு உணவிருந்த
போதும் பணமில்லா
காலத்தில் வாழத்
தெரியாது போனது
ஏனோ!


ஆடம்பரமாய் வாழ்ந்து
விட்டோம் என்பதற்காக
கடன் வாங்கி
பழக்கப்பட்டு போனதே
இந்த வாழ்வு

பணம் கொடுத்து
குணமிழந்து கிடந்தும்
கனவென்று காணமல்
போனது ஏனோ
நாம்!

வழி தெரிந்த
நமக்கு வழிகள்
கிடையாது என
குருடனாய் நடித்துப்
பழகியதுதான் மிச்சம்
இன்று

பறந்த பூமியில்
இழந்து போனது
அதிகம் இருந்தும்
எம்மை உயர்ந்திப்
போகாமல் போனது
ஏனோ இந்த
விதி

மறந்த பொழுதுகளை
எழுந்து நடக்குமென
நினைக்கிறேன் கடந்து
போக வழிகள்
கிடைக்கும் என
எண்ணி



## மீண்டு(ம்) வரும் மிதி வண்டி!

இரா.ஜெயக்குமார்

ஆண்ட குடும்பங்கள்
ஆனவரை சுருட்டியதால்
மூண்ட நெருக்கடியில்
மீண்டது மிதிவண்டி!

பத்தாயிரம் ரூபாவில்
வித்த மிதிவண்டி
நூறாயிரம் தாண்டி
வீறுநடை போடுதிங்கே!

கனகாலமாய் எங்கும்
கறள்பிடித்துக் கிடக்குதென

இலவசமாய் கொடுத்தவரும்
கலங்கியழும் மிதிவண்டி!

காற்றைப் பழுதாக்கும்
கனத்த வாகனங்கள்
போகவழியின்றி நிற்க
வேகம் பெறும் மிதிவண்டி!

தினகரன் வாரமஞ்சரி
BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

Advertise Here
வாரமஞ்சரி BUDGET adz
5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

200W Solar Cobra
STREET LIGHT
Powerful and durable
High brightness
Can work full night
No sensor
1 year warranty


0777 806 542
No. 96, New Moor Street, Colombo 12

UPVC Windows & Doors


Reasonable Price
Raklo International (Pvt) Ltd
No - 21/19, Sri Soratha Mawatha, Gangodawila, Nugegoda.
Tel : 0112 80 28 83/4 Hotline : 0777 720 870
Email : rakloiinternational@yahoo.com Web : www.raklonpvc.com

# இன்ஸ்டன்ட் நூடுல்ஸ் பிறந்த கதை தெரியுமா?

உலக மக்களைக் கவர்ந்த இன்ஸ்டன்ட் உணவு வகைகளில் இன்ஸ்டன்ட் நூடுல்ஸ்க்கு தனி இடம் உண்டு. இரண்டே நிமிடங்கள் போதும் சமைக்கத் தெரியாதவர்களும் சமைத்து ருசிக்கலாம் என்கிற விளம்பரத்தின் மூலமாக, மூலை முடுக்கெல்லாம் பிரபலமாகி, இன்றைக்கு தவிர்க்க முடியாத உணவாகிவிட்டது. அவசரமாக அலுவலகம் செல்லும் போதும் சரி, நேரம் கடந்து வீடு திரும்பினாலும் சரி, பேச்சுலர்கள் பசியை பெரும்பாலான நேரங்களில் தீர்ப்பது இந்த உடனடி நூடுல்ஸ்தான்.

சிறு சிறு மளிகைக் கடைகள் முதல் பன்னாட்டு பல்பொருள் அங்காடிகள் வரை, பெரும்பாலான அலமாரிகளை அலங்கரித்து ஆக்கிரமித்திருப்பது இந்த நூடுல்ஸ் பாக்கெட்டுகள்தான். அடிக்கடி சாப்பிட முடியாவிட்டாலும், அவசரத்திற்கு உதவுவதால், இல்லத்தரசிகளின் மாத மளிகை பட்டியலிலும் தவிர்க்க முடியாத இடத்தைப் பிடித்திருக்கிறது இந்த இன்ஸ்டன்ட் நூடுல்ஸ்.

'உலக இன்ஸ்டன்ட் நூடுல்ஸ் சங்கம்' (World Instant Noodles Association) எனும் அமைப்பின் கூற்றுப்படி, ஒரு மனிதன் ஒருமுறை உண்ணும் நூடுல்ஸின் அளவு 57 கிராம் என அளவிடப்படுகிறது. அதை ஒரு சர்விங் (serving) என்று ஆங்கிலத்தில் கூறுகிறார்கள். அதன்படி கணக்கிட்டுப் பார்த்தால், ஒவ்வொரு ஆண்டும், உலக மக்கள் உட்கொள்ளும் உடனடி நூடுல்ஸின் அளவு பத்தாயிரம் கோடி சர்விங் (serving) என்று, அதே 'உலக உடனடி நூடுல்ஸ் சங்கம்' கூறுகிறது. இன்னும் எளிமையாகக் கூறவேண்டும் என்றால், உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு ஆண்டும், குறைந்தது 13 முறையாவது உடனடி நூடுல்ஸை உட்கொண்டிருக்க வேண்டும்.

அப்படியென்றால், நீங்களும் நிச்சயமாக சாப்பிட்டிருப்பீர்கள்□ ஆனால், இந்த உடனடி நூடுல்ஸ் எங்கிருந்து வந்தது? எப்படி எல்லா இடங்களுக்கும் பரவியது? என்றெல்லாம் யோசித்திருக்கிறீர்களா? தொடர்ந்து படியுங்கள் விரிவாகத் தெரிந்துகொள்ளலாம்.இந்தப் பெண்களை சொந்தக்காலில் நிற்கவைத்தவை காளான்கள்தான் எப்படி? சர்வதேச உணவுப் புகைப்படப் போட்டி: விருது வென்ற இந்தியப் புகைப்படம்புரோட்டீன் பவுடர் சாப்பிடுவதால் பக்கவிளைவுகள் ஏற்படுமா?

எங்கும் காணப்படும் இன்ஸ்டன்ட் நூடுல்ஸ்

வெற்றிகரமான தொழில்துறை உணவுகளில் ஒன்றுதான் இந்த இன்ஸ்டன்ட் நூடுல்ஸ். விலையும் குறைவு, சமைப்பதும் எளிமை என்பதால், இதை எங்கு வேண்டுமானாலும் சமைக்கலாம், சாப்பிடலாம். அதனால்தான், எவரெஸ்ட் உச்சிக்கு செல்பவர்களும் கொண்டு செல்கிறார்கள். விண்வெளி வீரர்கள் விண்வெளிக்கும் கொண்டு செல்கிறார்கள்... இவ்வளவு ஏன், அமெரிக்க சிறைகளில் அதிகமாக வர்த்தகம் செய்யப்படுகிற உணவுப் பொருளாகவும் இந்த இன்ஸ்டன்ட் நூடுல்ஸ் மாறியிருக்கிறது.

எங்கிருந்து வந்தது?

இன்ஸ்டன்ட் நூடுல்ஸ் எங்கிருந்து வந்தது என்பதை தெரிந்துகொள்ள வேண்டுமானால், இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய ஜப்பானுக்கு மீண்டும் செல்ல வேண்டும். குண்டு வீச்சினால் பல பகுதிகள் அழிக்கப்பட்டு, பெரும்பாலான மக்கள் பட்டினி கிடந்த காலம் அது. Momofuku Ando என்கிற ஜப்பானிய தொழிலதிபர் தன்னுடைய தொழிலில் நஷ்டமடைந்து, கடும் பொருளாதார நெருக்கடியில் இருந்தார். அவர், தன்னை புதுப்பித்துக்கொண்டு, மீண்டுவர நினைத்தார். கடும் குளிரில், ஒரு கப் பாரம்பரிய ரேமென் நூடுல்ஸுக்காக (Ramen Noodles) பசியோடு நீண்ட வரிசையில் காத்திருந்த ஜப்பானியர்களைக் கண்டதும், Momofuku Andoவுக்கு ஒரு யோசனை தோன்றியிருக்கிறது.

அமெரிக்க அரசாங்கத்தால் ஜப்பானுக்கு வழங்கப்பட்ட கோதுமை உணவுகளை உண்பதற்கு, மக்களை ஊக்குவிக்க ஜப்பானிய அரசாங்கம் வழி தேடுவதும் அண்டோவுக்கு தெரியவந்தது.

உடனே தன்னுடைய வீட்டின் பின்புறத் தோட்டத்தில் இருக்கும் மரக்குடிலுக்குச் சென்றவர், ஒரு ஆண்டு கழித்து, இன்ஸ்டன்ட் நூடுல்ஸ் தயாரிப்பு முறையோடு வெளியே வந்தார். அவர் நினைத்தது போலவே, இன்ஸ்டன்ட் நூடுல்ஸ் அதிவேகமாக பிரபலமடையத் தொடங்கியது. ஜப்பானின் நவீன பொருளாதாரத்திற்கு எழுச்சியை ஊட்டி, மாணவர்களுக்கும், பசியோடு இருந்த தொழிலாளர்களுக்குமான உணவாகவே மாறிவிட்டது இன்ஸ்டன்ட் நூடுல்ஸ். மிக விரைவாக, உலகத்தின் வெவ்வேறு பகுதிகளுக்கும் பரவத்தொடங்கியது. ஏனென்றால், யாருடைய சுவைக்கும் பொருந்தக்கூடிய வகையில் மாற்றியமைக்கக்கூடிய உணவாக இந்த இன்ஸ்டன்ட்நூடுல்ஸ் பார்க்கப்பட்டது.

தாய்லாந்தில், காய்கறிகளின் கலவையுடன் கூடிய சுவையில் க்ரீன் கர்ரி நூடுல்ஸ் மிகவும் பிரபலமானது. மெக்ஸிகோவில், தக்காளி, பூண்டு, காய்ந்த மிளகாய், கொத்தமல்லி, எலுமிச்சை சாறு கலந்த சால்சா ரெசிபி மிகவும் பிரபலம். ஜப்பானுக்குச் சென்றால், கோழி இறைச்சியும் உருளைக்கிழங்கு வறுவலும் கலந்த நூடுல்ஸை முயற்சி செய்யலாம். பாகிஸ்தானில், பீட்சா சுவையிலான நூடுல்ஸ் மிகப் பிரபலம்.உங்களுக்கு நூடுல்ஸ் பிடிக்குமா? அது குறித்த சுவையான 10 விஷயங்கள் இதோ...பெண்கள் குழு சோதித்த பின்னரே உணவு உண்ட ஹிட்லர்: ரகசியம் வெளியானது எப்படி? ருசியான பிரியாணி சுவைக்க ஆசையா? நீங்கள் அறிய வேண்டிய சமையல் விதிகள் இவைதான்!

அமெரிக்காவில், சிறை உணவுக்கான செலவுகளைக் குறைக்கும் வகையில், கைதிகளின் உணவில் கூட விலை மலிவான இன்ஸ்டன்ட் நூடுல்ஸ் அதிக பங்கு வகிக்கிறது. அவர்கள், நூடுல்ஸில் தண்ணீரை கலந்து மாவாக அரைத்து, பீட்சாவுக்கான தற்காலிக அடித்தளமாகப் பயன்படுத்துகிறார்கள். நொறுக்கப்பட்ட நூடுல்ஸை பயன்படுத்தி, சாண்ட்விச்கள் செய்கிறார்கள். 'கோக் ரேமென்' என்கிற பெயரில், கோலா குளிர்பானம் கலந்தும் நூடுல்ஸ் சாப்பிடுகிறார்கள்.


## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் தொழில் வாய்ப்புகள்

SMIB

SMIB, தேசத்தின் முதன்மையான வீடமைப்பு வங்கியாக, வங்கியின் செயல்பாட்டை மறுசீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது, இது வாடிக்கையாளர்களுக்கு மிகவும் திருப்திகரமான மற்றும் பல்வேறு சேவைகளை வழங்கும் நிறுவனமாகும். அதுபோல, பின்வரும் தலைமைத்துவப் பதவிகளுக்கான பொருத்தமான தகுதிகள் மற்றும் அனுபவத்துடன் வணிக இலக்குகளை அடைவதற்கு ஆற்றல் மிக்க தலைமைப் பாத்திரங்களை வெளிப்படுத்தி முழு அர்ப்பணிப்புடன் செயல்படும் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்களை நாங்கள் அழைக்கிறோம்.

பிரதான உள்ளக கணக்காய்வாளர் **(CHIEF INTERNAL AUDITOR)**

வேலையின் ஒட்டுமொத்த நோக்கம், தொழில்நுட்ப, செயல்பாட்டு, நிதி மற்றும் இணக்க கணக்காய்வுகளைத் திட்டமிடுதல் மற்றும் நடாத்துதல், தேர்ந்தெடுக்கப்பட்ட கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் நல்ல நிறுவன நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காக வங்கியின் செயற்பாடுகள் மற்றும் நோக்கத்தை அடைவதற்காக உள்ளக கணக்காய்வு கட்டுப்பாட்டு அமைப்புகளின் செயல்திறன் மற்றும் / அல்லது செயல்திறனை மேம்படுத்துதல்.

**முக்கிய பொறுப்புகள்**

- வரலாற்று பரிவர்த்தனைகளை மதிப்பீடு செய்தல், போக்குகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் வங்கியின் பரிவர்த்தனை செலவுகளைக் குறைப்பதற்கான செயல்முறைகளின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குதல்.
- கொள்கை மற்றும் செயல்பாட்டு முடிவுகள் சரியாக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக அமைப்புகள் மற்றும் கட்டுப்பாடுகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்.
- நிறுவன அமைப்புகளின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய பயனுள்ள மற்றும் திறமையான தகவல் அமைப்பு அடிப்படையிலான கணக்காய்வுகளை நிறுவுவதை உறுதி செய்தல்.
- தணிக்கை எல்லைக்குள் வருடாந்த/மாதாந்த கணக்காய்வுகளை திட்டத்தின்படி வங்கி செயல்பாடுகளில் வழக்கமான கணக்காய்வை மேற்பார்வையிடல்.
- கொள்கைகள், நடைமுறைகள், அங்கீகரிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம், முக்கிய முகாமைத்துவ முடிவுகள், உள்ளக சுற்றறிக்கைகள் மற்றும் பிற அனைத்து ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பாக வங்கியின் வணிகப் பரிவர்த்தனைகளின் இணக்கத்தை சரிபார்த்து அறிக்கைகளைத் தயாரிக்கவும்.
- மோசடிகள் மற்றும் நிதியை தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்க உள்ளக கணக்காய்வு கட்டுப்பாட்டு அமைப்புகளை உருவாக்குதல்.
- வங்கி நடவடிக்கைகளில் கணக்கியல் மற்றும் கணக்காய்வு தரநிலைகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்.
- வங்கிக்குள் உருவாக்கப்பட்ட கணக்கியல் மற்றும் பிற தரவுகளின் நம்பகத்தன்மையைக் கண்டறிதல்.
- கணக்கியல் பயன்பாடுகள், நிதி மற்றும் செயல்பாட்டுக் கட்டுப்பாடுகளின் பெறுபேறு மற்றும் போதுமான தன்மையை மதிப்பாய்வு செய்தல் மற்றும் மதிப்பிடுதல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்**
இலங்கை பட்டய கணக்கியல் நிறுவனத்தின் இணை அங்கத்துவம் மற்றும் கணக்காய்வில் 10 வருட கால அனுபவம் இதில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும். வங்கி / நிதி நிறுவனமொன்றின் கணக்காய்வு அனுபவம் மேலதிகத் தகைமையாகும்.

**சம்பளம்**
சம்பள அளவு : ரூபா 203,930 - 6,120 x 12 - 277,370 ஒரு மாதத்திற்கு வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் சகிதம். (10% கொடுப்பனவு, வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் வாடகைக் கொடுப்பனவு)

**வயது**
45 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே ஒரு அரசு துறை நிறுவனத்தில் வேலை செய்பவர்களுக்கு உச்ச வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது)
சிரேஷ்ட கணக்காளர்

**முக்கிய பொறுப்புக்கள்:**
SLFRS இற்கமைவாக துல்லியமான நிதியிடல் கூற்றுக்கள் மற்றும் ஏனைய உரித்தான ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகளை தயாரித்தல். அனைத்து கொடுக்கல் வாங்கல்கள் அண்ணளவாகவும் குறித்த வேளையிலும் பதிவு செய்வதை உறுதிப்படுத்தல் வேண்டும். பதிவுகளை சிறந்த முறையில் பதிவு செய்வதை உறுதிப்படுத்துவதற்காக தவறுகளை அடையாளம் காணல். உரிய திகதிக்கு முன்னராகவே ஒழுங்குறுத்தல் அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் பதிவேற்றம் செய்தல். வரித் திரும்பல்கள் உரிய திகதிக்கு முன்னராகவே மேற்கொள்வதை உறுதிப்படுத்தல் மற்றும் அனைத்து வரி அறிக்கைகளையும் கோவைப்படுத்தல். மாதாந்த அடிப்படையில் அவைகள் பொருத்தமாக பதிவு செய்யப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்காக வருமானங்கள் மற்றும் செலவினங்களை பகுப்பாய்வு செய்தல். ஆதனம், பொறுப்புக்கள், வருமானமும் மற்றும் செலவின பதிவுகளை தயாரித்து கோவைப்படுத்துவதற்காக கணக்கு தகவலை தொகுத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல்.

**தகைமைகள்:**
இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவத்தின் கூட்டிணைந்த அங்கத்துவம் / ஐக்கிய ராச்சியத்தின் முகாமைத்துவ கணக்காளர்களின் பட்டயம் பெற்ற நிறுவகம்.

**அல்லது**

கணக்கியல்/ நிதி ஆகியவற்றில் பெற்ற இளமாணிப் பட்டம் மற்றும் இடைநிலை அல்லது இலங்கையின் பட்டயம் பெற்ற கணக்காளர்களின் நிறுவகத்தின் தகுதிச்சான்று பெற்ற பரீட்சையில் சித்தி அல்லது ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவ கணக்காளர்களின் பட்டயம் பெற்ற நிறுவகத்தின் I மற்றும் II ஆம் படிநிலை.

**அனுபவம்:**
கணக்கியல்/ நிதி ஆகியவற்றில் ஆறு (06) வருட அனுபவம் அத்துடன் ஆகக் குறைந்தது மூன்று (3) வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் மற்றும் வங்கித்துறை நிறுவனமொன்றின் அனுபவம் சேர்க்கப்பட்ட தகைமையாக கருதப்படும்.

**வேதனம்:**
சம்பள அளவுத்திட்டம்: மாதாந்தம் 158,315 - 4,390 x 12 - 210,995 ரூபாவும் வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட படிகளும். இந்த அடிப்படையிலான மாதாந்த தேறிய சம்பளமானது அண்ணளவாகும்.

**வயது:**
40 வயதிற்கு மேற்படாமலிருத்தல். (இருப்பினும் ஏற்கனவே ஒரு அரசு துறை நிறுவனத்தில் வேலை செய்பவர்களுக்கு உச்ச வயதெல்லை பிரயோகிக்கப்படமாட்டாது)
பொது நிபந்தனைகள்

**தேர்வு முறை:**
வங்கியின் ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் நடைமுறைக்கு ஏற்ப விண்ணப்பங்கள் அழைக்கப்படும். நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

**பிற நன்மைகள்**
- ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 15% தொழில் வழங்குநரால் பங்களிப்புச் செய்யப்படும் மற்றும் பணியாளரால் 10% பங்களிப்புச் செய்தல் வேண்டும். வங்கி ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு (ETF) பங்களிப்புச் செய்யும்.
- வருடாந்த மிகையூதியமாக இரண்டு மாத சம்பளம்.
- சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட பிறகு சலுகை விகிதத்தில் வீடமைப்புக் கடன்கள்
- வங்கியின் மருத்துவத் திட்டத்தின் கீழ் நன்மைகள்
- பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறைக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் - 25/07/2022

**விண்ணப்பிக்கும் முறை**
ஆர்வமும் தகுதியுமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் கல்வி/தொழில்சார் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் இரண்டு தொழில்சார் உறவினரல்லாத சான்றுபகர்வோரின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு எண்களை அனுப்ப வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் மிகவும் இரகசியமாகப் பேணப்படும் என்பதுடன் எந்த விதமான ஆதரவு பெற முயல்தல் தகுதியற்றதாக கருதப்படும். ஆட்சேர்ப்பு தெரிவை ஒத்திவைத்தல் அல்லது இரத்துச் செய்தல் அல்லது வேறு எந்த நடவடிக்கையும் மற்றும்/அல்லது இந்த ஆட்சேர்ப்புக்கான தேர்வு தகவுத்திறன்களை மாற்றும் உரிமையை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. பணிப்பாளர் சபையின் தீர்மானம் இறுதியானதாகவும் மற்றும் உறுதியானதாகவும் இருக்கும்.

விண்ணப்பங்களை **careers@smib.lk** மூலமாக மட்டுமே அனுப்புதல் வேண்டும்.



## பெயர் மாற்றம்

சம்மாந்துறை, கல்லரிச்சல் -2, ஸலாம் பள்ளி வீதி 212/ B3ம் இலக்க முகவரியைச் சேர்ந்த தேசிய அடையாள அட்டை இல. 200129304810க் கொண்ட எனது பெயர் பிறப்புச் சான்றிதழ் இலக்கம் 8070ல் பதியப்பட்டுள்ள **முஹம்மட் றிம்கான்** என்ற பெயரை இன்று முதல் **முஹம்மது றிம்ஸான்** என மாற்றிக் கொண்டுள்ளேன் எனவும், இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் ஸ்ரீலங்கா சனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத் தருகிறேன்.

**அச்சி முஹம்மது முஹம்மது றிம்ஸான்**



Repeat Your Ad For Better Offers



## பிரதேச அபிவிருத்தி வங்கி

பிரதேச அபிவிருத்தி வங்கியானது பின்வரும் பதவி வெற்றிடத்திற்கு சிறந்த தலைமைத்துவ பண்புகளுடைய, முன்னனுபவமுள்ள தொழில் வல்லுனர்களிடமிருந்து, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### உதவி பொது முகாமையாளர் - நிதி

**முக்கிய தேவைகள்**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுள்ள பட்டத்துடன் CA/CIMA/ACCA அங்கத்துவத்துடனான தொழில்சார் தகைமைகள்.
- சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் (பிரதான முகாமையாளர்) ஆகக்குறைந்தது 03 வருட அனுபவத்துடன் வங்கி நிதி நிறுவனத்தில் 12 வருட அனுபவம்.
- வங்கித்துறையில் தொழில்சார் தகைமை மேலதிக நன்மை பயக்கும்.
- நிதி முகாமைத்துவம், இடர் முகாமைத்துவம், கணக்காய்வு அனுபவம் மேலதிக தகைமைகளாக கருதப்படும்.
- வயது - 50 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும்.

**சம்பளம் கொடுப்பனவுகள்**

தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களுக்கு கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் வங்கித் தொழிற்துறையில் நிலவும் தரநிர்ணயங்களுக்கு ஈடான ஏனைய அனுகூலங்கள் அளிக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

பூர்த்தி செய்யப்பட்ட உங்களது சுயவிபரக்கோவையை, சிபாரிசு செய்யக்கூடிய உறவினரல்லாத இருவரின் தொடர்பு கொள்ளக்கூடிய விபரங்களுடன் 2022 ஜூலை 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய விடயத்தலைப்பில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு, careers@rdb.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை மாத்திரம் அழைத்தல், ஆட்சேர்த்தலை ஒத்திவைத்தல் அல்லது இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கே உரித்தாகும்.

பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

பிரதான மனிதவள அதிகாரி
பிரதேச அபிவிருத்தி வங்கி,
இல. 933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி.
0112 42 52 62 | www.rdb.lk



## வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா மின்சார கம்பனி

## வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள்

இலங்கையின் விநியோக அமைப்பொன்றான வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனமானது நீர்கொழும்பிலிருந்து காலி வரையுமான கரையோர பிரதேசங்களை உள்ளடக்கிய ஏழு கிளைகளையும் 560,000 இற்கு மேலான வாடிக்கையாளர்களுக்கு சேவைபுரிவதுடன் 1500 ஊழியர்களுடனான தொழிற்படையையும் கொண்டுள்ளதுடன் பின்வரும் பதவிகளுக்காக தகைமையுள்ள நபர்களை தேடுகின்றது.

| | |
|---|---|
| **1. வாடிக்கையாளர் சேவை அத்தியட்சகர் (ME Class II Grade II B)** | |
| கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகள் | 1 மின்னியல் பொறியியலில் NDT (மொறட்டுவ) அல்லது<br>2. மின்னியல் பொறியியலில் HNDE (SLIATE)<br>3. பொறியியல் தொழில்நுட்பவியலில் டிப்ளோமா (இலங்கை திறந்த பல்கலைக்கழகம்) அல்லது.<br>4. TVEC இனால் அங்கீகரிக்கப்பட்ட NVQ இற்கு நிகரான மின்னியல் துறையில் வேறேதாவது தகைமை. |
| அனுபவம் | உரித்தான துறையில் பத்து (10) வருட தகைமைப் பின் தகைமைப் பட்ட திருப்திகரமான சேவை |
| ஏனைய தேவைப்படுத்தல்கள் | 2017ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க பொறியியல் பேரவை இன் பிரகாரம் கூட்டிணைக்கப்பட்ட பொறியியலாளராக பதிவு |
| வயது | 2022 ஜூலை 20ஆம் திகதியன்று 50 வயதிற்கு குறைவாகவிருத்தல் |
| பதவிகளின் எண்ணிக்கை | மூன்று (03) |
| **2. மனித வளங்கள் மற்றும் நிருவாக அலுவலர் (HR Class III Grade II)** | |
| கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகள் | க.பொ.த. (உ-த) பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி<br>அத்துடன்<br>1. மனித வளங்கள் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தியில் டிப்ளோமா CIPD (UK) அல்லது<br>2. மனித வளங்கள் முகாமைத்துவத்தில் டிப்ளோமா அல்லது HRM (CIPM) இல் தொழில்சார் தகைமைகள்.<br>3. பட்டதாரிப் பட்டம் |
| அனுபவம் | 100 ஊழியர்களுக்கு மேற்பட்ட தொகையான ஊழியர்களுடைய நிறுவனமொன்றில் உரித்தான துறையில் பத்து (10) வருட அனுபவம். |
| வயது | 2022 ஜூலை 20 ஆம் திகதியன்று 35 வயதிற்கு குறைவாகவிருத்தல் |
| பதவிகளின் எண்ணிக்கை | ஒன்று (01) |
| **3. களஞ்சியசாலைகள் அலுவலர் (ST Class V Grade I)** | |
| கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகள் | க.பொ.த. (உ-த) பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி<br>அத்துடன்<br>தேசிய வாழ்தொழில் தகைமை 4 ஆம் அல்லது உயர்ந்த மட்டத்திற்கு நிகரான களஞ்சியசாலைகள் முகாமைத்துவத்தில் கொள்வனவு செய்தல்/ வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம் ஆகியவற்றில் டிப்ளோமா. |
| அனுபவம் | 100 ஊழியர்களுக்கு மேற்பட்ட தொகையான ஊழியர்களுடைய நிறுவனமொன்றில் வழங்கல் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவத்தில் பதினைந்து (15) வருட அனுபவம். |
| வயது | 2022 ஜூலை 20 ஆம் திகதியன்று 40 வயதிற்கு குறைவாகவிருத்தல் |
| பதவிகளின் எண்ணிக்கை | ஒன்று (01) |
| **4. புலனாய்வு அலுவலர் (IO Class V Grade I)** | |
| கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகள் | க.பொ.த. (உ-த) பரீட்சையில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி<br>அத்துடன்<br>TVEC ஒன்றினால் ஏற்றுக் கொள்ளப்படட தேசிய வாழ்தொழில் தகைமை 4 ஆம் மட்டத்துடன் தொழில்நுட்ப கல்லூரியொன்றினால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றினால் வழங்கப்பட்டது. |
| அனுபவம் | 100 ஊழியர்களுக்கு மேற்பட்ட தொகையான ஊழியர்களுடைய நிறுவனமொன்றில் பதினைந்து (15) வருட அனுபவம். |
| வயது | 2022 ஜூலை 20 ஆம் திகதியன்று 40 வயதிற்கு குறைவாகவிருத்தல் |
| பதவிகளின் எண்ணிக்கை | ஒன்று (01) |


ஏனைய பல்வகையான நன்மைகளுடன் கவர்ச்சிகரமான சம்பளம் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிக்கு வழங்கப்படும்.

விபரமான சுயதரவு மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் அத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு தொலைபேசி இலக்கங்கள் ஆகியவற்றை கீழேயுள்ள முகவரிக்கு 2022 ஜூலை 20ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் தன்மையில் அனுப்பவும்.

விண்ணப்பிக்கும் பதவிப் பெயரானது சுயவிபரத்திலும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையிலும் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

LECO

**மேலதிக பொது முகாமையாளர் - (மனித வளங்கள் மற்றும் நிருவாகம்)**
**வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்**
**1ஆம் மாடி, ஈ.எச். குரே கட்டிடம்**
**411, காலி வீதி, கொழும்பு-03.**




## மேஷம்

உங்கள் ராசிநாதன் செவ்வாய் ஆனி 12ஆம் திகதி ( 26/06/2022) உங்கள் ராசியில் சஞ்சரித்துள்ளார். இது ஒரு பொற்காலம் ஆகும். இதுவரை சனியின் பார்வையில் சிக்கியிருந்த செவ்வாய் இப்பொழுது விடுபடுவதால் எதிர்பார்த்த நல்ல திருப்பங்கள் வந்து சேரும். இடையூறு சக்திகளும் கட்டடப் பணியில் இருந்த தொய்வும் மாறும். பொதுவாக ராசிநாதன் பலம் பெற்றிருக்கும் இந்த நேரத்தில் ஆரோக்கியத் தொல்லைகள் அகலும் நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். அதிர்ஷ்ட திகதி ஜூலை 14 , அதிர்ஷ்ட நிறம் நீலம்.

## ரிஷபம்

ஆனி 12ஆம் திகதி ( 26/06/2022) மேஷ ராசியில் செவ்வாய் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 7 ,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது எதிர்பாராத சில விரயங்கள் ஏற்படலாம். பொருளாதார நெருக்கடி அதிகரிக்கும். பணிபுரியும் இடத்தில் பக்குவமாக நடந்து கொள்ளுங்கள். பணப் பொறுப்பில் இருப்பவர்கள் கவனச்சிதறல் இல்லாமல் செயற்படுங்கள். அதிர்ஷ்ட திகதி ஜூலை 15, அதிர்ஷ்ட நிறம் பச்சை.

## மிதுனம்

ஆனி 12ஆம் திகதி ( 26/06/2022) மேஷ ராசியில் செவ்வாய் சஞ்சரித்துள்ளார். லாபாதிபதியான செவ்வாய் லாப ஸ்தானத்திற்கு வரும்பொழுது பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். பூமி வாங்கும் யோகம் வாய்க்கும். வாழ்க்கை துணை வழியே வந்த பிரச்சினை அகலும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். வெளிநாட்டிலிருந்து அனுகூல தகவல்கள் கிடைக்கலாம். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அதிர்ஷ்ட திகதி ஜூலை 16, அதிர்ஷ்ட நிறம் ஆரஞ்சு.

## கடகம்

ஆனி 12ஆம் திகதி (26/06/2022) மேஷ ராசியில் செவ்வாய் சஞ்சரித்துள்ளார். இக்காலம் ஒரு இனிய காலமாகும். எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும். தக்க விதத்தில் தொழில் முன்னேற்றம் உண்டு. உத்தியோகத்தில் இருப்பவர்கள் சுய தொழில் செய்வது பற்றி சிந்திப்பீர்கள். 10ம் இடத்தில் செவ்வாய் பலம் பெற்று இருக்கும் இந்த நேரத்தில் எடுத்த காரியங்கள் எளிதில் வெற்றி கிடைக்கும். எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் அனுகூலம் உண்டு. கட்டிடம் கட்டும் வாய்ப்பு, கடை திறப்பு விழா போன்றவை நடைபெறும். அதிர்ஷ்ட திகதி ஜூலை 10, அதிர்ஷ்ட நிறம் கருநீலம்.

## சிம்மம்

ஆனி 12ஆம் திகதி ( 26/06/2022) மேஷ ராசியில் செவ்வாய் சஞ்சரிப்பதால் மேஷம் செவ்வாய்க்கு சொந்த வீடாகும். இதுவரை சனியின் பார்வையில் இருந்த செவ்வாய் இப்பொழுது விலகுவதால் எல்லா வழிகளிலும் நன்மை கிடைக்கப் போகிறது. யோகம் செய்யும் கிரகமான செவ்வாய் சொந்த வீட்டில் பலம் பெறும் பொழுது சொந்தம் காரிய வெற்றி வருமானம் போன்றவற்றில் திருப்தி நிலவும். சென்ற மாதத்தில் தடையாக இருந்த ஒரு சில காரியங்கள் தானாக நடைபெறும். அதிர்ஷ்ட திகதி ஜூலை 11, அதிர்ஷ்ட நிறம் பிரவுன்.

## கன்னி

ஆனி 12ஆம் திகதி ( 26/06/2022) மேஷ ராசியில் செவ்வாய் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 3 , 8க்கு அதிபதியான செவ்வாய் அட்டமத்தில் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. எதையும் ஒருமுறைக்கு இருமுறை செய்யும் சூழ்நிலையை உருவாக்கும். விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றம் இடமாற்றம் வேதனை தருவதாக அமையலாம். பணிபுரியும் இடத்தில் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். தன்னம்பிக்கை குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அதிர்ஷ்ட திகதி ஜூலை 10, அதிர்ஷ்ட நிறம் பச்சை.

## துலாம்

ஆனி 12ஆம் திகதி (26/06/2022) மேஷ ராசியில் செவ்வாய் சஞ்சரிப்பதால் உங்கள் ராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் அவர் தனது சொந்த வீடான மேஷத்தில் சஞ்சரித்து உங்கள் ராசியை பார்ப்பதால் சகோதர ஒற்றுமை பலப்படும். உடன்பிறப்புகள் உங்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுத்துக் கொடுப்பர். இடம், பூமியால் ஆதாயம் உண்டு. குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சுப நிகழ்வுகள் ஒவ்வொன்றாக நடந்து வரும். பணியில் இருப்பவர்களுக்கு கூடுதல் பொறுப்புகள் கிடைக்கும். அதிர்ஷ்ட திகதி ஜூலை 15, அதிர்ஷ்ட நிறம் இளஞ்சிவப்பு.

## விருச்சிகம்

ஆனி 12ஆம் திகதி ( 26/06/2022) மேஷ ராசியில் செவ்வாய் சஞ்சரிப்பதால் மேஷம் செவ்வாய்க்கு சொந்த வீடாகும். உங்கள் ராசிநாதனாக விளங்கும் செவ்வாய் தன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் பொழுது உடல்நலம் சீராகும். விபரீத ராஜயோக அடிப்படையில் செவ்வாய் சஞ்சரிப்பதால் எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும். புதிய முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். அதிர்ஷ்ட திகதி ஜூலை 14, அதிர்ஷ்ட நிறம் ஊதா.

## தனுசு

ஆனி 12ஆம் திகதி ( 26/06/2022) மேஷ ராசியில் செவ்வாய் சஞ்சரித்துள்ளார். மேஷம் செவ்வாய்க்கு சொந்த வீடாகும் தைரியகாரன் செவ்வாய் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் பலம் பெற்றிருக்கும் இந்த நேரம் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தனவரவு திருப்தி தரும். பூர்வீக சொத்துக்களை கொடுத்துவிட்டு புதிய சொத்துக்கள் வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். பொதுவாழ்வில் புதிய பதவிகள் கிடைக்கலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கூடுதல் பொறுப்புகளும் அதற்கேற்ப வருமானமும் உண்டு. அதிர்ஷ்ட திகதி ஜூலை 16 , அதிர்ஷ்ட நிறம் மஞ்சள்

## மகரம்

ஆனி 12ஆம் திகதி ( 26/06/2022) மேஷ ராசியில் செவ்வாய் சஞ்சரித்துள்ளார். இக்காலத்தில் சுகஸ்தானம் வலுவடைகிறது . எனவே வளர்ச்சி கூடும். வருமானம் திருப்தி தரும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு பத்திரப் பதிவில் இருந்த தடை அகலும். சொத்து விற்பனை லாபம் தரும். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்களை விலக்குவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் சலுகைகள் கிடைக்கும். அதிர்ஷ்ட திகதி ஜூலை 11, அதிர்ஷ்ட நிறம் பச்சை.

## கும்பம்

ஆனி 12ஆம் திகதி ( 26/06/2022) மேஷ ராசியில் செவ்வாய் சஞ்சரித்துள்ளார். செவ்வாய்க்கு மேஷம் சொந்த வீடாகும். உங்கள் ராசிக்கு சகாய ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கு அதிபதி செவ்வாய். எனவே அவர் பலம் பெறும் இந்த நேரம் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். அதிகார பதவியில் உள்ளவர்களின் நட்பு கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும். அதிர்ஷ்ட நிறம் ஜூலை 16 ,அதிர்ஷ்ட நிறம் ரோஸ்.

## மீனம்

ஆனி 12ஆம் திகதி (26/06/2022) மேஷ ராசியில் செவ்வாய் சஞ்சரித்துள்ளார். சனியின் பார்வையில் இருந்து செவ்வாய் விடப்படுவதால் தனாதிபதி செவ்வாய் தன ஸ்தானத்திற்கு வருவதாலும் பொருளாதார நிலை உயரும். கடன்களை அடைத்து மகிழ்வீர்கள் பணிபுரியும் இடத்தில் உங்களுக்கு நல்ல பெயர் கிடைக்கும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். பிறருக்கு பொறுப்புச் சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்து சேரலாம். அதிர்ஷ்ட திகதி ஜூலை 14, அதிர்ஷ்ட நிறம் நீலம்.

# ஈழத்து இலக்கியப் பரப்பில் பிரகாசித்தவர் நாவேந்தன்..!

'நற்றமிழுக்கு ஒரு நாவேந்தன்' எனப் புகழ்பெற்றவர் நாவேந்தன். ஈழத்து இலக்கியப் பரப்பில் ஐந்து தசாப்தங்களுக்கு மேலாகச் சுடர்விட்டுப் பிரகாசித்தவர்.

சிறுகதை, கவிதை, நாடகம், நாவல், கட்டுரை, விமர்சனம் எனப் பல்துறைகளிலும் அவர் எழுதிக் குவித்தவை ஏராளம்.

தமிழகத்திலும், ஈழத்திலும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பலவற்றிலும் அவரது படைப்புகள் வெளியாகியுள்ளன. அவற்றில் சிலவே நூலுருப்பெற்றன.

நாவேந்தன் பன்முகத்தன்மை வாய்ந்தவர். நாடறிந்த நல்லதோர் பேச்சாளராகத் திகழ்ந்தவர். அற்புதமான எழுத்தாளர். சிறந்த தொழிற்சங்கவாதி. ஆளுமைமிக்க அதிபர்.

'நாவேந்தன், தமிழகத்துத் தலைசிறந்த பேச்சாளர் வரிசையில் வந்த ரா. பி. சேதுப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், அண்ணாதுரை போன்றோரின் வழியில், இலங்கையில் அழகுதமிழில் எளிமையாகப் பாமரரும் புரிந்துகொள்ளும் வகையில் ஆற்றொழுக்காகப் பேசும்பாணியில் ஒரு முன்னோடியாக விளங்கியவர்.

தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் அதன் இளைஞர் அணி முக்கியஸ்தராகக் கட்சிக் கொள்கைகளைப் பரப்பித் தமிழ் உணர்வும் தமிழ்த் தேசியவாதமும் வடகிழக்குப் பகுதிகளில் பட்டி தொட்டிகளிலெல்லாம் பரவும் வகை செய்தார்.

சுதந்திரன் பத்திரிகையில் ஆஸ்தான எழுத்தாளராகப் பல புனைபெயர்களில் பொருள் மிகுந்த கருத்துக்களை அள்ளித் தெளித்தவர்.

இவர் நடத்திய 'சங்கப்பலகை' என்ற பத்திரிகையில் 'நக்கீரன்' என்ற பெயரில் நாவேந்தன் எழுதிக் குவித்தவை எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள் முன்வைத்த வாதங்களையெல்லாம் தவிடுபொடியாக்கும் தர்க்க முறையான வாதத்திறன் கொண்டவையாக அமைந்திருந்தன.

அரசியல் எதிராளிகள் நாவேந்தன் மீது கொண்டிருந்த அச்சமும் நியாயமானதே.

தமிழ்த் தேசிய வாதம் இன்று உண்மையாக வளர்ச்சியுற்று அகில உலகக் கவனத்தை ஈர்த்ததுடன் தென்னாசியாவில் ஒரு உறுதியான கருத்திற் கொள்ள வேண்டிய சக்தியாக வளர்ந்துள்ளதென்றால் அதில் நாவேந்தனுக்கும் ஒரு முக்கிய இடமுண்டு.'

இவ்வாறு தனது கல்லூரிக் காலம் முதல் நாவேந்தனை நன்கறிந்த பேராசிரியர் சோ. சந்திரசேகரன் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக்கொண்ட நாவேந்தன் தமிழரசுக் கட்சியின் ஆரம்பகால உறுப்பினர்.

இவரது இயற்பெயர் திருநாவுக்கரசு. மாணவப் பருவத்திலேயே 'கோப்பாய்க் கோமான்' வன்னியசிங்கத்தினால் கட்சியில் சேர்க்கப்பட்டு 'நாவேந்தன்' எனப் பாராட்டுப் பெற்றவர்.

கட்சியின் இளந்தலைவர்களில் ஒருவராக மதிக்கப்பட்டவர். தீவுப்பகுதியில் தமிழரசுக் கட்சியை முதன்முதலில் அறிமுகப்படுத்தியவர்.

1951 ம் ஆண்டளவில் முதன்முதலில் புங்குடுதீவில் கட்சியின் இரு பொதுக்கூட்டங்களை ஒழுங்குசெய்து நடாத்தியவர். இக்கூட்டங்களில் தந்தை செல்வா, தலைவர் வன்னியசிங்கம், அமிர்தலிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

கட்சியின் மத்திய குழு உறுப்பினராகச் செயற்பட்டார்.

1952 ம் ஆண்டுத் தேர்தல் நெருங்கிய நேரம் தந்தை செல்வாவின் கடிதத்தோடு கொழும்பிலிருந்து வந்து இவரைச் சந்தித்த சட்டத்தரணி வி. நவரத்தினத்தை ஆதரித்து தீவகத்தில் தீவிர பிரசாரம் செய்தார்.

அக்காலம் பெரும் தனவந்தரும் தீவகத்தில் செல்வாக்குச் செலுத்தியவருமான அல்பிரட் தம்பிஐயாவை எதிர்த்து யாரும் பிரசாரம் செய்யமுடியாத சூழ்நிலையில் இவர் துணிந்து நண்பர்கள் ஒரு சிலரின் உதவியோடு கட்சிக்குப் பிரசாரம் செய்து தலைவர்களின் பாராட்டுக்களைப் பெற்றார்.



தலைவர் வன்னியசிங்கம் தன் மகன்போல இவரைக் கவனித்து ஊக்குவித்தார் என அன்று கட்சிக்காரர் கூறியுள்ளனர்.

1956 தேர்தலில் சட்டத்தரணி வீ. ஏ. கந்தையா தீவகத்தில் போட்டியிட்டபோது அவருக்காகத் தீவிரப் பிரசாரத்தை முன்னெடுத்தார்.

வீ. ஏ. கந்தையா மகத்தான வெற்றி பெற்றார்.

நன்றி மறவாத கந்தையா எம். பி. இறுதிவரை இவருடன் மிகுந்த நட்புடனிருந்தார்.




1954 ம் ஆண்டு யாழ் வந்த பிரதமர் கொத்தலாவலைக்குக் கட்சி வாலிப முன்னணி சார்பில் அமிர்தலிங்கம் தலைமையில் கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்தபோது பொலிசாரின் கடுந்தாக்குதலுக்குட்பட்டுக் காயமடைந்தார்.

1958 ம் ஆண்டு கட்சித் தலைவர்கள் கைதாகியவேளை இவர் உடுவிலில் சுன்னாகம் பொலிசாரால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

மந்திரி ஏ. பி. ஜயசூரியா யாழ் வந்தபோதும் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுப் பொலிசாரின் தாக்குதலுக்குள்ளானார்.

1960 ஆண்டுத் தேர்தலில் உடுவில் தொகுதியில் மூத்த உறுப்பினர்

## இன்று நாவேந்தன் நினைவுதினம்

என்ற வகையில் போட்டியிட விண்ணப்பித்தபோதிலும் கட்சி கேட்டு;க்கொண்டதற்கிணங்க நண்பர் தர்மலிங்கம் போட்டியிடச் சம்மதம் தெரிவித்தார்.

தீவக மக்கள் அதிகம் வாழும் கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிடுமாறு கட்சி கேட்டுகொண்ட போதிலும் தனிப்பட்ட காரணங்களால் அதனை மறுத்துக் கட்சிப் பணியாற்றினார்.

நண்பர் தர்மலிங்கத்திற்கு வாக்குறுதியளித்தபடி அவரது ஒவ்வொரு கூட்டத்திலும் கலந்துகொண்டு உரையாற்றிப் பிரசாரம் செய்தார். இறுதி வரை அவர்களது நெருங்கிய நட்பு நீடித்தது.

1961 ல் சத்தியாக்கிரகத்தில் தீவிர பங்கெடுத்தார்.

இவர் சத்தியாக்கிரகப் போராட்டம் குறித்து எழுதிய கட்டுரையை, இவரின் நண்பராக விளங்கிய கவியரசு கண்ணதாசன் தனது 'தென்றல்' (08. 04. 1961) பத்திரிகையில் முதல் பக்கக் கட்டுரையாகப் பிரசுரித்துக் கௌரவித்தார்.

இக்கட்டுரையை இராம. அரங்கண்ணல் எம். எல். ஏ. தமது 'அறப்போர்' வார இதழில் மறுபிரசுரஞ்செய்து வெளியிட்டார்.

இவற்றைப் பார்வையிட்ட தமிழரசுத் தலைவர்கள் நாவேந்தனைப் பெரிதும் பாராட்டினர்.

தமிழ்க்குரல், சங்கப்பலகை, நாவேந்தன், ஆகிய பத்திரிகை சஞ்சிகைகளின் ஆசிரியராக விளங்கியவர்.

தமிழன், நம்நாடு ஆகிய பத்திரிகைகளின் வெளியீட்டில் முக்கிய பங்களித்தவர்.

நான் ஒரு பிச்சைக்காரன், தலைவர் வன்னியசிங்கம், சிறீ அளித்த சிறை, வாழ்வு (சிறுகதைத் தொகுதி) தெய்வமகன் (சிறுகதைத் தொகுதி) சிலப்பதிகாரச் செந்நெறி, மாவட்ட அபிவிருத்திச் சபைகளை பகிஸ்கரிப்பது ஏன்..?, மானவீரன் கும்பகருணன், மரியாள் மக்தலேனா (காவியம்) யோன் ஸ்கடர் நாடகம், யோன் ஸ்கடர் வரலாறு, பெருநெருப்பு ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

'வாழ்வு' சிறுகதைத் தொகுதி இலங்கை சாகித்திய மண்டல விருதினை (1964) பெற்றது.

யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஸ்தாபகராகவும் அதன் முதற் செயலாளராகவும் பணியாற்றியவர்.

ஆசிரியர்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதில் முன்னின்று உழைத்தவர்.




முதலாந்தர அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றபின் யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று மாநகரசபையின் பதில் முதல்வராகவும் சிறிது காலம் பணியாற்றியவர்.

ஆயுததாரிகளின் அச்சுறுத்தலால் அப்பதவியைத் துறந்தவர். 2000 ம் ஆண்டு யூலை 10 ம் திகதி 67 வது வயதில் சிந்திப்பதை நிறுத்திக்கொண்டார்.

'பொலிசாரின் குண்டாந்தடித் தாக்குதலுக்கு ஆளாகிச் செங்குருதி சிந்தினார்கள் எத்தனையோ வாலிபர்கள்.

அச்சிறு கூட்டத்தில் எங்களுடன் செந்தமிழுக்காக இரத்ததானம் செய்த தோழர் நாவேந்தன் நான்கு ஆண்டுகளின் பின் தமிழுக்காகச் சிறையும் சென்றார் என்றால் எவரும் ஆச்சரியப்பட முடியாது.

அவர் வழிச் செல்ல ஆயிரம் ஆயிரம் வீரர்களைத் தமிழன்னை பெற்றெடுப்பாளென்றே நம்புகிறேன்.' அ. அமிர்தலிங்கம் எம். பி. (1959). 'நாவேந்தன் எழுத்து, நாடகம், அரசியல் என்பனவற்றிலெல்லாம் முழுமூச்சாக ஈடுபட்டார். தமிழரசுக் கட்சியின் மேடைகளில் கொஞ்சும் தமிழிலும் குமுறும் நடையிலும் கட்சிக் கொள்கைகளை அள்ளி வீசினார்.

கொஞ்சும் தமிழும் குமுறும் நடையும் அவருடைய பிரயோகங்களாகும்.' கலாநிதி எஸ். ஜெபநேசன்.

'நாவேந்தன் மொழியாற்றலில் ஒரு 'கொம்பனாகவே' என்றுமிருந்தார். அந்த இறுமாப்பும் வீறாப்பும் அவரைவிட்டு இறுதிவரை அகன்றதேயில்லை. அவரது பணிகள் பன்முகத்தன்மை வாய்ந்தவை.' தினகரன் பிரதம ஆசிரியர் ஆர். சிவகுருநாதன்.

'நாவேந்தன் மறைவு பன்முகப்பட்ட நமது இலக்கியப் பரப்புக்கு ஏற்பட்ட இழப்பாகும். எழுத்தாளன் என்ற நிலையில் பேணப்பட வேண்டிய பல எழுத்துக்களை நாவேந்தன் விட்டுச்சென்றுள்ளார்.' பேராசிரியர் கா. சிவத்தம்பி.

'கரும்பூறும் நறும்பாகும் கற்கண்டும்
கனிரசமும் கலந்தொன்றாய்
அரும்போதின் தேனமுதோ அலைகடலின்
திருவமுதோ அன்றி வீணை
நரம்போதும் இன்னிசையோ என வியந்து
நயந்து கடல்மடை திறந்தாலென்ன
வரும்போது அவன் பேச்சில் இறும்பூது
எய்தாதார் யாருமில்லை..'

நாவேந்தன் நினைவுகள் மக்கள் மத்தியில் நீடித்து நிலைக்கும்..!

பத்மபாரதி ...

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 19

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | |
| 06 | | 07 | | 08 | 09 |
| | 10 | 11 | 12 | | 13 |
| 14 | 15 | | | 16 | 17 |
| | 18 | 19 | 20 | 21 | |
| | | 22 | | 23 | 24 |

பெயர் ..............................
வகுப்பு ..............................
தொலைபேசி இல ..............................
பாடசாலை பெயர் ..............................
வதிவிட முகவரி ..............................
..............................

.............................. ..............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர்/ பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(01) இயக்க சக்தி, ஒளிச்சக்தி, வெப்பசக்தி போன்ற பல்வேறு தேவைகளுக்கும் தேவையான சக்திமுதல் இது. எமது நாட்டில் இக்காலத்தில் இதற்குப் பற்றாக் குறை நிலவுகின்றது.
(08) பூக்களைத் தேடி வண்டுகள் வருவது இதனை அருந் துவதற்காக ஆகும்.
(10) மோதல்கள், முரண்பாடுகள், இல்லாத நாட்டில் நிலவு வது இது. மக்கள் எதிர்பார்ப்பதும் இதுதான்.
(14) தன்மை, பன்மை பெயர்ச்சொல்.
(16) வேட்டையாடி இரை பிடித்து உண்ணும் காட்டு மிருகம். தனது உருவத்தை விடப் பெரிய மிருகங்களையும் பிடித்துண்ணும். (தலைகீழான சொல்)
(18) வானில் தோன்றி புவியை வந்தடையும் இயற்கை அனர்த்தம். திடீரெனத் தோன்றி உயிராபத்தை ஏற்ப டுத்தும்.
(23) குளத்தில் நீரைத் தேக்கி வைப்பதற்காக சுற்றிவர அமைக்கப்படுவது.

**மேலிருந்து கீழ்**

(01) சிறுவகைத் தானியம் இது. நல்லெண்ணெய் தயா ரிப்புக்கான மூலப்பொருள்.
(03) மற்றையோரின் சிறப்பைப் பார்த்து உள்ளத்தில் ஏற்ப டுகின்ற அழுக்காறு.
(05) விஷம் கொண்ட சிறு ஜந்து. இது கொட்டி விட்டால் பெரும் வலி ஏற்படும். (தலைகீழான சொல்)
(09) சூரியத் தொகுதியிலுள்ள கோள்களில் ஒன்று. (தலை கீழான சொல்)
(10) அக்கால சமையலறை உபகரணம். சமையலுக்குத் தேவையானவற்றை அரைத்துக் கொள்ள உதவும்.
(16) மலரின் இதழைக் குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)
(19) அரசன் என்னும் பொருள் தரும் சொல். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 18

### விடைகள்

**இடமிருந்து வலம்**

(01) எருது (04) புல் (06) தந்தம்
(12) குரு (14) பசளை (17) கலை
(21) திறை (23) மடல்

**மேலிருந்து கீழ்**

(02) தரு (03) பருந்து (04) கரும்பு
(10) காளை (13) குலை (15) சந்தி
(20) மழை

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 17

### பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு
**ம. தனுஷானி,**
தரம் 09, புனித பத்திரிசியார் கல்லூரி,
தலவாக்கலை.

இரண்டாம் பரிசு
**எம். சுஹைப்,**
தரம் 07, அஜ்மீர் தேசிய பாடசாலை,
190, மாருகொன ஜனபதய,
உக்குவளை.

மூன்றாம் பரிசு
**அப்தார் நூரி,**
தரம் 06, அல் முபாரக் மகா வித்தியாலயம்,
மள்வானை.

### பாராட்டு பெறுவோர்

1. **எம்.வை.எப். அர்பா,**
தரம் 07 க/விஹாரமகாதேவி மகளிர் கல்லூரி,
3A, 'பர்வின் மன்ஸில்' உடத்தலவின்ன மடிகே,
கண்டி.
2. **வி. துவிசாலினி,**
தரம் 05 B, இ.கி. பெண்கள் பாடசாலை,
திருமால் வீதி,
காரைதீவு 07.
3. **ஆர். அப்துல்லாஹ்,**
தரம் 05B, அக்/டி.பி. ஜாயா வீதி,
அட்டாளைச்சேனை.
4. **எம்.எம்.எம். அப்ராஸ்,**
தரம் 04, ஸாஹிரா தேசிய பாடசாலை,
இல. 37, கண்டி வீதி,
வரக்காமுர, உக்குவளை.
5. **எம்.ஏ. அம்ஜத்,**
தரம் 04B, மாறை/வெ.மு. ஆரம்பப் பாடசாலை,
411, புதிய தெரு,
வெலிகாமம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 19
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

**கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிரும் தொழும்.**

**தெளிவுரை :**
ஒருயிரையும் கொல்லாமல் புலால் உண்ணாமல் வாழ்கின்றவனை உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும்.

# தியாலுும நீர் வீழ்ச்சி



பதுளை மாவட்டத்தில் பண்டாரவளை கொஸ்லந்தை பிரதேச சபைக்குட்பட்ட கொஸ்லந்தை வெல்லவாய பிரதான வீதியில் தியலுும நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. இலங்கையின் இரண்டாவது உயரம் கொண்ட இந்த நீர்வீழ்ச்சியானது 722 அடி உயரமான நீர்வீழ்ச்சியாகும்.

தியலுும நீர்வீழ்ச்சியை மலைப்பகுதியில் ஒரு காகிதத்தாள் போல பாய்வதை காணலாம். இந்த நீர்வீழ்ச்சியை பார்வையிடுவதற்காக உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாச பயணிகள் அதிகளவில் சென்று பார்வையிடுவது சிறப்பம்சமாகும். பண்டாரவளை பூனாகலை பிரதேசத்திலிருந்து பெருக்கெடுத்து வரும் ஆற்றின் நீர் தியலுும நீர்வீழ்ச்சியின் ஊடாக வழிந்தோடுகின்றது. வற்றாத நீர்வீழ்ச்சியாக காணப்படும் தியலுும நீர்வீழ்ச்சி. ஈரவலயப் பிரதேசத்தில் அமைந்துள்ளது. இந்த நீர்வீழ்ச்சியைப் பலரும் பிரதான வீதியிலிருந்து கண்டு ரசிக்கின்றனர். நீர் வீழ்ச்சியின் உயரப் பகுதியில் சிறப்புமிக்க அம்சங்களைக் காணக்கூடியதாக இருக்கும்.

**சுஸ்மிதன் ஆனந்தன்,** நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம், நோர்வூட்.




சுதன் - நிஷா ,
தியத்தலாவ.

# துப்பறிய நாய்களைப் பயன்படுத்துவது ஏன்?



மோப்ப உணர்வு அதிகமாகவுள்ள விலங்குகளில் நாயும் ஒன்றாகும். நாய்களை வேலை செய்யப் பழக்குவதுபோல வேறு விலங்குகளுக்கு இவ்வாறு பயிற்றுவிக்க முடியாது. நம்மோடு வாழக் கற்றுக்கொண்ட அது நாம் சொல்வதைப் புரிந்துகொண்டு செய்யமுடிகிறது.

ஆதிகால மனிதன் வேட்டையாடி வாழ்ந்து வந்த காலத்திலேயே நாய்களைத் தனக்கு உதவியாக வைத்துக்கொள்ளத் தொடங்கிவிட்டான். நாகரிகமடைந்து குடியிருப்புகளை அமைத்துக் கொண்டு வாழ்ந்த காலத்தில் நாயும் மனிதர்களுடனேயே தங்கிவிட்டது. இப்போது காடுகளில் நாய்களைக் காணமுடிவதில்லை.

மனிதருக்கும் மோப்ப உணர்வு ஒரு காலத்தில் இருந்திருக்க வேண்டும். அது காலப்போக்கில் மங்கி விட்டது. நாய்களிடம் அது நிலைத்துவிட்டது. தன் உணவு, இணை, குட்டி, எதிரி போன்ற எல்லாவற்றையும் நாய் மோப்பத்தினாலேயே உணர்கிறது.

முகர்வது என்பது ஒரு ரசாயனச் செயல்பாடாகும். இதற்கான உறுப்புக்கள் கெமோரிஸப்டர்கள் எனப்படுகின்றன. இவை மூக்கில்தான் அமைந்துள்ளன என்றபோதிலும் எவ்வாறு செயல்படுகின்றன என்பது இன்னும் புரிந்து கொள்ளப் படவில்லை. இவையும் இவைகளிலிருந்து மூளைக்குச் செல்லும் நரம்பு நார்களும் மிகவும் நுட்பமானவை. ஒவ்வொரு மூக்குத் துவாரத்திலும் உள்ள ஒரு பள்ளத்தில் இவை அமைந்துள்ளன.

இந்தக் குமிழ் மனிதர்களிடம் காணப்படுவதை விட ஆனால் ஆழ்ந்து முகரும்போது கெமோரிசப்டர்கள் மீது பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதிலிருந்து செல்லும் நுண்ணிய நரம்புகள் மூளையிலுள்ள வாசனையை உணரும் மையத்துடன் இணைந்துள்ளன.

இந்தக் குமிழ் மனிதர்களிடம் காணப்படுவதைவிட பெரியதாக நாய்களிடம் உள்ளது. அதனாலேயே அதிகளவில் மோப்ப உணர்வைக் கொண்டுள்ளன. நம்மால் உணரமுடியாத நட்பமான, வாசனைகளையும் அதனால் உணரமுடியும். அதனால்தான் துப்புதுலக்க நாள்களைப் பயன்படுத்துகிறார்கள். ஒரு குறிப்பிட்ட மணத்தை முகர்ந்த அது அந்த மணத்தை செல்லும் இடமெல்லாம் தொடர்ந்து அறியும்.

எதிர்ப்படும் எல்லாவற்றையும் முகர்ந்து பார்த்து அது என்னவென்று தெரிந்து கொள்ளாமல் நாய் இருக்காது. நாயை வீதிகளில் நடத்திச் செல்லும்போது எவரும் இதைக் கவனித்திருக்கலாம். வீட்டுக்கு புதிதாக யார் வந்தாலும் அவர்களை முகர்ந்து பார்ப்பதும் இதனால்தான். காற்று வீசும் திசையை நோக்கியே நாய் எப்போதும் படுக்கும். மூக்கில்படும் மணத்தை நுகர்ந்து எதிரி யாரேனும் வந்தால் தெரிந்து கொள்ள முடியுமல்லவா? அதற்காகத்தான் இவ்வாறு செய்கிறது.

நாய்க்கு வியர்வை சுரப்பிகள் கிடையாது. அதனாலேயே உடல் வெப்பம் வெளியேறுவதற்காக எப்போதும் நாக்கை வெளியே தொங்க விட்டுக் கொண்டிருக்கிறது.

**ஆர். ராஹினி,**
வெளிமடை.








**எச்.எம். முன்சிப்,**
தரம் 09 A, அல்/அமீர் வித்தியாலயம்,
சம்மாந்துறை 10.



**ச. அக்ஷயன்,**
தரம் 10, சென். பெனடிக்ட் கல்லூரி,
கொழும்பு 13.



**க. கிஷாலன்,**
தரம் 07, லசாலி ஆங்கில பாடசாலை,
கொட்டாஞ்சேனை.



**எச். அக்சிப்,**
தரம் 07A, அல் அமீர் வித்தியாலயம்,
சம்மாந்துறை 10

## பூக்கள்

வண்ண வண்ண பூக்கள்
வாசம் மிகுந்த பூக்கள்
கண்ணை கவரும் பூக்கள்
காற்றில் அசையும் பூக்கள்
ஆகாரம் ஆகிடும் பூக்கள்
அர்ச்சனை செய்திட பூக்கள்
பூகோள பொக்கிஷம் பூக்கள்
புதுமை ஒளடதம்
மாலை கட்டிட பூக்கள்
மங்கள நிகழ்வில் பூக்கள்
ஆலயம் எங்குமே பூக்கள்
ஆனந்தம் அளித்திடும் பூக்கள்
வீட்டு முற்றத்தில் பூக்கள்
விலைக்கு விற்றிடும் பூக்கள்
நாட்டின் தேசிய மலராய்
நாடுகள் காத்திடும் பூக்கள்
தெய்வம் தொழுதிட பூக்கள்
தேரினில் அழகு பூக்கள்
பொய்கையில் தாமரை பூக்கள்
பூவையர் சூடிடும் பூக்கள்
வண்டுகள் அண்டிடும் பூக்கள்
வசந்தம் அளிக்கும் பூக்கள்
உண்ண அகத்திப் பூக்கள்
உடையில் செருக பூக்கள்!

**கபிலகன்,** லுணுகலை.

# நிலநடுக்கத்தை முன்கூட்டியே அறியும் எறும்புகள்



பல ஆயிரம் உயிர்களுக்கு சேதம் ஏற்படுத்தும் நிலநடுக்கத்தை முன்கூட்டியே அறியும் திறன் மிகச்சிறிய எறும்புகளுக்கு உள்ளது என்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். செம்மர எறும்புகள் நிலநடுக்கத்தை முன் கூட்டியே அறிவதாக துய்ஸ்பர்க் சென் பல்கலைகழக புவியியல் நிபுணர் உல்ரிச் ஸ்கர்பர் தெரிவித்துள்ளார். உல்ரிச்சும் அவரது ஆய்வுக் குழுவினரும் மேற்கு ஜேர்மனியின் எபல் பிராந்தியத்தில் 2 ஆண்டுகளாக எறும்பு மலைப்பகுதிகளை ஆய்வு செய்து வருகின்றனர்.

அருகாமையில் ஏற்படும் சிறு நிலநடுக்கத்தின் போது இந்த எறும்புகள் விநோதமாக நடந்து கொள்வதை அவர்கள் கண்டறிந்துள்ளனர். உல்ரிச் ஸ்கர்பர் 2 ஆண்டுகளுக்கு முன்னர் மத்திய இத்தாலியில் உள்ள அப்ருசோ பகுதிக்கு சென்றிருந்தார். எல் அகுய்லா பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்ட பின்னர் உல்ரிச் அந்தப் பகுதிக்கு சென்றார். அப்போது புவியியல் கோட்டு பகுதியில் எறும்புக் கூடுகள் இருப்பதை கண்டார். ஆய்வாளர் உல்ரிச் இஸ்தான்புல் பகுதிக்கு சென்று இந்த ஆய்வை தொடரத் திட்டமிட்டுள்ளார்.

மிக விரைவில் அங்கு நிலநடுக்கம் ஏற்படும் என விஞ்ஞானிகள் எதிர்பார்க்கிறார்கள். தமது ஆய்வு துவக்க நிலையிலேயே இருப்பதாக கூறும் உல்ரிச் வருங்காலத்தில் மனித உயிர்களை காக்கும் வகையில் நிலநடுக்கத்தை முன்கூட்டியே தெரிவிக்கும் சிற்றினமாக எறும்புகள் இருக்கும் என்கிறார்.




கரிய நிற காகம்
காட்டில் வாழும் காகம்
விரைந்து மேலே பறக்கும்
வேடிக்கை பல காட்டும்
வீட்டின் அருகே வந்து
வேளை தோறும் கரையும்
ஓட்டின் மேலே வீசும்
உணவை உண்டு பறக்கும்
கூடுகள் கட்டும் காகம்
குஞ்சுகள் பொரிக்கும் காகம்
கூடியே வாழும் காகம்
கூட்டமாய் உண்ணும் காகம்
தந்திரம் உள்ளகாகம்
தரையில் அசுத்தம் நீக்கும்
விந்தைகள் பல புரிந்து
வீட்டை சுற்றும் காகம்
சனியின் வாகனம் காகம்
சரித்திரம் சொல்லும் சேதம்
தனியாய் வந்து கரைந்து
சகுனம் சொல்லும் காகம்
ஆழ உள்ள நீரை
அள்ளிப் போட்டுகல்லை
மேலே உயர்ந்த நீரை
மெச்ச குடித்த காகம்!

**கபிலகன்**
லுணுகலை

# வள்ளுவமாய் வாழும் நட்பின் நாயகன் R.N.லோகேந்திரலிங்கம்

"தோன்றில் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று " என்றார் வள்ளுவர். புகழ் நம்மைத் தேடி வரவேண்டுமே தவிர நாம் புகழைத்தேடி அலையக்கூடாது. இன்று எம்மவர்கள் மத்தியில் புகழோடு வாழ்பவர்களில் ஒருவராக நண்பர் லோகேந்திரலிங்கம் திகழ்கிறார். இந்தப் புகழுக்கு அப்படி இவர் என்ன செய்தார் என்றால் அதற்கு ஒரே ஒரு காரணம்தான் உண்டு. அவரது அயராத அசராத கடின உழைப்பே காரணம். வள்ளுவப் பெருந்தகை அழகாக சொல்லுவார் " தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன் மெய் வருத்தக்கூலி தரும் " இவரது கடின உழைப்பு என்பது ஒருநாள் ஒருமாதம் ஒரு வருடம் என்பதல்ல.



கனேடிய மண்ணில் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக உழைத்து வருகின்றார். முதல் மூன்று வருடங்கள் சூரியன் பத்திரிகையில் ஆரம்பித்த பயணம் பின்னர் உதயனில் தொடக்கி இன்றுவரை அவரது எழுத்துப்பணி தொடர்கிறது. இவரது உழைப்பு எப்படிப்பட்டது மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண் துஞ்சார் எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் செவ்வி அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார் கருமமே கண்ணாயினார். என்ற பாடலுக்கு ஒப்ப தன்னை வருத்தி ஊன் உறக்கமின்றி இந்தத் துறையில் உழைத்து வருகின்றார்.இவர் ஒரு பிறவிக் கவிஞர். எழுத்து இவரது மூச்சு. எனவேதான் எழுத்தையே மூலதனமாகக் கொண்டு " எண்ணித் துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு " என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கு ஏற்ப மிகத் துணிச்சலோடு பணியாற்றி வருகின்றார். அதனால் தான் இவரைப்பற்றி எழுத முற்பட்ட போதே "வள்ளுவமாய் வாழும் நட்பின் நாயகன் " என்ற தலைப்பில் எழுத முற்பட்டேன்."முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் " என்பதால்தான் இந்த

எழுத்துப்பணியில் நிலைத்து நிற்க முடிகிறது நிமிர்ந்து நிற்கமுடிகிறது. பொன்விழா காணவும் முடிகிறது. இவருக்கு கிடைக்கின்ற வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் இவரது உண்மையான உழைப்பிற்குக் கிடைத்த பரிசில்கள். ஒரு சிலருக்கு பாராட்டுக்கள் " விரகர் இருவர் புகழ்ந்திட வேண்டும் விரல்கள் நிறைய மோதிரங்கள் வேண்டும் அரையதனில் பஞ்சேனும் பட்டேனும் வேண்டும் அவர் கவிதை நஞ்சேனும் வேம்பெனும் நன்று " என்று வாயாரப் புகழுவார்கள். ஆனால் லோகேந்திரலிங்கத்துக்கான புகழ் வரவேற்பு என்பது அவரது கிடைக்கின்ற அங்கீகாரமாகவே பார்க்கப்படுகிறது. வள்ளுவப் பெருந்தகையின் குறளோடு இவர் வாழ்க்கை எவ்வாறு ஒத்துப்போகிறது என்று பாருங்கள். மனைவி என்னும் மாதரசி நண்பர் லோகேந்திரலிங்கத்தின் இந்த அபரிமிதமான வளர்ச்சிக்கும் உயிர்ச்சிக்கும் காலாக காரணமாக இருப்பவர் அவரது அருமைத்துணைவி சகோதரி பத்தமா லோகேந்திரலிங்கம் என்றால் மிகையாகாது . வள்ளுவன் அழகாகச் சொல்லுவார் " மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை எனைமாட்சித் தாயினு மில்" இதன் பொருள் ஒருவர் எவ்வளவுதான் பேரும் புகழும் பெற்றிருந்தாலும் அவரது மனைவியிடம் இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்புகள் இல்லையென்றால் எவ்வளவு சிறப்புக்கள் இருந்தாலும் பயனில்லை. இதையே மூதுரையில் ஒவ்வையார் மிக அழகாகச் சொல்லுகின்றார் "இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை இல்லாளும் இல்லாமே ஆமாயின் இல்லாள் வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில் புலிக்கிடந்த தூறாய் விடும் " எனவேதான் சிறந்த இல்லாளுக்கு ஏற்ப பல நற்குணங்களை கொண்ட சகோதரி பத்மா அவர்கள் தன் சிறந்த நற்குணங்களால் மட்டுமல்ல செயற்திறனால் ஆளுமையால் உதயன் பத்திரிக்கை ஒருவாரம் வரவில்லை என்ற குறையே இல்லாமல் அதனை அருமையாக நிருவகித்து வருகிறார். நண்பர் லோகேந்திரலிங்கம் அவர்கள் வேறு வேலைகளுக்காக வெளியூர்களுக்கோ வெளிநாடுகளுக்கோ சென்றுவிட்டால் அவரது அத்தனை பணிகளையும் அப்பழுக்கின்றி செய்து முடிப்பார். அதுவுமின்றி இரவு வேளைகளில் தன் கணவருடன் வீட்டுக்கு வரும் நண்பர்களை உபசரித்து விருந்தோம்பல் செய்வதிலும் சகோதரி சிறந்து விளங்குகிறார். ஒரு சிறந்த தந்தைக்கு உரிய நற்பண்பை வள்ளுவன் மிக அழகாக பின்வருமாறு விளக்குகிறார் " தந்தை மகற்காற்று நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல் " அந்தக்கடமையைக்கூட நண்பர் லோகன் மிகச் சிறப்பாக செய்து முடித்துள்ளார். முக்கனிகள் போலும் தன் மூன்று பிள்ளைகளையும் கல்வி கேள்விகளில் சிறக்கவைத்து கற்றறிந்தோர்



சபைகளிலிலே முன்னிருக்கத்தக்க வகையில் வளர்த்து ஆளாக்கியுள்ளார்.இப்படிப்பட்ட தந்தைக்கு பிள்ளைகள் என்ன கைம்மாறு செய்ய வேண்டுமெனவும் கூறியுள்ளார் வள்ளுவர் . மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை என் நோற்றான் கொல்என்னும் சொல் " இப்படிப்பட்ட அருமையான பிள்ளைகளைப் பெற இவர்களின் பெற்றோர்கள் என்ன தவம் செய்திருக்க வேண்டும் என மற்றவர்கள் வியந்து பாராட்டத்தக்கதாக வாழவேண்டுமாம். அப்படியான ஒரு உன்னதமான வாழ்க்கையை பிள்ளைகள் வாழவேண்டுமாம். முக்கனி போலும் பிள்ளைகள் மூவரைப் பெற்றெடுத்து அவர்கள் இன்று எமது சமூகத்தில் உன்னதமான வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக அவரது அன்புமகள் ஜனனி உதயன் பத்திரிகையின் வடிவமைப்பில் இருந்து பக்கங்கள் தயாரிப்பதுவரை மிகப்பெரும் பங்காற்றிவருகின்றார். வேற்று இன மக்களாலும் விரும்பப்படுபவர். கவிஞர் வைரமுத்து இவருக்கு "நட்பின் நாயகன் " என பட்டம் சூட்டியிருந்தார்.இந்தப் பட்டத்திற்கு மிகப்பொருத்தமானவர் லோகன்.

ஒரு ஊடகவியலாளருக்கு இருக்க வேண்டிய மிகப்பெரிய தகமையாக கருதப்படுவது சொல்லாட்சி சொல்வளம் புதிய சொற்தொடர்களை பயன் படுத்தும் முறை. இவற்றில் கைதேர்ந்தவர் லோகன். அதுவுமன்றி எழுத்துப்பிழை என்பது பத்திரிகையில் வந்துவிடக்கூடாது என்பதற்காகவே ஒரு தனியான புருப் ரீடர்களை வைத்திருப்பார்கள் . அனால் உதயன் பத்திரிகையில் இத்தனையாண்டு காலம் எழுத்துப் பிழையில்லாமல் வெளிவருகின்றது என்றால் அதற்கு காரணம் முழுக்க முழுக்க லோகன் தான். முற்றுப்புள்ளி கம போன்ற ஒரு சின்னவிடயத்தைக்கூட மிகக் கவனமாக கையாளும் ஆற்றல் வாய்ந்தவர். இங்குள்ள பலநாட்டு வர்த்தக பிரமுகர்கள் தொழில் அதிபர்கள் ஆகியோரின் நட்பும் இவருக்குண்டு. இதேவேளை தமிழில் எப்படி ஆளுமைமையும் சொல்லாட்சியும் இருக்கிறதோ அதே போன்று ஆங்கிலத்திலும் புலமை மிக்கவராக இருக்கிறார். நான் பலதடவை அவரது காரியாலயத்திற்கு சென்று பேசிக்கொண்டு இருக்கும் போது தொலைபேசியில் பேசிக்கொண்டே ஆங்கிலத்தில் சில கட்டுரைகளை தட்டச்சில் அவர் பதிவுசெய்கின்ற வேகம் என்னை வியக்கவைக்கும். இரண்டு மொழிகளையும் கையாளுவதில் கை தேர்ந்தவராகவும் இருக்கின்றார்.

ஓடி ஓடி உழைக்கனும் ஊருக்கெல்லாம் கொடுக்கணும். யாரை நாங்கள் வாழ்ந்தவர்கள் என்று சொல்லுகிறோம் என்றால் யார் தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்கிறார்களோ அவர்களே வாழ்ந்தவர்கள் ஆகிறார்கள் . அந்த வகையில் நண்பர் லோகனும் வாழ்வாங்கு வாழ்பவராக இருக்கிறார். ஒருவன் எப்படிப் பட்டவன் என்பதை அவனது நண்பர்களில் இருந்து அறிந்து கொள் " என்றொரு பழமொழி உண்டு. நண்பர் லோகனுடைய நண்பர்கள் எல்லாம் " உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு " என்ற வகையில்நண்பர் லோகேந்திரலிங்கம் எடுக்கின்ற எந்த முயற்சிகளுக்கும் அவருக்கு தோளோடு தோள் நிற்கிறார்கள். உதவும் கரங்கள் ஊடாக ஈழத்தில் வாழும் எம்மவர்களுக்கு பலவழிகளிலும் நற்பணியாற்றி வருகிறார்கள் ஏழைப்பிள்ளைகளுக்கு புத்தகங்கள் கொப்பிகள் உணவுப் பொருட்கள் என காலமறிந்து பணியாற்றி வருகின்றார். எல்லாவற்றிக்கும் மேலாய் பெரும் பொருட்செலவில் அம்புலன்ஸ் வண்டியைக்கூட வாங்கி கொடுத்திருக்கிறார். ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு " என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கு ஏற்ப பலவறிய குழந்தைகளுக்கும் பாதிக்கப்பட்ட பலருக்கும் பல வழிகளிலும் உதவி வருகின்றார். இந்தியாவில் இருந்து வெளிவரும் "நந்தவனம் " என்ற சஞ்சிகையை கனடாவில் வெளியிடும் பொறுப்பையும் எடுத்துக்கொண்டு இலைமறை காயாக இருக்கும் பலரை வெளியுலகத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார். பல்வேறு நாடுகளில் இருக்கும் பலருக்கு விருதுகள் கிடைப்பதற்கும் இவரே காரணமாகவும் இருந்திருக்கிறார்.

**கனடா**
**கணபதி ரவீந்திரன்**

---

அரிசி அரசியல் 02

**அருள் சத்தியநாதன்**

# பொருளாதாரத்துக்கும் கட்சிச் சாயம் பூசப்பட்டது!

சேர் ஒலிவர் குணதிலக்க, அன்றைய எல்லா உயர்குடி வகுப்பு மற்றும் செல்வந்தர்களைப்போலவே, பிரிட்டிஷ் பண்ணையில் வளர்க்கப்பட்டவர். பிரிட்டிஷ் மகாராணியார் அவருக்கும் 'சேர்' பட்டம் வழங்கி கௌரவித்தார் என்றால் எப்பேர்ப்பட்ட பிரிட்டிஷ் விசுவாசியாக இருந்திருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பார்த்துக் கொள்ளுங்கள். பிரிட்டிஷ் அரசு டொமினியன் அந்தஸ்துடன் கூடிய இலங்கையை யாரிடம் ஒப்படைத்தது என்றால் கருப்பு வெள்ளைக்காரரான டி.எஸ். சேனாநாயக்கவிடம் தான்! இலங்கை முதலாளித்துவத்தில் இருந்து தடம் புரண்டு சோஷலிசத்துக்குள் சென்று விடலாம் என்பதால்தான் எஸ். டபிள்யூ. பண்டாரநாயக்க சுட்டுக் கொல்லப் பட்டார் என்றொரு வாதம் அப்போதிருந்தே முன்வைக்கப்பட்டிருந்தது. அவருக்குப் பின் பதவியேற்ற அவரது மனைவியான ஸ்ரீமாவோவின் அரசைக் கவிழ்க்க பிரிட்டிஷ் ஆதரவாளர்களும், ஆங்கில வழிக் கல்வி கற்ற, கொழும்பு கிறிஸ்தவ உயர்குடி உயர் இராணுவ பொலிஸ் பதவிகளை வகித்தோருமான சிலர் ஒரு இராணுவ புட்சியை 1962இல் அரங்கேற்ற முனைந்து தோல்வியைத் தழுவினார். அப்போது தேசாதிபதியாக விளங்கியவர் மகாராணியால் நியமனம் செய்யப்பட்ட சர் ஒலிவர் குணதிலக்க.

வகுக்கப்பட்ட வகையில் திட்டம் நிறைவேறியிருக்குமானால் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவும் முக்கிய அமைச்சர்களும் கைது செய்யப்பட்டு கொழும்பு இராணுவ தலைமையக சுரங்க அறைகளிலும் பனாகொடை இராணுவ முகாமிலும் தடுத்து வைக்கப்பட்டிருப்பார்கள். அடுத்த கட்டமாக சதிப்புரட்சி செய்தவர்கள் இராணி மாளிகைக்கு (ஜனாதிபதி மாளிகை) சென்று தேசாதிபதி ஒலிவர் குணதிலக்கவை சந்தித்து ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் அரசைக் கலைக்கும்படி கேட்டிருந்திருப்பார்கள்.

திட்டம் இப்படித்தான் வகுக்கப் பட்டிருந்தது. சதிப் புரட்சி பிசுபிசுத்து வீட்டில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவுக்கு ஒலிவர் குணதிலக்க மீதிருந்த நம்பிக்கை பொய்த்துப் போனது. இவர் தேசாதிபதியாக நீடிப்பது தனக்கு ஆபத்தானது என்று கருதிய அவர் சர் ஒலிவரை பதவி நீக்க நினைத்தார். ஆனால் பிரிட்டிஷ் மகாராணியால் நியமனம் செய்யப்பட்டவரை இலங்கை அரசினால் பதவி நீக்கம் செய்ய முடியாது. எனவே அன்று பிரதமரின் செயலாளராக விளங்கிய, பிரட்மன் வீரக்கோன் உடனடியாக லண்டனுக்கு பிரதமரின் கடிததத்துடன் அனுப்பபட்டார். சேர் ஒலிவர் குணதிலக்கவை அப் பதவியில் இருந்து அகற்றி ஸ்ரீமாவோ பண்டாநாயக்கவின் உறவினரான வில்லியம் கோபல்லாவை தேசாபிதியாக நியமனம் செய்யும்படி மகாராணிக்கு அக் கடிதத்தில் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது.

அதன்படியே மகாராணியாரும் குணதிலக்கவை நீக்கிவிட்டு கோபல்லாவையை புதிய தேசாதிபதியாக நியனம் செய்தார். சேர் ஒலிவர் குணதிலக்க இச்சதிப் புரட்சி முயற்சியுடன் சம்பந்தப்படுத்தப்பட்டு கைதாகாமல் விடப்பட்டதற்கு அவர் மகாராணியால் நியமனம் செய்யப்பட்டவர் என்பதே காரணம்.



**'உபாலி விஜேவர்தன ஐ.தே.க காரர் என்பதால் அவரது தொழில்கள் முடக்கப்பட்டது போலவே ஸ்ரீமாவின் ஆள் என்பதால் தாச முதலாளி காணாமல் போனார்!'**

இதன் பின் விளைவாகவே கொழும்பு கேஸ் கம்பனியின் மீது அரசின் சீற்றம் பாய்ந்தது. கம்பனி இயங்காமல் போனது. தற்போது கொழும்புக்கு வரும் பஸ்கள் நிறுத்தப்படும் இடமாகவும் தனியார் குணசிங்கபுர பஸ் நிலையமும் அக்காணியிலேயே அமைந்துள்ளன. இக் கேஸ் கம்பனி தொடர்ந்தும் இயங்கி வந்திருக்குமானால் கொழும்பு ஹோட்டல்கள் மற்றும் வீடுகளுக்கு தொடர்ந்தும் தரை வழிக்குழாய்கள் மூலம் சமையல் எரிவாயு வழங்கப் பட்டிருக்க முடியும். சமையல் எரிவாயுக்காக மக்கள் பேயாக அலையும் இச்சந்தர்ப்பத்தில் ஏற்கனவே இருந்த ஒரு எரிவாயு வழங்கும் வசதியை இலங்கையின் குறுகிய அரசியல் கண்ணோட்டம் காரணமாக இழக்க நேரிட்டதை இங்கே பதிவு செய்ய வேண்டியுள்ளது.

அரிசியை முக்கிய விஷயமாக முன்வைத்து இந்நாட்டில் செய்யப் பட்ட அரசியல் மோசமான விளைவுகளைத் தந்த மாதிரியே தேசிய அரசியலமைப்பு தேசிய பொருளாதாரத்தையும் கட்சிக் கண்ணோட்டத்தில் பார்த்தால் ஏற்பட்ட பேரிழப்புகளையும் நாம் எடைபோட்டு பார்க்கத்தான் வேண்டும்.

இலங்கையின் மிகச் சிறந்த தொழிலதிபராக உபாலி விஜேவர்தனவை குறிப்பிட முடியும். பெரிய குடும்பத்துப் பிள்ளை. றோயல் பழை மாணவர். ஜே. ஆருக்கு உறவினர். இலங்கையில் பெயர் போன கென்டொஸ் சொக்லட் நிறுவனத்தை நிறுவியவர். த ஐலண்ட் பத்திரிகை நிறுவனத்தை ஆரம்பித்தவர். இலங்கையின் சுதந்திர வர்த்தக முதலீட்டுச் சபையின் முதலாவது தலைவர். இடை விடா முயற்சி கொண்டவர்.

அறுபதுகளில் யுனிக் வர்த்தகப் பெயரில் கெஸட் ரெக்கோர்டர், கிராமபோன், வானொலி என்பனவற்றை தயாரித்தார். உபாலி பியட் கார்கள் உள்ளூரில் இணைக்கப் பட்டு கார்கள் தயாரிக்கப்பட்டன. 'லம்ரேட்டா' என்ற ஸ்கூட்டர் பாவனைக்கு வந்தது. 1970இல் ஆட்சி மாறியதும் பதவிக்கு வந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க, இத் தொழில் முயற்சியாளருக்கு மேலும் வாய்ப்புகள் வழங்கி உற்சாகமூட்டுவதற்கு பதிலாக அவரை தனக்கு ஆபத்தாக வரக்கூடிய ஐ.தே.கட்சிக்காரராகவும், இறக்குமதி அனுமதிப் பத்திரங்களுக்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டது.

எனவே இப் புதிய தொழில் முயற்சிகள் அனைத்தும் மூடப்பட்டன. இழப்பு, நாட்டின் பொருளாதாரத்துக்கு!

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க காலத்தில் தாச முதலாளி என்ற புதிய தொழிலதிபர் வெளிச்சத்துக்கு வந்தார். அவர் ஆடைத் தொழிற்சாலைகள் அமைத்தார். பொறளை, கொள்ளுப்பிட்டியில் இலங்கையின் முதல் சுப்பர் மார்க்கட்டுகளை அமைத்தார். தாச ஷொப்பிங் சென்டர் என அவை புகழ்பெற்றன. இதே காலப் பகுதியில் எலிபண்ட் ஹவுஸ், மெலிபன், ஸ்டார் பிராண்ட் டொபி கம்பனி போன்ற அரசியல் சார்ந்து வர்த்தகம் செய்யாத வர்த்தக நிறுவனங்கள் தப்பிப் பிழைத்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

1977இல் ஐ.தே.க ஆட்சிக்கு வந்ததும், தொழிலதிபராக ஆயிரக்கணக்கானனோருக்கு வேலை வாய்ப்புகளை வழங்கி வந்த தாச முதலாளி மீது நெருக்கடிகள் கொண்டுவரப் பட்டன.

ஏனெனில் அவர் 'ஸ்ரீமாவின் ஆள்' என்றே பார்க்கப்பட்டாரே தவிர, நாட்டின் பொருளாதாரத்துக்கு வளம் சேர்க்கக்கூடியவர் என்று பார்க்கப்படவில்லை. எனவே தாச முதலாளி காணாமல் போனார்!

நாட்டின் பொருளாதாரத்தையும் அதன் வளர்ச்சியையும் பரந்த கண்ணோட்டத்தில் பார்க்கத் தவறிய அரசியல்வாதிகளின் தொடர்ச்சியான செயல்பாடுகளே இன்றைய நிலைக்கு நாட்டைத் தள்ளியது. உபாலி விஜேவர்தனவும் தாச முதலாளியும் இரு உதாரணங்கள் மட்டுமே!

அடுத்தவாரம் 1953 ஹர்த்தால் வெற்றி பெற்றதையும் அதன்பின் விளைவுகளையும் பார்ப்போம். ஹர்த்தால் என்பது தமிழ் அல்லது சிங்கள மொழி சொல் அல்ல. அது குஜராத்தி சொல். குஜராத்திகாரரான மகாத்மாகாந்தி கண்டெடுத்து பயன் படுத்திய சொல்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூலை மாதம் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2022 ஜூலை 10 ஞாயிற்றுக்கிழமை



Sirasa TV நடத்திய The Voice Deen Sri Lanka 2022 பாடல் போட்டியில் வெற்றி வாகை சூடிய 'பிரனிஷா தியாகராஜா'

# பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்



## உலகின் மிகப்பெரிய கற்தூண்

**மனிதனால்** உருவாக்கப்பட்ட மிகப்பெரிய கற் தூண் லெபனானில் இருக்கிறது. பால்பென் என்ற பகுதியில் இருக்கும் பண்டைய ரோமானிய சுண்ணாம்புக் கற்சுரங்கத்திலேயே இந்த கற் தூண் இருக்கிறது. இது 19.6 மீற்றர் நீளம் கொண்டது என்பதோடு 6 மீற்றர் அகலமானது. இதன் எடை 1,650 தொன் கொண்டது. இதற்கு அடுத்த இடத்தில் இருக்கும் கற் தூணும் இதே கற் சுரங்கத்துக்கு அருகிலேயே இருக்கிறது. அதன் எடை 1,240 தொன்கள். இந்தக் கற் தூண்கள் குறைந்தது 2,000 ஆண்டுகள் பழமையானது. அதாவது கி.மு 27 ஆண்டு வாக்கில் இவை செதுக்கப்பட்டுள்ளன. அருகில் உள்ள வியாழன் கடவுளின் கோவில் ஒன்றுக்காகவே இந்த கற் தூண்கள் செதுக்கப்பட்டிருப்பதாக ஆய்வாளர்கள் நம்புகிறார்கள். என்ன பரிதாபம் என்றால் இந்த கற் தூண்கள் கற்சுரங்கத்தில் இருந்து வெளியே கொண்டுவரப்படவில்லை. கோவிலுக்கும் பயன்படுத்தப்படவில்லை. ஒருவேளை கற் தூண்களின் பிரமாண்டம் காரணமாக அவைகளை எடுத்துச் செல்ல முடியாமல் போயிருக்கலாம்.

## ஜோர்தானின் மர்மச் சுவர்

**ஜோர்தானில்** ஒரு சுவர் இருக்கிறது. அது சீனச் சுவருக்கு இரண்டாவது ஆகாத நீளம் கொண்டது. வானில் இருந்து அதன் நீளத்தை அளவிட்டபோது 150 கிலோமீற்றருக்கு அதிகம். ஆனால் உயரம், அகலம் மிகக் குறைவு. தெற்கு ஜோர்தானில் இருக்கும் இந்த சுவருக்கு 'காத் ஷபீப்" என்று பெயர்.

ஆனால் கற்களாலான இந்த சுவர் எல்லைப் பாதுகாப்புக்காக போடப்பட்ட்டதாகத் தெரியவில்லை. இது கட்டப்பட்ட காலத்தில் ஒன்றரை மீற்றர் உயரம் கூட இல்லை என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.



ஆனால் இன்று காலநிலை மாற்றம், சனத் தொகை பெருக்கத்தால் இந்த சுவர் அழிவடைந்து காணப்படுகிறது.

1948 ஆம் ஆண்டு பிரிட்டிஷ் இராஜாதந்திரியான அலெக் கிரிக்பிரிட் இந்த சுவரை முதல் முறை அடையாளம் கண்டார். அன்று தொடக்கம் இந்த சுவர் கட்டப்பட்ட காலம், எதற்காகக் கட்டப்பட்டிருக்கும், யார் கட்டி இருப்பார்கள் என்று ஆய்வு நடத்தி வருகிறார்கள். ஆனால் இன்று வரை இந்தக் கேள்விகளுக்கு உறுதியான முடிவு கிடைக்கவில்லை.

## "திருடனின் கைபேசி"

**பிரேசில்** வீதிகளில் பட்டப் பகலில் திருடுவது ஒரு பொதுவான அம்சம். வீதியில் செல்லும் யாராக இருந்தாலும் சிறுவர் தொடக்கம் பெரியவர்கள் வரை அவர்களிடம் இருந்து பொருட்களை பறித்துச் செல்வது அன்றாடம் காணக்கூடிய காட்சி. பெரும்பாலும் சுற்றுலா பயணிகள், வெளியூரைச் சேர்ந்தவர்களிடமே திருடர்கள் தமது கைவரிசையை காட்டுவார்கள். இதில் கைபேசிகள் தான் அதிகம் திருடு போகின்றன. இதனால் பெரும்பாலானவர்கள் மேலதிகமான ஒரு கைபேசியை எடுத்துச் செல்வார்கள். அதற்குப் பெயர் "திருடனின் கைபேசி". திருட வருபவர்களுக்கு அதனைக் கொடுத்து தப்பித்துக் கொள்வார்கள்.





## விடுவிக்கப்பட்ட ஒரு மர்மக் கொலை குற்றச்சாட்டு

**அமெரிக்காவைச்** சேர்ந்த பட்ரீசியா ஸ்டொல்லிங்ஸ் என்ற பெண்ணுக்கு தனது சொந்த மகனை கொன்றதற்காக 1991 ஆம் ஆண்டு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. தனது ஐந்து மாதங்கள் ஆன குழந்தைக்கு நஞ்சூட்டிக் கொன்ற குற்றச்சாட்டு எந்த சந்தேகமும் இல்லாமல் நிரூபிக்கப்பட்டது. அதாவது குழந்தையின் இரத்தத்தில் எதிலின் கிளைக்கோல் அளவு அதிகமாக இருந்தது. இது உறைதல் தடுப்பு நச்சினால் ஏற்படுவது என்று மருத்துவர்கள் முடிவுக்கு வந்தார்கள். எனவே பட்ரீசியாவின் சிறை உறுதியானது. ஆனால் இந்த வழக்கு விசாரணைக் காலத்தில் கர்ப்பமுற்ற பட்ரீசியா மற்றொரு குழந்தையை பெற்றெடுத்தார். அந்தக் குழந்தையிடம் மெத்தில்மலோனிக் அசிடீமியா என்ற அரிய மரபணுக் கோளாறு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கோளாறு உறைதல் தடுப்பு நச்சினால் பாதிக்கப்பட்டது போல் தவறுதலாகக் காண்பிக்க முடியும் என்பதை மருத்துவர்கள் அப்போதுதான் கண்டுபிடித்தார்.

எனவே முதலாவது குழந்தையும் இப்படித்தான் இறந்திருக்கும் என்பது உறுதியானது. இரண்டு ஆண்டுகள் சிறையில் கழித்த பட்ரீசியா விடுவிக்கப்பட்டார்.

## பரிதாபத்தில் முடிந்த படகுப் பயணம்




**ஒஸ்கார்** ஸ்பெக் ஜெர்மனியைச் சேர்ந்த வேலையில்லா மின் ஒப்பந்ததாரர். ஒரு படகோட்டியும் கூட. அது ஹிட்லரின் நாஜிக்கள் ஜெர்மனியில் ஆட்சிக்கு வந்த காலம். வேலை தேடி சைப்ரஸுக்கு படகில் சென்றார் ஸ்பெக். அங்கு செப்பு சுரங்கத்தில் வேலை செய்ய நினைத்தார். ஆனால் படகுப் பயணத்தில் ருசிபட்ட அவர் மத்திய கிழக்கு மற்றும் தென் கிழக்காசியா வழியாக அவுஸ்திரேலியா செல்ல திட்டமிட்டார். திட்டப்படி அவர் அவுஸ்திரேலியாவுக்கும் சென்றார். அவரது போதாத காலம் அவர் அவுஸ்திரேலியா சென்று சேரும்போதும் இரண்டாவது உலகப் போர் ஆரம்பித்திருந்தது. நாஜிக்களுக்காக வேவு பார்ப்பதாக குற்றம்சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். உலகப் போர் முடிவுற்ற பின்னரே விடுவிக்கப்பட்டார்.

## 1400 ஆண்டுப் பாலம்

**சீனாவின்** அன்ஜி பாலம் கி.பி 605 ஆம் அண்டு கட்டி முடிக்கப்பட்டது. அதாவது 1400 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட பாலம் இது. ஆனால் அந்தப் பாலம் இன்றும் கூட எந்த சேதமும் இல்லாம் குத்துக்கல் போல் இருக்கிறது. இத்தனைக்கும் அந்தப் பாலம் எத்தனை பெரு வெள்ளங்கள், பூகம்பங்கள், போர்களை சந்தித்திருக்கும்!

சீனாவின் ஹெபெய் மாகாணத்திலேயே அன்ஜி பாலம் இருக்கிறது. உலகின் மிகப் பெரியதும், கற்களால் நிர்மாணிக்கப்பட்ட மிகப் பழமையானதுமான வளைவுப் பாலம் இது தான். இதன் நீளம் 167 அடி.



# சிரச "த வொய்ஸ் டீன் ஸ்ரீலங்கா 2022" பாடல் போட்டியில் வெற்றி கொடி கட்டிய

## பிரனிஷா தியாகராஜா








மலையும் மலை சார்ந்த இடமுமான குறிஞ்சி நிலப்பரப்பில் இருந்து சின்னக் குயில் ஒன்று கூவி தனது இசைத் திறமையை வெளியுலகுக்கு காட்டியுள்ளது. அதுவும் நாட்டில் உள்ள பெரும்பான்மை சமூக இனத்தவர்களுடன் போட்டி போட்டி அந்த சமூகத்தினரின் மொழி பாடல்களைப் பாடி வெற்றி வாகை சூடியுள்ளது. பண்டாரவளை மத்திய கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் 9 ஆம் வகுப்பில் கல்வி கற்று வரும் பிரனிஷா தியாகராஜா தான் தமிழ் இனத்திற்கே பெருமை சேர்க்கும் வண்ணம் இந்த வெற்றியை பெற்றுக் கொடுத்துள்ளார்.

செல்வி பிரனிஷா தியாகராஜா சிரச தொலைக் காட்சியில் இடம்பெற்ற "த வொய்ஸ் டீன் ஸ்ரீலங்கா 2022" பாடல் போட்டியிலேயே வெற்றி பெற்று தாம் கற்கும் பாடசாலைக்கும் தன் பெற்றோர்க்கும் பெருமை சேர்த்துள்ளார் என இவர் கல்வி கற்கும் பண்டாரவளை மத்திய கல்லூரியின் அதிபரும் இவரது வகுப்பு (விஞ்ஞான) ஆசிரியையான ரஜினியும் தெரித்துள்ளார்கள்.



ஆசிரியை ரஜினி

இவரது தந்தை தையல் தொழில் செய்பவர் என்பதுடன் தாயார் ஆசிரியை ஆவார். சிறு வயதில் இருந்தே கலை மீது தீவிர ஆர்வம் கொண்ட இவர், பாடசாலையில் இடம்பெறும் கலை சம்பந்தமான அனைத்துப் போட்டிகளிலும் பாடல் சம்பந்தமான அனைத்துப் போட்டிகளிலும் தீவிர ஆர்வம் காட்டி பங்குபற்றுவதாக அவரது ஆசிரியர் தெரிவித்தார்.


கலைநிகழ்வுகளில் மட்டுமல்ல பள்ளிப்படிப்பிலும்இவரது தன் திறமை காட்டத்தவறவில்லை.

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையிலும் இவர் அதிக புள்ளி பெற்றி சித்தியடைந்துள்ளார்.

அதுபோல் பாடவிதானங்களிலும் இவர் தன் திறமையை வெளிக்காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவருக்கு பெரும் துணையாக இருந்த பெற்றோர் சிரச தொலைக்காட்சியின் பாடல் போட்டியில் பங்கு கொள்வதற்கும் பெரிதும் துணையாகவும் ஆதரவாகவும் விளங்கியுள்ளனர். குறித்த மாணவி பாடசாலையிலும் பாடசாலை தவிர்ந்த வேறு கலை நிகழ்வுகளிலும் போட்டி நிகழ்வுகளிலும் மிகவும் ஆர்வமாக பங்குபற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த சில வருடங்களுக்கு முன் சக்தி தொலைக்காட்சியில் நடாத்தப்பட்ட அடையாளம், சக்தி சுப்பர் ஸ்டார் போட்டிகளிலும் இவர் கலந்து கொண்டு தன் திறமையினை வெளிப்படுத்தியுள்ளார்.







ராமு தனராஜா

கே. ஈஸ்வரலிங்கம்...






# குறுகிய சொற்களில் பாரிய விடயங்களை முன்வைக்கும் சக்தி கொண்டது கவிதை

## தல்னஸ்பிடிய சஹீரா சமீர்



வளர்ந்து வரும் இளம் எழுத்தாளரான சஹீரா சமீர் கேகாலை மாவட்டத்தில் அரனாயக பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட தல்ஙஸ்பிடிய எனும் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர் .

கொழும்பு பல்கலைக்கழகத்தில் தொடர்பாடலும் ஊடகக் கற்கை டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்துள்ள இவர், தற்போது இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபுமொழிப் பீடத்தில் முதலாம் ஆண்டு பயிலும் பட்டதாரியாக கல்வி நடவடிக்கையை தொடர்கிறார்.

இவரின் இலக்கியப்பயணம் பற்றி கேட்கப்பட்ட போது இவ்வாறு பதிலளித்தார். 10வது வயதிலேயே

அம்மா என்ற தலைப்பில் எட்டு வரிகளில் எழுதப்பட்ட எனது முதலாவது கவிதையை தந்தையிடம் வாசித்துக் காட்டியபோது முகம் மலர்ந்த புன்னகையோடு என் கன்னத்தில் முத்தமிட்டு வாழ்த்தியது எனக்கு இன்னும் ஞாபகத்தில் பதிந்திருக்கிறது.

எழுத்துத் துறையில் தொடர்ந்து பயணிக்க வேண்டுமென்ற உறுதி அன்று என் தந்தை தந்த அங்கீகாரத்தில் இருந்து தான் ஆர்ப்பரித்தது.

ஆரம்ப நாட்களில் என் எழுத்துத்துறை ஆசான் என் தந்தை தான்.

அவரிடம் இயல்பாகவே இருந்த எழுத்தாற்றல், என்னுள் என்னை வளப்படுத்திக்கொள்ள பெரிதும் துணை நின்றது.




பாடசாலை காலங்களில் போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி சான்றிதழ்களை பெற்றுக் கொண்டதோடு கவிதை எழுதுதல், மேடைப் பேச்சு, மேடை அறிவிப்பு என பங்குபற்றிய ஒவ்வொரு போட்டிகளுக்கு பின்னாலும் தன் ஆசிரியர்களின் முறையான பயிற்றுவிப்பு இருந்தமையை நன்றியோடு நினைவுகூருகின்றேன்.

எனினும் பாடசாலை காலத்திற்குப் பின்னர் போட்டிகளில் பங்குபற்றுவதை இயன்றளவு தவிர்த்துக் கொண்டேன். குறிப்பாக சமூக வலைத்தளங்களை அடிப்படையாக வைத்து நடாத்தப்படும் போட்டிகளில் பங்குபற்றுவதை முழுமையாகவே தவிர்த்து விடுவேன்.

என் தேடலை அதிகப்படுத்தி புதிய பாடங்களை கற்றுத்தராத ஒன்றின் ஊடாக கிடைக்கும் சான்றிதழ்களும் , விருதுகளும் என்னை பொறுத்தவரையில் பெருமதிப்புக்குரியதல்ல என்றே கருதுகிறேன்.

"விருதுகளின் பின்னால் நடக்க ஆரம்பிக்கும் போது புகழ் மீதான மோகம் எம்மை ஆட்கொண்டு விடும். இறுதியில் அந்த மோகமே எம்மை சமூகத்திற்கு பிரயோஜனம் அற்றவராக மாற்றிவிடும்." என் ஆசிரியர் ஒருவர் கூறிய வார்த்தைகளை முன்னிருத்தியே நான் இன்னும் செயற்படுகிறேன் என கூறுகிறார்.

இவர், 2016 ஆம் ஆண்டில் 15ஆவது வயதில் "ஒளிக் கீற்று" என்ற பெயரில் முதலாவது கவிதை நூலை வெளியிட்டுள்ளார். இரண்டாவது கவிதை நூலான "ஓயாத ஓலங்கள்" கடந்த 2021 ஆம் ஆண்டு வெளிவந்தது. க.பொ.த உயர்தர கல்வியைப் பூர்த்தி செய்த மடுல்போவை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் 75ஆம் ஆண்டு நிறைவு விழாவின் ஒரு அங்கமாகவே எனது புத்தகம் வெளியிடப்பட்டது. நான் எழுதிய எனது பாடசாலையும், மடுல்போவை கிராமத்தை சார்ந்த பலரும் தந்த ஆதரவால் அது புத்தகமாக உருப்பெற்றது என்று சொல்வதே சாலப்பொருந்தும் எனக் கூறுகிறார்

ஒரு கவிதை என்பது குறுகிய சொற்களில் ஆழமான விடயங்களை வெளிப்படுத்தும் விதமாக அமைய வேண்டும்.

வர்ணனைகளால் மட்டுமே நீண்டு செல்லும் கவிதைகள் வாசிப்பவருக்கு அழுப்பை ஏற்படுத்திவிடும்.

கவிதை எழுதுபவருக்கு சொற்களில் தட்டுப்பாடு இருக்கக் கூடாது.

பொருத்தமான சொற்களை பொருத்தமான முறையில் கோர்த்து விடயம் கெடாத வண்ணம் வெளிப்படுத்தும் போதே சிறந்த கவிதை உருவாகும். கற்பனையில் இயல்புக்கு பொருந்தாத பொய்யான விடயங்களை கவிதையாக வடிப்பதை எப்போதும் செய்துவிடக் கூடாது.

அடிக்கடி ஆய்வுக் கட்டுரைகளை எழுவது பிடித்தமான செயல் அவ்வாறு எழுதும் போதெல்லாம் நான் புத்தங்களுக்குள் மூழ்கிக் கிடப்பேன். பொதுவாக என் வயதை ஒத்தவர்கள் ஆர்வம் செலுத்தும் விடயங்களை விட்டும் நான் ஒதுங்கியே நிற்பேன். அதன் காரணமாகவே பலரின் அசட்டுப் பேச்சுக்களை கேட்க வேண்டி ஏற்பட்டது. எனினும் ஆரம்பத்தில் இருந்தது போன்று இப்போதெல்லாம் புறக்கணிப்புகளை கண்டு நான் கவலை கொள்வதில்லை. ஏனெனில்



புறக்கணிக்கப்பட்ட இடங்களில் இருந்து தான் நான் முன்னோக்கி பயணிக்கும் உந்து சக்தியை பெற்றுக்கொள்கிறேன். ஆதலால் தான் என்னை காயப்படுத்துபவர்களை நான் அதிகமதிகமாய் நேசிக்கிறேன்.

புத்தகம் ஒன்றை வெளியிட வேண்டுமென ஆசை கொண்டு அதற்கான முயற்சிகளில் இறங்கிய போது நான் எதிர்நோக்கிய சவால்கள் தான் என்னை அதிகம் செதுக்கியது. உங்கள் வெறுப்புக்களின் வழியே நான் பெரும் தடைகளை தாண்டும் தைரியசாலியாக என்னை வடிவமைத்துக் கொண்டேன். சவால்களை எதிர்கொள்ளாமல் சரித்திரம் படைக்க இயலாது.

வயதில் இளையவள் என்பதால் உங்களில் பலர் எதிர்கொண்டு வென்ற சவால்களில் பாதியைக் கூட நான் இன்னும் காணவில்லை என்பதே நிஜம்.

எனினும் சிலதை பதிவு செய்து கொள்கிறேன்.

"Book எழுதி என்னத்த செய்ய? O/L எழுதி ஆச்சு Pass ஆவுறான்டு பாக்கலாமே?" என முதுகின் பின்னால் ஒளிந்து கொண்டு கதை கூறியவர்களுக்கும், '15 வயசுல இதெல்லாம் தேவையா. மிச்சம் ஆடாத எழும்பேலாம போய்டும்' என அறிவுரை கூறிய தீர்க்கதரிசிகளுக்கும், உங்கள் அனைவருக்கும் என் நன்றிகள். அந்த வார்த்தைகளை நீங்கள் வெளிப்படுத்தாமல் இருந்திருந்தால், அந்த தருணங்களை நான் எதிர்கொள்ளாமல் இருந்திருந்தால் நானும் தோல்விகளில் துவண்டு காணாமல் போயிருப்பேன். தடையாக நிற்பவர்களை கண்டு கொள்ளாமல் கடந்து செல்லுங்கள். அவர்கள் அங்கேயே நின்று கொண்டு இன்று உங்களையும் நாளை இன்னொருவரையும் குறை கண்டு கொண்டே இருப்பார்கள்.

நீங்கள் வெற்றியை எட்டிப் பிடித்த பின்பும் அவர்கள் அங்கேயே தான் நின்று கொண்டிருப்பார்கள். அவர்களுக்கெல்லாம் புரியவைக்க முயற்சி செய்து கொண்டிருந்தால் எமது பயணம் வீணே தாமதமாகிவிடும்.

"பிரச்சினை, கவலை என்ற சொற்களை எந்த சூழ்நிலையிலும் உபயோகப்படுத்தாதே. சவால் என்றே கூறப் பழகிக்கொள். அனைத்து சூழ்நிலைகளையும் சவாலென ஏற்று எதிர்கொள்ள முற்படு. இலகுவாக தடைதாண்டும் வழியை கண்டறிந்து விடுவாய்." என்று நண்பர் ஒருவர் என்னிடத்தில் அடிக்கடி சொல்வதுண்டு. இந்த வார்த்தைகளை நான் ஆழமாக நம்புகிறேன் எனக் கூறுகிறார்.



கவிதை எழுதுவதால் என்ன பயன் கிடைக்கின்றது என பலராலும் இன்று கேட்கப்படும் கேள்வியாய் உள்ளது . இதுபற்றி பின்வருமாறு கூறுகிறார்

வாசிப்பு பழக்கம் நாளுக்கு நாள் குறைவடைந்து கொண்டே செல்லும் துரதிர்ஷ்டவசமான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த தலைமுறையினரிடம் இருந்து இவ்வாறான கேள்விகள் முன்வைக்கப்படுகின்றமை ஆச்சரியமான விடயமல்ல.

எனினும் எதிர்காலம் அர்த்தமற்றதாக மாறிவிடாது பாதுகாக்க வேண்டுமாயின் புத்தகங்களை எம் பிள்ளைகளின் நெருங்கிய வட்டத்திற்குள் கொண்டுவர வேண்டும். கவிதையை பொருத்தவரையில் குறுகிய சொற்களில் பாரிய விடயங்களை முன்வைக்கும் சக்தி அதற்கு இருக்கின்றது. 300 சொற்களை கொண்ட ஒரு கட்டுரையில் பதிவு செய்யும் கருத்தை நான்கு அடிகளை கொண்ட கவிதையில் சொல்லிவிடலாம்.

கவிதைக்கே உரிய நியதிகளை புரிந்து கொண்டு எழுத ஆரம்பிக்கும் போது மக்களை ஈர்த்தெடுக்கும் சக்தியை அது பெற்றுக்கொள்ளும் என மனம் திறந்து தனது இலக்கியப்பயணத்தின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.

மஜினா உமறு லெவ்வை ...✍
மாவடிப்பள்ளி



வகுப்பறையில் ஒரு மாணவன்: போடா முட்டாள்!
மற்றொரு மாணவன்: நானாடா முட்டாள், நீதாண்டா முட்டாள்.
ஆசிரியர்: என்ன சத்தம் அங்கே? நான் ஒருத்தன் இங்க இருக்கறதையே மறந்துட்டீங்களா?



ஐசிஐசிஐ என்பதன் தமிழ் அர்த்தம் என்ன தெரியுமா?
தெரியலையே?
நான் பார்க்க நான் பார்க்க நான்.



நீ என் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறதா கேட்டையாமே?
ஆமா ஆன்டி...
முதல்ல என்கிட்டேயில்லை கேக்கணும்?
உங்களுக்கு ரொம்ப வயசாயிடுச்சே!






(புயல் மழையில் ஒருவன் பிட்சா வாங்கக் கடைக்குப் போகிறான்.)
கடைக்காரர்: சார் உங்களுக்குக் கல்யாணம் ஆயிடுத்தா?
வந்தவர்: பின்ன! இந்தப் புயல் மழையில எங்கம்மாவா என்னை பிட்சா வாங்க அனுப்புவாங்க?



ஏனுங்க லட்சத்துக்கு எத்தினி சைபரு?
அது தெரிஞ்சா நான் ஏன் கோடீஸ்வரனா இருக்கேன்?



டாக்டரோட வீட்டில முன்னாடி வேலைபார்த்தேன்னு சொல்றீங்களே? சர்டிபிகேட் ஏதுமிருக்கா?
அவரோட ஸ்டெதாஸ்கோப்பே இருக்கு சார்.





என்னதான் நீங்க செண்டிமெண்ட் பார்த்தாலும், கப்பல் கிளம்பறதுக்கு முன்னாடி எலுமிச்சம் பழம் எல்லாம் வைக்கமுடியாது. சங்கு ஊதிட்டுதான் கிளம்பனும்.



எதுக்காகத் தைலடப்பாவைத் தடவிக்கிட்டு இருக்கீங்க?
டாக்டர்தான் தலைவலிக்கு இதைத் தடவச் சொன்னார்.



காது கேட்கலைன்னுதானே சொன்னீங்க... கண்ணாடி போட்டுட்டு வர்றீங்க?
தெரியாத்தனமா கண்டாக்டர்கிட்ட போயிட்டேன்.

லாண்டரியில் வேட்டி கடனுக்கு வாங்கவந்த ஒருவர் பக்கத்தில் நின்றிருந்தவருடைய வேட்டியைத் தவறுதலாக எடுத்துக்கொண்டு கிளம்பிவிட்டார். இதை சற்றுத் தாமதமாகக் கவனித்த கடைக்காரர் எதிரில் போய்க்கொண்டிருந்தவரை நோக்கிச் "சார் சார், வேட்டி அவருது சார்" என்று உரக்கக்கத்தினார். போய்க்கொண்டிருந்தவர் தன் இடுப்பு வேட்டியைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டு ஓடியே போய்விட்டார்!

# இலக்கியத்தில் முத்துக் குளித்து முத்தெடுத்த கவிஞர் மூதூர் கலை மேகம் ஏ.எஸ். இப்றாகீம்

**உங்களைப் பற்றிய அறிமுகத்தை எமது வாசகர்களுக்காகக் கூறுங்கள்?**

நான் மூதூர் கலைமேகம் எனும் பெயரில் எழுதும் ஏ.எஸ். இப்றாகீம், முத்துக் குளிக்கும் மூதூர் என்னும் கிராமத்தில் 1943.07.09 ஆம் திகதி பிறந்தேன். எனது சிறுபராயத்தில் என் தந்தை இறந்த பிறகு என் வளர்ப்புத் தாயின் அனுசரணையில் வளர்ந்தேன். மூதூர் (அன்று) முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் (இன்றைய) தேசிய கல்லூரியில் ஆரம்பக் கல்வியை உயர்தரம் வரை கற்க முடியாத நிலையில் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு, இடைநிலைக் கல்வியை 03 ஆண்டு காலம் வரை கொழும்பு றோகண வித்தியாலயத்தில் தபால் மூலம் கற்றேன். இப்படி கற்றது கை மண்ணளவு கல்லாதது உலகளவு என்ற ரீதியில் எழுந்தே சீவியம் எளிமையே வாழ்க்கை என்றே தாரக மந்திரத்துடன் தற்போது வரை இயங்கிக்கொண்டிருக்கின்றேன்.

**தங்களுக்குள் ஓர் இலக்கியவாதி தோன்றுவதற்கான குடும்பப் பின்னணி, இளமைப்பருவம் போன்றவற்றை முதலில் கூறுங்கள்?**

எனது குடும்பப் பின்னணியை உற்று நோக்கும் போது எனது தந்தையின் தந்தை ஒரு புலவராவார். இவர் இந்திய நாட்டின் காயல் பட்டினத்தில் பிறந்து வாழ்ந்தவரென்றாலும் மூதூரில் மறுதாரமாக எனது வாப்பும்மாவைத் திருமணம் செய்து இங்கும் வாழ்ந்திருக்கிறார். இவர் பெயர் கலிபா சாகிபு. அந்தவகையில் புலவர் பரம்பரையில் தோன்றிய நானும் இன்று இலங்கையில் பேசப்படும் ஒரு கவிஞனாக மிளிர்கிறேன்.

**உங்களது தொழில் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வீர்களா?**

எனது தொழில் என்று பார்க்கும் போது அது பல்வேறு வகையான தொழில்களாகவே அமைந்தது. அதிலும் விவசாயம் மற்றும் வியாபாரம் போன்றவை குறிப்பிடடுச் சொல்லக் கூடியது.

**உங்களது முதற்படைப்பு எப்போது எதில் வெளியானது? அந்தப் படைப்பு பற்றியும் சுருக்கமாகக் குறிப்பிடுங்கள்?**

எனது முதல் படைப்பு தினகரன் சிறுவர் மலர், இளைஞர் உலகம் போன்ற பகுதிகளில் 1962 ஆண்டுகளில் சிறுபடைப்பாக வெளிவந்தது. இதன் பிற்பாடு இலங்கை தேசிய பத்திரிகையான தினபதி கவிதா மண்டலப் பகுதியில் பிரபல கவிஞர் ஈழமேகத்தின் சிபாரிசில் பிரசுரமானது. முதல் கவிதையான பைங்கிளியே என்ற தலைப்பில் இடம்பெற்றதைத் தொடர்ந்து ஏராளமான கவிதைகள் எழுத நேர்ந்தது. இப்படிப்பட்ட முதுகவிஞர்களின் வழிகாட்டல்கள்தான் என்போன்ற கவிஞர்கள் உதயமாவதற்குக் காரணமாக அமைந்தது. 1967 இல் பைங்கிளியே



என்ற கவிதை எனது முதல் கன்னிப் படைப்பாகும்.

**"மூதூர் கலைமேகம்" இந்தப் புனைப் பெயரை எப்படித் தேர்வு செய்தீர்கள்? புனைப் பெயரின் பின்னணியை அறிந்துகொள்ளவே இதனைக் கேட்டேன்?**

கலைமேகம் என்ற புனைப் பெயர் திருமலை வள்ளுவர் கலை வட்டம் 1969 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் மனித வாழ்க்கை என்ற தலைப்பில் முதலாம் இடத்தைப் பெற்றதையிட்டு கலைமேகம் என்ற விருது வழங்கப்பட்டது. இதன்பிறகு தொடர்ந்து எனது ஆக்கங்கள் யாவும் மூதூர் கலைமேகம் என்ற பேரில் இடம் பெற்று இன்று வரை நிலைத்து நிற்கின்றன எனலாம்.



**நீங்கள் எந்தெந்த இலக்கியத் துறைகளில் இயங்கி வருகிறீர்கள்?**

நான் அனேகமாக கவிதை, சிறுகதை, கட்டுரை, ஆகிய முத்துறைகளும் என்னைக் கவர்ந்ததனவாகும். ஆகவே தான் இந்த இலக்கியத் துறைகளைத் தேர்ந்தெடுத்தேன். இதுவரை 30 க்கும் மேற்பட்ட சிறுகதைகள், நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகள், ஆயிரத்துக்கும் அதிகமான மரபுக் கவிதைகள் போன்றவற்றைப் படைத்துள்ளேன். அத்தோடு காவியம், நாடகம் எனவும் எழுதியுள்ளேன் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**உங்களைக் கவிதை எழுதத் தூண்டிய சம்பவம் பற்றிக் குறிப்பிடுங்கள்?**


என்னைக் கவிதை எழுதத் தூண்டிய சம்பவம் அதாவது 1956 இல் எமது பகுதி 6 ஆம் வட்டாரத்தில் படித்த வாலிபர்கள் ஒன்று சேர்ந்து அமைத்த சங்கமானது சமூகசேவை, விளையாட்டு, வாசிகசாலை போன்ற பணிகளை ஆரம்பித்து இக்பால் சனசமூக நிலையம் என்ற பெயரிட்டு 25 வருட காலம் இயங்கியது.

அதில் நானும் உறுப்பினராக இணைந்து நூலகர் பதவியை எடுத்து அதன் மூலம் பல வாசகர்களை உருவாக்கினேன். நானும் வாசிப்பை மேற்கொண்டு கவிதை நூல்கள், சிறுகதை நூல்கள், நாவல்கள் என்று வார, மாத சஞ்சிகைகளை வாசித்து இன்று ஒரு கலை இலக்கியவாதியாக வளர்ந்துள்ளேன். வாசிப்பே உயிர் மூச்சு. அதன் நேசிப்பே எழுத்து வன்மை. இதுவே நான் என்னை எழுத்தாளராக ஆவதற்குக் காரணமாக அமைந்தது.

**ஆயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதியுள்ள நீங்கள் ஒரு சிறந்த கவிதை எவ்வாறு இருக்க வேண்டும் என்ற கேள்விக்கு எப்படிப் பதில் சொல்வீர்கள்?**

பல கவிதைகளை எழுதிய நான் ஒரு சிறந்த கவிதை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை விளக்கும் போது அது முதலில் கவிதை கவிதையாகயிருக்க வேண்டும் என்றே கூறுகிறேன். அத்துடன் ஓசை, நயம், எதுகை, மோனை, அணிநடை என்ற அம்சங்கள் கவிதையில் இருக்க வேண்டும். அப்போதுதான் நல்ல கவிதை உருவாகும். வாசிக்க ஆசை ஏற்படும். இத்தன்மை இல்லாத எந்தக் கவிதையும் கவிதையாக இருக்கவே முடியாது.

**காதல் கவிதைகளை எண்ணிக்கையில் அதிகமாக எழுதியிருக்கிறீர்களே. இதற்கான காரணம் என்ன?**




மனித வாழ்க்கையில் காதலும் ஒரு அம்சமாககத் திணிக்கப்பட்டுள்ளது. கல்யானத்துக்கு முன் காதல் புரிவதும் கல்யாணம் செய்த பின்னர் காதல் புரிவதும் கண்ணியமான முறை என அக்கால நடிகர் என் எஸ் கிருஸ்ணண் ஒரு முறை கூறியுள்ளார்.

ஆகவே காதலுக்கு முக்கியத்துவம் வழங்குவது தவறில்லை என்றே நான் கூறுவேன். இருமனம் கலந்தால் திருமணம் நிறைவேறும். எனவே காதலும் வளர வேண்டும் கண்ணியமும் நிறைய வேண்டும் என்பதே நான் கண்ட காரணமாகும்.

**மரபுக் கவிதைகளை மனதில் நிறுத்தி வைத்துக்கொள்வது மாதிரி புதுக் கவிதைகளை நினைவில் நிறுத்திக்கொள்ள முடியுமா?**

மரபுக் கவிதைகள் மனதில் நிச்சயம் பதியக் கூடியதாக இருக்கும். கவிஞர் கண்ணதாசன் பாரதியார் போன்றோரின் கவிதைகள், பாடல்கள், இன்றும் என்றும். மரபுதான் நினைவலையாக இருப்பதற்குச் சான்றாக அமைகிறது. இந்த அடிப்படையில் தான் நானும் ஏராளமான கவிதைகளை மரபு சார்ந்து எழுதுவதற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளேன்.

தற்போதைய புதுக் கவிதைகளை மனதில் வைப்பது முடியாத காரியமாகும். என்னைப் பொறுத்தமட்டில் யாரும் தவறாக நினைக்க வேண்டாம் புதுக் கவிதை எனச்சொல்லி புது மொழிகள் சில வளர்கிறது.

கவித்துவம் காணாதவர்கள் கூடிவிட்டார்கள் புதுக் கவிதையும் இதுபோல் பெருகிவிட்டது. எனவே இனிவரும் காலந்தான் மரபா புதுமையா? என்பதற்குப் பதில் சொல்லும். காத்திருப்போம்.

**இதுவரை வெளிவந்த உங்களது நூல் அறுவடைகள் பற்றிச் சொல்லுங்கள்?**

இதுவரை நான் வெளியிட்ட நூல்கள் இரண்டு கவிதைத் தொகுப்புகள் மற்றும் ஒரு காவியம் குறுந்தொகுப்பு நூல். இன்னும்மொன்று முத்துறை சார்ந்த ஒரு ஆவண நூல். அவையாவன:

01. தங்கப் பாளம் கவிதை (2003)
02. மகரந்தம் கவிதை (2004)
03. வன்செயல் காவியம் (2006)
04. கலைச்சரம் ஆவண வகைத் தொகுப்பு (2022)

என்ற 04 நூல்களையே இதுவரை வெளியுட்டுள்ளேன். இதுவே எனது நூல் அறுவடைகளாகும்.

**தங்கப் பாளம் கவிதை நூல் பற்றி விசேடமாகக் குறிப்பிட விரும்புவது என்ன?**

தங்கப் பாளம் நூல் பற்றி நான் கூறுவதன்றால் அது ஒரு பெரிய கதையாகும். அதாவது 50, 60 செய்யுள்கள் இறைந்த கவிதைகளை சேகரித்து வைத்திருந்த நான் இதனை நூல் உருவாக்க எண்ணி முயற்சித்த வேளை நிதி இன்மையினால் நூல் வெளியிடாத நிலையில் தத்தளித்தபோது என்னைப் பற்றி நவமணியில் உடதலவின்னையைச் சேர்ந்த புன்னியாமீன் அவர்கள் கலைஞர் அறிமுகம் பகுதியில் பிரசுரித்த வேளை அவர்கள் கேட்டுக்கொண்டதிற்கு இணங்க தங்கப் பாளம் நூலில் உள்ள கவிதைகளை அவரிடம் ஒப்படைத்தேன். சில மாதங்களின் பின்



தனது தாய் மர்ஹூமா கச்சு முகம்மது முகைதீன் பீவியுடன் கலைமேகம் – 2018

புன்னியாமீன் அவர்கள் தாமாக முன்வந்து எனது கவிதைகளை தங்கப் பாளம் என்ற கவிதை நூலாக அச்சிட்டு, எனக்கு 500 நூல் பிரதிகளை அவர் செலவில் அன்பளிப்பு செய்தார். அதனை அவரின் ஊரிலும் வெளியிட்டு பின்னர் நானும் எனது ஊரான மூதூரிலும் வெளியிட்டேன். இதன் மூலம் எனக்குப் பாரிய வரவேற்பும் கிடைத்தது. இந்த மகிழ்சியான நிகழ்வு 2003 ஆம் ஆண்டில் இடம்பெற்றது.

**மகரந்தம் கவிதை நூலில் உள்ளடங்கியுள்ள கருப்பொருட்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

மகரந்தம் கவிதை நூலில் உள்ள கருப்பொருட்கள் பற்றிக் குறிப்பிடுவதென்றால் இன்னும் ஒரு நூல் தயாரிக்க வேண்டும். என்றாலும் சுருக்கமாகக் கூறின் அதில் வரும் அம்சங்கள், சமூக கண்னோட்டம், காதல், தமிழ் வளர்ச்சி கல்வி, கலாசாரம் போன்றவற்றை மையமாகக் கொண்டது.

**உங்களது கவிதைகள் சிறுகதைகள் மற்றும் கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு நூலொன்று கலைச்சரம் என்ற பெயரில் அண்மையில் வெளியிடப்பட்டதாக அறிகின்றேன். இந்த நூல் பற்றியும் குறிப்பிடுங்கள்?**

எனது இறுதியாக வெளிவந்த சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் அடங்கிய நூலே கலைச்சரம் என்பதாகும். இந்த நூல் கடந்த 2022 ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி அன்று எமது குடும்ப நல நிதியம் மதார் நம்பிக்கை நிதியத்தின் மூலம் அதன் தற்போதைய தலைவர் எம்.எம். றபீக் அவர்களின் விடாமுயற்சியின் காரணமாக என்னை கௌரவிக்கும் நோக்கதில் என்னால் கடந்த காலங்களில் எழுதி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட சில ஆக்கங்களைத் தேர்ந்தெடுத்து மேற்குறிப்பிட்ட கலைச்சரம் நூல் வெளியிடப்பட்டது. இக்குடும்ப நல உறவுகள் இணைந்த இந்நிதியம் சுமார் 15 வருடங்கள் நிறையுற்று இயங்குகிறது. இது ஒரு முத்துறை சார்ந்த புதுமைப் படைப்பாகும். இதுவே இதன் சரிதமாகும்.




**வளர்ந்து வரும் இளம் படைப்பாளிகளுக்கு தாங்கள் கூறும் செய்தி என்ன?**

தற்போது வளர்ந்துவரும் இளம் படைப்பாளர்கள்; பரந்து பெரிகிவிட்டனர். கம்பெடுத்தவன் சண்டைக்காரன் போல் எவரையும் சரியாக இனங்கான முடியவில்லை. தற்போது வாசகர்கள் குறைவு. படைப்பாளிகள் அதிகம். எனவே இலக்கிய இரசனை இல்லாத ஆக்கம் உப்பில்லாப் பண்டம் போன்றது. இளம் படைப்பாளிகள் வளரவேண்டுமானால் இலக்கியம் சார்ந்த நூல்களையும் நிறைய வாசித்து எல்லோரையும் கவரும் வண்ணம் ஆக்கங்கள் படைக்க வேண்டும். இதுவே எனது அறிவுரையாகும்.



கௌரவ கலாசார அமைச்சர் மஹிந்த யாபா அபேவர்த்தன அவர்களின் தலைமையில் 2007 டிசம்பர் 16ஆம் திகதி ஜோன் டீ சில்வா மண்டபத்தில்

**இலக்கிய உலகில் நீங்கள் கண்டறிந்த அல்லது உங்களுக்கு வெளிப்பட்ட உண்மையாக நீங்கள் கருதுவது எதை?**

இலக்கிய உலகில் நான் கண்டறிந்த நன்



மைகள் ஏராளம். அதாவது அறிவு ஆற்றல், எழுத்து வன்மை, ஒற்றுமை உறவு இப்படி நீண்ட அனுபவங்களைக் கண்டறிய வைத்தது எனலாம். இன்னும் இதன்மூலம் ஏராளம் அறியவேண்டி உள்ளது. இலக்கியம் என்பது இனிமை தரும் தோட்டமாகும். இதை பின்பற்றியவர்கள் ஒருக்காலும் சோடை போக மாட்டார்கள். இதை விவரிக்க எழுத்தால் முடியாது. இதற்குள் சென்றால்தான் உண்மை விளங்கும். இதைவிட வேறு எதையும் நான் கூறுவதற்கில்லை.

**இலக்கியப் பங்களிப்புக்காக இதுவரை தாங்கள் பெற்ற கௌரவங்கள், பாராட்டுகள், பரிசுகள், விருதுகள் பற்றிக் கூறுங்கள்? (பட்டங்கள், விருதுகளைக் குறிப்பிடும் போது எந்த அமைப்பு எத்தனையாம் ஆண்டு தந்தது என்ற விபரத்தையும் கட்டாயம் சேருங்கள்)**

இலக்கியத் துறையில் இதுவரை எனக்கு கிடைத்த விருதுகள் பற்றி கூறுவதென்றால்

01. கலைமேக விருது திருகோணமலை வள்ளுவர் வட்டம் (1969)
02. பொற்கிழி தேசிய மீலாத் விழா (2004)
03. கலாபூஷணம் முஸ்லிம் கலாச் சாரத் திணைக்களம் (2007)
04. ஆளுனர் விருது கிழக்கு மாகாண சபை (2007)
05. கலாசூரி தினகரன் தினமின விழா (2007)
06. கலாதீபம் திருகோணமலை நகர நூலக சபை (2008)
07. கலைமுரசு மதார் நம்பிக்கை நிதியம் (2008)
08. கலைநேசன் விருது மூதூர் மதார் நம்பிக்கை நிதியம் (2009)

இவைதவிர கொழும்பு கலதாரி ஹோட்டலில் இடம் பெற்ற ஹாசிம் உமர் நூல் வெளியீட்டு நிகழ்வு மற்றும் இன்னும் பல கலை இலக்கியப் போட்டிகளிலும் கலந்து ஏராளமான பரிசில்களும் சான்றிதழ்களும் பெற்றுள்ளேன்.

**இந்த நேர்காணல் மூலம் வேறு என்ன கூற விரும்புகிறீர்கள்?**

இந்த நேர்காணலில் என்னை சக்கை போட்டு வாட்டிவிட்டீர்கள். (எனது வயது அப்படி அதனால்தான் இப்படிக் குறிப்பிட்டேன்). இதனால் நான் சளைக்கவில்லை. என்றாலும் தங்களின் கேள்விகளுக்கு என்னால் முடிந்தமட்டில் பதில் அளித்துள்ளேன்.

இதில் வரும் சம்பவங்களை முடிந்தவரை எனது ஞாபகத்தின்படி தந்துள்ளேன். என்னையும் ஒரு ஆளுமையாக இணங்கண்டு நேர்காணல் செய்தமைக்காக எனது நன்றியையும் எத்தி வைக்கிறேன். அத்துடன் பத்திரிகை நிறுவனத்தார்களுக்கும் என் நன்றிகள் உரித்தாகட்டும்.

நேர்கண்டவர்:
வெலிகம ரிம்ஸா முஹம்மத்...

# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

எம்.மலர் ராணி.
கொழும்பு13

**கேள்வி:-** எங்கள் தளபதி நடிக்கும் 'வாரிசு' திரைப் படத்தைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்.?

**பதில்:-** பொதுவாக நட்சத்திர நடிகர்கள் நடிக்கும் படங்களை அறிமுகப்படுத்தும் பொழுது முதல் பார்வை இரண்டாம் பார்வை,மோஷன் போஸ்டர்கள் என போஸ்டர்களை வெளியிடுவார்கள்.

ஆனால் தளபதி விஜய் நடிப்பில் அடுத்த ஆண்டு பொங்கலுக்கு படம் வெளியாகும் என அறிவிக்கப்பட்டு இருக்கும் 'புதிய படமான 'வாரிசு' படத்துக்கு மூன்று போஸ்டர்களை படக் குழுவினர் வெளியிட்டனர். முதல் போஸ்டரில் விஜய்யின் ஸ்டைலான தோற்றம், இரண்டாவது போஸ்டரில் குழந்தைகளுடன் குழந்தைத் தனமான வசீகரத் தோற்றம், மூன்றாவது போஸ்டரில் ரசிகர்களை ஈர்க்கும் கொமர்ஷல் எக்சன் தோற்றம் என அவரது 'மூன்று' முகத்தையும் வெளியிட்டு ரசிகர்களை வியப்பில் ஆழ்த்தி இருக்கிக்கிறார்கள்.

இது தொடர்பாக படக் குழுவினர் பேசுகையில் 'வாரிசு படத்தின் கதையை போஸ்டர்கள் மூலம் சூசகமாக வெளியிட்டிருக்கிறோம்" என்றனர்.

இதைத் தொடர்ந்து, தொலைந்த தனது தாய் தந்தையரைத் தேடி அவர்களது நிஜ மகன் பயணித்து கண்டறியும் கதைதான் தளபதி விஜய்யின். 'வாரிசு 'படக் கதை ' என இணையத்தில் ரசிகர்கள் பதிவிட்டு வருகிறார்கள்.





எஸ். எம். பாருக்,
திஹாரி.

**கேள்வி:-** கண்ணதாசன் எழுதிய பாடல்களில் உங்களுக்கு பிடித்த பாடல் வரிகள் ஏதாவது இருக்கிறதா?



**பதில்:-** புல்லாங் குழலில் காற்று புகுந்தால் புதுப் புது இசையாகும்!

பொல்லா மனதில் ஆசை புகுந்தால் பொழுதும் பகையாகும்!

வார்த்தைகளை வைத்து கவிஞர் எப்படி விளையாடி இருக்கிறார் என்று கவனித்தீர்களா!

எம்.மாகிரட்
எலபடகம

**கேள்வி:-** தளபதி விஜய்யின் மகனும் கதாநாயகனாக நடிக்கிறாரா மே...ஹாய் ஜாலிதான்....இது உண்மையா..சேர்?

**பதில்:-** உண்மைதான் மாகிரட்.தளபதி விஜய் தனது நிஜவாரிசான சஞ்சயை விரைவில் கதாநாயகனாக அறிமுகப் படுத்தவிருக்கிறார். கதை, இயக்குநர் உள்ளிட்ட விடயங்கள் உறுதியாக்கப் பட்டு விட்டதாகவும் இதற்கான அதிகாரப் பூர்வமான அறிவிப்பு விரைவில் வெளிவரும் என்று விஜய்க்கு நெருக்கமானவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது!

## 'விக்ரம்'வசூலில் ரஜிகாந்த் திகிலில்!

எஸ்.ஏ.பிரபு
மஸ்கெலியா.

**கேள்வி:-** ரஜினி காந்த் நடிக்கும் படத்திற்கு பெயர் வைத்துவிட்டார்களா?



**பதில்:-** ம்... 'ஜெயிலர்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். ரஜினி காந்துக்கு இப்போது ஒரு புதிய பிரச்சினை வந்திருக்கிறது.

அதாவது இதுவரை காவமும் ரஜினி காந்தின் படங்கள் தான் வசூலில். சாதனை படைத்து முன்னணியில் நின்றது. ஆனால் 'விக்ரம்' பட வசூல் சாதனைக் குப்பிறகு 'ஜெய்லர்' படக் குழுவினருக்கு ஒரு பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது.

'ஜெய்லர் படத்தில் நடித்து வரும் சூப்பரா ஸ்டார் ரஜினி காந்த்திற்கு சாதாரண வெற்றி அல்ல பிரமாண்டமான வசூல் வெற்றி வேண்டும் என்ற கட்டாய நெருக்கடி சூழல் உருவாகி இருக்கிறது. இதற்காகத்தான் 'ஜெய்லர்' படத்தை இயங்கும் நெல்சன் திலிப்குமாரை அழைத்த ரஜிகாந்த் தனது நிலையை விவரித்து திரைக்கதையை மேலும் கூர்மைப் படுத்த மூத்த இயக்குநரானக் கே.எஸ். ரவிக்குமாரை பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று ஆலோசனை வழங்கி இருக்கிறார்.

ஆர்.எம்.ராஜா
வவுனியா.

**கேள்வி:-** 'விக்ரம்' படத்தில் கௌரவ நடிகராக நடித்ததற்காக நடிகர் சூர்யா பணம் எதுவும் வாங்கவில்லையாமே உண்மையா..?

**பதில்:-** உண்மைதான் அதோடு இன்னுமொரு முக்கியமான தகவல்.

அதாவது, இயக்குநர் லிங்குசாமி இயக்கத்தில் தயாராகி வரும் 'தி வாரியர்' படத்தில் இடம்பெற்ற 'விசில்' எனத் தொடங்கும் பாடலையும் நடிகர் சூர்யா வெளியிட்டிருக்கிறார். இசையமைப்பாளர் தேவி சிறிபிரசாத் இசையில் உருவான இந்தப் பாடல் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்திருப்பதால் விரைவில் இந்தப்பாடல், 100 மில்லியனுக்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் பார்வையிட்டு சாதனை படைக்கும் என திரை உலக இசை விமர்சகர்கள் கூறுகிறார்கள். இதனிடையே திரையுலகினர் சூர்யாவின் செயலுக்காக விசிலடித்து தங்களுடைய பாராட்டை தெரிவித்திருக்கிறார்கள். அதாவது, வெற்றி பெற்ற 'விக்ரம்' படத்தில் சிறப்பு தோற்றத்தில் நடித்த சூர்யா, அதற்காக எந்த ஊதியமும் பெறவில்லை. அதேபோல் ஜூலை 1ஆம் திகதி வெளியான நடிகர் மாதவன் நடித்து இயக்கிய 'ராக்கெட்ரி தி நம்பி எபெக்ட்' படத்திலும் அவர் சூரியாவாகவே சில காட்சிகளில் தோன்றுகிறார்.



இதற்கும் அவர் எந்த ஊதியத்தையும் பெறவில்லை. திரை உலகில் சக நடிகர்களை மதித்து அவர்கள் நட்பைப் போற்றி, எந்த வித சம்பளமும் வாங்காமல் அவர்களின் படங்களில் கௌரவ தோற்றத்தில் நடித்து கொடுப்பதால் சூர்யாவின் பெருந்தன்மையை திரையுலகினர் விசில் அடித்து பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

**சினி பஜார் கேள்வி பதில்,**
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

# மேக்கப்பில்லாத போது அழகாக இருக்கும் தமிழ் நடிகை



சாந்தினி தமிழரசன் இந்திய சினிமாவின் தமிழ் நடிகை ஆவார், இவர் முக்கியமாக தமிழ் மற்றும் தெலுங்கு படங்களில் பணியாற்றுகிறார்.

அவர் 2010 இல் தமிழ் திரைப்படமான சித்து +2 மற்றும் 2013 இல் தனது தெலுங்கு முதல் படமான காளி சரண் மூலம் தனது நடிப்பு வாழ்க்கையைத் தொடங்கினார், அவர் 2019 இல் ஒரு தொலைக்காட்சித் தொடரிலும் நடித்தார்.

தமிழ் நடிகை சாந்தினி தமிழரசன் 1992 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி தமிழ்நாட்டில் உள்ள சென்னையில் தமிழரசன் மற்றும் பத்மாஞ்சலிக்கு மகளாகப் பிறந்தார்.

அவர் டிசம்பர் 2018 இல் நடன இயக்குனரான நந்தாவை மணந்தார். சாந்தினி தமிழரசனின் உயரம் 5.6 அடி [168 செமீ]. பழுப்பு நிற கண்கள் மற்றும் முடி.

# வெற்றிக்கு பின்பும் அதே நிலையில் கார்த்திக் ஆர்யன்!

## நடிகை கிரீத்தி சனோன்



நடிகர் அக்சய் குமார் நடிப்பில் 2007ம் ஆண்டு வெளிவந்த படம் பூல் புலையா. இதன் இரண்டாம் பாகத்தில் இந்தி நடிகர் கார்த்திக் ஆர்யன் நடித்து உள்ளார். சமீபத்தில் வெளிவந்த இந்த படம் ரசிகர்கள் மத்தியில் பலத்த வரவேற்பு பெற்றது. டீசீரிஸ் நிறுவன தலைவர் மற்றும் பட தயாரிப்பாளரான பூஷண் குமார் மற்றும் நடிகர் கார்த்திக் ஆர்யன் இணைந்து இதுவரை இரண்டு வெற்றி படங்களை கொடுத்து உள்ளனர். அவற்றில், கடந்த 2018ம் ஆண்டு வெளியான சோனு கே டிட்டு கி ஸ்வீட்டி என்ற படம் வசூலில் அதிக லாபம் ஈட்டியது. அதனை தொடர்ந்து, இவர்களது கூட்டணியில் சமீபத்தில் வெளியான பூல் புலாயா 2 படமும் பாக்ஸ் ஆபீசில் உலகம் முழுவதும் ரூ.230 கோடி வரை வசூலித்துள்ளது. இந்த படத்தில், நடிகைகள் தபு மற்றும் கியாரா அத்வானி உள்ளிட்டோரும் நடித்து உள்ளனர். அடுத்து ஷேஜடா என்ற படத்தில் கார்த்திக் மற்றும் பூஷண் இணைந்து பணியாற்ற உள்ளனர். இதில், கார்த்திக்குக்கு ஜோடியாக நடிகை கிரீத்தி சனோன் நடிக்கிறார். பரேஷ் ராவல் மற்றும் நடிகை மணீஷா கொய்ராலா உள்ளிட்டோரும் நடிக்கும் இந்த படத்தின் இயக்குனர் பணியை ரோகித் தவான் மேற்கொள்கிறார்.

பூல் புலையா 2ன் புரமோசன் பணியில், நடிகை கிரீத்தி சனோனையும் கார்த்திக் ஆர்யன் ஈடுபடுத்தி உள்ளார். இதுபற்றி கார்த்திக் கூறும்போது, ஷேஜடா படத்தின் புரமோசன் வரை, காமெடி மற்றும் திகில் நிறைந்த பூல் புலையா 2ன் புரமோசன் பணிகள் நடைபெறும் என கூறினார். இந்த படம் ரூ.100 கோடி வசூல் எட்டும் என்பதில் எனக்கு நம்பிக்கை இருந்தது. ஆனால், ரூ.200 கோடிக்கும் கூடுதலாக வசூல் செய்யும் நாங்கள் நினைக்கவேயில்லை என்று அவர் கூறியுள்ளார்.

கார்த்திக்குடன் அடுத்த படத்தில் நடித்து வரும் சனோனிடம் படத்தின் வசூல் பற்றி கேட்டபோது, கார்த்திக் மிக மிக உயரத்திற்கு சென்று விட்டார். அவரை என்னால் காண கூட முடியவில்லை என கூறினார். இதன்பின் வெற்றிக்கு பின்பும் அதே கார்த்திக்காக இருக்கிறாரா? என்ற கேள்விக்கு பதிலளித்த சனோன் கூறும்போது, பூல் புலையா 2ம் பாகத்தின் வெற்றிக்கு முன்பு எப்படி கார்த்திக் இருந்தாரோ, அதேபோன்றே இன்னமும் இருக்கிறார். அவரை அதிக உயரத்திற்கு செல்ல நாங்கள் விடமாட்டோம் என கூறினார். இதற்கு பதிலாக கார்த்திக் கூறும்போது, படத்தின் வெற்றிக்கு பின்பும் வலியை உணருகிறேன். ஏனெனில் நானும் மனிதனே என்று கூறியுள்ளார்.

நடிகர் கார்த்திக் ஆர்யனுக்கு, பூல் புலையா 2 படத்தின் வெற்றிக்காக பூஷண் ரூ.4.7 கோடி விலை கொண்ட விலை உயர்ந்த கார் ஒன்றை பரிசாக சமீபத்தில் வழங்கியுள்ளார். இதுபற்றி இன்ஸ்டாகிராமில் கார்த்திக் வெளியிட்ட செய்தியில், உழைப்பின் கனி இனிக்கும் என கேள்விப்பட்டு இருக்கிறேன். ஆனால், அது இவ்வளவு பெரியது என எனக்கு தெரியாது. இந்தியாவின் முதல் மெக்லாரன் ஜி.டி. கார். அடுத்த பரிசு ஒரு தனியார் ஜெட் விமானம் ஆக கூட இருக்கும் சார். நன்றி என தெரிவித்து இருந்தது குறிப்பிடத்தக்கது.

# மோசமான நிலையில் விஜயகாந்த்



பிரபலமான நடிகர், அரசியல்வாதி என்பதை தாண்டி மனிதநேயமிக்க மனிதர் கெப்டன் விஜயகாந்த் தற்போது மிகவும் மோசமான நிலையில் இருக்கிறார்.

# 'கோப்ரா'



விக்ரம் நடித்துள்ள 'கோப்ரா' திரைப் படம் வருகிற ஓகஸ்ட் 11ம் திகதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

டிமாண்டி காலனி', 'இமைக்கா நொடிகள்' படங்களின் வெற்றியைத் தொடர்ந்து அஜய் ஞானமுத்து இயக்கியுள்ள படம் 'கோப்ரா'. விக்ரம் கதாநாயகனாக நடித்திருக்கும் இப்படத்தில் இவருக்கு ஜோடியாக ஸ்ரீநிதி ஷெட்டி நடித்துள்ளார். மேலும், கே.எஸ்.ரவிகுமார், இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் இர்ஃபான் பதான், மியா ஜார்ஜ், கனிகா, மிருணாளினி, ஜான் விஜய் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கின்றனர். லலித் குமார் தயாரித்துள்ள இப்படத்திற்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்துள்ளார். சமீபத்தில் இப்படத்தின் போஸ்டர்கள், சிங்கிள் பாடல்கள் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது. படத்தின் இறுதிகட்ட பணிகள் நடந்து வரும் நிலையில் 'கோப்ரா' திரைப் படம் வருகிற ஓகஸ்ட் 11ம் திகதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

# மறுமணம் குறித்து அமலாபால்



தனது மறுமணம் குறித்து ரசிகர் கேட்ட கேள்விக்கு நடிகை அமலா பால் பதில் அளித்துள்ளார். தமிழில் மைனா, வேட்டை, தலைவா, தெய்வத்திருமகள், வேலை இல்லா பட்டதாரி உள்ளிட்ட படங்களில் நடித்து முன்னணி கதாநாயகியாக வலம் வந்த அமலா பால் டைரக்டர் விஜய்யை காதலித்து திருமணம் செய்து பின்னர் அவரை விவாகரத்து செய்து பிரிந்தார். தொடர்ந்து பிரபல பாடகர் பவிந்தர் சிங்கை காதலிப்பதாக கிசுகிசுக்கள் வந்தன. இருவரும் மணக்கோலத்தில் இருப்பது போன்ற புகைப்படங்களை பவிந்தர் சிங் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டு பின்னர் அதனை நீக்கினார். அந்த புகைப்படங்களை பார்த்த பலரும் இருவருக்கும் திருமணம் முடிந்து விட்டதாக பேசினர். ஆனால் திருமணம் நடக்கவில்லை என்று அமலாபால் தரப்பில் மறுக்கப்பட்டது. பவிந்தர் சிங் மீது வழக்கும் தொடரப்பட்டது. இந்த நிலையில் ரசிகர்களுடன் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தற்போது அமலாபால் கலந்துரையாடியபோது ஒரு ரசிகர் உங்களை திருமணம் செய்து கொள்ள என்ன தகுதி வேண்டும் என்று கேள்வி எழுப்பினார். அதற்கு பதில் அளித்து அமலாபால் கூறும்போது, 'நிஜமாக சொல்ல வேண்டுமென்றால், அதை நானே இன்னும் கண்டுபிடிக்கவில்லை. என்னை அறிந்து கொள்ளும் பயணத்தில் நான் இருக்கிறேன். அதை கண்டுபிடித்த பிறகு உங்களுக்கு கண்டிப்பாக தெரிவிக்கிறேன்' என்று கூறியுள்ளார்.

# கால்களை காயப்படுத்தாத காலணிகளைத் தேர்ந்தெடுப்பது எப்படி?



அதிக வேலைப்பாடுகள் இல்லாத, எளிமையான வகையில் இருக்க வேண்டும். வியர்க்க வைக்கும் இறுக்கமான காலணிகளை அணியும்போது, அது பாதங்களை உறுத்தி புண்களை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. வெப்பம் அதிகமாக இருக்கும் கோடை காலத்தில், பாதங்களில் உள்ள சருமம் வியர்வை, வறட்சி காரணமாக பாதிப்பு அடையும். இந்த சமயத்தில் பொருத்தமில்லாத காலணிகளை அணியும்போது, அவை மேலும் பாதங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். எனவே கோடையில் காலணிகளை கவனமாக தேர்வு செய்ய வேண்டும்.



**அதற்கான சில யோசனைகள் இதோ**

இறுக்கமாக காலணிகள் அணியும்போது கால்களில் வீக்கம் ஏற்படலாம். காலின் பெருவிரலுக்கு இடையில் காற்றோட்டம் கிடைக்கும் வகையில், காலணிகளைப் பொருத்தமாகத் தேர்வு செய்ய வேண்டும். கோடையில், அணியும் காலணிகள் வழக்கமாக அணிவதை விட, அளவில் சற்று பெரியதாக இருக்க வேண்டும்.

அதிக வேலைப்பாடுகள் இல்லாத, எளிமையான வகையில் இருக்க வேண்டும். வியர்க்க வைக்கும் இறுக்கமான காலணிகளை அணியும்போது, அது பாதங்களை உறுத்தி புண்களை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. எனவே, தட்டையான காலணிகளைத் தவிர்த்து, மெத்தென்று இருக்கும் வகையிலான மென்மையான காலணியையே தேர்வு செய்ய வேண்டும். தோல் சுவாசிக்க அனுமதிக்கும் வகையிலும், இயற்கை வெப்ப பரிமாற்றத்திற்கு ஏற்ற வகையிலும், காற்றோட்டமான காலணிகளைத் தேர்வு செய்வதும் கட்டாயம். தூய்மையான மெல்லிய தோலால் செய்யப்பட்ட காலணிகளை மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர். நாம் எந்த வகையான காலணிகளை அணிந்தாலும், அன்றைய நாள் முடிவில், கால்களுக்குச் சிறிது நேரம் மசாஜ் தேவை. பருவ நிலைக்கேற்ப குளிர்ந்த நீரிலோ அல்லது வெதுவெதுப்பான நீரிலோ கால்களை சிறிது நேரம் வைத்திருந்த பின், லேசாக மசாஜ் செய்யலாம்.

## சில வகை காலணிகள்:

**கிளாடியேட்டர்கள்**

இது பெண்களுக்கு மிகவும் பொருந்தக்கூடிய கோடைக்கேற்ற காலணி. அந்தக் காலத்தில், போரின் போது கிரேக்க மற்றும் ரோமானியர்கள் அணிந்திருந்த காலணி போன்றதாகும். இந்தக் காலணி, கீழ்ப் பகுதி தட்டையாகவும், உள்ளங்கால் முதல் மேல் பகுதி வரை அகலமான குறுக்குப் பட்டைகளுடனும் இருக்கும். இது அணிவதற்கு மிகவும் வசதியானது. வெளியூர் பயணத்தில் நீண்ட தூரம் நடக்கவும் ஏற்றது.

**பிளிப்பிளாப்ஸ்**

இவை முன்பக்கத்திலிருந்து தொடங்கி பக்கவாட்டில் முடிவடையும் வரை, ஆங்கில எழுத்து 'ஒய்' வடிவில் பட்டைகளைக் கொண்டிருக்கும். இறுக்கமாக இல்லாததால், பெண்களின் தினசரி பயன்பாட்டிற்கு ஏற்றதாகவும், பாதங்களை உறுத்தாமலும் இருக்கும்.

**ஸ்டைஸ்லைடர்கள்**

கடந்த சில ஆண்டுகளாக பெண்களிடம் பிரபலமாக இருக்கும் காலணி இது. இவை, பின்பக்கம் உயரம் குறைவாகவும், கால்களை மறைக்காமல் திறந்தபடி இருக்கும் வகையிலான காலணிகள்.

# சரும பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு தரும் எப்சம் உப்பு

எப்சம் உப்பு என்பது மெக்னீசியம் சல்பேட் உள்ளடங்கி இருக்கும் இயற்கையான தாது உப்பாகும். இது சமையலுக்கு பயன்படுத்தப்படும் உப்பில் இருந்து வித்தியாசமானது. சற்று கசப்புத்தன்மை கொண்டது. பல வீட்டு வைத்தியங்களில் பயன்படுத்தப்படுகிறது. கணுக்கால் வலி முதல் மனஅழுத்தம் வரை பல பிரச்சினைகளுக்குத் தீர்வு தருவது இந்த உப்பு.

முகப்பரு, கரும்புள்ளிகள், சரும பொலிவின்மை உள்பட அனைத்துவிதமான சரும பிரச்சினைகளையும் போக்கும் தன்மை எப்சம் உப்புக்கு உண்டு. எப்சம் உப்பைப் பயன்படுத்துவது முகப்பரு மற்றும் தழும்புகள் ஏற்படுவதை தடுக்க உதவும். கரும்புள்ளிகளுடன் சேர்ந்து தூசி, அழுக்கு போன்ற சரும பாதிப்பை அனுபவிப்பவர்கள் எப்சம் உப்பை பயன்படுத்துவது நல்லது.

ஒரு கிண்ணத்தில் ஒரு டேபிள்ஸ்பூன் எப்சம் உப்பை எடுத்துக்கொள்ளவும். அதில் சிறிதளவு பாதாம் எண்ணெய் சேர்க்கவும். இரண்டையும் நன்றாக குழைத்து முகத்தில் தடவி மசாஜ் செய்யவும். சிறிது நேரம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவி விடலாம்.




நமது முகத்தில் மிகச் சிறிய துளைகள் உள்ளன. இவற்றில் சேர்ந்திருக்கும் அழுக்கை அகற்ற, எப்சம் உப்பு பயன்படும். அரை டீஸ்பூன் எப்சம் உப்பை முகத்தை சுத்தம் செய்யப் பயன்படுத்தும் க்ரீமில் கலந்து முகத்தில் தேய்க்கவேண்டும். பிறகு இதைக் குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும். இது, முகப்பரு போக்க சிறந்த மருந்து. அதுமட்டுமல்லாமல் அரை கப் எப்சம் உப்பை இளஞ்சூடான ஒரு பக்கெட் நீரில் கலந்துகொள்ள வேண்டும். இதில் பத்து நிமிடங்கள் காலை முக்கி வைத்திருந்தால், கால் அரிப்பு, கால் துர்நாற்றம், கால் வெடிப்பு போன்றவை நீங்கும்.

ஒரு டீஸ்பூன் எப்சம் உப்பை பெட்ரோலியம் ஜெல்லியில் கலந்துகொள்ள வேண்டும். இதை உதட்டில் தடவிவந்தால், உதடு மென்மையாக மாறும். வறண்ட உதடுகள் எப்சம் உப்பால் சரியாகும். சிறிது எப்சம் உப்பை ஹேர் கண்டிஷனரில் கலந்து தலைக்குத் தேய்க்க வேண்டும். இதை இருபது நிமிடங்கள் அப்படியே வைத்திருந்து, பின்னர் வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும். இப்படி தொடர்ந்து செய்துவந்தால், முடியில் உள்ள நச்சுப் பொருட்கள் வெளியேறும். உச்சந்தலை தூய்மையாகும். முடி வளர்ச்சி அதிகமாகும்.



# செல்ஃபி உலா



Afra Ansar



Rudra



Mahadevan



Lion Seelan
சங்கத் தமிழ் இந்து மன்றம்



Maharim, hashifa and hathifa
Valaichenai



Thanuja Singam
German



Rajan Pandiy




Pradeesha




Thurairasa Suresh
Director


## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்




## தொடர்புபடுத்துங்கள்



I'm a fruit.
I'm big.
I'm yellow inside and
brown outside.
Who am I?



pineapple

## 07 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



நான் ரொம்ப பிஸி...

# சைக்கிள் ரிக்சா செய்து தனது திறமையை வெளிப்படுத்திய மூதூர் இஹ்ஸான்

சத்தார் எம் ஜாவித்...



கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் கிராமத்தில் கூலித் தொழிலாளியாக வசித்து வரும் இஸ்ஸான் செய்து தனது முயற்சியால் தானே ஒரு சைக்கிள் ரிக்சாவை கண்டு பிடித்து தனது தேவைக்கும் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்களை இலவசமாகவும் ஏற்றிச் செல்லவும் இலவச சேவை ஒன்றையும் வழங்கி வருகின்றார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினை காரணமாக மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் அவரின் முயற்சி பலருக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளது. குறிப்பாக இதனை உருவாக்குவதற்கு அவருக்கு தன்னிடம் ஒரு மோட்டார் சைக்கிள் இல்லாத காரணமும் தற்போதைய நிலையில் எரிபொருள் தட்டுப்பாடும் அதற்கு காரணமாக இருந்துள்ளதுடன் அவரின் முயற்சியும் வெற்றியளித்துள்ளது.





இஹ்ஸானிடம் அவரின் முயற்சி தொடர்பாகவும் அவரின் குடும்ப நிலை தொடர்பாகவும் கேட்டறிந்தபோது அவர் கூறிய விடயம் கவலையாக இருந்தாலும் முயற்சி வெற்றியளித்தமை சந்தோசத்தை தருகின்றது. அவர் மூதூரில் ஒரு ஏழைக்குடும்பத்தில் நான்கு சகோதரிகளுடனும் ஒரு சகோதரனுடனும் பிறந்த அவரின் தந்தையார் தனக்கு 8 வயதாக இருக்கும்போது கடந்த 2000ஆம் ஆண்டு இடம் பெற்ற குண்டு வெடிப்பின்போது மரணமானதாகவும் அதன்பின்னர் தனது தாய் பிள்ளைகளை ஓரளவு கல்வி கற்க வைத்து தான் க.பொ.த சாதாரண தரம் சித்தியடைந்து உயர் தரத்தை கலைத்துறையில் கற்று பரீட்சைக்கு தோற்றயதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் இஹ்ஸான் தான் குடும்பத்தில் மூத்தவர் என்பதால் குடும்பத்திற்கு உழைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதால் தான் முதலில் கூலி வேலை செய்ததாகவும் பின்னர் வீடுகள் கட்டுபவர்களுக்கு சிலப்போடுவதற்கு பலகைகள் பொருத்தும் உதவிகளைச் செய்து வந்துள்ளதுடன் பின்னர் நிரந்தர தொழில் ஒன்று செய்வதற்கு வேல்டிங் மற்றும் பிற்றிங்ஸ் துறையில் பயிற்சிகளை பெற்று தற்போது வேல்டிங், அலுமினிய பிற்றிங்ஸ் வேலைகளை செய்து வருவதாகவும் தெரிவித்த அவர் தான் திருமணமாகி ஒரு குழந்தையுடன் எனது தாய் மற்றும் சகோதரர்களையும் கவணித்து வருதாகவும் தெரிவித்தார்.



இவ்வாறான நிலையில் தானும் தனது மணைவியும் பயணம் செய்வதற்கு தற்போதைய நிலையில் செலவு குறைந்த முறையில் பயணிப்பதற்கு ஒரு சைக்கிள் ரிக்சாவை தயாரிப்பதற்கு முயற்சித்து தனது பட்டறையில் உள்ள எஞ்சிய இரும்புப் பொருட்களை வைத்து அதனை தயாரித்ததாகவும். தற்போது எங்கள் தேவைகளைவிட ஊரில் எரிபொருள் இன்மையால் முச்சக்கர வண்டி பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் தான் நோயாளிகளை வைத்தியசாலைக்கு செல்வதற்கு தனது வண்டியை இலவசமாக பயன்படுத்துவதாகவும்.

யாரிடமும் பணம் அறவிடாமல் சந்தர்ப்ப சூழ் நிலைக்கு ஏற்ப வருமானம் குறைந்தவர்களுக்கு இலவசமாக அவர்களை ஏற்றி இறக்குவதாகவும் தெரிவித்தார். அவரிடம் நீங்கள் சிறு தொழில் செய்பவர்தானே குறைந்தளவு பணத்தையாவது அறவிடலாமே எனக் கேட்ட போது.

இன்று எமது கிராமத்தில் பலர் மிகவும் வறுமைக்கோட்டிற்குள் வாழ்வதால் அவர்களை துன்பத்திற்கு உட்படுத்தாது அவர்களை சந்தோசப்படுத்தும் வகையில் இந்த சேவையை செய்வதுடன் அன்மைய நாட்களில் பாடசாலைச் சிறுவர்களையும் பாடசாலைக்கு ஏற்றி இறக்கி விடுவதாகவும் விரும்பித் தருபவர்களிடம்கூட நான் ஏதும் வாங்குவதில்லை என்ற தனது மனிதாபிமான கருத்தை தெரிவித்தார்.

உண்மையில் தற்போதைய சூழ் நிலையில் யாரும் யாருக்கும் இலவசமாக உதவாத நிலையில் இஹ்ஸானின் இந்த மனித நேயச் செயற்பாடு பணம் படைத்தவர்களுக்கும்இ வசதிகள் உள்ளவர்களுக்கும் நல்லதோர் எடுத்துக்காட்டாகும். இவர் தனுது வேல்டிங் தொழிலை ஒரு தகரக் கொட்டகைக்குள் வசதிகளற்ற நிலையில் செய்து வருவதாகவும் தனது தொழிலை மேம்படுத்த தனது தகரக் கொட்டகை இடத்தை சீர் செய்வதற்கு உதவினால் வசதியாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

இஹ்ஸான் வீட்டுப்பாவனைக்கு தேவையான சில பொருட்களை செய்துள்ளதாகவும் அவரின் திறமைகளை கூறிய அவர் தனக்கு சில இலட்சியங்கள் இருப்பதாகவும் கூறினார். அதாவது வீடுகளில் பாவிக்கப்படும் அன்றாடப் பாவனைப் பொருட்களை கொண்டு சில பொருட்களை உற்பத்தி செய்து மக்களுக்கு வழங்குவதுடன் அவற்றை பாரியளவில் ஏற்றுமதி செய்யவும் முடியும் எனவும் கூறினார்.





இவ்வாறு அவற்றை விரிவுபடுத்தி சுமார் 1000 பேருக்காவது வேலைகளை வழங்குவதற்கு தனக்கு ஆர்வம் உள்ளதாகவும் தெரிவித்த அவர் ஒரு குண்டூசியும் விலைக்கு வாங்காது தாமே தயாரித்து பாவிக்கும் ஒரு முறைமையைக் கொண்டு வர வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் முருங்கைக்கீரை உருவும் இயந்திரம், தூக்குக் குண்டு, அளவு நாடா இயந்திரம், சைக்கிள் சீட் உள்ளிட்ட பொருட்களை வீட்டில் உள்ள கழிவுப் பொருட்களை வைத்து செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவரின் முயற்சிக்கு தனவந்தர்கள் ஊக்கமளிக்கும் பட்சத்தில் இவரை நல்லதோர் நிலைக்கு கொண்டு வரமுடியும் என்பதுடன் இவர் மூலம் பல நன்மைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

# ஔவன் கவிதை

## அசுரனின் இரவு



அசுரனின் இரவுக்குள்
கொட்டுண்டு கிடக்கின்றன
இரத்தத்தின் பீதி
மற்றும் சுதந்திரத்தின் உதிர்த்த கூறுகள்
விடியும் தருணத்தில் அதனொரு துளி
உன் முகத்திலும் தெறித்திடக் கூடும்
கட்டிருளில் அகில் புகை வாசம் வீசுமெனவும்
நிலவினொரு துண்டு பட்டு உன் ஒளிமுகம் மலருமெனவும்
நேற்றைய கனவில் கேட்ட கஸலின் இசை பரவுகிறது
அசுரனின் இரவுக்குள்
இரத்தத்தின் மொச்சை
விஷமேறிய குரலில் வழிகிறதுன் முகத்திலும்
இசை விசை
ஆயிரம் இரவுகளின் சயனத்தில்
அசுரனாதல் குறித்தொரு குறிப்பெழுதுகையில்
நீயும் முகமற்றெழுகிறாய்



# மஜ்லிஸ்

முல்லை முஸ்ரிபா

# மாற்று சினிமாவுக்கான திரை

திரை வெளி இன்று முழுநிலை பெற்ற காட்சி ஊடகமாக வீடுகள் தோறும் தோன்றி நிற்கிறது.

வீட்டுத் திரைகளில் பொழுது போக்குக் கருவியாக நேரவிரய சாதனமாக சிந்தனை முடக்க ஆயுதமாக மேலெழுந்து நிற்கிறது. இது ஆரோக்கியமானதல்ல. மூன்றாம் நிலைப்படங்கள்; அல்லது ஜனரஞ்சகப் படங்கள் எனப்படுகிற ஒரு சட்டகத்துள் சுழலும் மாய ரூபப் படங்களெல்லாம் ஒருவகைப் போதைக் காட்சிகளாக இன்று எல்லோராலும் திரைகளில் நிறுத்தப்படுகிறது. மறுபுறம் சின்னத்திரைகள் மனமுடக்கத்துக்கான அல்லது மூளைச்சலவைக்கான வழிகளாகிவிட்டன. வீட்டில் அதிகம் தங்கும் பெண்கள் உள்ளிட்டோரை கவர்ந்து நிற்பவை இவை.

இவ்வாறு வீட்டுத் திரைகள் 'சினிமா' என்ற பெயரில் அர்த்தமற்ற போலிக் கவர்ச்சிக்கு அடிமையாகிவிட்டன.

ஆனால் திரைவெளி எனப்படும் உயிர்ப்பான இந்த ஊடகம் வாழ்வியக்கத்துக்கான பொருத்தமான ஆற்றுப்படுத்துகைச் சாதனமாகும். சமூக மாற்றத்துக்கான சினிமா குறித்த சிந்தனை மேலெழும் சூழலில் ஏற்புடையதாக திரைவெளியை மாற்றியமைத்தல் மிக அவசியமாகும்.

வாசகனின் அல்லது சாதாரண மனிதனின் வாழ்வுக்கு அண்மித்த காட்சிகளை அல்லது மாதிரிகளை அல்லது யதார்த்த வாழ்வை முன்மொழியும் மாற்றுச் சினிமாவை வளர்த்தெடுக்கவும் இளஞ் சமூகத்தை ஆற்றுப்படுத்தவும் அவசியமாகும்.

இன்று உலகின் பல பகுதிகளிலும் இத்தகைய சமூக மாற்றத்துக்கான சினிமா, குறும்படம், ஆவணப்படம் என்பனவும் உள்ளன. உலக சினிமா குறித்த கொள்கைகளும், தேடலும் விசாலம் அடைந்;த சூழலில் நமது திரைவெளிப் புலத்தில் இத்தகைய காத்திரமான சமூக மாற்றத்துக்கான சினிமாவை நோக்கி நகர வேண்டும். இதற்கென தேடலும், மனப்பாங்கு மாற்றமும் அவசியமாகும். இளைய தலைமுறையை யதார்த்த வாழ்வின் கருத்துச்செறிவான அனுபவக் கருவியாக சினிமா என்ற மாயைக் கருவியைக் கையாள வேண்டும்.

# ஊமக்காச்சி 04

மாத்தையாவின் பேக்கரிக்கு முன்னால் நிற்கும் நீண்ட கியூவில் இடையில் நானும் பேக்கரி பணிஸ் போல நசிபட்டு நின்ற ஞாபகம் மனத்திரையில் விரிகிறது. எனக்கு எட்டு, ஒன்பது வயசிருக்கும். மூடிய பொருளாதாரத்தின் வரட்சிக் காலமது. மரவள்ளிக்கிழங்கும், வாழைக்காயும் அவிச்சுத் தின்று பசி தீர்த்தோம். அரிசித் தட்டுப்பாடு அரசோச்சியது. வாழ வழி தேடி ஊர்கள் அலைந்தன. அதுவொரு வரள்காலம்; என் ஞாபகத்தின் அடியில் உறைந்து கிடக்கிறது.

இப்போ பெற்றோல் செற்றின் முன்னால் நீண்ட வரிசையில் காத்திருக்கிறேன். எனது மோட்டர்சைக்கிளில் என் சின்ன மகன்;. அவனின் வயசில் நான் மாத்தையாவின் பேக்கரியில் போலிங்கில் நிற்கிறேன். விடியல் பொழுதுகள் பல வற்றில் சூரியனை மாத்தையாவின் பேக்கரிக் கூரைக்குள்ளால் தான் தரிசித்திருக்கிறேன். காகம் கரைந்ததும், கண்கசங்கி நின்றதும் உண்டு.



எங்கள் ஊரில் நானறிந்த வரையில் மாத்தையாவின் பேக்கரி மட்டும்தான். பாணுக்கும் தட்டுப்பாடு நிலவிய வரட்சிக் காலமது. சுபஹோட அல்லது அதற்கு முன் தஹஜத்தோட எழுந்து கியூவில் ராத்தாமாருடன் சேர்ந்து கால் கடுகடுக்க நின்றிருக்கிறேன். மாத்தையா பேமஸ் ஆனார். மாத்தையா நம் ஊர்க்காரர் இல்லை. அவர் சிங்களக் கிராமமொன்றிலிருந்து பிழைப்புக்கு வந்து செல்வாக்காக வாழ்ந்தவர். மாத்தையாவின் முகம் என் ஞாபக வரைபடத்தில் இல்லைத்தான். ஆனாலும் அவரது குணநடை ஞாபகத்திலுண்டு.

மாத்தையா மாமா.... மாத்தையா மாமா.....என்று சிறுவர்கள் முண்டியடித்துக் கொண்டு பாணுக்கும் பணிசுக்கும் கியூ போட்டோம்.

மாவைப் பிசைந்தகையைப் பிசைந்து கொண்டு நீண்ட போலிங்கை அப்பாவித்தனமாக மாத்தையா பார்ப்பார். அவருக்குப் பெரிய மனசு. எல்லோருக்கும் பாண் கொடுக்க ஆசைதான். கோதுமைத் தட்டுப்பாடு அவரைக் கட்டிப்போட்டது. சிங்களத் தமிழில் அல்லது தமிழச்; சிங்களத்தில் பேசுவார். அவரது பேச்சுக் கேட்கவும் ஆசையாக இருக்கும். வெற்றிலைக் காவி படிந்த பற்களினூடக வெளிப்படும் வரண்ட சிரிப்பு அங்கங்கே கோலம் போடும் வெற்றிலைச் சாறு, பேக்கரிக் கிளுவை மரத்திலிருந்து குருவிகள் எழுப்புமிசை......எல்லாம் ஞாபகங்கள். ஒன்றுக்கும் உதவாததென்று ஒன்றுமில்லை. மாத்தையாவின் பேக்கரி நாயும் கூட ஒலித்து, மெலிந்து எலும்பும் தோலுமாய் திரிந்தாலும் அவருக்குத் தோழன்தான். அவர் பின்னால் வாலையாட்டும். கியூ மாறாமல் காக்கும். வீமி.....வீமி...... என்று கூப்பிட்ட ஞாபகம்.

பசி தீர்த்த மாவுக்கு மட்டுமா, உடல் மறைக்கும் சீத்தைத் துண்டுக்கும் கியூதான். துணிக்கும் தட்டுப்பாடு நிலவிய மூடு பொருளாதாரக் காலத்தில் லாம்பெண்ணைச் சீத்தைத் துணிக்கு காத்திருந்த ஞாபகம் நினைவில் மீள்கிறது. இப்போதுபோல் ஜவுளிகளின் உயர் வகையறாக்களில்லை. சாதாரண துணிகள்தான். அதற்கும் தட்டுப்பாடு.

சங்கக் கடையில் கூப்பனுக்குத் துணியும், லாம்பெண்ணையும், அரிசியும், சீனியும் பகிர்ந்தளிக்கப்பட்டது. எங்கள் வீட்டுக்குப் பின்னால்த் தான் தண்ணீரூற்றுச் சங்கக்கடை இருந்தது. அதில் மனேஜர்களாகவிருந்த பலரைப் பின்னாளிலும் ஞாபகத்தில் வைத்திருந்தேன். தட்டுப்பாட்டுக் காலத் தளபதிகள் அவர்கள்.

கூப்பனுக்கு சீத்தைத்துணி வந்த போது அதனை எப்படியாவது தொட்டுவிட வேண்டுமென ஆசை வளர்த்தேன். அதுதான் பெருநாளுக்குச் சேட்டும் சாரமும். பெரிய பூப்போட்ட வடிவு. மண்ணெண்ணை மணக்கும் துணி என்பதால் லாம்பெண்ணைத் துணியென்போம்.

இன்னும் பெற்றோல் நிரம்பவில்லை. கிடைத்துவிடுமென்ற நம்பிக்கை மட்டும்தான். சின்னவன் தூங்கி வழிகிறான். வருங்காலம் தனது கியூ பற்றியெழுதுவானோ என்னவோ...... நேற்று கேஸ் போலிங். கிடைக்கவில்லை. சிலிண்டர்கள் மூன்றாவது வெற்றி வாரமாகக் கண்விழித்து வரிசையில் கிடக்கின்றன.... நீண்ட நீல வரிசை....காலத்தின் வரட்சி....மரவள்ளிக்கிழங்கும், வாழைக்காயும் வாழைத்தோலும் அவிச்சுத் தின்ற நினைவுகளில் உம்மாவினதும், உம்மம்மாவினதும் கைரேகைகள் ஊர்கின்றன. இப்போதும்......

# திருமக்காப் பள்ளு



பள்ளு என்பது தமிழ் இலக்கிய வடிவங்களில் அமைவது. மக்கள் சார்புடைய இலக்கியத்தைக் கொண்டது, நாடகப் பாங்கானது, சுவையுடையது, அழகியல் மிக்கது.

பள்ளர் எனப்படும் விவசாயிகளைப் பாத்திரமாகக் கொண்டு அவர்தம் வாழ்தல் அம்சங்களை உட்பொதிந்தது. பள்ளன், மூத்தபள்ளி, இளையபள்ளி, பண்ணையார் முதலிய பாத்திரங்களின் உரையாடல்களாலானது. பள்ளின் பாட்டுடைத் தலைவனை மையப்படுத்தி பள்ளுப் பிரபந்தம் அமையும்.

இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள் குறித்து அவதானிக்கும் போது தமிழுக்குப் புதிய பல வடிவங்களை இஸ்லாமிய இலக்கியம் தந்திருக்கிறது. மசாலா, கிஸ்ஸா, முனாஜத்து, நாமா, படைப்போம் என்பன அவை. இதனிடை இஸ்லாமிய இலக்கியங்கள் தமிழின் வடிவங்கள் வழியே வளர்ந்துள்ளமை தமிழ் இஸ்லாமிய இலக்கிய வளர்ச்சியின் பரிணாமமெனலாம்.

இத்தகைய பரிமாணங்களில் ஒன்று திருமக்காப்பள்ளு.

திருமக்காப்பள்ளில்,

**"கெட்டியே மயிலிட்டி பக்கத்துப் பள்ளி சிக்கி**
**கேவலமே நானுனக்கு மக்கத்துப் பள்ளி**
**அட்டி என்னடி ஒளியே மதினத்துப் பள்ளி சிக்கி**
**ஆரறிய வருந்தாயடி மதினத்துப் பள்ளி**
**எத்துவாய் மயிலி மக்கத்துபள்ளி சிக்கி**
**ஏதடியுறவுமினி மக்கத்துப் பள்ளி**
**தொத்திலே வந்தாய் ஒளிவே மதினத்துப் பள்ளி**
**பள்ளன் சொந்தமோ உனக்கு மட்டும் மதினத்துப் பள்ளி"**

இது திருமக்காப்பள்ளின் ஒரு பகுதி. மூத்த பள்ளியும் இளைய பள்ளியும் ஒருவர் மற்றவரை நோக்கிப் பாடுவதாக அமைவது. மக்கமா நகரினதும், மதினமா நகரினதும் சிறப்புகளை வெளிப்படுத்துவதற்கான இவ் இலக்கிய வடிவத்தை இஸ்லாமியப் புலவர் கையாண்டுள்ளார். இஸ்லாமிய இலக்கியக் கருவூலங்கள் கனதியானவை.

## செந்தூரம் பிறந்தநாள் வாழ்த்து



Fathima Zeema
2022 july 07 th
7th birthday celebration
beloved daughter of Hassan and Safna from valaichenai



Hafees Mohamed
2022 july 06th
04 th birthday
beloved son of
Hussain and Fansa



தம்பதெனிய **ரிமாஸ் - நிஸ்லா** தம்பதியினரின் **புதல்வி பாதிமா** அய்ஸாவின் (09/07/2022) 2வது பிறந்தநாள்

# சினிமா, நாடக நடிகர், நாடகக் காவலர் ஆர். எஸ்.மனோகர்

தமிழ்த்திரையுகின் மறக்க முடியாத நடிகர்களில் ஆரம்பத்தில் கதாநாயகனாகவும் பின்னர் வில்லனாகவும் நடித்து புகழ் பெற்ற ஆர். எஸ். மனோகர் 1925 ம் ஆண்டு 06ம் மாதம் 29ம்

திகதி சேலம் மாவட்ட ராசிபுரத்தில் ராமசாமி சுப்ரமணியம், ராஜேஷ்வரி தம்பதிகளுக்கு மகனாக நாமக்கலில் பிறந்தார். இவரது இயற்பெயர் "லட்சுமி நரசிம்மன்".சிறு வயதிலிருந்தே சினிமா, நாடகம் என கலையார்வம் கொண்டவர் மனோகர். இவரது தந்தை தபால்துறையில் பணியாற்றிவந்த நேரத்தில் நாமக்கலிலிருந்து பணிமாற்றமாக கர்நாடகா மாநிலம் பெல்லாரிக்கு குடும்பத்துடன் குடி பெயர்ந்தது.

அப்போது இசை நாடக கலைஞர் திரு ராகவாச்சாரியின் ஷேக்ஸ்பியர் நாடக நடிப்பும், வசன உச்சரிப்பும் மனோகரை வெகுவாக கவர்ந்தது.

தானும் இது போல நாடக நடிகராக வேண்டும் என ஆர்வம் கொண்டு சென்னை உயர் நிலைப் பள்ளியான பச்சையப்பன் கல்லூரியில் சமஸ்கிருதம் (B.A)

**அக்காலத்தில் பிரபல்யமாக இருந்த "சுகுணவிலாஸ்"நாடகக்கம்பனியின் நாடகமான "தோட்டக்காரன்"நாடகத்திலும் தனது திறமையை காட்டவே மனோகர் நாடக உலகில் பேசப்பட்டலானார்.**

பட்டப்படிப்பை படித்துக்கொண்டே நடிகராவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்த நேரத்தில் "ம்ருகச் சிலேகா"என்ற சமஸ்கிருத நாடகத்தில் நடிக்கும் வாய்ப்பு கிட்டியது. கிடைத்த வாய்ப்பை சரியாக பயன்படுத்திக் கொண்டார்.பின்அக்காலத்தில் பிரபல்யமாக இருந்த "சுகுணவிலாஸ்"நாடகக் கம்பனியின் நாடகமான "தோட்டக்காரன்"நாடகத்திலும் தனது திறமையை காட்டவே மனோகர் நாடக உலகில் பேசப்பட்டலானார்.



இவரது நடிப்பை பார்த்த நாடக தந்தை பம்மல் கே.சம்பந்த முதலியார் வெகுவாக பாராட்டினார்.

நடித்துக்கொண்டே பட்டப்படிப்பை பூர்த்தி செய்து தந்தையைப்போல் தபால்துறையில் பணியாற்றினார்.

நடித்துக்கொண்டிருக்கும் போதே 1950 இல் சீதாலட்சுமி என்பரை திருமணம் செய்து கொண்டார்.

இவரின் திறமையை நேரில் கண்ட சேலம் மொடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி.ஆர்.சுந்தரம் இவரை சினிமாவில் பயன்படுத்திக்கொண்டார். "ராஜாம்பாள்"இது மனோகர் நடித்த முதல் படம்,இவரது இயற்பெயர் லட்சுமி நரசிம்மன், கல்லூரி காலங்களில் "மனோகரா"நாடகத்தில மனோகரா வாக நடித்து புகழ் பெற்றதால் அதே பெயரையே வைத்துக்கொண்டார்.

ஆரம்பத்தில் கதாநாயகனாக 15



இற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்த மனோகர் கால சூழ்நிலையால் வில்லனாக பரிமளித்தார்.

ராஜாம்பாள்,தாயுள்ளம்,லட்சுமி, குமாஸ்தா, பொன்வயல்,விடுதலை, வைரமாலை,நல்லதங்காள்,நல்லவீடு, கானல் நீர்,வல்லவனுக்கு வல்லவன்(மொடர்ன் தியேட்டர்ஸின் 100வது படம்) போன்ற படங்களில் கதாநாயகனாக நடித்தார். திரையில் நடித்துக்கொண்டே நாடகத்துறைக்கு பெரும் பங்காற்றினார்.

வரது நாடகங்களில் செட் பிரமாதமாக சினிமாவைப் போலிருக்கும் .மந்திர தந்திர காட்சிகளை தத்ரூபமாக அமைப்பதில் வல்லவர். வெட்டப்பட்ட மனித தலைகள் துண்டாக விழும் காட்சி, பறக்கும் புஷ்பக விமானம், நெருப்பெரிவது,புயல் அடிப்பது போன்ற காட்சிகளை இயல்பாகவே இவரது நாடகங்களில் காணலாம்.

புராணங்களில் எதிர்மறையாக தோன்றிய கதாபாத்திரங்களுக்கு முக்கியத்துவம் வழங்கி தனது நாடக உலகில் வெற்றி கண்டவர் மனோகர். இராவணன், சூரபத்மன்,சாணக்கிய சபதம்,நரகாசூரன், சிசுபாலன்,இந்திரஜித், சுக்ராச்சாரியார் போன்றன இதிலடங்கும்.திருநாவுக்கரசராகவும் நடித்து அசத்தியவர்.

இலங்கை மண்ணில் இவர் நடத்திய "இலங்கேஸ்வரன் "21 தடவைகள் மேடையேறியது. இலங்கை ரசிகர்களால் "இலங்கேஸ்வரன் மனோகர்"என்ற பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டது.

கண்டி இந்து கலாசார மண்டபத்திலும் இவரின் "லங்கேஷ்வரன்"நாடகம் அரங்கேறியது. இந்நாடகம் 1800 தடவைகள் மேடையேறி சாதனை படைத்தது.

மக்கள் திலகம் எம்ஜியாரால் "நாடகக்காவலர்"என்ற பட்டமும் கிடைக்கப்பெற்றார்,நடிகர் திலகம் சிவாஜி கணேசன், மக்கள் திலகம் எம்ஜியார்,ஜெமினி கணேசன், ரஜினி ,கமல், சத்யராஜ், விஜயகாந்த், என பல தலைமுறை நடிகர்களுடன் நடித்த பெருமைக்குரியவர்

மனோகர்.வில்லன் நடிகர்களான நம்பியார்,அசோகன்,வீரப்பா, வரிசையில் ஆர்.எஸ். மனோகரும் மறக்க முடியாத நடிகராவார்.சிவாஜி,பி.எஸ். வீரப்பா, ஓ.ஏ.கே.தேவர், போல் இவரது குரலும் சிம்மம் போல் கர்ஜிக்கும் தன்மை கொண்டது. சிவாஜி கணேசன் நடித்த "ராஜ ராஜ சோழன் "திரைப்படத்தில் "சத்ரியாசிரியன்"என்ற பாத்திரத்தில் பிரமாதமாக நடித்தார்.

இயக்குனர் ஏ.பி.நாகராஜன் தயாரித்து இயக்கிய வெற்றிப்படமான "அகத்தியர் "இல் இராவணன் பாத்திரத்தில் முதலில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனை நடிக்க வைக்க பெரிதும் விரும்பினார் ஏ.பி.நாகராஜன்.

ஆயினும், இராவணனாகவே நடித்து நன்கு தேர்ச்சி பெற்ற மனோகரை சிபாரிசு செய்து நடிக்க வைத்தவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசனே, சிவாஜியின் பெருந்தன்மையை மனோகர் பல நிகழ்வுகளில் கூறி நெகிழ்ந்துள்ளார்.இவரது நாடக நடிப்பை தந்தை பெரியார், ம.பொ.சிவஞானம், அறிஞர் அண்ணா, போன்றோர் பாராட்டியதுண்டு.

இவரின் "இலங்கேஸ்வரன் "நாடகத்தை பார்த்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் வெகுவாக பாராட்டியதை சிறப்புடன் சொல்லிக்கொள்வார், 2006 ஆம் ஆண்டு ஜனவரி 10 ம் திகதி தனது 81ம் வயதில் இதய நோய் காரணமாக இம்மண்ணை விட்டு மறைந்தார் நாடக காவலர் ஆர். எஸ்.மனோகர்.



நாடகக்கலைக்காக தன் வாழ்நாளில் பெரும் பங்களிப்பை ஆற்றிய ஆர். எஸ்.மனோகரின் பெருமை என்றுமே பேசக்கூடியது .

எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...
கம்பளை



வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் முத்தமிழ்ப் பெருவிழா மேடையில் உலக அறிவிப்பாளர் பி. எச். அப்துல் ஹமீத்தின் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டபோது அவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவமளிக்கப்பட்டதுடன் சிறப்பு விருதும் வழங்கப்பட்டது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூலை மாதம் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.